"மாணவர் உலகம்"

பொதுப்பதிப்பாசிரியர் :

வித்வான் S. சோமசுந்தரம் M. A., L. T.

நேரு உயர்நிலைப் பள்ளி,

புத்தனம்பட்டி

1953—'54

அன்பளிப்பு.

மாசிலாக் குலத்து வந்தோன் மாட்சிமை
நிறைய உள்ளோன்!
ஆசிலாக் கல்வி கற்றோன் ஆண்மையும்
அழகும் கொண்டோன்!
தேசமே சிறப்பை நோக்கும் திறல்மிக
விளங்கு புகழோன்!
பாசவே ரறுத்த புகழோன் பதம் அணிந்
திடுக இம் மலரே!

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்

இந்திய நாட்டுப் பிரதம மந்திரி.

'உயர்திரு மூக்கப்பிள்ளை அவர்கள்
பள்ளித் தலைவர் (MANAGER)

வித்துவான்

திரு. S, சோமசுந்தரம் அவர்கள் M.A., L.T.

தலைமையாசிரியர்

பள்ளி மாணவத் தலைவன்

"மாணவர் உலகம்" செயற்குழு

பொதுப் பதிப்பாசிரியர்.

வித்துவான் S. சோமசுந்தரம் அவர்கள் M. A., L. T.

துணை ஆசிரியர்கள் :

புலவர் து. கந்தசாமி — *தமிழாசிரியர்*

திரு. S. ருத்ரசாமி — *உதவி ஆசிரியர்*

„ **V. ஜெயவீரன்** — *ஓவிய ஆசிரியர்*

„ **M. காத்தான்,** VI *படிவம்*

„ **M. ஜீவமணி,** II A. *படிவம்*

உள்ளுறை

1. தலையங்கம் .... பொதுப்பதிப்பாசிரியர்
2. குறள் கொடுக்கும் குரல்....வித்வான் S. சோமசுந்தரம் M.A., L.T.
3. முட்டாள் முத்துச்சாமி ... ,, ,,
4. Social activities ... *U. R. Krishna Iyer* B. A., L. T.,
5. The Lover of Truth ... ,,
6. Discipline .... ,,
7. மாணவர்கட்கு ... . S. துரைராஜு B. A., B. T.
8. குரவைக்கூத்து .... புலவர் து கந்தசாமி
9. ஓர் உரையாடல் ... . S. உருத்திரசாமி
10. இளங்கோவடிகள் வில்லுப் பாட்டு ... . ,,
11. பார் .... S ஆறுமுகம்
12. எனது இலங்கைச் செலவு .... A சந்திரசேகரன்
13. கும்மிப் பாட்டு ... வித்வான் S. சோமசுந்தரம் M.A., L.T.,
14. கல்வியும் கைத்தொழிலும் .... V. ஜெயவீரன்
15. பணத்தின் மகிமை ... . ,,
16. தொழிலாளி .... ,,
17. விடுதலைக்குப் பின் ... . A. தியாகராஜன்
18. நான் கண்ட உலகம் ... . M. அரவாண்டி
19. வறுமை .... ,,
20. கல்லணைக் காட்சி .... மூ. காத்தான்.
21. சிந்தனை.... .... மூ. பொன்னம்பலம்
22. சரித்திரமும், சாஸ்திரமும் .... P. தங்கராசு
23. ஈனம் .... ,,
24. நிரபராதி ... ... U. ஷர்புதீன்
25. இயற்கை இன்பம் .... V. முத்தையா
26. கல்வி .... T. ஐயாக்கண்ணு
27. பாவையின் கண்ணீர் .... P. கணேசன்
28. அன்பின் உருவங்கள் ... . K. சுப்பிரமணியன்
29. கனவு .... V. ஷண்முகம்
30. பாரதி ... . P. சுப்பிரமணியம்

31. விகடக் கவிகள் .... M. சுப்பிரமணியன்
32. ஆட்சி பீடத்தில் அமர்வோர் எவர்?...K. S. இராகவ ஐயங்கார்
33. நமது கடமை ,,
34. அன்பின் வெற்றி .... M. K. இராமையா
35. கனவு கழிந்தது .... ,,
36. எங்கள் பள்ளி .... V. சின்னையன்
37. பண்டைத்தமிழரின் பண்பாடு ... A. M. துரைசாமி
38. எதை எழுதுவது? .... T. முத்துசாமி
39. கடிதம் .... M. கந்தசாமி
40. அலண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பயம் —
A பெரியசாமி
41. குயிலும் மயிலும் .... P. பாலசுப்பிரமணியன்
42. கடல் தாமரை .... M தங்கராசன்
43. நான்கண்ட திருப்பராய்த்துறை .... A. கோவிந்தன்
44. துணுக்குகள் .... S. முத்துக்கிருஷ்ணன்
45. நம் நாடு .... R. முத்தையா
46. பிச்சைக்காரி .... V. தருமலிங்காரம்
47. பொருளே இல்லார்க்குத் தொல்லையா? .... N. M. பெரியசாமி
48. மகாத்மா காந்தி .... K. S. இராஜையா
49. பழமொழி வரிசை ... ... N. மூக்கன்
50. பள்ளித் தலைவர் .... M. தங்கராசன்
51. ரிஷி உலகம் .... R. நல்லையா
52. ஆயிரத்தில் ஒரு வார்த்தை ... . M. கருப்பையா
53. ஏன் உயர்ந்தான்? .... S. சின்னசாமி
54. வகுப்பு வருகைப் பதிவு விவரம் ... S. ஆறுமுகம்
55. மாணவர் இலக்கியக் கழகம்—7-வது ஆண்டு விழா
— மூ. பொன்னம்பலம்
56 மது விலக்கால் ஏற்படும் நன்மைகள் .... G. ஆறுமுகம்
57. உல்லாசப் பிரயாணம் ... . A. சந்திரசேகரன்
58. வகுப்புக் கண் காட்சி ... K. S. இராகவ ஐயங்கார்
59. குடிமைப் பயிற்சியில் மாணவர்கள் .... M. கோவிந்தன்
60. இலக்கியக் கழக நடவடிக்கைகள் .... M. பொன்னம்பலம்
61. விழாப் பட்டியல் ... . S. உருத்திர சாமி
62. ஆசிரியர்கள் பட்டியல்.

"மாணவர் உலகம்"

மலர் 5	ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்.	1953-'54

தலையங்கம்

ஆற்று வெள்ளமானது பெருக்கெடுத்து ஓடி இரு கரைகளையும் உடைத்து வயல்களையும், தோப்புகளையும், துரவுகளையும், நாடுகளையும், நகரங்களையும் நாசமாக்கி, மக்களுக்குச் சொல்ல ஒண்ணாத் துன்பங்களைக் கொண்டு வருவதும் உண்டு; அவ்வெள்ளமே, இரு கரைகளும் நன்கு கோலப்பட்ட ஆற்றினுள் புகுந்து வாய்க்கால்கள் வழியாக வெளிப் போந்து வயல்களில் பாய்ந்து எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேர் என இயற்கை அன்னைக்கு மாகத ஆடை உடுத்துவம் உண்டு. ஏரிகளிலும் குளங்களிலும் குட்டைகளிலும் செலுத்தப்பட்டு மக்களுக்கும் மாக்களுக்கும் பயன்படுத்தப்படுவதும் உண்டு. மக்களின் உணர்ச்சி வெள்ளமும் இப்படிப்பட்ட தன்மைத்தே. அவ்வுணர்ச்சி வெள்ளம் தகுந்த தலைவர்களால் நல்வழிகளில் திருப்பப்பட்டால் அது காடு கெடுத்து நாடாக்கும்; மடு தூர்த்து மனையாக்கும்; மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் அமைக்கும்; இன்பக் கலைகள் பல எழிலுற எழ வழிகோலும். அதுவே கெட்ட வழிகளில் திருப்பப்பட்டாலோ, அதனால் ஏற்படும் விளைவுகளைத்தான் என்னென்று விரித்துரைப்பது! அவ்விளைவுகளை நினைக்கும் மனம் திடுக்குறுகின்றது; உடல் வேர்க்கின்றது; ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக முயன்றெடுத்த கோபுரங்கள் ஒரு கணத்தில் தவிடு பொடியாக்கப்படுகின்றன; குளங்கள் தூர்க்கப்படுகின்றன; பிணங்கள் குவிக்கப்படுகின்றன; புத்து ஈசல்களைப் போன்று நாசங்கள் எண்ணிக்கையில தோன்றி மக்கள் சமுதாயமே அழிந்து விடுமோ என்றும் திகில், கண்டார்க்கு ஏற்படுகின்றது. ஆகவே மக்கள் உணர்ச்சிகளை தகுந்த வழிகளில் திருப்பும் உண்மையும்,

நேர்மையும் நிரம்பிய தலைவர்களே தற்காலத்தில் தேவைப் படுகின்றனர். "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பது முடியாட்சி நிலவிய அக் காலத்தில் தோன்றிய பழமொழி. அதையே குடியாட்சி நிலவும் இக்காலத் தில் "தலைவர் எவ்வழி அவ்வழி மக்கள்" என மாற்றிக்கொள்ளலாம்.

அப்படிப்பட்ட தலைவர்கள் ஆக்கப்படும் ஆதி உலைக்களந்தான் எது? கல்விக் கூடம் என்று எதிர்ப்பாரின்றி சொல்லலாம். கல்விக் உடத்தில் உள்ள ஆசிரியர் ஒரு கொல்லன். கொல்லன் தன்னிடம் கொடுக்கப்படும் அழகற்ற காடு முரடான இரும்பு உருண்டையை உலைக்களத்திலிட்டு காய்ச்சுகின்றான்; சம்மட்டி கொண்டு அடிக்கின்றான்; சுத்தி கொண்டு தட்டுகின்றான்; வெட் டிரும்பு கொண்டு வெட்டுகின்றான்; அரம் கொண்டு ராவுகின்றான். உருவ மற்று ஒப்படைக்கப்பட்ட இரும்புத் துண்டு ஒளி வாளாகக் கடைசியில் மிளிர்கின்றது. பெற்றோர்களால் இளைஞர்கள் ஆசிரியர்கள்பால் ஒப்படைக் கப்படுகின்றனர். இரும்புத் துண்டைப் போன்று காடு முரடான உள்ளமும் உடலும் படைத்த இளைஞன் உலைக்களமாகிய கல்விக் கூடத்தில் உருவாக்கப் படுகின்றான் இளமை உள்ளம்; ஊக்கம் நிறைந்த உள்ளம்; பளிங்கு உள்ளம்; பாபம் அறியாத உள்ளம்; பயம் அறியாத உள்ளம்; தூய உள்ளம்; துன் பச் சுடலைக்குள் நுழையாது இன்பத்தையே என்றும் நாடித் திரியும் எழில் நிறை உள்ளம். அப்படிப்பட்ட உள்ளத் திரையில் எழுதப் புகும் ஆசிரியரின் பொறுப்பு பெரியது; மகத்தானது. இக் கருத்தை உள்ளத்தில் வைத்து ஒவ் வொரு ஆசிரியரும், ஆசிரியையும் தன் பணியைத் தொடங்கவேண்டும். இவ் வித கருத்தை உட்கொண்டு பணியாற்றி வரும் ஆசிரியர்கள் நிரம்பிய கல்விக் கூடங்களே கல்விக் கூடங்கள். மற்றவை கல்விக் கூடங்கள் அல்ல, அவை காடிக் கூடங்களே.

இவ்வித உன்னத கருத்துக்களைக் கொண்டுதான் **நேரு பள்ளியைத்** தோற்றுவித்தார் எங்கள் மானேஜர் **உயர்திருவாளர் மு. மூக்கப் பிள்ளை அவர்கள்.** தன் கருத்துக்களை நடைமுறையில் நடத்திக் காண்பிக் கும் உண்மையும், உழைப்பும், ஊக்கமும் நிரம்பியவர்களையே தன் பள்ளிக்கு ஆசிரியர்களாக அமர்த்திக்கொள்ளுகின்றார். அமர்த்திக் கொண்ட பின்னர் ஆசிரியர்களைக் "கண்ணினைக் காக்கின்ற இமையில்" காத்து வருகின்றார். இவ்வித உன்னத குறிக்கோள்களைக் கொண்ட நேரு உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வரும் ஆசிரியர்களின் பேறு பெரும் பேறு என்றே சொல்ல வேண்டும். பள்ளி மானேஜர் அவர்களின் திருவுருவம் ஊனக் கண்களிலோ, அல்லது உளக் கண்களிலோ காணுந்தோறும், ஆசிரியர்கள் தங்கள் கடமை களில் வழுவாதிருக்க வகை ஏற்படுகின்றது. ஆகவே அவர்கள் அல்லும் பகலும் அனவரதமும், தங்கள்பால் ஒப்படைக்கப்பட்ட ஒப்பற்ற நடமாடும்

தெய்வங்களுக்குப் புத்துயிரும், புத்துணர்ச்சியும் அளித்து, அறிவுக் கண்களைத் திறந்து, அன்பு விளக்கு ஏற்றி பிற்காலத்தில் தகுந்த குடிமக்களாக வாழ வழி கோலிக் கொடுக்கின்றார்கள்.

இளைஞர்களிடையே பொதிந்து கிடக்கும் ஆற்றல்கள் செயல்களாக வெளிப்பட, ஏற்றவை அனைத்தும் ஆக்கித் தருவதே கல்வியின் முக்கிய நோக்கமாகும். இவ்வித நோக்கத்தை கருத்தில் வைத்தே எங்கள் ஆசிரியர்கள் பாடங்களையும், பாடத் திட்டங்களை ஒட்டிய குடிமைப் பயிற்சித் திட்டங்களையும் தங்கள் சொற்களாலும், செயல்களாலும் நடத்திக் காண்பிக்கின்றார்கள்.

இளைஞர்களுக்கு ஒழுங்குபட்ட செயல், உள்ளம் ஆகியவை ஏற்பட ஒவ்வொரு காலையும் இறை வணக்கம் நடத்தப்படுகிறது. இதில் ஆசிரியர்களும் பங்கெடுத்துக் கொள்ளுகின்றார்கள். இச் செயலால் மாணவர்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் தங்கள் வேலைகளைத் தொடங்குங் காலத்திலேயே அமைதியான உள்ளத்துடன் தொடங்குகின்றார்கள். அவர்கள் வாழ்க்கையிலும் என்றும் அமைதி ஏற்படுகின்றது. ஆயிரக்கணக்கான பணத்தைச் சம்பாதித்தவர்களும், அளவற்ற அதிகாரம் படைத்தவர்களும் கூட சிறிது நேரமாவது தன் வாழ்க்கையில் அமைதி பெறவிட்டால் அவர்கள் இன்பம் முற்றும் பெறாது. ஆகவே அமைதிக்கு இளமையிலேயே அடிகோலுவது அனைவருக்கும் தலையாய கடன் என்பது இதனால் பெறப்படுகின்றது.

இளமை, ஊக்கமும் துடுக்கும் நிறைந்தது. இவற்றிற்கு விருந்தூட்டி உடல் வளம் உண்டாக்குவதற்காக மாலைக் காலங்களில் விளையாட்டு அரங்குகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. அங்கு ஆசிரியர்களும் சென்று மாணவர்களுடன் விளையாடுவதை நாள்தோறும் இங்கு காணலாம். 'உடலார் அழிந்தால் உயிரார் அழிவார்' என்பதைக் கருத்தில் கொண்டுதான் ஆடு அரங்குகளில் மாணவர்களுக்கு உரமான உடல்கள் ஏற்பட வழி கோலப்படுகின்றது.

மற்றும் பேச்சு வன்மையையும், தர்க்க வன்மையையும் வளர்க்க மாணவர் கழகங்களும், புதுப் பொருள் பொறுக்கும் திறன் வளர வகுப்புக் கண்காட்சிச் சாலைகளும், சுற்றித் திரிந்து புதியன கண்டு அறிவு வளர்த்துக் கொள்ள உல்லாசப் பிரயாண குழுக்களும், இசை நாடகத் திறன் வளர இசை நாடகக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவ்வவற்றில் தனித்த முறையிலும், கூட்டு முறையிலும் மாணவ மாணவிகளின் போட்டி மனப்பான்மை நல்ல முறையில் வளர, வெற்றி பெற்ற வீடுகளுக்கு (House) கொடி முதலியன கொடுக்கப்படுகின்றன. மாதந்தோறும் சிறு சிறு நாடகங்கள் நடத்தப்படுவதோடு ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் பெரு நாடகம்

ஒன்று ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் நடித்துக் காட்டப்படுகின்றது. அதைக் கண்டு மகிழ பல்லாயிரக் கணக்கான மக்கள் உள்ளூர் வெளியூர்களி லிருந்து ஆண்டு தோறும் திரண்டு வருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே. நாடகக் கலை மேன்மைகளை அறியாதார் ஒருவரும் இல்லை இரவில் தீயவழிகளில் செல்லும் ஐம்புலன்களை நல் வழியில் திருப்பி மனத்திற்கு உற்சாகத்தை ஊட்டுவதில் நாடகக் கலையை விஞ்சிய கலை வேறு ஒன்றும் இல்லையென்றே சொல்லலாம். இவ்வித கலையும் இளமையிலேயே எங்கள் மாணவர்களுக்கு ஊட்டப்படுகின்றது.

எழுது கருவியும், எழுதப்படும் பொருள்களும் இல்லாத பண்டைக் காலத்திலே ஆணி கொண்டும், இறகு கொண்டும் முள் கொண்டும் பட்டைகளிலும், பனை ஓலைகளிலும், சுருளிலும், சுவற்றிலும், கல்லிலும் காவியங்களும் ஓவியங்களும் எழுதப்பட்டு வந்தன. அதனால் அறிஞர்களின் அருங் கருத்துக்கள் பாமர மக்களுக்கு அகப்படுவது அரிதாகவே இருந்தது. இம் முட்டுக்கட்டைகளால் பொது மக்கள் அறியாமையில் மூழ்கிக் கிடந்தனர். அறியாத மக்கள் பெரிதாய பேறுகளாகிய குடியாட்சியையும், மற்றும் பல அறிவுரைகளையும் பெற்று வாழ வழியில்லாமலேயே போயிற்று. இக்காரணமே பண்டைக் காலங்களில் எங்கு பார்த்தாலும் முடியாட்சி நிலவியதற்கு முடிந்த காரணமாகவும் இருந்தது.

ஆனால் இக்காலத்திலோ ஒரு நாளில் பல்லாயிரக் கணக்கான புத்தகங்களையும், புதினத் தாள்களையும் (*News papers*) ஆக்கித் தரும் அச்சுப் பொறிகள் அநேகம் உள. அறிஞர்கள் அரிய கருத்துக்களைத் தங்கள் அறிவுக் கருவூலத்திலிருந்து எடுத்துக் கொள்ளுகின்றார்கள்; உடனே அச்சு வாகனம் அவற்றை அழகான புத்தகங்களாக ஆக்கித் தருகின்றன. அனைவரும் படிக்கின்றார்கள்; அறிவு விளக்கம் பெறுகின்றார்கள். விளக்கம் பெற்ற மக்கள் வீறுகொண்டு எழுகின்றார்கள். அரசியல் துறையிலும், ஆன்மநேயத் துறையிலும், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அவர்கள் சமத்துவம் கேட்கின்றார்கள். இதனால் நவீன காலத்தில் பொது மக்களிடையே சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் முதலியன ஏற்பட்டு நிலைத்த குடியாட்சி ஏற்பட வகை ஏற்படுகின்றது.

பெற்ற சுதந்திரத்தை பேணி வளர்க்க எழுத்துச் சுதந்திரமும், பேச்சுச் சுதந்திரமும் வேண்டுமென பொது மக்கள் வாதாடுகின்றனர். ஆகவே நிலைத்த குடியாட்சி நாட்டில் ஏற்படவேண்டுமானால் எழுத்துக் கலையையும் இளமையிலிருந்தே வளர்ப்பது கல்விக் கூடத்தின் கோல்லனாகிய ஆசிரியரின் தலையாய கடமைகளுள் ஒன்றாக முடிகின்றது.

ஆங்கில தமிழ்ப் பயிற்சி வகுப்புகள் அவ்வித எழுத்துக் கலையை தூண்டவும், வளர்க்கவும் போதாவோ என்றால், ஒரு பொழுதும் போதா. அவ்வகுப்புகளில் மாணவர்களின் சிந்தனை சக்தி சுயேச்சையுடன் பல உருவங்களில் வெளிப்பட வகையில்லை. சுயேச்சையின்மையும் கலைப் பெருக்கும் இரு பகைஞர்கள். சுயேச்சை எங்கு காணப்படுகின்றதோ அங்கு கலைப் பெருக்கம் காணப்படும். மாணவர்களில் சிலர் சிந்தனைக் கட்டுரைகள் எழுதலாம்; சிறு ஓவியம் தீட்டலாம்; கவிதைகள் புனையலாம்; கதைக்கலாம். இவ்வாறான பொதிந்த ஆற்றல்களை மாணவர்களினின்றும் வெளிப்படுத்திப், பிற்காலத்தில், தான் உணர்ந்த கருத்துக்களை சொற்சுவை, பொருட்சுவை கொண்ட எழுத்தோவியங்களில் எடுத்துக் காட்டும் பேராற்றல் இளமையிலேயே நல்வழிகளில் வளர்க்கப்படவேண்டும் என்னும் பேரெண்ணத்தால் தான் இம் "**மாணவர் உலகம்**" என்னும் ஆண்டு மலர் ஒன்று, ஆண்டு தோறும் இப்பள்ளியில் வெளிப்படுத்தப்படுகின்றது. இதில் காணப்படும் கட்டுரைகளும், கவிதைகளும், கதைகளும் ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் எழுதப்பட்டவை. அவை வாசகர்களால் படிக்கப்பட்டு அவற்றிற்கு உரிய பெருமை அளிக்கப்படும் என்பது எங்களின் நம்பிக்கை. அவ்வித நம்பிக்கை கொண்டே இவ்வுலகத்தை வெளி உலகத்திற்கு எடுத்துக் காட்டுகின்றோம்.

வாழ்க தமிழ்; வாழ்க நம்நாடு. வாழ்க கருவில் திருவுடைய திருவாளர் மு. மூக்கப் பிள்ளை அவர்கள்.

"குறள் கொடுக்கும் குரல்"

[வித்வான் S. சோமசுந்தரம் M. A., L. T., தலைமை ஆசிரியர்]

அன்புமிக்க மாணவர்களே! மாணவிகளே!! இப்பேர் அவைக்கண் கூடியிருக்கும் உங்களைக் காண பெரு மகிழ்வு எய்துகின்றேன். வாரந் தோறும் கூட்டும் சாதாரண கூட்டங்களுள் இவ்வாண்டிற்கு இதுதான் முதல் கூட்டம். இக்கூட்டத்திற்கு நீங்கள் என்னைத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொண்டதற்கு முதற்கண் நன்றி. இச்செயல் நீங்கள் ஆசிரியர்களிடம் வைத்திருக்கும் அன்பையும், மதிப்பையும் காட்டுகின்றது.

தனித்தனியாகப் பிரிந்து உள்ள வகுப்புகள் எல்லாம், இங்ஙனம் பொதுவாகக் கூடுவதன் காரணந் தான் என்ன? இதை நீங்கள் எப்பொழுதாவது ஆராய்ந்து பார்த்தீர்களா? இனியாவது நீங்கள் பார்க்க வேண்டும். தனிமையைவிட்டு, இங்ஙனம் பொதுவாகக் கூடுவது எத் தருணங்களில் என நீங்கள் முதற்கண் கணக்கிடவேண்டும். கூட்டமாக உடற்பயிற்சி [Mass Drill] செய்யுங் காலத்திலும், உங்கள் நாடகங்கள் நடக்கும் காலத்திலும், பள்ளிமாணவத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் காலத்திலும் பள்ளி விழாக் காலங்களிலும் நீங்கள் கூட்டமாகக் கூடுகின்றீர்கள். இக்கூட்டம் உங்களுக்குள் ஒரு கூட்டுணர்ச்சியை, ஒரு பொதுமனப் பான்மையை, ஒரு ஒற்றுமை மனப் பான்மையை தோற்றுவிக்கின்றது. கூட்டுணர்ச்சி தோன்றிய மனங்களில் உடனே, எக்காரியத்தை யும் செய்து முடிக்கலாம் என்னும் ஒரு புத்துணர்ச்சியும் தோன்றுகின்றது. இவ்விதமான உணர்ச்சிகள் நாட்டிற்கு நன்மைபயக்கக்கூடியவை. பிற்கால குடிமக்களாகத் திகழப் போகும் உங்களுக்கு இவ்வித உணர்ச்சிகள் இளமையிலேயே உண்டாகவேண்டும் என்பதற்காகத் தான் ஆசிரியர்களாகிய நாங்கள், உங்களுக்கு அவ்வுணர்ச்சி தோன்றி வளரக்கூடிய பல சந்தர்ப்பங்களை உண்டாக்கித் தருகின்றோம். ஆனால் ஒன்றுமட்டும் உங்கள் உள்ள நினைவில் இருக்கவேண்டும். இக்கூட்டு உணர்ச்சி, மக்களுக்குப் பயன்படும் முறையில், பொதுத் தொண்டாற்றும் முறையில் செலுத்தப்படவேண்டும். அங்ஙனம் இன்றி, அவ்வுணர்ச்சியை அழிவு வேலைகளில் ஈடுபடுத்தினால், கரைகோலப்படாத வெள்ளமென அதுவீழ்ந்து மக்கள் சமுதாயத்தையே அழித்துவிடும்.

அக்கூட்டங்கள் பலவற்றுள் இவ் இலக்கியக்கழகக் கூட்டமும் ஒன்று. இவ்விலக்கியக் கழகம், முக்கியமாக மாணவர்களுக்குள்ளே பொதிந்து கிடக்கும் பேச்சு வன்மையைப் பெருக்கவேண்டும் என்னும் நல் நோக்கத்துடனேதான் ஆண்டாண்டும் கூட்டப்படுகின்றது. பேச்சு வன்மையென்பது ஒருவன் பெற வேண்டிய பல செல்வங்களுள் சிறந்த செல்வமென்றே சொல்லவேண்டும். பிரதிநிதித்துவ குடியாட்சி நிலவும் இக்

காலத்தில் பேச்சுவன்மை ஒருவருக்கு இருந்துவிட்டால் மக்களை வெகுவிரைவிலும், எளிதிலும் வசப்படுத்திவிடலாம். மக்களை வசப்படுத்தும் ஒருவன் குடியாட்சி நிலவும் நாட்டில் அதிகாரத்திற்கு வருவது வெகு எளிதில் முடிந்துவிடும். ஆகவே அதிகாரம் பெறவேண்டுபவர்கள் நாவன்மையை இக்காலத்தில் பெற்றிருக்கவேண்டும் என்பது கண்கூடு.

நாவன்மைமூலம் அதிகாரம் பெற்றவர்கள் ஆட்சி செலுத்துங்கால், அவ்வதிகாரம் நல்ல முறையில் பயன்படும்படிச் செய்வதற்கு ஆட்சி மன்றங்களில் சிறந்த எதிர்க்கட்சியினர் இருக்கவேண்டியதும் அவசியம் அன்றோ? அவ்வெதிர்க் கட்சியினரும் நாவன்மைபெற்று உள்ளவர்களாக இருந்தால்தான் ஆட்சிபீடத்தில் அமர்ந்தவர்களின் போக்கு குடியாட்சிக்கும், பொதுநலத்திற்கும், பொது நோக்கிற்கும் மாறாக இருந்தால் வன்மையுடன் மன்றங்களில் கண்டித்துப்பேசி ஒருவாறு அவர்களின் போக்கையும்திருப்பலாம். அஃதுடன் அமையாது மேடைமீது ஏறி பொது மக்களுக்குத் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லி அவர்களுடைய மனங்களையும் தனக்கு உறுதுணையாக ஆக்கிக்கொள்ளலாம்.

மற்றும் சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், மதவாதிகள் ஆகிய அனைவரும், ஒருவர் கொண்டுள்ள கருத்துக்களை ஒட்டிப் பேசவும், அவற்றை வெட்டிப் பேசவும், தான்கொண்ட கருத்துக்களைப் பிறருக்குத் தெளிவுபட எடுத்துச் சொல்லவும் வேண்டியது நாவளப்பந்தானே சுருங்கச்சொல்லுமளவில் நாவன்மை பெற்ற ஒருவர் எந்நலத்தையும் எளிதில் இவ்வுலகில் பெற முடியும் என்பது வெள்ளிடைமலை.

நா நலத்துடன் இக்கழகக் கூட்டங்களில் ஒழுங்கு மனப்பான்மையும் சகிப்பு மனப்பான்மையும் செவ்வனே நீங்கள் கற்றுக்கொள்ளுகின்றீர்கள். உங்கள் தோழர்களில் ஒருவர் மேடைமீதேறி ஒரு தலைப்பைப்பற்றிப்பேசும் பொழுது அவர் பேசும் பொருள் உங்களில் சிலருடைய கருத்துக்களுக்கு விரோதமாக இருக்கலாம். உங்கள் மனம், உடனே எழுந்து அவருக்கு விரோதமாகப் பேசத் தூண்டும். ஆனால் கழக விதிப்படி நீங்கள் அங்ஙனம் உடனே பேசுவது கூடாது அவர் பேசி முடிந்த பின்னர் சபையின் தலைவர் அனுமதி பெற்று நீங்களும் அதே மேடைமீது ஏறி முன்னர் பேசியவருடைய கருத்துக்களை வெட்டிப்பேசவேண்டும். இவ்விதம் நீங்கள் பழக்கப்படுவதால், உங்களுக்கு பிறர் கருத்துக்களைக் கேட்டுச் சகிக்கும் மனப்பான்மையும் ஒழுங்காகப் பேசும் பழக்கமும் ஏற்படுகின்றன. இவ்விரண்டும் குடியாட்சி நாட்டில் நீங்கள் நல்ல குடிமக்களாக வாழ இன்றியமையாது பிற்காலத்தில் வேண்டுவன.

இன்னோன்ன நலங்களை எல்லாம் மாணவர்கள் பெறவான் வேண்டிதான் இவ்விலக்கியக்கழகம் ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் ஏற்படுத்தப்பட்டு உள்ளது ஆகவே இக்கழகத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும் மாணவர்கள் பங்குகொள்ள வேண்டும். இளமையில் நீங்கள் இவ்வன்மை

பெற்றீர்களேயானல் அது முதுமைக்குப் பெரும்பலனை அளிக்கும் என்பது திண்ணம். ஆகவே இக்கழகக் கூட்டங்களைப்புறக்கணிக்காது இடத்திற்கு இனி ஒவ்வொருவரும் முந்தவேண்டும்.

மாணவர் இலக்கியக்கழகத்தின் அவசியத்தையும், அதில் மாணவர்கள் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டிய விதத்தையும் இதுகாறும் சுருங்கச் சொன்னேன். இனி 'குறள் கொடுக்கும் குரல்' என்ன என்பதைப் பார்ப்போம். தமிழ் மக்களின் தனிப்பெரு நாகரீகமாகிய பாலில் கடைந்தெடுத்த வெண்ணெயாகும் "குறள்". பால் இன்றேல் வெண்ணெயும் இல்லை. அஃதேபோல் 'குறள்' தோன்றுவதற்கு முன்னர் தமிழ் மக்கள் அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும், ஆத்மநேயத்துறையிலும் சிறந்தவர்களாகத் திகழ்ந்திருக்கவேண்டும் என்பது தெளிவு. அங்ஙனம் இருந்த நாகரீகத்தின் அடிப்படையைக் கொண்டுதான் இம்மறை நூல் எழுந்துள்ளது. இக்கருத்திற்குச் சான்று அந்நூலில் முதலில் காணப்படும்.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு

என்னும் குறளும் கடைசியாகக் காணப்படும்.

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்

என்னும் குறளுமே. இவ்விரு பாக்களையும் ஊன்றிப் பாருங்கள். தமிழ் எழுத்துகளுள் முதலாவதாகிய 'அ'கரத்தை முதற் குறளின் முதலிலும், கடை எழுத்தாகிய 'ன்'என்ற எழுத்தைக் கடைசிக் குறளின்கடைசியிலும் காணுகின்றீர்கள். இவை இரு குறளும் என்னதோற்றுவிக்கின்றன? ஆசிரியர் திருவள்ளுவர் தன் மறை நூலாகிய திருக்குறளைத் தமிழ் இலக்கிய, இலக்கண வரம்புகளை மீறுமலும், தமிழ்மக்களின் சிறந்த பண்பாட்டின் அடிப்படையைக்கொண்டும்தோற்றுவித்தார் என்பதைத்தான் அவை இரண்டும் விளக்குகின்றன.

இத் திருக்குறள் ஒரு பொதுமறையாகும். இந்நூலில் சொல்லப்பட்டு உள்ள பொருள் தனிப்பட்ட சாதியினருக்கோ, மதத்தினருக்கோ தேயத்தினருக்கோ பொருந்தியது அன்று இது எத்தேயத்தினருக்கும், எம் மதத்தினருக்கும், எச் சாதியினருக்கும், எக் காலத்தினருக்கும் ஏற்றதாகும். அதனுல்தான் இந்நூலை மேனாட்டார்கள் பலரும் தங்கள் தங்கள் மொழியில் மொழி பெயர்த்துள்ளனர். திருக்குறள் ஆசிரியரை வைணவர்களும்,சைவரும் சமணரும்,பௌத்தரும், கிறித்துவரும் தங்கள் மதத்தினர் எனச் சொல்லிக் கொள்ளுகின்றனர். இஃது ஒன்றே அவ்வாசிரியரின் பொதுமையை விளக்கப்போதுமன்றே! அஃது இப்பொழுது ஒரு உலகப் பொதுநூலாக விளங்குகினறது என்பது திண்ணம்.

குறளின் சிறப்பை எடுத்துச் சொல்லுவதென்றுல் ஒருவருடைய ஆயுளே போதாது. அங்ஙனமிருக்க இக்குறுகிய அளவில் எல்லாச் சிறப்புகளையும் உங்களுக்கு என்னுல் எடுத்

தோக முடியாது என்பது திண்ணம். எனினும் இப்பொழுது குறளைப்பற்றிய சில கருத்துக்களை மட்டும் சொல்லி என்னுடைய தலைமை உரையை முடித்துவிடுகின்றேன்.

இவ்வுலக மக்கள் அடையவிரும்புவது அறம், பொருள், இன்பம், வீடு. இவற்றையே வடமொழியாளர் தர்மார்த்த காம மோட்சம் என்பர். திருவள்ளுவநாயனுர் தன்னுடைய நூலில் முதல் மூன்றைப்பற்றியும் விரிவாகச் சொல்லி உள்ளார். நான்காவதாகிய வீடுபேற்றைப்பற்றி சொல்லாது விடுத்துவிட்டார். இதற்குத் தகுந்த காரணமும் உண்டு 'வீடு' என்னும் ஒன்று மக்களுடைய சிந்தைக்கும், வாக்கிற்கும் எட்டாத நிலைமைத்து ஆதலின் அதைப்பற்றி சொல்லாது விடுத்தார். விவாதத்திற்கு உரிய, அப்படிப்பட்ட ஒன்றை பல படியாகப் பேசியும், எழுதியும் காலம் கழிப்பதால் வீண் காலம் ஆவதோடு, மக்களுக்குள் பூசல்களும் ஏற்பட்டு இன்பம் ஏற்படத் தடங்கல் ஏற்படும் என்ற மேலான எண்ணங்கொண்டே அதை விடுத்தார் சுகாதாரமுறைப்படி நன்கு நடந்தால், ஒருவர் நல்ல வாழ்வு வாழ்வது நிச்சயமன்றே! அங்ஙனம் நடக்காவிட்டால் விரைவில் பிணியாலும், மூப்பாலும் பிடிக்கப்பட்டு அல்லல் உறுவார்கள் என்பது திண்ணம். அங்ஙனமே மறை நூல்களில் சொல்லியபடி இவ்வுலக வாழ்வில் வாழ்வாங்கு வாழும் ஒருவன் எப்பொழுதும் நல்ல நிலை எய்துவான், என்பதில் ஐயம் உண்டோ? ஒருபொழுதும் இல்லை. இவ்வித எண்ணங்கொண்டே சர்ச்சைக்கு இடமான காலாவதை, நல்ல எண்ணத்துடன் விடுத்தார் என நான் நினைக்கின்றேன்.

அடுத்தபடியாக நூலின் உள்ளே சென்று சிறிது பார்ப்போம். முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து. இவ்வதிகாரமுறை எதைக் காட்டுகிறது? இவ்வுலகம் அனைத்திற்கும் முழுமுதற் கடவுள் ஒருவர் உண்டு என்பதையும், அவர் இல்லை என்று யாராலும் எக்காலத்திலும் மறக்கவும், மறுக்கவும் முடியாது என்பதையே வலியுறுத்தி நிற்கின்றது. நீங்களே சிறிது யோசித்துப் பாருங்கள். உங்கள் உடல்களுக்குள் ஒன்று ஊடாடிக்கொண்டு இருக்கின்றது. அவ்வொன்றை நீங்களும், நானும் உயிர் என்று சொல்லுகின்றோம். அவ்வுயிர் சென்றுவிட்டால் உடலின் நடமாட்டம் நின்றுவிடுகின்றது. இங்ஙனமே இப்பெரிய உலகமாகிய உடல் ஆகாயத்தில் எங்ஙனம் இயங்கிக்கொண்டு உள்ளது? ஒன்றுமில்லா வெட்டவெளியில் பல கோளங்கள் ஒன்றையொன்று எங்ஙனம் பற்றிக்கொண்டும், சுற்றிக்கொண்டும் இருக்கின்றன? அவை எங்ஙனம் ஒழுங்காக நாள்தோறும் இயங்கிக்கொண்டிருக்கின்றன! இவற்றைப்பற்றியெல்லாம் ஓய்வு நேரங்களில் நீங்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தீர்களேயானல் ஒரு உண்மை தோன்றும். அதுதான் இவ்வண்டங்களை எல்லாம் இயக்கும் பெரிய உயிர் ஒன்று உண்டு என்பதும் அவ்வுயிருக்குத்தான் இறைவன் எனப் பெயர். அவ்வுயிர் இன்றேல் இவ்வண்டங்களெல்லாம் மாண்டு மடிந்து போய்விடும். எவ்விதம் சிந்தித்துப் பார்த்தாலும், எவ்விதம் விவாதித்துப்

பார்த்தாலும் முடிவில் இவ்வுலகங்களுக்கெல்லாம் முதல்வன் ஒருவன் உண்டு என்ற முடிவிற்கே வந்துதீர வேண்டும். இவ்வுண்மை கண்டவர் திருவள்ளுவநாயனார். அதனால்தான் தந்நூலை கடவுள் உண்டு என்ற கொள்கையோடு ஆரம்பிக்கின்றார். அவ்வதிகாரத்தில் அவர் கடவுளைப் பற்றிச் சொல்லியுள்ள கருத்துக்களெல்லாம் யாராலும்மறுக்கமுடியாத உண்மை. அத்தன்மையுடைய பொருள் ஒன்றையே யாரும் இறைவன் எனச் சொல்ல முடியும்.

அடுத்தபடியாக குறட் பாக்களை ஊன்றிப் படித்ீர்களேயானல் திருவள்ளுவர் சிலசமயம் உலகத்தாரைப் பார்த்துத் தான் சொல்லவேண்டிய கருத்துக்களை அழுத்தமாகவும், ஆணித்திறமாகவும், கன்னத்தில் அறைந்துசொல்லுகின்ற முறையிலும் சொல்லுவார். உதாரணமாக,

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்

என்ற பாவை ஊன்றிப் படித்துப் பாருங்கள் இக்குறள் மூலம் ஆசிரியர் உலகத்தாரைப்பார்த்து என்னசொல்லுகின்றார்? ஆடு, மாடுகளைப்போன்று உண்டு களிப்பதற்காகவே உயிர்வாழும் மக்கள் அநேகரைப் பார்த்தார் அவர்களின் வாழ்க்கையின்குறிக்கோள்தான் என்ன? உண்பது உறங்குவது. மிருகங்கள் வாழ்க்கையின் குறிக்கோளும் அதுவே. பின்னர் அவர்கள் ஏதாவது பெரியார்கள் ஆற்றும் சொற்பொழிவுகளை காதால் கேட்டு, மனத்தால் சிந்தனை செய்து, பின்னர் அவற்றின்படி உடலால் நடக்கின்றார்களா? ஒருபொழுதும் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட மாக்களால் உலகுக்கு என்ன பயன்? ஆகவேதான் ஆசிரியர், அவர்களை நோக்கி அவர்கள் இருந்தாலென்ன; இறந்தாலென்ன; இரண்டும் உலகுக்கு ஒன்றேதான் எனக் கடிந்து சொல்லுகின்றார். இன்னும் இதைப் போன்ற குறள் பலப் பல.

குறள் நூலில் சில பாக்கள் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதைப் போன்று தோன்றும். அவற்றை ஊன்றிப்படித்து, அவற்றின் பொருளை நுணுகி ஆராய்ந்து பார்த்ீர்களேயானல் அவை அங்ஙனம் இல்லை என்பதும், அவற்றின் பொருள் நுணுக்கம் அறிவோடு ஆராயும் சிந்தனைக்கு ஒரு பெருவிருந்து என்பதும் புலனாகும். சாதாரணமாக உலகில் நாம் விதி பெரிதா, மதிபெரிதா என வாதாடுகின்றோம். இவ்வாதத்தில் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய அறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் தகுந்தாற்போல் பெரும் சொற்போர்கள் விளைவிக்கின்றார்கள். இதோ பாருங்கள் ஆசிரியர் என்ன விடை தருகின்றார் என்பதை அறத்துப்பால், ஊழியலில்.

ஊழிற் பெருவலி யாவுள, மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்

எனச் சொல்லுகின்றார். இதன் பொருள், "ஊழ்வினை பலமுள்ளது வேறு உபாயங்களால் காரியங்கள் செய்ய முயற்சி செய்தாலும் ஊழ்வினை முட்டுக்கட்டையாக நம முன் வந்து நிற்கும்," என்பதே. உலகியலை நன்கு

ஆராய்ந்து பாருங்கள். உதாரணமாக ஒருவருக்கு ஒரே புதல்வன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அம் மகன் நோய்வாய்ப்படுகின்றான். அந்நோய்க்கு பழைய சித்த முறைகளாலும் புதிய மேனாட்டு மருத்துவ முறைகளாலும் மருந்து அளிக்கப்படுகின்றது வேண்டிய சிகிச்சைகள் செய்தும், நோய் கட்டுப்படாது சிறிது காலத்தில் அவ் வருமைப் புதல்வன இறந்துவிடுகின்றான் என்று வைத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு முயற்சி செய்தும் பயன் இல்லை. ஆகவே அங்கே ஊழ்வினை வந்து நிற்கின்றது. இங்நிலையில் பெற்றோர்கள், 'தம் மகன் ஊழ்வினையால் இறந்துவிட்டான்; இனி நாம் வருந்திப் பலனில்லை என வருத்தத்தை விடுத்து விட்டார்கள். அதனால் அவர்களின் துக்கம் ஒருவாறு நாளடைவில் அடங்கி அவர்களுடைய எதிர்கால வாழ்விலாவது மன அமைதி ஏற்பட்டுப் பின்னர் இன்பத்துடன் வாழ அப்பெற்றோர்களுககு வழி ஏற்படும். அங்ஙனமின்றி மீண்டும், மீண்டும் அப்பெற்றோர்கள், அந்த மருந்தைக் கொடுத்திருந்தால் பிழைத்திருப்பான்; இந்த மருத்வரிடம் அழைத்துச் சென்றிருந்தால் உயிர் பெற்றிருப்பான்" எனப் பன்னி பன்னி சிந்தித்துக்கொண்டே இருந்தால், 'வெந்த புண்ணில் வேலிட்ட மாதிரி' மகன் இறப்பால் ஏற்பட்ட இழப்புத்துன்பத்தோடு, மன அமைதி இன்மையும் ஒருங்கே சேர்ந்து, அப் பெற்றோர்கள் தங்கள் உடல் நலத்தையும், மன நலத்தையும் தாங்களே கெடுத்து சின்னாட்களில் தாங்களும் நோய்வாய்ப்பட்டு, வீணே இறப்பது திண்ணம். இங்ஙனம் ஏற்படக்கூடாதென்பதற்காகவே ஊழ்வலி என ஒன்று உண்டு என்றும், அதை மக்கள் அனைவரும் நம்பவேண்டும் என்றும் வள்ளுவர் வலியுறுத்தினர்.

அதன் பின்னர், பொருட்பாலில் அரசியலில், ஆள்வினை உடைமை என்ற அதிகாரத்தில்

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

எனச் சொல்லி உள்ளார். இக் குறளின் பொருள் 'சலிப்பில்லாமல்; மனம், உடல் ஆகியவை சிறிதும் தளராது, பெரு முயற்சி செய்கின்றவர்கள், ஊழ்வலியால்வரும் பயன்களையும் புறமுதுகிட்டு ஓடும்படிசெய்வார்,'. என்பதே 'ஐயோ! இஃதென்ன? குறள் ஆசிரியர் முன்னுக்குப்பின் முரணான கருத்துகளை அல்லவா கொடுக்கின்றார்', என நீங்கள் குறை கூறலாம். மேலோட்டாக ஆராய்பவர்களுக்கே இங்ஙனம் முரண்பட்ட கருத்துக்கள் தோன்றும். உலகியலையும், நூல் அறிவையும், பகுத்தறிவையும் துணைக் கொண்டு இவ்விரு குறட்பாக்களையும் ஆராய்வார்க்கன்றோ அவற்றின் ஒத்த கருத்துக்கள் விளங்கும்!

இக்குறட் கருத்தையும் வைத்துக் கொண்டு, உலகியலை இங்கு சிறிது ஆராய்ந்து பார்ப்போம். சாதாரணமாக இவ்வுலகில் ஒருவருக்கு உடல் நலம் குணநலம் முதலியவை அமைவது, அவருடைய பிறப்பினாலும் (here lityt) சுற்றுச்சார்பினாலுமே (environmen) இக் கருத்தை வைத்துக்கொண்டு சில மாணவர்களின் வாழ்க்கையைப் பார்ப்போம். சிலர் ஆசிரியர் சொல்லிக்

கொடுக்கும் பாடங்களை உடனே பிடித்துக்கொள்கின்றார்கள். இன்னும் சிலர் அங்ஙனம் புரிந்துகொள்ள எவ்வளவு முயன்றாலும் அவனைப்போல் முடிவதில்லை. இதற்குக் காரணம் அவனது பிறவியே. ஆனால் பிறவி காரணம் என்று அவன் முயற்சியின்றி வாளா இருத்தல் கூடாது. அங்ஙனம் இருந்தால் அவன்வேண்டியதேர்விற்கு மார்க்குகளும் வாங்க முடியாது. அவன் இடைவிடாது பாடங்களை நன்கு படித்து, ஆசிரியர்களை அணுகி, விளங்காத பகுதிகளையும் விளக்கிக்கொண்டு, சலியாது உழைப்பானானால் தேர்வில் வெற்றிபெறவேண்டிய மார்க்குகளையாவது வாங்குவது திண்ணம். மற்றும் பிறவியினால் (ஊழினால்) உடல்வளம் நன்கு அமையப்பெறாத ஒரு மாணவனையும், உடல் உரம் பெற்று, வாட்டசாட்டமான உடலைப்பெற்ற மற்றொரு மாணவனையும் எடுத்துக்கொள்வோம். முன்னவன் 'நமக்கு உடல்வளம் மற்றவனைப்போல் இல்லாததற்குக் காரணம் நமது ஊழ்தான்' என்று சொல்லிக் காலத்தை வீணாகசோம்பிக் கழிக்காமல், தனது விடாமுயற்சியினால் நல்லஉடற் பயிற்சிகள் செய்து, நல்ல எண்ணங்கள் எண்ணி உணவுகளை உண்டு, நல்ல செய்கைகள் செய்தும் நல்லாரோடு இணங்கி வாழ்ந்து வருவான் ஆனால் அவனுக்கும் நல்ல உடல் உறுதியும், கட்டுப்பாடும்: அழகும் நாளடைவில் அமையும் என்பது திண்ணம். சுருங்கச் சொலலுங்கால் இவ்விரு குறள்களின் ஒத்த கருத்துக்கள் வருமாறு: உலகியல் உள்ள நிலையில், ஒரு காரியம் செய்ய முற்படுங்கால் முட்டுக்கட்டைகள் முன்வந்து நிற்பது இயற்கையே. அம் முட்டுக்கட்டைகள் ஊழால் ஏற்பட்டவை என நினைத்து ஒருவன் வறிதே இருந்துவிட்டானானால், அவனுக்கு ஒரு சிறிய நற்பலனும் கிட்டாது. அங்ஙனம் வாளா இல்லாமல் பெருமுயற்சியோடு அக்காரியத்தைத் தொடர்ந்து சலிக்காது செய்துகொண்டேபோனால் முடிவில் ஒரு சிறிய வெற்றியாவது கிடைப்பது திண்ணம். அங்ஙனம் பெருமுயற்சி செய்தும் ஒருசிறிதும் வெற்றிகிட்டாத இடத்து, முடிந்ததைப்பற்றி நினைத்து நினைத்துக் கவலையுறாது, அது ஊழால் ஏற்பட்டது என எண்ணிவிடவேண்டும் அப்பொழுதுதான் அவனுக்கு அடுத்த காரியத்தை, செய்யவேண்டிய மனவலியும், உடல்வலியும் உண்டாகும் இன்றேல் அவன் கவலையுள் ஆழ்ந்து ஒன்றுக்கும் உதவாதவனாக ஆகிவிடுவது திண்ணம்.

இச் சந்தர்ப்பத்தில் 'ஊழ்' என்னும் வார்த்தைப் பிறவிக்காகவும் (heredity) முயற்சி என்னும் வார்த்தையைச் சுற்றுச் சார்பிற்காகவும் (environment) வைத்து நான் சொன்ன கருத்துக்களை, உங்கள் ஓய்வு நேரங்களில் நன்கு ஆராய்ந்து பாருங்கள். அப்பொழுதுதான் உங்கள் மனங்களில் மேற்கண்ட குறட்பாக்களின் ஒத்த கருத்துக்கள் விளங்கும் இன்னும் இவைபோன்ற, முரணாகத் தோன்றும் குறள் பாக்கள் அநேகம் உள. அவற்றையெல்லாம் நுணுகி ஆராய்ந்தால் அவை முரணல்ல என்பதும், முரணான கருத்துக்களை ஆசிரியர் ஒருபோதும் கொடார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

மாணவர்களே! மாணவிகளே!! இதுகாறும் 'குறள் காட்டும் குறவில்' ஒரு

சிலவே எடுத்துச் சொன்னேன். காலம் ஆகின்றது. அயலூர் மாணவர்கள் அநேகர் உங்களில் இருக்கின்றீர்கள் அவர்கள் தொலைவிலுள்ள கிராமங்களுக்குச் செல்லவேண்டும். ஆகவே, என்னுடைய தலைமை உரையை இத்தோடு முடிக்கக் கருதுகின்றேன். திருக்குறள், திருவள்ளுவப் பெருந்தகை நமக்கு அளித்துச் சென்ற வற்றாக் களஞ்சியம்; அறிவு ஊற்று; சிந்தனைச் செல்வம்; தெவிட்டாத தெள்ளமுது. அச் செந்தமிழ் நூலை நீங்கள் அல்லும், பகலும் அன்வரதமும் பயிலவேண்டும். தினம் இரு குறளாவது மனம்பாடம் செய்ய வேண்டும். இளமையில் நன்கு பாடம் செய்துகொண்டீர்களானால் இச் செல்வம் எதிர்காலத்தில் உங்களுக்குப் பேருதவி செய்யும். இதுதான் உங்களை நான் வேண்டிக்கொள்வது. வாழ்க குறள்! வாழ்க தமிழ்மொழி!! வாழ்க நமது வளமார் நாடு!!!

6—8—53-ல் நேரு உயர்நிலைப் பள்ளியின் முது மாணவர்கள் இலக்கியக் கழகத்திற்குத் தலைமை தாங்கிய பொழுது ஆற்றிய தலைமை உரை.

முட்டாள் முத்துச்சாமி

[**வித்வான் S சோமசுந்தரம்** B A., L T. **தலைமை ஆசிரியர்**]

“என்னடா முத்துச்சாமி! அங்கே என்ன செய்கின்றாய்?” என்று உரக்கச் சப்தம் போட்டார் உலகநாதப் பிள்ளை. பதில் ஒன்றுமே காணோம். மறுபடியும், மறுபடியும் இரண்டு தடவைகள் சப்தம் போட்டார்; பதில் ஒன்றுமே காணோம். “என்னடா சனியன்; இந்தப் பயலைக் கட்டிக்கொண்டு அழுவுகின்றது; எனக்குத் தலைவலியே வந்துவிடும்போல் இருக்கின்றதே! நேற்று மாலையே சொன்னேன்; இன்று காலை ஏழு மணிக்குள் எண்ணெய் தேய்த்து முழுகிவிடவேண்டும்; நான்கு நாட்களாக நல்ல சளி பிடித்துக்கொண்டு இருக்கிறது; ஆகையால் எண்ணெயை நன்றாக சுடவைத்துக்கொண்டு வாடா, என்று. மணி ஏழரை ஆகப் போகின்றது; இன்னும் காணோமே”, என முணுமுணுத்துக் கொண்டே படுக்கை விட்டு எழுந்தார் பரபரப்புடன். வீட்டின் பின்புறமுள்ள வெந்நீர்ச் சாலைக்குச் சென்றார். வெந்நீர் அடுப்பு காளவாயைப் போன்று எரிந்துகொண்டு இருந்தது. இன்னும் சிறிது நேரம் பிள்ளை செல்லாவிட்டால், அடுப்பிலுள்ள நெருப்பு, அண்மையிலுள்ள விறகுப் போரில் பற்றி போர் முழுவதும் எரிந்து போயிருக்கும். அனலைத் தணித்துவிட்டு சுற்று முற்றும் பார்த்தார்; முத்துச்சாமியின் சபதத்தையே காணோம். வெந்நீர்ப் பானைப் பக்கத்தில் இரும்பு வடைச் சட்டியில் நல்லெண்ணெய் மட்டும் ஊற்றி வைக்கப்பட்டிருந்தது. “இந்த முட்டாள்

எங்கேயோ போய்விட்டீரனே; நம் வீடு முழுவதும் எரித்து விடுவான் போலிருக்கே; என்னடா பெரிய சங்கடமாக இருக்கிறது இவனாலே" என உறுமிக்கொண்டு அங்குள்ள தாழ்வாரத்தில் உட்கார்ந்தார் பிள்ளை.

சிறிது நேரத்தில் தோட்டத்திற்கு வெளியில் சலசலவென ஒரு சப்தம் கேட்டது. பிள்ளை அத்திசையை உற்று நோக்கி, காதுகளைச் சாய்த்துக் கேட்டார். வரவரச் சத்தம் தோட்டத்தின் வாசற்படியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக அறிந்தார். பின்னர் திடீரென்று வாசற்படியின் வெளிப் பக்கம் ஏதோ ஒருபொருள் 'பொத்'தென்று போடப்படும் சப்தம் செவியில் விழுந்தது; பின்னர்க் கதவுகள் படீரெனத் திறக்கப்பட்டன.

முத்துச்சாமி தன் முழு பலத்துடன் வெளியிலிருந்து ஒரு வேலமரத்தை இழுத்துக்கொண்டு வந்தான. அதைப் பார்த்ததும் உலகநாதம் பிள்ளைக்கு சிரிப்பும கோபமும மாறி மாறி வந்தன. தோட்டத்தினுள்ளே அம்மரத்தை இழுத்துப் போட்டு விட்டு, 'அப்பாடா' என ஒரு பெருமூச்சுவிட்டு, அங்கு உள்ள கருங்கல்லின் மேல் உட்கார்ந்தான் முத்துச்சாமி.

வேலமரத்தையும், வேர்த்து வடியும் முத்துச்சாமியின உடலையும் மாறி மாறிப் பார்த்தார் உலகநாதப் பிள்ளை; மாற்ற முடியாத கோபம் வந்தது; அவர் கண்கள் சிவந்தன; உதடுகள் துடித்தன; பற்கள் நறநறவெனக் கடித்தன; ஆலகால விஷத்தை விழுங்கின ருத்ரமூர்த்தி ஆகிவிட்டார் அவர். எழுந்தார்; அவன் பக்கம் நடந்தார். "என்னடா முத்துச்சாமி! ஏ முட்டாள்! என்ன இது! வேலமரத்தை வெட்டிக்கொண்டு வந்து வேடிக்கை காட்டுகின்றாய்! இன்னும் எப்பொழுது நீ எனக்குச் சமயல் செய்யப் போகின்றாய்? மணி எட்டாகி விட்டதே!" எனக் கர்ஜித்தார்.

"எல்லாம் உங்கள் சொற்படித்தான் நடக்கின்றேன்; நீங்கள்தான் வேலம் வேர் வேண்டும்; அதைப் போட்டு எண்ணெய் காய்ச்சித் தலை முழுகினால் சளி போகும் என்று சொன்னீர்களே. அதற்காகத்தான் காலையிலேயே சென்று இவ் வேலமரத்தை வேரோடு பிடுங்கி வந்தேனுங்க. இதோ சற்று நேரத்திலே எல்லாம் முடித்து விடுகிறேனுங்க; எவ்வளவு நேரமா ஆகப்போகுதுங்க; ஒரு நொடியில் சமையல் செய்துவிடுறேன்" எனப் பதறுமல் மறுமொழி பகர்ந்து, கொடுவாளைக் கையில் எடுத்தான் வேர்களை வெட்ட.

இதைக் கேட்டதும் 'கொல்' என்று சிரித்தார்; கோபம் பறந்தது உலகநாதப் பிள்ளைக்கு. "உன்னைப் போல் ஒரு பெரிய முட்டாள் உலகத்திலேயே கிடையாது. நான் உன்னை வேளை வேர் கொண்டுவரச் சொன்னேனு; இல்லை வேலம்வேர் கொண்டு வரச் சொன்னேனு; சளி முறிகின்றதற்கு வேளை வேர் அல்லவா எண்ணெயில் போட்டுக் காய்ச்ச வேண்டும்?" என்று சிரித்த வண்ணம் கேட்டார் பிள்ளை அவர்கள்.

"என்னுங்க ஐயா! என்ன வேர் அது? இன்னொரு தடவைச் சொல்லுங்கள் ?" என்று கேட்டான் தாழ்ந்த குரலில் முத்துச்சாமி.

வேளைச் செடி இருக்கின்றது அல்லவா. வேளைச்செடி, அதோ பார் அந்த மூலையிலே, வெள்ளைப் பூ, பச்சை இலை அதுதான். உனக்குச் சொன்னாலும் புரியாது. நான் அச் செடியைப் பிடுங்கியே காண்பித்து விடுகிறேன்'' என்று விரைவாக அம்மூலைக்குச் சென்று அச் செடியைப் பிடுங்கி அவன் முன்னே கொணர்ந்தார் அவர். ''இதுதான் பார்; இந்தச் செடிதான்.''

''அப்படி என்றால் அந்த வேலம் மரம் வேண்டாங்களா?''

''வேண்டாம் வேண்டாம்; அதை வெட்டி உன் தலைமேலே போட்டுக்கோ; எப்பொழுதும் சொல்லுவதை திருத்தமாகக் கேட்டுக்கொண்டு போடா. ஒரு விஷயத்தை அவசரமாகக் கேட்டும் கேட்காமலும் ஓடாதே என்று எத்தனை தடவை சொல்லி இருக்கின்றேன். பாதி சொல்லிக்கொண்டு இருக்கும் பொழுதே 'அதுதானுங்களே எனக்குத் தெரியுங்க ஐயா' என்று சொல்லி ஒரு குதி போட்டுக் கொண்டு ஓடுகிறது; அதனால்தான் இப்படி முட்டாள தனமான காரியத்தைச் செய்கின்றாய்! உனக்கு அந்த வாத்தியார் 'ல'கரத்திற்கும் 'ள'கரத்திற்கும் வித்தியாசம் சொல்லிகொடுக்கவில்லையா?''

''எல்லாம் சொல்லித்தான் கொடுத்தாருங்க; வாத்தியாரை ஒரு பொழுதும் குறை சொல்லக் கூடாதுங்க; என் மண்டையிலே ஏறவில்லை அப்பொழுது'' என்று தலையைச் சொரிந்து கொண்டே பதில் கூறினான் முத்துச்சாமி. 'இதோ ஒரு நிமிஷத்திலே எல்லாம் முடித்துவிடுகிறேன் பாருங்க'' எனத் தாண்டிக் குதித்தான் வேலைப் பானையை நோக்கி வேகமாக. அன்று காலை வேலை முடிந்தது. உலகநாதப் பிள்ளையும் எண்ணெய் முழுகி, உண்டு களைப்பாறி இருந்தார்.

ii

உலகநாதப் பிள்ளை உன்னியூர் மிராஸ்தார். அவருக்குச் சுமார் ஐந்து ஏக்கர் நஞ்சை இருந்தது. நிலங்கள் எல்லாம காவேரிப்பாசனத்தில் இருந்தமையால் குத்தகை நெல் சுமார் நூற்றுஐம்பதுகலம ஒவ்வொரு பஙகுனி மாதக் கடைசியிலும வீட்டிற்கு வந்துவிடும். வேறு அவருக்குக கடன தொநதரவுகள் ஒன்றும் இல்லை. நல்ல மச்சுவீடு ஒன்றும் அவ்வூரிலேயே இருந்து வந்தது. நல்ல சுகமான வாழ்க்கை வாழப் பல வசதிகள் இருந்தன.

ஆனால் அவருக்கு முழு இனபம அவர் வாழ்க்கையில் இல்லை. யாருக்கும இனபமும், துன்பமும் கலந்து வருவது இவ்வுலக இயற்கைதானே! அவருக்கு இரண்டு தாரங்கள்மணம் நடந்தது. இரண்டு தாரங்களிலும அநேக குழந்தைகள் பிறந்து இளமையிலேயே அவை மரித்துவிட்டன இல்வாழ்க்கையில் ஒருவர் அடையும துனபத்துள் பெருந்துன்பம காதற் குழந்தைகள், கண்முன் காலனால் கவரப்பட்டுச் செல்லுவதே இனபத்தை அடைந்து வருந்திய உலகநாதப் பிள்ளைக்கு, 'வெந்த புண்ணில் வேல்பட்ட மாதிரி'' இரு மனைவிகளும் இறந்தனர். முதல் தாரம அவருடைய முப்பத்துஐந்தாவது வயதிலும், இரண்டாவது தாரம தன நாற்பதாவது வயதிலும

இறந்துவிட்டார். "நாற்பதுக்குப் பின் நழுவல்" என்ற உண்மையை உள்ளபடி உணர்ந்து உலகநாத பிள்ளை இனியும் ஒரு தாரம் செய்து இன்னல் அடைவதைவிடத் தனித்து வாழுவதேமேல் என்னும் பேரெண்ணத்தைக்கொள்ளலானார். அவ்வெண்ணத்தை வளரவிட்டது அவருடைய கல்வி அறிவே. தன் குடும்பக்காரியங்களைப் பார்த்துக் கொள்ளவும், நன்றாகச சமையல் செய்யவும் சமையல் ஆள் போட்டுக் கொண்டார். வந்த சமையல் ஆட்கள் அனைவரும் நீண்ட நாட்கள் அவர் வீட்டில் இருப்பதில்லை. பல காரணங்களால் அவர்கள் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கடைசியாகமுத்துசாமியை சமையல் ஆளாக அவர் நியமித்தார்.

முத்துசாமி அவருடைய பக்கத்து ஊராகிய பட்டியூரைச் சேர்ந்தவன். திடமான சரீரம் படைத்தவன். வயது சுமார் முப்பத்ஐந்து இருக்கும; கல்யாணம் ஆகாதவன். சிறிது மந்த புத்தி உடையவன். சொல்லுவதை நன்றாகக்கூடப் புரிந்து கொள்ள முடியாதவன். ஆனால் அவனிடம் பொய், பித்தலாட்டம் முதலிய துர்க்குணங்கள் எள்ளளவும இல்லை. திருடு என்ற பழக்கமே அவனிடம கிடையாது. எத்தனை ஆயிர ரூபாய்கள் வைத்துவிட்டுச் சென்றாலும் அவன் அதைத் தனக்கென எடுக்கமாட்டான். தன் உடல், ஆடை முதலியவற்றை எப்பொழுதும சுத்தமாக வைத்துக்கொள்ளுவான. உலகநாதப் பிள்ளைக்கு அவனமேல் நல்ல எண்ணம ஏற்பட்டுவிட்டது. 'ஒரு,அறிவு நிறைந்த அயோக்கியர்களைவிட ஒழுக்கம் நிறைந்த முட்டாள்' சிறந்தவன் என்னும் முடிவிற்கு வந்துவிட்டார். முத்துசாமி இரண்டு ஆண்டுகளாக அவரிடம் வேலைசெய்து வந்தான். அவனுடைய மந்த புத்திக்காக அவனை அவர் வெறுப்பதில்லை. அவனுடைய நடத்தை, வாழ்க்கையில் வெறுப்புற்ற அவர் மனத்திற்கு உற்சாகத்தை ஊட்டிவந்தது. அதனால் அவர் வாழ்க்கையில், ஒரு சிறிது இழந்த இன்பத்தைமீண்டும் பெற முடிந்தது.

iii

ஒருநாள் காலை மணி சுமார் பத்து இருக்கும். அவ்வூரில் தபால் மெயில் (Mail) போகும் நேரம். உலகநாதப் பிள்ளை மிக அவசரமாக தன் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதினார். எழுதின உடனே 'அடே முத்துசாமி!' எனக் கூப்பிட்டார். முத்துசாமி தோன்றினான். 'ஒரு கவர் எடுத்துக் கொண்டுவாடா, மிக அவசரம் மெயில் போகப் போகிறது' என்றார். 'இதோ ஒரு நிமிஷத்தில் கொண்டு வருகிறேன்', எனச் சொல்லி மறைந்தான். வீட்டிற்குள் சென்றான்; அங்குமிங்கும் தேடிப் பார்த்தான். கடைசியாக நல்ல நூல் கயிறு ஒன்றை எடுத்தான்; சுருட்டினான; ஓடோடியும் திரும்பி வந்தான். கயிற்றைக் கண்டதும் 'கொல்' என்று சிரித்தார் உலகநாதப்பிள்ளை. 'என்னடா! முத்துசாமி மறுபடியும் முட்டாள் தனம் பண்ணுகின்றாயே; நான் கடுதாசிக் கவர் எடுத்துக்கொண்டு வாடா என்றால் நூல் கயிற்றை எடுத்துக்கொண்டு வந்திருக்கின்றாயே' எனச் சிரித்துக்கொண்டே சொன்னார். 'என்னுங்க ஐயா! இது இல்லிங்களா? கடுதாசியில் செய்த

கூடு வேண்டுங்களா? அப்படிச் சொல்லாமல், கவர் க்வர் என்று சொன்னதும் அவசரமா ஏதோ கட்டுவதற்குக் கேட்கின்றீர்கள் என நினைத்துக்கொண்டு இதைக் கொண்டு வந்தேன். கடுதாசிக்கூடு தானே அதோ உள் மாடத்தில் இருக்கின்றது; கொண்டுவருகின்றேன்', எனக் காற்றினும் கடிதாக் உள்ளே ஓடினான் முத்துசாமி. ஒரு கூடு (கவர்) கொண்டுவந்தான். உலகநாதப்பிள்ளை கடிதத்தை கவருக்குள் போட்டார்; அதை ஒட்டினார். 'அடேமுத்துசாமி! இதை எடுத்துக்கொண்டு சென்று தபாலில் போட்டுவிட்டுவா,' என்றார். முத்துசாமி அக்கூட்டை, பருந்தெனப் பாய்ந்து பற்றினான். முயலென ஓடினான். தபால்பெட்டிக்குப் பக்கத்தில் தாண்டிக்குதித்தான். தபால்பெட்டி அப்பொழுதுதான் திறக்கப்பட்டது. தன் எஜமானன கடிதத்தை மற்ற கடிதங்களுடன்சேர்த்தான்; திரும்பினான். ஐயாவிடம செய்த வேலையை மகிழ்ச்சியுடன் அறிவித்தான். உலகநாதப் பிள்ளையும் உவகை கொண்டார்.

iv

உலகநாதப்பிள்ளை தன் ஓய்வு நேரங்களில் பல புத்தகங்களைப் படிப்பது வழக்கம். ஒரு குறிப்பு நோட்டுப் புத்தகமும் அவரிடம் உண்டு. அந் நோட்டுப் புத்தகத்தில் தான் படித்த புத்தகங்களில் உள்ள முக்கியமான பாக்களையும், உரைநடைக் கோவைகளையும் எழுதிவைத்துக்கொள்ளுவார். எழுதுவதற்கு அவரிடம் ஒரு ஊற்றுப் பேனா (Fountain pen) இருந்தது. அதை வாரம் ஒரு முறை அவரே நன்றாகக் கழுவி மை போட்டுக் கொள்ளுவார். ஒருநாள் தான் அவசர நிமித்தமாக ஊருக்குப்போகவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்பட்டது ஆகையால் முத்துசாமியை அழைத்தார். 'ஏ முத்துசாமி! நான் அடுதத ஊருக்குப் போகின்றேன் இந்த ஊற்றுப் பேனாவை நன்றாகக் கழுவி மை போட்டு வை' என்றார்.

'அப்படியே செய்கின்றேன் ஐயா'

'வீட்டிற்குள் வேறு ஒருவரையும் விடாதே பத்திரமாய் வீட்டைப் பார்த்துக்கொள். நான் இன்று மாலை ஐந்து மணிக்கு வந்துவிடுகின்றேன்'

'ஒரு ஈ கூட இந்த வீட்டிற்குள் நுழையுங்களா; நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் நிம்மதியாகப் போய்விட்டு வாருங்கள்'

உலகநாதப் பிள்ளையும் வீட்டை விட்டுச் சென்றார். முத்துசாமியும் வெளிக்கதவைத் தாழிட்டான். உடனே சென்று சமையல் வேலைகளைப்பார்த்தான். பின்னர் பேனாவின் மேல் மூடியைத் திறந்தான். எல்லாவற்றையும் கழுவினான். மேல்மூடியில் (கவரில்) மை ஊற்றினான். ஒரு மாடத்தின் மூலையில் பத்திரமாக, மை கொட்டாமல் சாத்தி வைத்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் மூடியின் பக்கத்திலுள்ள துவாரங்களின் வழியாக மை கசிந்துவெளிவந்துவிட்டது. பின்னர் முத்துசாமி, அத்துவாரங்களை எல்லாம் மெழுகுகொண்டு அடைத்தான். பின்னரும் அதில் மட்டும் மையை ஊற்றிவைத்துவிட்டு, வேறு

வேலைகளைக் கவனித்தான். மணிஐந்து ஆயிற்று. உலகநாதப்பிள்ளை வீடு திரும்பினர்.

'அடே முத்துசாமி யாராவது நான் இல்லாத சமயம் என்னைத் தேடிக் கொண்டு வீட்டிற்கு வந்தார்களா?'

'இல்லை ஐயா! ஒருவரும் வரவில்லை'

'வீட்டைப்பத்திரமாகப் பார்த்துக் கொண்டாயா?'

'நீங்கள் இல்லாதசமயம் ஒரு நாய் எதற்காக இங்கு வரவேண்டும்? சாத்தின கதவை இப்பொழுதுதான் ஐயா திறக்கிறேன்'

'சரி பேனாவைக் கழுவி அதில் மை ஊற்றினாயா?'

'ஊற்றி இருக்கிறேன் ஐயா! இதோ பாருங்கள்,' என அவசரமாக எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தான் முத்துசாமி.

'என்டா மூடாமலே வைத்திருக்கிறாய்?' எனச் சொல்லி மூடியை, அடிப்பாகத்தின்மேல் மூடுவதற்காகக் கவிழ்த்தார். உடனே மூடியில் ஊற்றி வைத்திருந்த மை எல்லாம் அவர் கையின் மேலும், சில துளிகள் அவருடைய சலவைச் சட்டையிலும் கொட்டிவிட்டன. 'என்னடா மறுபடியும் முட்டாள் வேலை செய்து விட்டாயே; என் பேனாவின் மூடியில் மையை ஊற்றி வைத்திருக்கின்றாய்!'

'அதில் ஊற்றினால்தானே ஐயா அந்த முள்ளாலே மையைத் தொட்டு நீங்கள் எழுதுவீர்கள், அதற்காகத் தான் ஊற்றினேன். அதைக் கேட்டவுடன் உலகநாதப் பிள்ளை 'கொல்' என்று சிரித்தார். அவருடன் வந்த நண்பர் திரு. சாமிநாதப் பிள்ளையும் 'கொல்' என்று சிரித்தார்.

'அடே மடையா இத்தனை நாட்களாக இருக்கின்றாயே, பேனாவிற்கு மை ஊற்றுவது எப்படியென்று தெரிந்துவைத்துக்கொள்ளுவ தில்லையா?'

'நான் அதையெல்லாம் எதற்காக ஐயா பார்க்கிறேன். நான் சமையல் வேலையையும், சில்லறை வேலைகளையும் பார்த்துக்கொண்டே இருக்கின்றவன். நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள், யாரோடே, என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள் இதையெல்லாம் நான் எதற்காகங்க கவனிக்கிறேன்'

'அதெல்லாம் சரி; இனிமேலாவது தெரிந்துகொள். இங்கே பார்; அப் பேனாவின் மேலுள்ள கழுத்தை இப்படித் திருகி எடுக்கவேண்டும். அதற்குப் பின்னர் இதில் மையை ஊற்றவேண்டும். பின்னர் கழுத்தைத் திருகி மூடிவிடவேண்டும். பின்னர் இப்படி எழுதினால் மை தாராளமாக வந்துகொண்டே இருக்கும். அதனால் தான் இதற்கு ஊற்றுப்பேனா (Fountain Pen) எனப் பெயர். அப்புறம் மேல் மூடியினால் பேனாவை மூடி சட்டைப் பையில் இப்படிச் செருகிக் கொள்ளலாம்.'

(உற்று நோக்கிக்கொண்டு) 'ஆ! அப்படியுங்களா! இப்பொழுது அதையெல்லாம் நான் நன்றாகப் பார்த்துக்

கொணடேனுங்க (கையைப் பிசைந்து கொண்டே) இனிமேல், எல்லாம் சரியாகச் செய்து முடித்துவிடுகிறேன் ஐயா!

'சரி. கூட வந்த ஐயாவைப் பார்த்தாயா?'

'பார்த்தேன்; பார்த்தேனுங்க; (அவரை நோக்கி) ஐயா உட்காருங்க, வெகுநேரமாக ஐயா கால் கடுக்கநின்றுகொண்டே இருக்கிறாங்க'

(உலகநாதம் பிள்ளையை நோக்கி) ஐயா எந்த ஊருங்க?'

'நம் பக்கத்தில் குண்டையூர் இருக்கின்றதே அதை உனக்குத் தெரியுமா? 'நன்றாகத் தெரியுங்களே! தங்கை பிள்ளை வைத்தியநாதன் இருக்கிறானுங்க அந்த ஊரை நன்றாகத் தெரியும் ஐயா!'

'அந்த ஊரைச் சேர்ந்த மிராஸ்தார் இவர்கள். இவர்கள் பெயர் சாமிநாத பிள்ளை இவர் நமக்கு நெருங்கிய நண்பர். இன்றைக்கு இவரை நம் வீட்டிற்கு விருந்தாக அழைத்துக் கொண்டு வந்திருக்கின்றேன்'

'அடடா அப்படிங்களா! ரொம்ப சந்தோஷம் எனக்கு நானும் வந்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகி விட்டது. ஐயா ஒருநாளும் நம் வீட்டிற்கு வந்ததே இல்லை.'

'ஐயா அவர்கள் நம் வீட்டில்தான் இரவு சாப்பிடுவார்கள்'

'அது என்ன ஐயா! அப்படிச் சொல்லுகின்றீர்கள்? நம் வீட்டிலேயேதான் இன்றைக்கு இரவு அவர்கள் சாப்பிடவேண்டும். வேறு எங்கேயும் போகவே கூடாது'

'இப்பொழுது மணி ஆறு, சரியாக எழுரை மணிக்கு இலை போடவேண்டும் எல்லாம் சரியாகப் பார்த்துக் கொள்' 'அதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேனுங்க. நீங்கள் கவலையேபடவேண்டாம். இதோ ஒரு நொடிப் பொழுதிலே எல்லாம் ஜோராய் சரி செய்துவிடுகிறேன்' என முகமலர்ச்சியுடன் கூறி, வழக்கம்போல தாண்டிக் குதித்துச் சமையல்அறைப் பக்கம் விரைவாக ஓடினான்.

V

'நாம் இரண்டுபேரும் வெளியில் சென்று மாலைக் கடன்களைக்கழித்து வருவோம் வாருங்கள்' என்றார் உலகநாதப்பிள்ளை.

'அப்படியே போகலாம் (நடந்து கொண்டே) உங்கள் சமையல் ஆள் என்ன முட்டாளாக இருப்பான் போல் இருக்கின்றதே. இவனை வைத்துக்கொண்டு நீங்கள் எப்படிக் காலந்தள்ளுகிறீர்கள்?'

'அப்படியா நீங்கள் நினைத்துவிட்டீர்கள் எங்கள் முத்துசாமியைப் பற்றி. இந்தப் பேனுவிற்கு மை ஊற்றத் தெரியாததனால் மட்டும் அவன் ஒன்றுக்கும் உதவாதவன் என்று நினைததுவிடக்கூடாது. அவனைப்போல் சிறந்த வேறு வேலை ஆள் கிடைப்பது வெகு சிரமம்'

'அப்படியா! பார்த்தால் பரம முட்டாள்மாதிரி தோன்றுகின்றானே'

'பார்த்தால் அப்படித்தான் தோன்றுவான். பழகினால் அவனைப் பற்றிய அபிப்பிராயமே மாறிவிடும். நான் எத்தனையோ சமையல் ஆட்கள் வைத்துப் பார்த்துவிட்டேன். அவர்கள் எல்லாம் பொய்யும், திருடும், பித்தலாட்டமும், கோளும், கெட்ட பழக்கமும் நிறைந்தவர்களாக இருந்தார்கள். சுமார் ½ டஜன் ஆட்களால் பட்ட துன்பம் இவ்வளவு அவ்வளவு என்று என்னால் சொல்ல முடியாது. அவர்களை ஒவ்வொருவராய் ஒழித்துத் தலை முழுகிவிட்டேன்.

'இவ்வாள் அம்மாதிரியெல்லாம் இல்லையா?'

'ஒருபொழுதும் இல்லை. பார்த்தால் சிறிது மந்தபுத்தி உடையவனைப்போல் சில சமயங்களில் காணப்படுவானே யொழிய பற்றப்படி மிக நல்லவன். மேல் சொன்ன கெட்ட குணங்கள் எல்லாம் ஒரு சிறிதும் இவனிடம் காண முடியாது. மேலும் நம் பொருளைத் தன் பொருள்போல் பாதுகாக்கும் குணமுடையவன். ஒரு பொருளையும் சிந்தான், சிதறமாட்டான் வீட்டைச்சுத்தமாக வைத்துக் கொள்ளுவான். தானும் நன்றாகக் குளித்துத தன்னுடைய ஆடைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுவான். கோபமே வராது. எதைச் சொன்னாலும் சந்தோஷத்துடனே செய்வான். எந்த நேரத்திற்கெழுந்து சமையல் 'செய்' என்றாலும் முணு முணுக்காமல் செய்வான். இவனால் என்னுடைய குடும்பக் கவலையே ஒழிந்தது.

'அடடா! அப்படியா!! நீங்கள் பெரிய பாக்யசாலி. உங்கள் மனைவி மக்கள் இறந்துபோனபிறகு இம்மாதிரியான சமையல் ஆள் கிடைத்தது நீங்கள் செய்த நல்ல தவப் பயன் என்றே சொல்லவேண்டும். இக்காலத்திலே இம்மாதிரியான ஆள் கிடைப்பது மிகவும் அரிதாயிற்று. அதெல்லாம் சரி இவனுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு கொடுக்கின்றீர்கள்?'

'மாதம் முப்பது ரூபாய் கொடுக்கிறேன். அதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. இன்னும் அவனுக்கு நிறைய சன்மானம் செய்வதாகவும் யோசனை செய்துகொண்டு இருக்கின்றேன்.' இங்ஙனம் இருவரும் பேசிக்கொண்டே வெளியில் சென்றார்கள். மாலைக் கடன்களை முடித்துக் கொண்டார்கள். இதற்குள் மணி ஏழரை ஆயிற்று இருவரும் வீடு திரும்பினார்கள். வீட்டில் முத்துசாமி இலைபோட்டுச் சாதம் பரிமாறத் தயாராக வாசற்படியை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

'என்ன முத்துசாமி! எல்லாம் தயாராகிவிட்டதா?' என்றார் உலகநாதம் பிள்ளை.

'எல்லாம் தயாராகி இருக்கின்றன. நீங்கள் இருவரும் இப்படியே இலைகளில் உட்காரலாம்,' என்றான் இனிய குரலில் முத்துசாமி.

இருவரும் உட்கார்ந்தார்கள். உண்டார்கள். சாமிநாதம் பிள்ளை தலையை ஆட்டிக்கொண்டே உண்டார்.

'என்ன தலையை ஆட்டிக்கொண்டே சாப்பிடுகின்றீர்கள்?'

'நான்கூட என்னவோ நினைத்து விட்டேன். முத்துசாமியின் சமையல் நளபாகமாக இருக்கின்றதே. எங்கள் வீட்டுக்காரிகூட இப்படிச் செய்வதில்லையே'

'என்னைப்பற்றி ஐயா அதிகமாகப் புகழுகின்றீர்கள்! ஏதோ எனக்குத் தெரிந்ததைத்தான் செய்தேன். எனச் சொல்லி புகழ்ச்சியை விரும்பாத முகக் குறியைக் காட்டி மூலையில் நின்றான் முத்துசாமி.

'உண்மையாகவே சொல்லுகின்றேன். வெறும் புகழ்ச்சியில்லை' என்றார் மீண்டும் சாமிநாதம் பிள்ளை.

உணவு உண்டு முடித்தார்கள்; எழுந்தார்கள்; இருவரும் வேறு அறைக்குச் சென்றார்கள். முத்துசாமி அதற்குப்பின் தான்செய்யவேண்டிய வேலைகளை எல்லாம் செய்துகொண்டு வரும் சப்தம் பலகணி வழியாக வருவதை இருவரும் கேட்டனர்.

'இம்மாதிரி ஆள் கிடைப்பதே மிக்க துர்லபம். இவனுக்கு மாதம் முப்பதும் கொடுக்கலாம், அறுபதும் கொடுக்கலாம்' என்றார் சாமிநாதப் பிள்ளை.

'பணத்தைப்பற்றியே நான் கவலைப் படவில்லை. அவன் குணத்தைத்தான் போற்றுகின்றேன். உண்மையாக அவன் ஒரு முட்டாள் அல்ல என்பதை நீங்களே கண்டுவிட்டீர்கள். அப்படியே அவனை ஒரு முட்டாள் என்று வைத்துக்கொண்டாலும், 'முட்டாளான உண்மை உழைப்பாளி புத்தியுள்ள அயோக்கியனைக் காட்டிலும் பன் மடங்கு சிறந்தவன் அல்லவா?'

'ஆம் ஆம்; அதற்கு என்ன சந்தேகம்'

'சரி நேரமாகின்றது. இனி நாம் தூங்கப்போவோம்' என்றார் உலகநாதப் பிள்ளை.

'அப்படியே செய்வோம்' என பதில் உரைத்தார் சாமிநாத பிள்ளை.

மாணவர்கட்கு

—[S. துரைராஜ்]—

"மனிதன் பறவைகளைப்போல் ஆகாயத்தில் பறக்கக் கற்றுக்கொண்டான் மீனைப்போல் நீரில் நீந்தக் கற்றுக்கொண்டான். ஆனால் மனிதன் மனிதனாக வாழக் கற்றுக்கொள்ளவில்லை' என்று கூறிப் போந்தார் அறிஞர் மாக்ஸிம் கார்க்கி. ஆகவே, ஒவ்வொருவரும் மனிதனாக வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். நல்ல மனிதப் பண்புகள் நிறைந்தவனாக வாழக் கற்றுக்கொள்ளவேண்டும் தான் மட்டும் மனிதனாக வாழக் கற்றுக்கொண்டால் போதாது பிறரையும் மனிதனாக வாழ வழி செய்யவேண்டும். இதில் கல்வி கற்றோர்கள் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

நம் நாட்டில் கல்லாதவர்களின் எண்ணிக்கை அதிகம். கற்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. நிலைமை மாறவேண்டும். கல்வி கற்றவர்களின் எண்ணிக்கைப் பெருக வேண்டும். இதில் அரசாங்கம் பெரிதும் கவனம் செலுத்தி வருகின்றது. ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள் நாளுக்குநாள் அதிகமாக நிறுவப்பட்டுவருகின்றன. முதியோர் கல்வித் திட்டமும் அமுலில் உள்ளது கட்டாயக் கல்வித்திட்டமும் அமுலில் உள்ளது நாட்டில் கல்வி நீரோடை நன்கு பாய்ந்தால் மக்களின் அறியாமை நீங்கி மக்கள் மக்களாக வாழக் கற்றுக்கொள்வார்கள்.

மக்கள் மக்களாக வாழ வழியிருந்தால்தான் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கும். இன்றேல் வாழ்க்கையில் விரக்தி ஏற்படும். விரக்தி ஏற்பட்டால் அறிவு அழிவுப்பாதையை நோக்கித்தான் மனிதனை இட்டுச் செல்லும். வாழ்க்கையில் விரக்தி ஏற்படுவதால் தான் 'தற்கொலை' நிகழ்கிறது. ஆகவே மனிதன் தான் மட்டும் நல்வாழ்வு வாழ்ந்தால் போதாது. தன்னுடைய சமூகமும்-மனித சமூகமும் - நன்றாய் வாழ் பாடுபடவேண்டும். தான் சமூகத்தின் ஒரு கூறு என்பதை நன்கு உணரவேண்டும். சமூகத்தில் உள்ள அனைவரும் நல்வாழ்வு வாழ்ந்தால்தான்-வாழ வழி கண்டால்தான்-நாடு முன்னேறும். சமூகத்திலேயே ஒரு சாரார் மட்டும் நன்றாக வாழ வழியைப் பெறுவிட்டால் இது சமூகத்திற்கே பெரும் ஆபத்தாக விளையும். அவ்வாறு ஒரு சாரார் நல்வாழ்வு வாழ வழி காணாமல் வாளா இருப்பதும் நன்றன்று இதை நன்கு உணர்ந்துதான் நம் தேசத்தந்தை காந்தியடிகளார் தாழ்த்தப்பட்டவர்களென்று கருதப்பட்டு வந்த பழங்குடி மக்களின் முன்னேற்றத்துக்குப் பெரும்பாடுபட்டு வந்தார். அதுமட்டுமல்ல, காந்தியடிகளார் தாம் தரித்திர நாராயணனாகவே வாழ விரும்பினார். காரணம் நாட்டில் வறுமை நிஞ்சியுள்ளது. எல்லோரும் நல்ல வாழ்வு வாழ்கின்ற காலத்தில்தான் தானும்

நல்ல வாழ்வு வாழ விரும்பினர். இதனுற்றான் காந்தியடிகளார் முழங்கால்வரை உடுத்தினர். உடலின்மேல் சட்டையும் போட்டுக்கொள்ள விரும்பவில்லை.

ஆகவே சமூகம் என்ற உடம்பின் ஒரு கூறு கெட்டுவிட்டால் சமூகத்திற்கே கெடுதல் ஏற்படும் என்பதை மககள் நன்கு உணரவேண்டும். இதைப் பெரும்பாலான மக்கள் உணராத காரணத்தினுல்தான் பேரறிஞர் கூறினர் 'மனிதன் மனிதனுக வாழக் கற்றுக்கொள்ளவில்லை' என்று மனிதன் தான், தன்னுடையது என்று எந்த பொருளையும் எந்த செயலையும் சுயநோக்குடன் நோக்குகின்றுன் பொதுநோக்கு அவன்பா விருப்பதில்லை. 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற பரந்த நோக்கு மக்கள் மனதில் மிளிரவேண்டும். இந்த சமூகக் கல்வியைத்தான் எல்லோரும் கற்கவேண்டும்.

மேற்கூறிய கருத்துக்களையெல்லாம் மாணவச் செல்வங்கள் நன்கு அறிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் தற்போது கல்வி பயிலும் மாணவமணிகளுக்குத்தான் பொறுப்பு அதிகம். தற்கால மாணவர்களின் சகாப்தம் வேறு. முற்கால மாணவர்களின் சகாப்தம் வேறு. நம் நாடு நமக்கு நன்றுகிவிட்டது. நாம் எல்லோரும் சுதந்திர குடிமக்களாகிவிட்டோம். இப்பொழுது மாணவர்கள் சுதந்திர இந்தியாவில் வாழ்கின்றூர்கள். நம் நாட்டையும் எதிர்காலத்தில் ஆட்சி புரியும் வாய்ப்பு - ஏன்? பொறுப்பு - அவர்களுக்கு உள்ளது. ஆங்கிலேயர்கள் ஆட்சி புரிந்து வந்த காலத்தில் அளிக்கப்பட்ட கல்வி மாணவர்களை நாட்டில் நிர்வாகம் நடக்க ஆங்கிலேயர்கட்கு உதவியாயிருக்க பணிமனைகளில் எழுத்தாளர்களாகவும், ஏனைய பணியாளர்களாகவும், இருக்கத்தான் பயன்பட்டது. ஆங்கிலேயர்களின் கல்வித்திட்டம் மக்களை நல்லகுடிமக்களாக ஆக்கவேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டதல்ல. ஆனல் தற்காலத்தில் பள்ளிகளில்-குறிப்பாக உயர்நிலைப்பள்ளிகளில் - அளிக்கப்படும் கல்வி பெரும்பாலும் மாணவர்களை நல்ல குடிமக்களாக ஆக்க வேண்டுமென்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதற்காகத்தான் முதற் படிவத்திலிருந்து ஆறம் படிவம்வரை 'குடிமைப் பயிற்சி' மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

மாணவர்கள் பள்ளியில் அக்பர் ஆட்சியைப்பற்றியும், ஒளரங்கசீப் ஆட்சியைப்பற்றியும் பயின்ருல் மட்டும் போதாது நன்ருக கணிதம் பயின்ருல்மட்டும் போதாது. எல்லா பாடங்களையும் நன்கு பயின்று அதிக எண்கள் பெற்று தேர்வில் முதல் பையனுக வெற்றியடைந்தால்மட்டும் போதாது ஏனெனில் அன்றட வாழ்க்கையில் மக்கள், மாணவன் எத்தனை அச்சங்களைப் பெற்று தேர்வில் வெற்றிபெற்ருன் என்பதைக்கேட்கமாட்டார்கள், அதைப்பற்றிக் கவலைப்படவும் மாட்டார்கள். ஆனல் அவர்கள் மாணவன் வாழ்க்கையை நடத்துகின்றுன் என்பதைத்தான் கவனிப்பார்கள். மக்களெல்லோரும் மகிழக்கூடிய வகையில் நல்ல குடிமகனுக வாழ்கின்ருனு-வாழக் கற்றுக் கொண்டிருக்

கின்றனு என்பதைத்தான் மக்கள் கவனிப்பார்கள், வெறும் கல்வி மட்டும் கற்றிருந்தால் போதாது. நல்லொழுக்கம் வாய்ந்த குடிமகனுக-சமூகத்தின் சிறந்த உறுப்பினனுக - வாழ வேண்டும். ஆகவே மாணவர்கள் கல்வி பயிலும்போது சமூகத்தைத் தன் கண்முன் நிறுத்தி பள்ளி வாழ்க்கையிலிருந்தே நல்ல இனிய ஒன்று பட்ட சமூகக் கூட்டுறவு வாழ்க்கை வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். பள்ளியை வெறும் ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் பயிலும் கூடங்களாக மட்டும் கொள்ளாமல் தங்களை சிறந்த குடிமக்களாக வாழப் பயிற்சியளிக்கும் இடமாகவும் கொள்ளவேண்டும். குடிமைப்பயிற்சி திட்டத்தின் அடிப்படை நோக்கமே மாணவர்கள் நல்ல சமூக வாழ்க்கை வாழக்கற்றுக்கொள்ளவேண்டுமென்பதேயாகும். இதை நன்கு உணர்ந்து மாணவர்கள் சமூகத்தின் சிறந்த உறுப்பினர்களாக வாழக்கற்றுக் கொள்ளவேண்டும். பள்ளியிலேயே இதைக் கற்றுக்கொண்டால் அவர்கள் கண்டிப்பாக நல்ல குடி மக்களாக விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

குரவைக் கூத்து

—[S. துரைராஜ்]—

குரவைக் கூத்தென்பது பெண்கள் மண்டலமிட்டுக் கைகோதது ஆடும் ஒரு விளையாட்டு. இவண் குன்றக் குரவை என்பது குன்றத்திலுள்ள முருகனைப் பற்றி கைகோத்து பெண்கள் ஆடி மகிழ்கின்றனர். ஒருவர் கூற்றினை ஒருவர் கொண்டு கூறுதல் என்றும் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

பெண்கள் பலர் ஒன்றுகூடி குன்றத்துக்கண் சென்றனர். அங்கே தினைக் கதிர்கள் முற்றி நன்கு விளையும் பக்குவத்திலிருந்தது. அக் கதிர்களைத் தின்ன குருவியும் கிளியும் வந்த வண்ணமாகவே இருந்தன. அதைக் கண்ணுற்ற மயிலன்னார்கள் குருவிகளை ஓட்டியும், கிளிகளைக் கடிந்து துரத்தியும் புனங்காத்தனர். அவ்வாறு தினைப் புனங்காவல் செய்புழி ஓரிடத்திராது புனத்திடைச் சுற்றி வருதல் இயல்பு. அவ்வண்ணமே சுற்றி வந்த பெண்கள் புனத்தினது நடுவண் வேங்கை நறு நிழற் கண்டனர். கண்ணுற்று அவண் இளைப்பாற எண்ணியவர்கள் தங்கினர். அவ்வேளையில் ஒரு நகில் இழந்தாளாய நங்கை ஒருத்தி வள்ளியம்மையின் வடிவழகினையொத்து நிற்கக் கண்டனர். அவளிடத்தில் பின்வரும் வினாக்களை விடுத்துத் தங்கள் ஐயத்தைப் போக்கிக் கொண்டனர்.

“வள்ளி போல்வீர் நீவிர் யாவிரோ?

பார்ப்பதற்கு செல்வச் சீமாட்டியின் தோற்றம்போல் காண்கின்றீர்; இருப்பினும் இத்துன்பம் நிகழக் காரணம் யாதோ என்றனர். அவ்வினவைக் கேட்ட அருள்மொழி நங்கை, கண்டார் காமுறும் நங்கை, சிறிதும் முனியாது, தீவினை முந்துறுத்த கணவனுடன் மணமதுரை வந்து அங்கு கணவனை இழந்து மணமதுரையையும், தீவினையாக்கி அரசனையும் அழிந்து ஒழியும்படி செய்த ஒரு தீவினையாட்டியேன் என்றாள். இவ்வாறு கூறக் கேட்ட தினைப்புனங் காத்த பெண்கள் பெரிதும் வியப்புற்று தங்கள் வளையல்களை அணிந்த கைகளைக் கூப்பி வணக்கம் செலுத்தினர். அவ் வெல்லையில் தேவர்கள் பூமாரி பொழிய, குன்றத்திலுள்ள குறவர்கள் கண்ணுற்கண்டு களிப்பெய்தி நிற்க அவள் கணவன் தன்னுடன் அழைத்துப் போந்தனன் விண்ணுலகிற்கு.

அங்நிலையில் பெண்கள் அனைவரும் இச் செயலைக் கண்ணுற்று அதிசயித்தனர். இவள் ஒரு பெருந்தெய்வமாவாள். இவள்போலும் ஒரு கற்புடைத் தெய்வம் இப் பொற்புடைப் பூமியில் யாம் கண்டிலம். இவள் நம் குலத்திற்கோர் பெருந்தெய்வமாவாள். இவளை நாம் கோயில் கொண்டு வணங்க வேண்டும் என முடிவு செய்தனர். அவ்வாறே அவளை நாம் வணங்க விரும்புழி தன் கணவனுடன் சென்ற வேங்கை மரத்தடியில் ஒப்பற்ற தெய்வமாகப் பண்ணுதலே சால்புடைத்து என்று தங்கட்குள் முடிவு செய்தனர்.

இந்த எண்ணங்களைத் தங்கள் சிறுகுடியிலுள்ளவர்களை அழைத்துத் தெரிவிக்க, அவர்களும் அவ்விதம் செய்ய முற்பட்டனர். செய்து முடித்தனர்.

நம்மால் தெய்வமாகக் கொண்ட ஒரு நகில் இழந்த நங்கை அன்னாளுக்கு இப் பெருமலை அழியா வளஞ் சுரக்க வேண்டும் என்று கூறி தொண்டகப் பறையினையும், சிறு பறையினையும் வாசியுங்கோள். கொம்பை ஊதுங்கள். ஓசையுள்ள மணியினை ஒலியுங்கள். குறிஞ்சிப் பண்ணைப் பாடி நறும் புகையிட்டு மலரால் அர்ச்சியுங்கள். சுற்று மதிலெடுத்து வாயிலும் நிறுவுங்கள்.

இஃதிவ்வாறிருக்க இறை வழிபாட்டிற்கு முன்பு உடல் குளித்துத் தூய்மையுடன் மலர் கொண்டு அர்ச்சித்து வழிபடுதல் மரபு. அவ்வாறே பெண்கள் இவளை வணங்குதற்கு மலையருவியில் நீராடத் தொடங்குகின்றார்கள். அவ் வண்ணம் தொடங்குங்கால் தலைவன் சிறைப் புறத்தானாக அவன் விரைவில் தனது காதலியை மணந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தால் தோழி தலைமகளுக்கு வரைவு கடாவுகின்றாள். இக் குறிப்புக்கள் அமையுமாறு தோழியும் பெண்களும் கூறிக் கொண்டு புனல் விளையாடுகின்றனர். அந் நிகழ்ச்சியைக் கீழே காண்போம்.

தோழி! அன்று அஞ்சுதலை ஒழி என்று கூறினன் தலைவன். அஞ்சனத்தின் பூழ்தியும் அரிதாரத்தின் இனிய பொடியும், செந்தூரத்தின் இனிய துகளும் தூவி மணம் வீசி வான வில்லைப் போன்ற அழகுடனும் இம்மென்ற ஓசையுடனும் வந்திழிகின்றது இவ்வருவி. எனவே அவ்வருவியில் அவன் கலன் நமக்கு நல்கானாயினும்

அவ்வருவியிலாவது நாம் ஆடுவோம் என்க.

நமக்குக் கொடுமை செய்த அவருடைய மலையாகிய கல்லிலிருந்து வருகின்ற அருவியை நாம் புலத்தற்கு யாதொரு காரணமும் கண்டிலேம். அவரது மலைக்கண் பொற்கொடியோடு கலந்து வந்த புதுப் புனல் எனவும், பூக்களோடு கலந்து வந்த புதுப் புனல் எனவும், எண்ணி நாம் அவனோடு ஊட நாம் காரணம் கண்டிலேம். இருப்பினும் பிற பெண்டிற் கலந்து ஆடினால் எமேறு தோழி நாம், கல்குகின்றேம் என்றாள்.

இவ்வாறாகச் சொல்லி நெடிய நேரம் நீரில் விளையாடிய பெண்டிர் "தோழிகளே நெடு நேரம் நீர் மூழ்கிவிட்டோம். இனிக் கடலின்கண் மாவினைச் செற்ற வேலேந்திய முருகனைப் போற்றி மண்டலமிட்டுக் கைகோத்துக் குரவைக் கூத்தாடி ஒரு பொருள் பற்றிப் பாடுவோம் வாருங்கள் என்றனர்.

பாரினைச் சூழ்ந்த கடலின் நடுவே யுள்ள சூரனை வதைத்த ஒளி பொருந்திய வெள் வேல் எதுவென்றால், சிறப்புள்ள திருச்செந்திலும், திருவேரகமும், திருச்செங்கோடும், சுவாமி மலையும் ஆகிய இவ்விடங்களில் குடிகொண்டுள்ள முருகன் கையகத்து வேலேயாம். பிணிமுக மெனப்படும் மயிலின்கண் ஏறி அசுரர்களின் பெருமை அழியும்படி இந்திரன் முதலிய தேவர்கள் பூமாரி சொரிய பகைகளை அழித்த வேல் எதுவெனில் அழகிய ஆறு முகங்களையும் பன்னிரு கைகளையும் உடைய செந்தில் வேலவன் ஏந்திய வேலேயாம். மலையைச் சூழ்ந்த அசுரனுடைய நெஞ்சு பிளக்க கிரவுஞ்ச மலையினை அழித்த வேல் எதுவெனில் சரவணப் பொய்கையில் தாமரை மலர்ப் படுக்கையில் அறுவராகிய தாயாரின் பாலினை உண்ட முருகன் கையிலுள்ள வேலேயாம். இவ்விதம் சிறந்த முருகனை நாம் பரவி நம்முடைய வரைவு நீடிக்கா வண்ணம் வேண்டுவோமாக.

வளையலை அணிந்த தோழி இவ்வளவு சிறப்பும் வளமும் கொண்டுள்ள மலை நாட்டிலுள்ள தலைவன் எனக்குப் பெரும் நோயினை உண்டு பண்ணினான். அன்னை இதனை அறியாளாய் வேலனை அழைத்து வெறியாட்த் தொடங்கி எனக்குற்ற நோயினை ஆராய முற்பட்டுள்ளாள். அதைக் கேட்ட எனக்கு நகையாகின்று. அதனை நாம சென்று சற்று நோக்குவோமாக.

செறிவளைக் கையாய்! பெரிய மலைநாட்டின் தலைவனால் உண்டாய நோயைத் தீர்க்க வேலன் வருமாயின் அவன் அறியாமையை உடையவன். அவ் வேலனைவிடக் கிரவுஞ்ச மலையை வென்ற முருகனே அறியாமையை உடையவனாவான்.

ஆராய்ந்த ஆபரணங்களையுடைய தோழி! அவ் வெற்பனாலன்றித் தீர்க்க ஒண்ணாத இந் நோயினைத் தீர்க்க முற்பட்டாள் தாய். அதற்கிணங்கி இவ்வேலனும் வெறியாடத் துணிந்தான். இதைக் கேட்கும் போதே நமக்கு மிகுந்த நகையாகின்றது. இந்நிலையில் அந்த கார்கடப் பந்தார் மலைந்த வேலன் வருவானாயின் அவனைவிட அறியாமையுடையவன் வேறு யார் உளர் சொல்வாயாக.

தோழி நாமும் இவ்வாய்ப்பினை இழத்தல் நன்றன்று. எப்படியும் வேலன் வெறியாட ஆலமர் செல்வனும் முருகன் தன் மனைவி வள்ளியுடன் வருவான். அவனிடம் நாம் நேரில் சென்று, வெற்றிக்கொடியோய், மலையிலுள்ள என் தலைவன் மணவினை கூடுமாறு அருள் செய்வாயாக என்றும், கயிலாய மலையிலுள்ள இறைவனின் புதல்வனே! ஏதிலார் மணத்தினை விலக்கி வெற்பன் மணவினைக்கு வழிகாட்டுவாயாக என்றும், அன்று நீர்த்துறைக் கண்ணே நின் இரு திருவடிகளையும் வணங்கி சூளுற்று நின்னைப் பிரியேன் என்று உரைத்த எனது தலைவர் வாக்கும் பிழையாது அருள் செய்வாயாக என்றும்; அவன் மலர் போன்ற இருபாதங்களையும், குறவர் குடியில் தோன்றியவளும், நம் போன்ற பெண்களின் ஒப்பற்ற தலைவியும், வெற்றிக்கொடியோனின் காதற் கனியுமான அவ் வள்ளி பிராட்டியின் பாதங்களையும் வணங்கி கேட்போமாக.

இவ்வண்ணம் அவ் வெறியாட்லைப் பற்றி மறைமுகமாக நாம் பேசிக் கொண்டிருப்புழி அதனை உணர்ந்த அவ் வேலன் சற்றுச் சிந்திப்பான். அப்பொழுது நான் நேரில் சென்று "ஓ, வெறியாட வந்த வேலனே நீவிர் யாவிர்? நீர் வேலனை ஒப்பீராயின், நீர் வேலேந்திக் கடப்ப மாலையைச் சூடி ஓர் மங்கையின் பொருட்டு வந்ததைக் கண்டால் கண்டார் உமமை முருகன் என்றே எண்ணுவதற்காகத்தானே. அவ்வாறாயின உனக்கு ஆறு முகங்கள் எங்கே! அழகியமயில்எங்கே! செறிந்த பன்னிரு தோள்களெங்கே! உண்மையாகவே அவர்கள் உம்மை வேலன் என்று கருதிவிட்டால் மேற்சொன்ன இவைகள் எங்கே எனவினவுவர். ஆகவே நீ இவ்விடத்தைவிட்டு இப்பொழுதே புறப்பட்டுவிடு என்று கூறுவோம்; அவனும் சென்று விடுவான். சிறைப்புறத்தானாய தலைவனும் இந் நிகழ்ச்சி அனைத்தும் கேட்டு நம்மை மணந்து கொளள விரைவில் முற்படுவான் என்றனள். நம் வாழ்க்கையும் சீர் பெறும். நம் அன்னையும் அறியாமைக்கு இரஙகி மணவினை கண்டு மகிழ்வாள்.

இவ்வாறுக் தோழியர்களும் தலைவியர்களும் ஆகிய நாம் ஒருவர்க்கொருவர் கூறி ஒரு நகில் இழந்த நங்கையாம் கண்ணகியை; அரசு பிழைத்தலால் முக்கூடல் மாநகரைத் தீக்கிரை ஆக்கிய கற்புடைத் தெய்வத்தை! துறக்க வாழ்வினையுடைய தேவர்களால் போற்றப்பெற்ற காட்டிடத்து வேங்கை மரத்தடியில் தன் கணவனுடன் விண்ணுலகடைந்த கற்புக் கரசியாம் தெய்வத்தை! கைகோத்தாடிப் பராவுதும். அங்ஙனம் பராவும் போதும் நம் கணவர் நம்முடன் கூடவேண்டும் என்பதையும் கூறி வழுத்துவோம். நம்முடைய மணவினையும் கூடும். நம்முடைய இன்பத்தைத் தலைவரும் பெற்று பன்னாள் வாழ்ந்து நீடியஇனபமபெறுவாராக.

இதுகாறும் கூறியவற்றால் குரவைக கூத்து எனபது பெண்கள் கைகோத்தாடும் விளையாட்டு என்பதும், அப்பெண்கள் தம் இன்ப நிகழ்ச்சியைப் புலப்படுத்துவா என

பதும் பெறப்படும். மேலும் தனித்த தோர் பொழிலகத்தில் தலைவன் தலைவியர் கூடுவர் என்பதும், பின்பு பலநாள் பிரிந்துறைந்து காணப் பெருது வாடுவர் என்பதும், மகளின் உடல் தள்ர்ச்சியைக் கண்ட தாய் வெறியாடத் தொடங்கி மகட் குற்ற நேரியை ஆராய்வர்ள் என்பதும், அதை வெளிப்படுத்த தோழி முற்படுவாள் என்பதும், இதை உணர்ந்த தலைவன் விரைவில் மணத்திற்கு ஏற்பாடு செய்வான் என்பதும் ஆகிய அத்திணைச் சிறப்புக்கள் ஒல்லும் வகையான் முடித்துக் காட்டப்பட்டது.

ஓர் உரையாடல்

சு. உருத்ரசாமி, உதவி ஆசிரியர்.

(ஒரு அமெரிக்கர் உலகத்தின் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்து விட்டு இந்தியாவுக்கு வருகிறார். இந்தியாவில் பல மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. அம் மொழியிற் சிறந்த பெரியார் பலருடன் கலந்து பேசிய பின்னர் கடைசியாகத் தமிழகத்துக்கு வருகிறார்.)

தமிழ்ப்பெரியார் :— ஐயா, வருக! வருக! தாங்கள் மேனாட்டார் போலிருக்கிறது களைத்திருக்கிறீர். உணவருந்துங்கள்; பின்னர் பேசிக் கொள்ளலாம்.

(பால், பழம், ரொட்டி முதலியன தட்டு ஒன்றில் கொண்டுவந்து வைக்கப்படுகின்றன)

அமெரிக்கர் :- (உணவருந்தியபின்) தமிழன்பரே! நான் ஓர் அமெரிக்கன். நான் உலகின் பல நாடுகளையும் நேரிற் சென்று பார்த்திருக்கிறேன், பலதரப்பட்ட மக்களோடும் பழகியிருக்கிறேன். ஆனால் இன்று என் மனம் மகிழ்ச்சியடைந்திருப்பதுபோல எந்நாளும் இருந்ததில்லை.

த. பெ:- அன்பரே! எதைப்பற்றிக் கூறுகிறீர்?

அமெ:- நீங்கள் எனக்களித்த வரவேற்பையும் எனக்குச் செய்த பணிவிடைகளையும்தான் குறிப்பிடுகிறேன்.

த. பெ:- தமிழராகிய எங்களுக்கு வந்த விருந்தினரை உபசரிப்பது புதிதல்ல. தமிழரிடம் தொன்று தொட்டு வரும் பண்பு இது.

அமெ:- தமிழ்நாட்டார் எத்தகையவர் எனக் கூறுவதற்கு இப்பண்பு ஒன்றே போதும்.

த. பெ:- அமெரிக்கத் தோழரே, நீங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள், உண்ட களைப்புத் தொண்டனுக்கும் உண்டல்லவா?

அமெ:- தமிழன்பரே! நான் சீக்கிரத்தில் என்னுடைய தாய்நாடு திரும்ப வேண்டும். நான் 'உலக வரலாறு'

என்னும் நூல் எழுதுவதற்காக நேரிலேயே பல நாடுகளையும், மக்கள் பண்பையும் அறியவேண்டிச் சுற்றி வருகிறேன். நல்ல வேளையாக உங்களைச் சந்தித்தேன். அதன் காரணமாகத் தமிழ் நாட்டையும் தமிழர்களையும் அறியும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நான் பார்க்கவேண்டிய பகுதிகளுள் உங்கள் நாட்டைச் சேர்த்திருக்கவில்லை. நற்பண்புகள் பலவற்றைப் பெற்றுள்ள நாட்டைப் பார்க்காமல் செல்லும் துர்பாக்கியம் நான் அடையாததுபற்றி மிக மிக மகிழ்கின்றேன். எனக்குத் தமிழ் மொழி பேச்சுவழக்கிலே இருந்து வரும் மொழி என்பது மாத்திரமே தெரியும். யான் மற்றவற்றை அறியேன். தமிழ் நாட்டையும் தமிழர்களையும்பற்றி எனக்குச் சிறிது சொல்லுவதில் தங்களுக்குத் தடையிராது என்று நினைக்கிறேன்.

த. பெ:- நண்பரே, தமிழகம் வந்தடைந்த அயல்நாட்டாரை வரவேற்று வாழவைத்த தமிழர் மரபிலே தோன்றிய எனக்கு மறுப்புக் கூறும் எண்ணம் தோன்றுமா?

அமெ:- அதென்ன தோழரே, சற்று விவரமாகக் கூறுங்கள்.

த. பெ:- சரி, சுமார் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னால் நாகரீகம் தெரியாத காலத்தில் தமிழன் ஆடை நெய்யவும், ஆடைகளை உடுத்திக் கொள்ளவும் கற்றிருந்தான். கருங்கடலிற் பெருங் கலங்களைச் செலுத்தி ரோமாபுரி, இத்தாலி, கிரேக்கம், எகிப்து ஆகிய நாடுகளுடன் வாணிபம் செய்து வந்தான். அந்நாட்டு மக்களும் வாணிபஞ் செய்வதற்காகத் தமிழகம் வந்தனர். அவர்களைத் தமிழர் யவனர் என்றழைத்தனர். அவர்களுக்குத் தமிழரசர்கள் யாதொரு தீங்கும் ஏற்படாது பாதுகாப்பும் அளித்தனர். அரசர்கள் யவனர்கள் சிலரைத் தங்கள் அரண்மனையில் வேலை கொடுத்தும் காப்பாற்றி வந்துள்ளனர்.

அமெ:- இதற்கு ஆதாரம்உண்டா? நாரீகம் உங்கள் நாட்டிலேதான் தோன்றியதென்பதற்கு ஆதாரம் காட்டுங்கள்.

த. பெ:- ஹெரடோடஸ், பெரிபுளூஸ் முதலிய யவன சரித்திரப் பேராசிரியர்கள் எழுதிவைத்திருப்பதிலிருந்தும், தமிழ் இலக்கியத்தினின்றும், கல்வெட்டுக்களிலிருந்தும் தமிழர் வாணிபத்தை நன்கு அறியலாம். சிந்து சமவெளியில் மொகஞ்சதாரோ ஹாரப்பா என்ற இடங்களில் புதையுண்ட நகரங்களை ஆராய்ந்தால் தெற்றென விளங்கும். அந்நகரங்களின் நாகரீகம் பண்டைத் தமிழரான திராவிடருடையது என்பதை *பல மேனாட்டுச் சரித்திராசிரியர்கள் குறித்துள்ளனர்.

அமெ:- அப்படியா? தமிழர் நாகரீகத்தை உண்டாக்கியவர் எனலாம். சரி, பண்டைக்கால அரசியலைப்பற்றிச் சிறிது சொல்லுங்கள்.

த. பெ:- அன்பரே, பழங்காலத் தமிழகம் சேர, சோழ, பாண்டியர்

என்ற மூவேந்தர் ஆட்சியிலடங்கியது. பெயருக்குமுடியாட்சியே என்றாலும் உண்மையில் குடியாட்சியே நிலவியிருந்தது. மக்கள் குரலை மதித்தனர் அரசர்கள்; செங்கோலினின்றும் சிறிதும் வழுவார். ஆராய்ச்சி மாளிகை கட்டி அரசு செலுத்தப்பட்டது எங்கள் நாட்டிலேதான். கன்றின் உயிரைப் போக்கியதால் பசு வருந்துவதைக் காணச் சகியாது தன்மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொல்லும்படிச் செய்த மனுநீதிச்சோழன் வாழ்ந்த நாடு. தான் செய்த தவறுக்காகத் தன் கையையே வாளால் துணித்துக் கொண்டான்பொற்கைப்பாண்டியன் வடக்கேயிருந்த ஆரிய அரசர்கள் கூறிய தகாத உரைகளைக் கேட்டதும் தமிழரின் அவமானத்தைத் துடைக்க அவ்வாரிய அரசர்களைப் புறங்காணும்படிச் செய்த மாவீரன் சேரன் செங்குட்டுவன் ஆண்டநாடு எங்கள்நாடு. தான் ஆராயாது செய்த குற்றத்துக்காக அரசு கட்டிலிலிருந்தவாறே உயிர் நீத்த பாண்டியன் நெடுஞ்செழியன் வாழ்ந்த வளமார் எமது தமிழ்நாடு.

அமெ:- மிக நன்று சரித்திரச் சான்றும் இன்னும் பல விவரங்களையும் அறிய என் மனது விழைகிறது.

த. பெ:- "வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி" பாயும் சோணாட்டின் தலைநகரமான தஞ்சையில் இன்றும் பழுதுபட்ட அரண்மனையும் தூர்ந்த அகழியும், பிரகதீஸ்வரர் ஆலயமும் காணப்படுகின்றன. 'நீங்கள் கோவிலை பிரமாதமாகக் கூறுகிறீர்களே' என்று நீங்கள் நினைக்கலாம். தமிழரும், அப்பெருங் கோவிலின் சிறப்பையுணர்ந்த அயல்நாட்டாரும் அதனை மறக்கவே முடியாது.

கோவிலின் முன்புறத்தே ஒரே கல்லில் செதுக்கப்பட்ட பெரிய நந்தி ஒன்று உண்டு. அக்கோவிலின் கோபுரத்தின் நிழல் எக்காலத்தும் கீழே விழுவதில்லை. விஞ்ஞான அறிவு ஏற்படாத அக்காலத்தில் தமிழர்கள் எவ்வளவு ஆராய்ச்சிசெய்து தக்கவாறு அக் கோபுரத்தை அமைத்திருத்தல்வேண்டும். இக்கோவிலைக் கட்டியவர் இராஜஇராஜச்சோழன்.

அமெ:- மிக ஆச்சரியம்தான் அக் கோவிலைப்பார்த்துவிட்டுத்தான் நான் என்னுடையநாடு திரும்புவேன்.

த. பெ:- இன்னும் கேளுங்கள். சோழவளநாட்டின் தலை நகரமும், துறைமுகமுமான காவிரிப்பூம்பட்டினத்தில் பொன்னும் மணியும் இரத்தினக் கற்களும் விற்றுவந்த தமிழ் வணிகரும், மேலைநாடுகளிலிருந்தும் கீழ்நாடுகளிலிருந்தும் வாணிபம் செய்ய வந்த வணிகப் பெருமக்களும் கூடி மகிழும் காட்சியும், துறைமுகத்தில் அயல் நாடுகளிலிருந்தும் வந்த கப்பல்கள் வீரர்கள் அணிவகுத்தாற் போல் தோன்றும் காட்சியும், அந்நிய நாட்டுத் தூதுவர்கள் கூடகோபுரங்களும், மாட மாளிகைகளும் நிறைந்த அகன்ற தெருக்களிலே பவனிவரும் காட்சியும் காண்போர் மனத்தைக் களிப்படையச் செய்தது.

மகாபலிபுரம் என்ற மற்றோர் ஊருண்டு. அந்நகரம் நரசிம்மவர்மன்

என்ற பல்லவ மன்னனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு துறைமுக நகரம். பல்லவர் ஆட்சியில் தமிழகம் குகைக் கோவில்களை அமைப்பதிலும், ஓவியக் கலையிலும், சிற்பக் கலையிலும் சிறந்து விளங்கியது. கலைக்காகவே கோவில்களெல்லாம் தமிழரால் உண்டாக்கப் பட்டன என்று கூறலாம். திருவரங்கம், திருவானைக்கா, மதுரை முதலான இடங்களிலே காணப்படும் பெருங் கோவில்களில் சிற்பக்கலையின் தனிச் சிறப்பை உணரலாம். இக்கோவில் களின் சுவர்களில் கல்வெட்டுக்களை இன்றும் காணலாம். இவை பழங் காலத் தமிழனின் நாகரீக வளர்ச்சியையும் ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளிலே சிறப்பு பெற்றிருந்ததையும் அறிந்துகொள்ளத் துணை புரியும் சரித்திரச் சான்றுகளாகும்.

சித்தன்னவாசல் ஓவியக் கலைக் களஞ்சியம் எப்பொழுதோ எழுதப் பட்ட ஓவியம் நேற்று எழுதினாற் போன்று காட்சியளிக்கிறது.

அமெ: தமிழகம் உண்மையிலேயே வளப்பமும், சிறப்பும் பெற்றநாடு தான். உங்கள் மொழியைப்பற்றியும், மொழியிலிருக்கும் இலக்கியங்களைப் பற்றியும் அறிய ஆசை உண்டாகிறது.

த. பெ:- பிறந்த பொன்னாட்டின் பெருமையைக் கூறுவதில் யாருக்கும் சலிப்பு ஏற்படாதல்லவா?

எங்கள் கன்னித் தமிழ் மொழி தோன்றிய காலத்தையும், அதன் தொன்மையையும் அறிவதென்பது இயலாதகாரியம். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே,' மக்களினம் தோன்றியபோதே தமிழ் மொழித் தோன்றியிருத்தல் வேண்டும் என்று மொழிநூல் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இம்மொழி லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளோடு வளர்ந்து வந்திருக்கிறது. அம்மொழிகளெல்லாம்பேச்சு வழக்கின்றி இறந்த மொழியாகக் காலப்போக்கில் மாறியபோதிலும், தமிழ்மொழியோ எவ்விதமாறுபாடும் இன்றி "என்றுமிருந்ததுபோல்" இளமை மாறாது இருந்து வருவது அம்மொழியின் வளமையே காரணமாகும். இதுபற்றியேதான் நாங்கள் எங்கள் மொழியை செந்தமிழ், பைந் தமிழ், தேன் தமிழ், வண்டமிழ் என்றெல்லாம் கூறிப் பெருமைப்படுகிறோம். பாண்டிய மன்னர்கள்பொதிய மலையிலே பிறந்த தமிழ்மொழியைச் சங்கம் வைத்து வளர்த்துள்ளார்கள். முதற் சங்கமும், இடைச் சங்கமும் கடல் கொள்ளப்பட்ட கபாடபுரத்திலே இருந்தன. கடைச்சங்கம் மதுரைமா நகரிலே நிறுவப்பட்டுத் தமிழ்மொழி தவழ்ந்து விளையாடியது.

அமெ:- முதல் இரண்டு சங்க நூல்கள் கிடைத்தனவா?

த. பெ:- இல்லை. அந்நூல்கள் கிடைத்திருந்தால் இன்று தாழ்ந்த தமிழகம் என்ற நிலையே இல்லாமலிருந்திருக்கும். ஆனாலும் கடைச் சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் தமிழரின் பண்பையும், கலையையும் காட்டுமளவில் இருக்கின்றன. அரசியல், பொருளாதாரம். கலை

அரசர் வரலாறு, புலவர்களைப் பற்றிய செய்திகள் முதலியவற்றைப் பற்றியும் இன்ன பிறவும் கடைச் சங்க நூல்களில் காணகின்றன.

அரசர்கள் நீதியையும், நேர்மையையும் கடைப்பிடித்து வந்தனர். தமிழர் போரென்றால் புலிபோல் பாயும் தன்மையுடையவர்; சிறு சொல் பொறார்; மாற்றார் எளியராயின் அவருடன் போர் தொடங்கார். கடமையை உணரும் பண்பினர்; மானம் போன பின் வாழார். தமிழ்ப் புலவர்கள் அரசராயினும், குடிமக்களாயினும் தவறு செய்யின் இடித்துக்கூறி திருத்தும் இயல்பினர். 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்' என்று கூறிய புலவர் பலர் வாழ்ந்தனர். அரசர்களே புலவர்களாகவும் இருந்திருக்கின்றனர். ஆண் புலவர்களன்றிப் பெண் புலவர்களும் வாழ்ந்திருந்தனர். புறநானூறு, அகநானூறு, பட்டினப்பாலை, குறுந்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் தமிழை அணி செய்கின்றன.

அமெ:- வெளிநாட்டார் அறிய வேண்டிய நூல்கள் யாவை? நாடக நூல், இலக்கியத்திலே இருக்கிறதா?

த. பெ:- எல்லாத் தமிழ் நூல்களும் படிக்கத் தகுந்தவைதான். இருப்பினும் தமிழ்நாட்டாரைப் பற்றி அறிய திருக்குறள் புறநானூறு ஆகியவற்றை மட்டும் படித்தால் போதும். திருக்குறள், ஆங்கிலம் ஸ்பெயின் முதலிய மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர் என்ற பெருந்தகை. இந்நூலை பைபிளுக்கு அடுத்தபடியாகக் கூறப்படுகிறது.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் பொருந்திக் காட்சியளிக்கிறது சிலப்பதிகாரம். இந்நூலையாத்தவர் அரசத்துறவி இளங்கோவடிகள். சமீப காலத்திலே பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட மனோன்மணியம் என்னும் நாடக நூல் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்.

இத்தகைய பெருமையெல்லாம் பழங்கால "வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்"திலே தான். இன்று காணப்படும் தமிழ்நாடோ பரப்பிலே குறுகியிருக்கிறது. வாழ்க்கையில் தெளிவில்லாத நடைப்பிணங்களாய் வாழும் தமிழரைக்கொண்டது.

அமெ:- பழங்காலத் தமிழரைப் போன்றோர் இன்று இல்லையா? வந்தோரை வாழ்வித்த தமிழகம், பேரும் சிறப்பும் பெற்ற தமிழகம் தாழ்ந்ததேன்?

த. பெ:- பழங்காலத் தமிழரைப் போன்று வீரமும உணர்ச்சியும் அறிவுப் பெருக்கமும் உள்ள தமிழர் ஒரிருவரே. தமிழர் பிரிக்கப்பட்டு சிறு சிறு கூட்டத்தினராகக் காணப்படுவதால் ஒரு கூட்டமாக்கி மீண்டும் பழைய நிலையை அடைவதென்பது சாதாரண காரியமா? இக்காலத் தமிழர் தங்கள் மரபை, கலையை, பண்பாட்டை, உணர்ச்சியை இழந்தனர். அவர்கட்குச் செயலாற்றும திறனில்லாது போயிற்று. இக்காரணத்தால் எல்லா நாட்டாரும் தமிழர் என்றால் பிச்சைக்காரர்கள், நாகரீகமற்றவர்கள், பழக்

வழக்கங்களறியாதவர் என்றல்லவோ நினைக்கின்றனர்,

மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகத்தை உண்டாக்கிய தமிழர்கள், வீரமுரசு கொட்டிப் பகை வெல்ல முன் வைத்த காலைப் பின் வையாத் தமிழரினம், வந்தோருக்குப் பரிவு காட்டி வாழ வைத்த தமிழர் கூட்டம், நீதிக்கும் நேர்மைக்கும் பாடுபட்ட தமிழர், எண்ணியதை எண்ணியபடியே முடிக்கும் ஆற்றல் மிக்க தமிழ் பெருமக்கள், வளம் நல்கும் காவிரி, தென்பெண்ணை, வைகை முதலிய ஆறுகள் பல ஓடுவதால் பஞ்சமறியாத் தமிழர், கருங்கடலிற் பெருங்கலங்களைச் செலுத்தும் துணிவும் கடல் கடந்து நாட்டைவெல்லும் ஆண்மையும் பெற்ற தமிழரினம், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பெருநோக்குடனே வாழ்ந்த தமிழர் சமூகம், மனித சமுதாயத்துககு வாழ வழி காட்டும் ஒப்பற்ற இலக்கியங்கள் பெற்ற தமிழர், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான் புகழ் கொண்ட தமிழ்' நாட்டினர், எதையும் தாங்கும் இதயம் பெற்ற தமிழர் இன்று எடுப்பார் கைப்பாவையாய், ஏமாளிகளாய் வாழ்கிறார்களென்றால் இக்காலத் தமிழர்களைப்பற்றி என்ன கூற முடியும்?

அமெ:— தமிழன்பரே, தமிழ் மொழியையும் தமிழகத்தையும் அறியத் தாங்கள் மிகவும் உதவி புரிந்தீர்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னால் சிறப்பும் பெருமையுமடைந்த இனங்கள், சாம்ராஜ்யங்கள் எல்லாம் அழிந்திருக்கின்றன. ஆனாலும் தமிழகம் மீண்டும் உன்னத நிலையடையும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. தமிழகத்திடமிருந்து உலகம் கற்றுக்கொள்ள வேண்டியவை பல இருக்கின்றன. சமயமும் சந்தர்ப்பமும் இதற்கு உதவி புரியுமென எண்ணுகிறேன். நீங்கள் கூறியவற்றிலிருந்து தமிழரினம் தாழ்ந்தநிலைக்கு வரக் காரணங்கள் பல எனக்குத் தோன்றுகின்றன. என்னுடைய "உலக வரலாற்றிலே" அதைப்பற்றி நிறைய எழுதுவேன். தமிழ்நாடு என்றால் எனக்குத் திருக்குறள்தான் நினைவு வரும்; அடுத்து நினைவில் வருவது இராஜராஜ சோழன், சேரன்செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோரது செயல்கள்தாம்.

எனது நூலில் தமிழகத்தைப் பற்றிய செய்திகளை அதிகமாக எழுதித் தமிழரின் சிறப்பை உலகமறியுமாறு செய்வேன். அந்நூலை முடித்து அச்சிட்டு ஒரு பிரதியைத் தங்கட்கு அனுப்புவேன். எனக்கு விடை தாருங்கள். உங்கள் உதவியை என்றும் மறவேன். வணக்கம்.

த. பெ:- சென்று வாருங்கள். நீங்கள் தமிழகத்துக்குச் செய்யப் போகும் உதவியையும், நட்பையும் யான் என்றென்றும் மறத்தல் முடியாது. வணக்கமும் நன்றியும்.

இளங்கோவடிகள் வில்லுப் பாட்டு

—[ஆசிரியர் சு. உருத்திரசாமி]—

1 முத்தமிழ் பொருத்தி சொல்வளமிகுந்த சிலப்பதிகாரம்
தந்திட்ட பெரியோன் யார்?
என்று மழியாப் பெரும்புகழ் பெற்ற
குணக் குன்று இளங்கோதான்

2 பத்தினி தெய்வம் கண்ணகி நங்கைக்கு
நூல் செய்த முனிவன் யார்?
அண்ணனுக்காக வாழ்வைத் துறந்த
தனிப்பெருந் தியாகி இளங்கோதான்

3 ஆரிய வரசரை வாகை சூடிய
செங்குட் டுவனின் இளவல் யார்?
சமண சமயச் சிறப்பினையுணர்ந்து
தழுவிய அடிகளாம் இளங்கோதான்

4 மனித குலத்துக்கு அறவுரை புகன்ற
செந்தமிழ்ச் செல்வன் யார்?
தமிழின் சிறப்பைப் பகர்ந்து நாடக
நூலைச் செய்த இளங்கோதான்.

5 கோவலன் கதையைத் துணையாக் கொண்டு
அரசியல் நாடு தமிழைச் சொன்னோன் யார்?
சேர மரபிற் பேரின்பங் கொண்ட
மனிதருள் மாணிக்கம் இளங்கோதான்.

6 சேர சோழ பாண்டிய நாட்டை ஒருங்கே பாடி
எழுதிய புலவர் செம்மல் யார்?
இன்சொலும் பணிவும் அணியாக் கொண்ட
அறிஞர் திலகம் இளங்கோதான்.

7 காலிற் சிலம்பைத் தாயிக் கனிந்த
சீர்மிகு சொல்லின் செல்வன் யார்?
கொல்லா விரதங் கொண்ட பெருமான்
அண்ணல் சான்றோன் இளங்கோதான்,

8 தமிழ்ப்பெருஞ்சோதி இளங்கோ நாமம் வாழிய வாழியவே
தமிழ்வளங்காட்டும் சிலப்பதிகாரம் வாழிய வாழியவே
நமது நேரு பள்ளி வாழிய வாழியவே
எம் மூக்கப்பிள்ளை வாழி பல்லாண்டு வாழியவே.

SOCIAL ACTIVITIES

—[*By* U. R. KRISHNA IYER B. A., L. T.]—

Social activities have now become part and parcel of the school curriculum. The teacher and the taught are now taking real interest in the activities. The inspecting authorities are directing greater and greater attention to the social activities. Social activities afford training to the eye, ear, hands and brain of the pupils in the right direction. They are based upon experience gained in countries for advanced in education and will greatly help our pupils who are to better the economical, social, industrial and commercial conditions of our country in future.

Our pupils must strive hard to overcome all the practical difficulties that face them from day to day. They have succeeded now in doing their allotted activities though sufficiant meterials and reference books are not available in the market. They must have a keen interest in the activities. They must plan everything carefully before paying a visit to factories, railway goodshed, work shops harbours and other places of interest. Some may have a taste for dramatization and they can act well. Some may be very inquisitive and they can get information from other people. Some may be shy and they can take part in the indoor activities.

Pupils must compete with one another in collecting meterials and reference books bearing upon a particular subject. They must have a common fund to meet the miscellaneous expenditure like postage etc. They must join the pen-friend clubs and must have correspondence with other students in other countries. They must be ready to prepare and to arrange things for school exhibitions, and must do their allotted group and individual activities both indoor and outdoor. Any activity is easy and can be done in a shorter period, only when many join together and do it together in a spirit of co-peration The students must always keep in mind that the idea behind the activitfes is the valuable and important principle 'Learning by doing' which centrees round Basic Education in elementary schools.

Teachers will enrich their pupils knowledge by reading to them the latest books on the topic by making suitable plans and drafting fruitful methods to enable them to carry out their activities successfully.

The social activities develop the pupils 'knowledge' improve their skill, arouse a desire for social service create an aesthetic taste for music, drawing and painting etc. and train them to become worthy leaders in future. Hence pupils' co-operation is essential for the successful conduct of this experiment.

The pupils must be active, alert and obedient. They must be ever-ready to do their special individual talents. With proper guide and help from others, with earnest and intelligent effort on their own part, the scheme, I do hope, will be a great success in the near future in the matter of creating a society based on mutual service and universal brotherhood and our dream of 'One World' will materialise.

DISCIPLINE

—[*By* U. R. KRISHNA IYER B. A., L. T.]—

Discipline means the habit of obeying certain rules of conduct. It is necessary at home, at school, on the play ground and in public life. Complete and unquestioning obedience to a superior is an essential factor of discipline Discipline is quite necessary for life. Without it there would be confusion and choos every where.

At home the children shoud obey their elders unquestioningly. The youth will not be able to distinguish between right and wrong He must be taught the value of discipline. A discipline young man becomes on ornament to his family and a very useful member of society. If a home is to be peaceful and happy, there should be complete discipline. Otherwise there will be disorder, confusion and quarrels prevailing among the members of the family.

School education is primarily intended to train character Boys will be lacking in the greatest asset, character, if they are ill disciplined.

The boys should be made to obey their teachers implicitly, and follow the rules of their school. If the boys do not obey the rules of school, they cannot learn their lessons well. On the playground, they can play a better game and enjoy it all the more, if they keep discipline there and obey the captain.

Similarly, in life, discipline is essential. The police and the army enforce it. Without perfect discipline they cannot be efficient. An army without discipline is no better than a mob. We know how it was the perfect discipline, which existed among the men of the Light Brigade, that ensured them a glorious victory over the Russians So in every walk of life we see discipline is quite important. We must get ourselves disciplined even from boyhood.

THE LOVER OF TRUTH

—[*By* U. R. KRISHNA IYER B. A., L T.]—

Two thousand five hundred years ago an ugly short man wandered along the streets of Athens asking questions. He was a little man with a bold head and thick lips Few had heard his name Socrates They gathered round him to listen to his questions and went away thinking

What were those questions? what did Socrates want? Socrates wanted to make the people think. Socrates believed that if men could but see the truth, they follow it. So he tried to lead them towards it. His questions showed them what they were and how they should make themselves better.

Socrates helped a number of perons to think of a higher and nobler way of life. He did not conduct a school as we know it. His school was every where, in the street, in the market and in the temple; wherever men would gatner. He talked to them about truth and justice.

His own life was an example to others; because he ate very plain food and wore rough clothes in winter and summer. He walked bare-footed The simplicity of his life and his love of truth made him will-known. A

large number of men followed him. Socrates was brought up for trial, since he spoke against the inpiety and disloyalty that he saw around him. Socrates said that he loved, Truth and liked to make others love it. He admitted that he had spoken against the rich.

The judges decided that Socrates should die. But he was not afraid. he had no bitterness against his enemies. On the day fixed Socrates was given a cup of poison to drink. He drank it calmly and died peacefully.

He lived justly and well, devoting himself to truth and knowledge. So Socrates is remembered with respect even to day.

Gandhiji lived according to his principles. But he was shot to death. After his death people have begun to admire his teachings. Even though we praise Gandhiji, we sin against his teachings truth and non-violence

Like Socrates after his death Gandhiji is venerated as the devotee of truth.

★ பார்.....? ★

—[S. ஆறுமுகம், உதவி ஆசிரியர்]—

உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை பல நாடுகளிலும் சான்றோர் பலர் தோன்றினர். அவர்கள் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, மக்களுக்குச் சொல்லளவில் மட்டுமின்றி வாழ்க்கையிற் செய்து காட்டலிலும் பல வழிகளை வகுத்து நடைமுறை வாயிலாகவே காட்டி, தாம் பெற்ற இன்பத்தினை வையகம் பெறுமாறு ஒழுக்க நெறிமுறைகளாகவும், அறங்கூறும் நூல்களாகவும், விஞ்ஞான அறிவாகவும், மெய்ஞ்ஞான தத்துவங்களாகவும் வகுத்து, வகுத்த அவ்வழியிலே மக்களைப் பயிலுவித்து, தம் அன்பு சமயத்தால் உலக முழுவதையும் ஒன்றுபடுத்தி, பிறப்பு வேற்றுமைகளை அறவே ஒழித்து, எவ்வுயிரையும் தம்முயிர்போல் கருதி, உயர்பதவி பொருளீட்டம் முதலிய அழிதன்மாலையவாம் போலிப் பொருள்களில் மனம் வையாது, பிறருக்குழைக்கும் பெருமை ஒன்றினையே ஒவ்வொருவரும் தங்கள் உலக வாழ்க்கையின் முடிந்த குறிக்கோளாகக் கொண்டதைக் கூறிப் போந்தனர்.

அவர்கள் வகுத்த அவ்வுண்மைகளையே தேடிப் பார்க்கவேண்டும்-படித்து-சிந்தித்துப்பார்க்கவேண்டும்-

சிந்தித்து முடிவு காண வேண்டும்-முடிவுகொண்டு அதன் வழி நடந்து உலகுக்கு ஆவன செய்யவேண்டும் என்ற பொது நோக்கத்தையே மாணவர்கள் மேற்கொண்டு தோன்றி மறைந்த சான்றோர் பலரையும் தொகுத்து, அவர்களால் வகுத்துப்போந்த வாழ்க்கை நெறியினையே பின்பற்றி இன்புற வேண்டுமென வேண்டுகின்றேன்.

ஈண்டு யான் அன்னவர்களின் பரந்த நோக்கையும்—விரிந்த பார்வையும்—பிறர்க்கென வாழும் பெற்றியும், தனக்கென வாழா தகைமையும்-அவற்றை நடத்தி காட்டுவதற்குக் மேற்கொண்ட மனத் திட்பமும்—இடுக்கண் அழியாமையும்—இவற்றையெல்லாம் ஊடுருவிச் செல்லும் அன்புடைமையும் விரித்துக் கூறின் ஒவ்வொரு தலைப்பையும் பெரிய புத்தகக் காட்சியாக எழுதவேண்டுமென்று மாணவர்களுக்குக் கூறி, இங்கு இரண்டொரு சான்றோர்களது கருத்துக்களை மட்டும் எடுத்துக்காட்டி முடித்துவிடலாமென்று நினைக்கிறேன்

முதலில் தற்கால உலகநிலையை நோக்கின் எந்த நாட்டிலும், எப்பகுதியிலும், ஆங்காங்கு பலநிலைகளிலும் இணக்கமின்றி பிணக்கமும், நேசமின்றி பூசலும் மிகுந்திருப்பதைப் பார்க்கிறோம். பசியும், பிணியும் உலக மக்களை வாட்டிக்கொண்டு தான் இருக்கின்றன. வசியும் வளமும் நீங்கிவிட்டன. அரசியல், செல்வநிலை, கல்வி, கலை, பண்பாடு, சமயநிலை ஆகிய பல்வகைத் துறைகளிலும் குழப்பங்களே மிகுந்து காணப்படுகின்றன. இந்த சூழ்நிலைக்கேற்ப வாழ்க்கை வகையினையும் நூல் வாயிலாக வகுத்துப் போந்தாரும் உளர். அவர்கள் வகுத்துக்கொடுத்த இலக்கியங்களே தற்காலத்திற்கு ஏற்ற கருவியாகும் என்பதை யாரும் மறுப்பாரில்லை. ஏன்? காலப்போக்கில் பொங்கிவரும் புரட்சிகளையும் வெல்லத் தகுந்தவை அவைகளே. அவர்கள் வகுத்துப்போந்த பழமைகளில் புதுமைகளையும், புதுமைகளில் பழமைகளையும் பார்க்கலாம். பழமைகளை நாம் அறவே ஒழித்து புதுமைகள் ஒன்றனையே மேற்கொள்வது சிறந்ததல்ல. இறந்த காலங்களின் அனுபவங்களைப் பார்த்துதான் நிகழ்காலத்தையும் பார்க்கவேண்டும். நிகழ்காலத்தைப் பார்த்துதான் எதிர்காலத்தையும் எண்ணவேண்டியிருக்கிறது. இந்த நீதி மனித சமுதாயத்திற்கும் பொருந்தும் என்பதில் ஐயமுண்டோ?

தமிழ்நாடு செய்த தவப்பயனாகத் தோன்றிய திருவள்ளுவர் சான்றோர் வரிசையில் ஒருவராகவைத்து எண்ணப்படுகிறார் என்பது நாம் அறிந்த உண்மை. அவர் எழுதிய திருக்குறள் எக்குலத்தினர்க்கும், எந்நாட்டினர்க்கும், எச்சமயத்தாருக்கும் எக்காலத்தாருக்கும் பொதுவாகிய உண்மைகளை தன்னகத்தேகொண்டு விளங்கும் ஓர் ஒப்பற்ற தனிநூல். தமிழ் ஆசிரியர் "சமன் செய்து சீர்தூக்கும் கோல்" போலவே தம் வாழ்க்கையிற் பட்டறிந்த உண்மைகளையே முக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய உறுதிப் பொருள்களாகவும், வாழ்க்கையின் ஒப்பற்ற குறிக்கோளாகக்

கொள்ளும் தலைவன் தலைவியர் இல்லறம் நடத்தும் முறையும் தூய துறவறமாகிய சமயநெறியும், சமுதாய ஒழுக்க முறையும், இல்லறத்துக்கு முன்பு தலைவன் தலைவியர் மேற்கொண்டு ஒழுகிய களவு முறையும், அரசனும் அவனது அமைச்சர்களும் பிற அங்கங்களும் மேற்கொள்ளவேண்டிய அரசியல் முறைகளும், முடிவாக பிறவிப்பேறுகளாகிய அறம் பொருளின்பங்களையும் அவற்றின் வாயிலாக வீட்டின் சிறத்தையும் கூறிப் போந்தார். இவ்வுண்மைகளையன்றோ நாம் ஆராய்ந்து அறிந்து புதுக் கருத்துகளையும் கண்டு பிடித்து, இதன் மணம் உலகெங்கும் பரவும்படிச் செய்வது?

அடுத்து விஞ்ஞான அறிவை இன்னது இனியது என்று ஆராய்ந்து அறிந்து அதன் இறுதி முடிவையும் தன் வாழ்க்கையின் வாயிலாக எடுத்துக் காட்டிய அண்ணல் மகாத்மா காந்தி அவர்களது வாழ்வின் லட்சியங்களை சிறிது ஆராய்ந்து பார்ப்போம். முதலில் விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் அறிவினை ஆராய்வோம். உலகம் உண்டான நாள்தொட்டே இன்றுவரை விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் என்ற இந்த இரண்டிற்கும் ஓயாத போட்டியில் ஈடுபட்டிருக்கும் நிலையில் ஈண்டு யான் எங்ஙனம் கூறுதல் இயலும்? சுருங்கக் கூறின் விஞ்ஞானம் எதுஎன்பதை விஞ்ஞான வல்லுனராகத் திகழ்ந்த வள்ளுவரின் கூற்றினையே கூறுவது சாலச் சிறந்ததாகும்.

'சுவையொளி யூறோசை நாற்ற மென்றைந்தின்
வகைதெரிந்தான் கட்டே உலகு'

என்பது குறள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படுகிற நம்முடைய ஐந்து புலன்களால் எட்டக்கூடிய விஷயங்களாக இருப்பது விஞ்ஞானம். அஃதாவது ஐந்து புலன்களுக்கும் ஆகாரமாக விளங்கும் பஞ்சபூதங்களாகிய மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பனவற்றில் அடங்கிக்கிடக்கும் தீவிர சக்திகளைக் கண்டறிந்து, அச்சக்திகளை முடிந்த அளவில் பயன்படுத்திக் கொள்வதே விஞ்ஞான உலகம் என்பது. இந்தவிஞ்ஞான உலகம் இன்று விஞ்ஞான அறிவோடு எவ்வளவு வியக்கத்தக்க எந்திர தந்திரக் கருவிகளைக் கண்டுபிடித்தாலும், அல்லது வித்தைகளாகவோ செய்தாலும் ஒரு காலத்தில் இவைகள் அனைத்தும் இப்பஞ்சபூதங்களுக்குள் அடங்கிவிடும் என்றும், அவ்வாறு அழிந்து போனபின்பு எது இருக்கும் என்று நினைக்கும்படியான மெய்ஞ்ஞான ஆராய்ச்சியை நாடித்தான் நமது அண்ணல் காந்தி அவர்களும் உழைத்தார்கள் போலும்!

இந்த விஞ்ஞான வித்தைக்கும் எட்டாத அந்த மெய்ஞ்ஞானப் பொருளை அறியவேண்டுமென்று நம் காந்தியவர்கள் மட்டுமல்ல. கணக்கிலடங்கா எண்ணரிய பெரியோர்கள் எத்தனையோ விதங்களில் முயன்று, அம் முயற்சிகளின் அநுபவங்களை எழுதிவைத்துப் போந்தனர்.

அவர்கள் வகுத்த மெய்ஞ்ஞானம் என்னென்பது? மெய்ஞ்ஞானம் என்பது உண்மையான அறிவு; அல்லது உண்மையைப் பற்றிய அறிவு. எந்த உண்மை என்ருல் என்றென்றும் உண்மையாக இருக்கிற உண்மை எது? உலகங்களெல்லாம் அழிந்த பின்பும் அழியாதிருப்பதும் என்றென்றும் உள்ளதுமான மெய்ப் பொருளின் நம்பிக்கைதான். அஃதாவது மனிதனுக்கு இந்த உலக வாழ்வுக்கு மேல் இன்னும் ஏதாவது உண்டா இல்லையா என்பதுதான்? விஞ்ஞானம் என்பது கண்களுக்கு முன்னல் காணும் சக்திகள்; ஆனல் மெய்ஞ்ஞானம் என்பது புலன்களும் மனதும்கூட காணுத சக்திகள்.

மகாத்மா காந்தியவர்கள் மெய்ஞ்ஞான மார்க்கத்தைப் போதிக்க வென்றே வந்தவராக வாழ்ந்து வந்தார் என்றும், மெய்ஞ்ஞானத்தின் சிறப்பை தெள்ளத் தெளிவாக நடத்திக் காட்டி அதற்கு இவ்வளவு ஆக்கம் தேடித் தந்தவர் யாருமே இதுவரையிலும் இப் பூமியில் பிறந்ததில்லை என்று அநேக மேல்நாட்டு அறிஞர்களும் சொல்லுகின்ருர்கள் என்ருல் காந்தி மகான் வகுத்த 'காந்தியம்' அன்ரே! ஆனல் மகாத்மாவினல் இவ்வளவு மகத்துவம் அடைந்து சுதந்திரத்தைப் பெற்று விஞ்ஞானத்தைக் காட்டிலும் காந்தியவர்கள் வாழ்ந்து காட்டிய மெய்ஞ்ஞானம் தான் சிறந்தது என்று சிந்தனையிலாவது உணர்வோர் உளரோ? விஞ்ஞான சக்திகளைப் பெருக்கிக் கொள்ள காந்தியவர்களின் மெய்ஞ்ஞான சக்தியை ஒரு கருவியாக மட்டும் கருதுகிருர்களே தவிர வேறில்லை. இந்த மெய்ஞ்ஞான உணர்ச்சியை வளர்ப்பதற்கு 'வாய்மையும்', 'ஜீவகாருண்ய ஒழுக்கமும்'தான் அடிப்படைகள் என்பது உலகத்தின் எல்லா நாடுகளிலும் தோன்றிய உத்தமர்கள் உபதேசித்து வகுத்துப் போந்தார்கள் என்றுதான் மீண்டும் குறிப்பிடுகிறேன். "எல்லாப் பொருளும் இதன்பாலுள, இதன்பால் இல்லாத எப்பொருளுமில்லையால்" என்று முப்பாலை திருவள்ளுவமாலையடிகளில் ஒருவரான மதுரைத் தமிழ் நாகனர் புகழ்ந்துள்ளார் என்ருல் வாழ்வினை வகுத்துக் காட்டிய நமது வள்ளுவர் வாய்மையும் ஜீவகாருண்ய ஒழுக்கமும் பொருந்திய மெய்ஞ்ஞான வாழ்க்கைக்கு 'கொல்லாமையும்' 'பொய் சொல்லாமையும்' தான் சாதனங்கள் என்று உறுதி கொண்டு ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்களில் ஒன்றிலே இந்த மெய்ஞ்ஞான அறிவையும் புகுத்தியுள்ளார் என்ருல் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் 'நுண் மாண் நுழை புலம்'தான் என்னே! குறளைப் பாருங்கள்:

'ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று'

இதன் கருத்து—மனிதனுக்கு உயர்ந்த அறம் எது என்ருல் 'கொல்லாமை'; அதற்கு அடுத்தபடியாக

உயர்ந்த அறம் 'பொய் சொல்லாமை' என்பது இதன் பொருள்.

இந்த வள்ளுவர் கருத்து மக்கள் வாழ்க்கையில் மங்கிக் கிடந்துவிட்டதோ என்றுதான் காந்தியவர்கள் ஒப்பரிய தன் வாழ்க்கையில் ஜீவகாருண்ய ஒழுக்கம் — கொல்லா விரதம் மீண்டும் புத்தொளி உலகெங்கும் வீச புனிதமாக நடந்து காட்டி உலக சரித்திரத்திலே சாட்சியாக எவரும் இல்லை என்று தனது பெயரையும் நிலைநாட்டினார் என்றால் அவரது மெய்ஞ்ஞான அறிவு—காந்தீயம் தான் என்னே! தீமையை நன்மையால் தீர்க்க முயல்வது; அந்த நன்மையும் தூய்மையுள்ளதாக இருக்க வேண்டும் என்பதுதான் அவரது முக்யத்வம் போலும்! அவ்வாறு தான் கோரிய முறையில் உலகத்துக்கு நன்மை உதிக்காவிடில் பட்டினி கிடந்தாவது இச்சாமாத்திரமாக உயிரை விட்டு விட வேண்டுமென்பதும் அவரது காந்தீயம் போலும்!

புலவர் என்றால் வள்ளுவரையும், உலக தந்தை என்றால் காந்தியார் அவர்களையும், கவிஞர் என்றால் கம்பரையும் அறிஞர்கள் கருதுகிறார்கள் என்றால் வள்ளுவரையும், காந்தியாரையும் கூறியதோடு நில்லாது ஈண்டு யான் சொல்லின் செல்வனாகிய கவிச் சக்கரவர்த்தி கம்பனையும் எடுத்துக் கூறுவது சாலப் பொருந்தும். ஆனால் ஒரு சிலர் அப்பாடா! கம்பராமாயணத்திலா என்று சலிப்புத் தட்டும் இந்த காலத்திலும்கூட கம்பராமாயணம் தமிழுக்குத் தலைசிறந்த காவியம் என்றும், இதற்கு இணையான காவியங்கள் வேறு எந்த மொழியிலும் இல்லை என்றும் ஆராய்ந்துணர்ந்த அறிவாளிகள் தீர்ப்பு கூறுகிறார்கள். தவிர வாழ்நாள் முழுவதையும் கம்பராமாயணம் ஒன்றிலே செலவழித்து ஆராய்ச்சிக் கண் கொண்டு படிப்பவர்கள் அதன்கண் அமைந்துள்ள நயங்கள் அனைத்தையும் கண்டறிதல் அசாத்தியம் என்று கூறுகிறார்கள். இந்த இருபதாவது நூற்றாண்டில் காந்தியவர்கள் வகுத்த காந்தியமாகிய சாந்த வழியை — தீயவர்களுக்கும் ஒரு மனமாற்றத்தை — அடையும்படிச் செய்து முடியாவிட்டால் கொலைத் தொழிலை மேற்கொள்ளாது, பட்டினி விரதம் கிடந்து மாண்டு போவதே மேல் என்று நினைக்கும் அச் சீரிய பண்பாட்டையும் அக்காலத்தே கம்பன் தன் காவியத்திலே தமிழிக்குப் பழமையாக்கிச் சித்தரித்துக் காட்டுகின்றான் என்றால்; கம்பராமாயணத்திலா? இராவணாதி அரக்கர்களைப் பூண்டோடு கொன்றழிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட இராமகதையிலா? கொல்லா விரதம் — அஹிம்சையாகிய காந்தீயம்? என்று சிலர் நினைக்கலாம்! ஆனால் மனித ஆராய்ச்சிக்கும் எட்டாத உயர்ந்த தத்துவங்களையும் இருப்பிடமாகக் கொண்டது கம்பன் காவியம். தமிழன் பண்பாடு எந்த தத்துவங்களில்தான் குறைந்து காணப்படுகிறது? எந்த தமிழ் இலக்கியங்களிலே? கொல்லா விரதத்திற்கு சிறப்புத் தராத தமிழ் இலக்கியங்

களே இல்லை என்றுதான் முடிவு. ஈண்டு கம்பன் கருத்தை நோக்கு வோம்.

இராசனுடைய பாணம் இராவண னுடைய மார்பில் ஊடுவிப் புகுந்து உயிரையும் கவர்ந்தது. இராவணன் ஆகாய விமானத்திலிருந்து தலைகீழாக ஒரு மலை விழுந்தது போல பூமியின் மேல் விழுந்துவிட்டான். இராமனும் விமானத்தை விட்டிறங்கி பூமியிற் கிடந்த இராவணன் அருகிற் சென்று கம்பீரமான வடிவத்தைப் பார்க்கி றான். அப்பொழுது இராவணனைக் கொன்றுவிட்டோமே என்ற துக்கம் இராமனைப் பிடிக்கிறது. அச் சமயத் தில் கொல்லா விரதத்தின் மேன் மையை விபீஷணனுக்குச் சொல்லு கிறான்: "இந்த இராவணனைக் கொன் றதைக் காட்டிலும், அவனுக்கு நல் லறிவு வரும்படியாக ஒரு மன மாறு தலை உண்டாக்கி யிருக்கவேண்டும்; அதற்கும் அவன் இடங்கொடாத காரணத்தால் கொலைத் தொழிலைச் செய்யாது கொல்லா விரதத்தை மேற் கொண்டு பட்டினி கிடந்து மாண்டு போயிருப்பின், கருணையையே மேற் கொண்டு இராவணனைக் கொல்ல மறுத்து பட்டினி கிடந்து மாண்டிருப் பின் அப்பெரும் புகழ் உலகத்தில் நிரந்தரமாக இருந்திருக்கும்" என்று இராமன் சொல்வதுபோல் கம்பன் தன் காவியத்தில் காந்தியத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறான். அச் சொல்லோவியத்தை இங்குத் தீட் டின் பெருகும். ஆனால் அந்த முழுக் கருத்துகளும் ஒருங்கே காணும் ஒரு பாட்டினை மட்டும் நோக்குங்கள்:

"மாண்டு ஒழிந்து உலைவில இறக்கும்
வயங்கு இசை முயங்க மாட்டாது
ஊண் தொழில் உகந்து தெவ்வர்
முறுவல் என் புகழை உண்ண
ஆண் தொழில் அமைந்த மார்ப!
போர் புறம் கொடுத்தார் போன்ற
பூண் தொழி லோரிற் பெற்ற
வெற்றியும் அவத்தம்' என்றான்.

இந்தப் பாட்டிற்கு பதம் பதமாக அர்த்தம் பாரத்து ஆராய்ந்து முடிவு கண்டால் அதன்கண் காந்தியத்தின் அடிப்படையும், மெய்ஞ்ஞான உணர்ச்சியும் அதுவே என்று புலனா வது விளங்கும்.

இது நிற்க பதினெட்டு சித்தர்கள் தான் எந்த ஞானமார்க்கத்தைப் பாடிப் போந்தார் என்று சிறிது நோக்கின் அது ஒன்றும் மிகையா காது. அவர்களும் மேற்கூறிய அறங் களையே மெய்ஞ்ஞானமாக வகுத் துள்ளார்கள் என்பதும் தெரியவரும். சான்றாக பதினெட்டு சித்தர்களுள் குதம்பைச் சித்தர் பாடிய பாட்டினை ஒன்றை நோக்குவோம்:

தாவாரம் இல்லை தனக்கு ஒரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி? — குதம்பாய்!
தேவாரம் ஏதுக்கடி?

என்பது அவர் பாடிய பாடல்களுள் ஒன்று இதன் கருத்தைப் பார்த்த அளவில் சாதாரண அர்த்தத்துடன் மாறான முறையில் எண்ணிவிடுவார் கள் பலர்; ஆனால் அறிஞர்கள்தான் இதன் உட்பொருளை அறிந்துகொள்ள முடியும். இங்குதான் கவி கவி புனை வதில் காணும் இன்பம், அதாவது மேலாக ஒரு கருத்துச் சொல்வது போல் அதற்கு மாறான வேறு பொ

ருள் படும்படி நயம் வைத்து பாடி விடுவார்கள். இது நிற்க இதன் சாதாரண பொருள் என்ன? மறைந்து விளங்கும் பொருள் என்ன என்று பார்ப்போம்.

சாதாரணமாக இதன் பொருளை தனக்கென்று ஒரு வீடு இல்லாதவனுக்கு அல்லது தாழ்வாரம்கூட தனக்கென்று சொந்தமாக இல்லாத ஒருவனுக்கு தேவாரம் முதலிய தெய்வ தோத்திரங்கள் எதற்கு என்று கொண்டுவிடுவார்கள். ஆனல் மெய்ஞ்ஞானத்தை உணர்த்தும் சித்தர்களுக்கு உலக வாழ்வில் — மண் மனை — பொருள் இவைகளில் ஏன் இத்தனை ஆசை? அல்ல சிந்தித்துப் பார்த்தால் மெய்ஞ்ஞானம் ஞானக் கண் முன் முந்தும் என்பது தெளிவாகும். உட்பொருளை ஆராய்வோம். பதமாகப் பொருள் பாருங்கள்— தா, வாரம் என்னும் பதங்களாகப் பிரித்து பொருள் கொண்டால் தா— என்ற தனி எழுத்துக்கு தமிழில் 'துன்பம்' என்று பொருள்; வாரம்— எனும் பதத்திற்கு பங்கு என்பது பொருள்; தனக்கு என்பது தான் என்ற தன்னலம்; ஒரு — ஒரு தாம்; வீடில்லை = வீடு இல்லை; வீடு-என்பதற்கு விடுபடுவது அல்லது விடுதலை என்று பொருள்; குதம்பை — ஆபரணம். இனி உட்பொருள் ஆராயின் சித்தர் கருத்து விளங்கும். ஆபரணங்களை அணிந்த பெண்ணே! மன்னுயிர்களுக்கு நேரும் துன்பங்களில் பங்கு கொண்டு கருணை காட்டாது ஒழிந்து நிற்பவருக்கும், தனக்கு தனக்கு என்று தன்னல பற்றையும். அகந்தையையும் ஒரு தரங்கூட விட்டு விட மனமில்லாது ஒழிபவருக்கும் சும்மா தேவாரம் முதலிய தெய்வ தோத்திரங்களை மட்டும் சொல்லிவிடுவதில் என்ன பயன்? என்று தண்டிப்பது போல் மன்னுயிர்களுக்கு நேரும் துன்பங்களை கண்ட அளவில் பங்கு கொண்டு கருணையுடன் அவற்றை அகற்றி இன்புறச் செய்வதும், 'தான்' என்ற அகங்காரத்தையும், ஆசையையும் விட்டுவிடுவது தான் உண்மையான மெய்ஞானம் ஆகும் என்று உணர்த்துகிறுர் என்றால் அவரது உண்மை ஞானம் அன்றே நம் வாழ்வின் அறிவில் பொதிந்து மிளிரவேண்டும்?

இதுவரையில் உவந்து அறிவின் கண் சென்ற மாணவர்கள் அவ்வறிவின் ஒழுக்க நெறிகளையும், அறங்களையும், விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத் தத்துவங்களையும் படிக்கும் அளவில் நில்லாது அவைகள் அனைத்தையும் வாழ்க்கையின் நடைமுறைகளாக வகுத்துக் காட்டுதல் வேண்டுமென்றும், அதற்கு உறுதுணையாக இருக்கும் தமிழ்த் தெய்வத்தை வணங்கி அன்னவளின் துணை கொண்டு பின்பற்றுதல் சாலச்சிறந்தது என்று கூறுவதோடு அத் தமிழ் அன்னை தன் பாதத்தில் சிலம்பையும், இடையில் மணிமேகலையும், கையில் சூளாமணியையும் முடியில் முப்பாலையும் ஆபர

ணங்களாகக் கொண்டு [இங்கு அவள் கொள்ளும் ஆபரணங்கள் ஒவ்வொன்றும் ஒப்பற்ற தமிழ் நூல்களையே குறிக்கும் என்ற விசேஷத்தைக் கவனித்தல் பொருத்தமுடையது] ஒளி வீசி ஈரடியால் நடந்து, பழமொழியால் பேசி, ஐந்திணையிலிருந்து கோவை — நான்மணிக்கடிகை — காஞ்சியொடு 'உலாக் கொள் தமிழ் தெய்வத்தைப் பார்த்து பலர் பத்துப் பாட்டிசைத்தார்கள்; பல்லோர் காப்பியங்கள் பகர்ந்தார்கள்; நேரடைந்து பலர் எட்டுத்தொகையீந்தார்கள்; அந் நூற்பொருள்களென்னுந் தீம்பாலை நமது உயிரெல்லாம் தித்திக்க குழைத்தூட்டும் நம் தமிழ்த் தாயை மறவாது பேணும் பெரும் பேற்றை நம் தமிழ் மக்கள் எல்லோரும் பெற்றுச் சிறந்திடுவாராக.

எனது இலங்கைச் செலவு.

அரு. சந்திரசேகரன், உதவி ஆசிரியர்.

இக் கட்டுரையின் தலைப்பின்கீழ் யான் கடந்த கோடை விடுமுறையில் இலங்கை சென்றபோது காண நேர்ந்த சிலவற்றையும், இயற்கையமைப்பு முதலானவற்றையும் ஈண்டு குறிப்பிட விழைந்துள்ளேன். நம் பள்ளி மாணவர்களிற் சிலர் இலங்கை சென்றிருக்கக் கூடும். பலருக்கு இக்கட்டுரை மிக்க பயனளிக்கும்.

சென்ற சில ஆண்டுகட்கு முன்பு இலங்கை செல்வது மிக எளிது. ஆனால் தற்போது இலங்கை சென்று நிரந்தரமாக வாசம் செய்ய முடியாது. காரணம் நம் இந்தியர், இலங்கையில் பொருள் ஈட்டி தாய்நாடு கொண்டு வருவதால், இலங்கை அரசாங்கம், தன் நாட்டுச் செல்வத்தினால் இந்தியர் பெருஞ் செல்வந்தர் ஆகின்றனர் என்பதுதான். ஆனால் நம் இந்தியர்களால் தான், இலங்கை இன்று செல்வம் கொழித்த நாடாகத் திகழ்கிறது என்பதை மறந்தனர் போலும். நிரந்தரமாக ஆங்கு குடியேற முடியாத போதிலும், நம்மைப் போன்றவர் சென்று சுற்றுப் பிரயாணம் செய்து வரலாம். அதற்கும் நமது மாவட்ட அதிகாரியிடமும் இலங்கையரால் நியமிக்கப்பட்ட இலங்கை அதிகாரியிடமும் நுழைவுச் சீட்டுப் (Pass Port) பெற்றுதான் நாம் செல்ல முடியும். இல்லையெனில் இலங்கை செல்ல முடியாது. அதில் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் மீண்டுவிடல் வேண்டும். இல்லையெனில் அவ்வரசாங்கத்தின் தண்டனைக்கு உட்பட நேரிடும். புறப்படு

வதற்குமுன், நாம் அம்மையும், ஊசியும் போட்டுக்கொண்டு அதற்குகந்த அத்தாட்சிப் பத்திரத்துடன் செல்லுதல் வேண்டும். அப்படிச்செய்துகொண்டு செல்வதால், செல்பவர்கள் மூலம் வியாதி பரவாமல் தடுக்கப்படுகிறதாம். இந்த அத்தாட்சி பத்திரமும் இல்லையெனில் நம்மை இலங்கைக்குள் அனுமதிக்கமாட்டார்கள்.

நான் நுழைவுச்சீட்டு, அம்மை ஊசி இவைகள் போட்டுக்கொண்டதற்கு அத்தாட்சி பத்திரங்கள் இவைகளுடன் புறப்பட்டேன். புறப்படும் இடத்தில் புதிய சாமான்களுக்கு வரி விதிக்கின்றனர். என்னிடம் புதிய சாமான்கள் ஒன்றும் இல்லையாதலால் சீக்கிரம்பரிசோதிக்கப்பட்டு, அனுப்பப்பட்டேன். விமான மூலம் சென்றதால், சுமார் 1மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தை அடைந்தேன். இறங்கியதும் முதலில் டாக்டரிடம் அழைத்துச் செல்லப்பட்டேன். அத்தாட்சிப்பத்திரங்களை காண்பித்தவுடன் Qurantine report என்று சொல்லக்கூடிய இரு நமூனுக்களில் கையொப்பம வாங்கிக்கொண்டார். ஒன்றை என்னிடம் கொடுத்துவிட்டார். அவரிடம் நாம் இலங்கையில் எந்த இடதிற்குச் செல்லப்போகிறோம் என்பதைச் சொல்லவேண்டும. அதன்படி நான், கண்டிக்குச் செல்வதாகச் சொன்னேன். ஒரு நமூனுவை கண்டி டாக்டருக்கு அனுபபிவிடுவார்கள். இரண்டு நாட்களுக்குள் கண்டி டாக்டரின் நேரில் சென்று இரண்டு நமூனுக்களிலும் கையொப்பமிட வேண்டும. நாம வேறு பகுதிக்குச் செல்லவேண்டுமாயின், போகும் இடத்தைச் சொன்னால். அந்த நமூனுவை எடுத்துக்கொண்டு ஆங்கு சென்று இரண்டிலும் கையொப்பமிடவேண்டும். ஆகவே எப்படியும் இலங்கை அடைந்து 15 தினங்கள்வரை தினந்தோறும் அரசாங்கடாக்டரிடம்நேரிற்சென்று கையொப்பமிட்வேண்டும். சிலசமயங்களில் இரண்டு தினங்கட்கு ஒருமுறை கையொப்பமிட அனுமதிப்பதும் உண்டு. 15 தினங்கள் முடிந்ததும் கடைசிதினம் கையொப்பமிடும் டாக்டரிடம் இரு நமூனுக்களையும், கொழும்பு அரசாங்க டாக்டருக்கு அனுப்பிவிடுவர். நாம் இப்படி டாக்டரிடம் சென்று கையொப்பமிடுவதால் நாம் எவ்வித வியாதியாலும் பீடிக்கப்பட்டிருக்கவில்லைஎன்பதை நிரூபிப்பதாகும். இவ்விதம 15தினங்கள்வரை கையொப்பமிடத் தவறினுல் ரூ. 500வரை அபாரதமோ, சிறை தண்டனையோ விதிக்க அவ்வரசாங்கத்திற்கு உரிமையுண்டு என்பதை அந்நமூனுவில் காணலாம இந்த நமூனுவைப் பெற்றுக்கொண்டு, ஆயததுறைக்குச் (Customs House) சென்றேன. சாமான்கள் சோதிக்கப்பட்டன. பிறகு நாணயங்கள் மாற்றிக்கொள்ளும இடத்திற்குச் சென்று, என்னிட்முள்ள இந்திய நாணயங்கட்கு இலங்கை நாணயங்களைப் பெற்றுக்கொண்டு. விமானக்கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டுளள மோட்டாரில் யாழ்ப்பாண நகருக்குள் சென்றேன். அங்கு உணவுச்சாலை இருக்கும் இடத்தைக் கேட்டால், நான் பேசுவது அங்குள்ளவர்கட்குப் புரியாமல் விழிக்கின்றனர் அவர்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை. காரணம்

அவர்கள் பேசுவது சிங்கள பாஷை. பிறகு, தமிழும், சிங்களமும் தெரிந்த சிலர் உதவியால் உணவுச்சாலை இருக்குமிடம் அறிந்து, உணவு உட்கொண்டேன். உணவின் தயாரிப்பு, சிற்றுண்டி முதலியவைகள் எனக்கு சிறிதேனும் பிடிக்கவில்லை. நம்நாட்டிற்கு முற்றிலும் மாறுக உள்ளது. அங்கு தென்னைமரம் அதிகம் பயிர் செய்யப்படுகிறது. நம் நாட்டைப்போன்று உஷ்ணநாடு. அன்று மாலை புகைவண்டியில், இலங்கையின் ஓர் பகுதியாகிய கண்டிக்குப் பயணமானேன். அறுமதிச்சீட்டு வாங்கும் புகைவண்டி நிலையங்களிலும் முற்றிலும் சிங்களவரே. ஆங்கிலம் ஓரளவு தெரிந்திருந்ததால் ஒரு சிறிது வசதியாக இருந்தது. மறுநாட் காலையில் கண்டிநகர் அடைந்தேன். புகைவண்டி செல்லும பாதை அனைத்தும் மலைப்பிரதேசமே. ஆகவே மிகவும மெதுவாக சிற்சில இடங்களில் செல்கிறது கண்டிநகரை அடைந்தபோது சுமார் காலை 8மணி இருக்கும். எனது நண்பர் திரு. இராமச்சந்திரன் அவர்கட்குக் கடிதமமூலம் தெரிவித்திருந்ததாலும், அவரது முகவரி ஏற்கனவே தெரியுமாகையாலும் அவர் இருப்பிடம் அடைந்தேன். எங்கும் புல்வெளியும், மலையுமே காணப்படுகின்றன. இலங்கையின எப்பகுதியிலும் நம் தென்னாடுபோல் சிற்றுண்டியோ, உணவோ தயாரிக்கப்படுவதில்லை.

கண்டிநகரானது இலங்கையிலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்று. ஆங்கு பல கல்லூரிகள் உள. அங்கு எல்லாப் பள்ளிகளும் கல்லூரிகள் தான். ஆரம்பப்பள்ளிக்குமேல், படிக்கும் படிப்பை நம்நாட்டில் E. S. L. C., S. S. L. C. என்று பிரித்திருப்பது போல், இலங்கையில் J. S. C. (Junlor School Certificate), S. S. C. (Senior School Certificate) என்று பிரித்திருக்கின்றனர். பள்ளியில் சிங்கள பஷைதான் முதல் பாஷை. ஆங்கிலம், கணிதம், தமிழ் போன்ற பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

கண்டிநகருக்கு மத்தியில் ஓர் பெரிய ஏரி அமைந்துள்ளது. அதைச்சுற்றி மோட்டார் செல்லும் பாதை. நகரைச்சுற்றி மலைகள். பார்க்க பரவசமூட்டுமிடமாகத் திகழ்கின்றது. ஏரிக்குச் சமீபத்தில் ஒரு பெரிய உணவு விடுதி Queens Hotel என்பது பெயர். திரிகோணமலைவீதி என்பதுஒரு பெரியகடைத் தெரு. நம் ஊர் காடுகளில் பலநிறப் பொன வண்டுகள் பறப்பது போனறு ஆங்கு பலநிற மோட்டார்கள் பறந்தவண்ணமிருக்கின்றன. சாலையைக் கடக்கும்போது சிறிது கவனமின்மையாகக் கடந்தால் நாம், நம் உயிரை மறந்துவிடவேண்டியது தான. அடுத்தாற்போல் பார்க்கத் தக்க இடம "மாளிகா" என்று சொல்லக்கூடிய புத்தர் கோவில் சிங்களவரின புத்தர் வழிபாடு மிக்கப்போற்றத்தக்கது.வழிபாட்டிற்கு இஷ்டப்பட்டால்புஷ்பம், ஊதுபத்தி வெற்றிலை பாக்கு இவைகளை வாங்கிச் செல்லலாம. கோவிலிலுள்ள உள்ள புத்தர் சிலையினிடம நாமே சென்று புஷ்பங்களைப போட்டு, வணங்கிவரலாம். குருமார்கள பக்கத்தில் இருப்பர். நம்நாட்டில் கோவில்களில் கடவுளை வணஙக

தாகர்கள் இருப்பதுபோல் அந்நாட்டில் இல்லை. காணிக்கை செலுத்த வேண்டுமெனில் உண்டியலில்போடலாம். இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு நண்பர்களுடன் ஆங்குள்ள புத்தகசாலைகளுக்குச் சென்றோம். பாங்குடன் வைக்கப்பட்டு, கண் கவரத்தக்க நிலையில் அமைக்கப்பட்டுள்ளது பார்க்கத்தக்கது. பண்டைக்கால ஓலைச்சுவடிகள்தான் அதிகம். கண்டியில் 4 தினங்கள் வரை தங்கி, பக்கத்தில் உள்ள சிற்சில இடங்களையும் நண்பரின் உதவியால் கண்டு களித்தேன். செல்லுமிடங்களில் உள்ள நண்பர்களும், எனக்குத் தெரிந்தவர்களும், நம்மைப்போன்ற இந்தியர்களைக் கண்டால் அளவிலா மகிழ்ச்சியடைந்து அன்புடன் உபசரிக்கின்றனர். மகிழ்ச்சியுடன் சுற்றத்தார்களையும், நண்பர்களையும, நம் கிராமத்தைப் பற்றியும் விசாரிக்கின்றனர். அவர்களைப்பார்த்துவருவதால் அவர்கள் பெருமையும் அடைகின்றனர்.

பிறகு எனது அண்ணர் இருக்கும் இடத்திற்குச் (ராசாவந்தை-Raxawa Estate) சென்று, அங்கு தங்கிக் கொண்டு, பல இடங்களைக் கண்டு களித்தேன் அவர் ஆங்கு இருப்பதால் மிக்க வசதியாக இருந்தது. பல இடங்கட்கும் மோட்டாரிலேயே சென்றேன் இங்குபோல், மோட்டாரில் குறிப்பிட்ட அளவுக்குமேல் ஏற்றக்கூடாது. ஆனல் அங்கு இடமில்லை எனபதே கிடையாது. எவ்வளவுபேர் வந்தாலும், எங்கு கைகாண்பித்து நிறுத்தினலும் ஏற்றிக்கொள்வர். பாதைகள் முழுதும் மலைப்பிரதேசத்தில் வளைந்து வளைந்து தான் செல்கிறது. பாதைகள் முழுதும் தாரிடப்பட்டவை. ஆங்குள்ள மோட்டார் ஓட்டிகள் கைதேர்ந்தவர்கள்தான் என்று சொல்லவேண்டும் அவ்வளவு வளைவான மலைப் பிரதேசங்களிலும், எவ்வித விபத்தும் ஏற்படாமல் வேகமாகச் செலுத்திப் போவதைப்பார்த்து நான் முதலில் அச்சமுற்றேன். பிறகு இந்நாட்டில இது சாதாரணம்போலும் என்று துணிந்தேன். எதிர்பாராத விதமாக விபத்துக்கள் நேரிடுவதும் உண்டு. இங்குபோல், மோட்டாரில் பணத்தைக் கொடுத்து அனுமதிச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும், பிறகு கண்டக்டர் வசூல் செய்து கொள்வார். கண்டக்டர்களில் பெரும்பாலோர் சிங்களவர். சில சிங்களவர் தமிழ் ஓரளவு பேசுகின்றனர். எனக்கு சிங்களம தெரியாதாகையால், டிக்கட் கொடுக்கும் குறிப்பறிந்து, செல்லும் இடத்தைச் சொல்லி குறிப்பிட்ட தொகையைமட்டும் கொடுப்பேன. ஒரு சமயம், ஒரு கண்டக்டர் என்னிடம் சிங்களத்தில், 8 அணுவிற்கு சில்லரை கேட்டார். யான் என்னை, மோட்டாருக்குரிய கட்டணத்தை கேட்கிறார் என்று எண்ணி, யான் முன்பே பணம் கொடுத்துவிட்டேனே என்று தமிழில் சொன்னேன். அது அவருக்குப் புரியவில்லை, இருவரும் விழித்தோம். மத்தியில் இருந்த இரு மொழியும் தெரிந்தவர் விபரம் சொல்ல எல்லோரும் சிரித்தோம். ஒருசமயம், காலை மோட்டாரில் செல்லும்போது, ஓர் அரசமரத்தடியில் உள்ள ஒரு சிறு புத்தர் கோவிலுக்குச் சமீபத்தில் மோட்டாரை நிறுத்தினர். உடனே கண்டக்டர் இறங்கிக் கோவிலினுள் சென்று, காணிக்கை செலுத்திவிட்டு,

வணங்கிவிட்டு வந்தார். பிறகு நண்பரை விபரம் கேட்க, சிங்களவர் மதம் பௌத்தம்; புத்தர் ஞானம் பெற்றது அரசமரத்தின்கீழ் ஆகையால், அரச மரத்தைக்கண்டால்; புத்தர் கோவில் கட்டிவிடுவர்; மோட்டார் செல்லும் பாதையில் புத்தர் கோவில் இருப்பின், ஒவ்வொருநாளும் முதல் தடவையாக அந்த சாலையில் செல்லும்போது, காணிக்கை போட்டு வணங்குவது வழக்கம் என்று அறிந்தேன். மோட்டார் செல்லும்பாதையில் பள்ளிகள் இருப்பின், பள்ளிக்கு 1பர்லாங்கு முன்னதாகவே 'School' என்று எழுதிய பலகை தாங்கிய கம்பம் ஒன்று இருக்கும். இதன் கருத்து என்னவெனில், 'மாணவர்கள் நடமாட்டம் அதிகம்' மெதுவாக ஓட்டிச் செல் என்பதாகும். இது போன்று வளைவுகள், பாலங்கள், இவைகட்கும் எச்சரிக்கைப் பலகைகள் உண்டு. மோட்டாரில் ஆண்பெண் வித்தியாசமின்றி உட்காரலாம். பௌத்த குருமார்கள் வந்தால் அவர்கட்கு மிக மரியாதை செய்து இடங்கொடுக்கின்றனர். காரியாலயங்கள் ஆஸ்பத்திரி ஆகிய இடங்களில் பெண்கள் அதிகமாக வேலை செய்கின்றனர்.

கண்டிக்குச் சமீபத்தில் போராதனை என்ற ஓர் இடம் உள்ளது. அங்குள்ள பூங்காவில் செடி, கொடி, மரம், புல் ஆகியவைகள் எல்லாம் உள. அங்கு இல்லாதவை ஒன்றும் கிடையா. அதற்குப் பக்கத்தில் அதன் பெயரையும் எழுதி வைத்துள்ளனர். மாதிரிக்காக மாட்டுத் தொழுவம், கோழி வளர்க்குமிடம் யாவும்உள. ஆங்குள்ள ஆற்றின் குறுக்கேயுள்ள ஆடுபாலம் பார்க்கத்தக்கது. அதில் செல்லும் போது அது ஆடுகிறது. அப்பூங்காவில் இல்லாத தாவரத்தின் (Botonical Name) எழுதிக் கொடுத்தால் தக்க பரிசு கொடுப்பதாக அறிந்தேன். நம்நாட்டில் உள்ள தாவரங்களனைத்தும் அங்கு உள. மூங்கில் வகையில் மட்டும் சுமார் 50 வகையிருக்கலாம். கூந்தற்பனை வைக்கப்பட்டிருக்கும் அழகு கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. இதைச் சுற்றிப் பார்க்க சுமார் 3மணி நேரமாயிற்று.

நுவரெலியா, சிவனடிபாதம், கோட்டன்பிரிட்ஜ், கதிர்காமம், கொழும்பு ஆகிய இடங்களும் பார்க்கத் தக்கவையே. வருடத்தில் பெரும்பாலான நாட்கள் மழையே. ஆதலால் இது ஒரு குளிர்மிக்க நாடு எனலாம்.

இலங்கையின் பெரும் பகுதியில் தேயிலையே பயிரிடப்படுகிறது. சிற்சில இடங்களில் ரப்பர், மிளகு, காபி, கிராம்பு, ஏலம், கோகோ தென்னை ஆகியவைகளும் பயிரிடப்படுகின்றன. தோட்டங்களில் லட்சக்கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். பெரும்பாலானத் தேயிலைத் தோட்டங்களுக்கு தேயிலைத் தொழிற்சாலை (Tea Factory) உண்டு தேயிலைக் கொழுந்திலிருந்து தேயிலை செய்யப்படும் விதத்தை நேரில்தான் கண்டு அறிய முடியும். இப்படி தயாரிக்கப்பட்ட தேயிலை பிறநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

தேயிலைப்பயிர் சுமார் 100 முதல் 120 வருடங்கள்வரை பலன் தரக் கூடியது. 5வருடங்களுக்கு ஒருமுறை கவாத்து செய்யப்படுகிறது. சுமார் 3அடி உயரத்திற்கு மேல் வளரவிடுவதில்லை. மலைப்பிரதேசமானதால் மேல்நாட்டுக் காய்கறிகள் செழுமையாக வளர்கின்றன. ஒவ்வொரு தொழிற்சகலையை ஒட்டியும், தோட்டச்சொந்தக்காரருக்கு ஓர் பங்களாவும் மற்ற சிப்பந்திகளுக்கும், தொழிலாளிகளுக்கும் தரத்திற்குத் தக்கவாறு விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன அவைகளை அழகு செய்ய ஒவ்வோர் தோட்டத்திலும் புஷ்பச் செடிகள் ஏராளமாய் பயிர் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தோட்டத்திற்கும் ஒரு ஆரம்பப்பள்ளி உண்டு.

தபால் ஆபீஸுக்கு, தபாற்கந்தோர் என்றும், பார்சல் ஆபீஸுக்கு பார்சல் கந்தோர் என்றும், ரயில்வே ஸ்டேஷனுக்கு, புகையிரத நிலையம் என்றும் எழுதுகின்றனர். சிற்சில இடங்களில் தமிழ்மொழி கொலை செய்யப்படுகிறது இதை நான் கண்டு மிக்க ஆத்திரமடைந்தேன். இலங்கையில் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பிரயாணம் செல்ல வேண்டுமாயின், இங்கு சொல்வதுபோல் ஊருக்குப் போகிறேன் என்று சொல்லுதல் கூடாது. ஊருக்கு என்றால் இந்தியாவிற்கு என்று பொருள்படும். ஆகவே, பயணம் போகிறேன், தோட்டம் போகிறேன் என்று சொல்லுதல் வேண்டும், மேலும் பூவன் வாழையை புளி வாழை என்றும், ரஸ்தாளி வாழையை பூவாழை என்றும், ஆரஞ்சுப் பழத்தை, தோடாம்பழம் என்றும் எலுமிச்சம்பழத்தை டேசிக்காய் என்றும், மிளகாயை கொச்சிக்காய் என்றும் கூறுகின்றனர். மேல்நாட்டுச் சாமான்கள் அங்கு மலிவாகக் கிடைக்கின்றன. செல்வமான அரசாங்கமாதலால், எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் சம்பளம் அதிகம். ஆகவே அவர்கள் தரமும் உயர்ந்து காணப்படுகிறது. அங்கு வழங்குவது சதக்கணக்குதான். 100 சதம் கொண்டது ஒரு ரூபாய்.

இலங்கையின் உள்ள தோட்டங்களின் பெயர் தமிழில் ஒன்றாகவும், ஆங்கிலத்தில் வேறொன்றாகவும் இருக்கும் உதாரணம்:

தமிழ்ப்பெயர் — ஆங்கிலப்பெயர்

1. பச்சை பங்களாதோட்டம் - St. George Estate
2. ரசாவந்தை தோட்டம் - Raxawa Estate
3. அப்பச்சத் தோட்டம் - Torrington Estate
4. மல்லியப்பூ தோட்டம் - Eton Estate
5. பசுமலை - Hob Brook
6. ஈயாப்பத்தை தோட்டம் - Kella Group

முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்களை சுமார் 25நாட்களுக்குள் பார்தது முடிந்தபிறகு கடைசியாக கொழும்பிற்கு வந்தேன். கொழும்பு நம் இந்தியா போன்று உஷ்ணமான இடம். அங்கு மலையே கிடையா. இது

ஓர் துறைமுகப்பட்டிணம். இங்கு மிருகக்காட்சி சாலை, பொருட் காட்சி சாலை, துறைமுகம், கடற்கரை ஆகிய இடங்கள் பார்க்கத்தக்கவை. இவற்றில் ஈண்டு குறிப்பிடத்தக்கது மிருகக் காட்சிசாலையாகும். நகருக்குள் பிரயாண வசதிக்காக இரண்டு அடுக்கு மோட்டாரும், டிராம் வண்டியும் உள. மிருகக்காட்சிசாலையில் எல்லாவித மிருகங்களும், பட்சியினங்களும் உள. Sea Street, Main Street என்பவை நீண்ட கடைத்தெரு. அரசாங்க அலுவலகங்கள், நீதிமன்றம் ஆகியவை வானளாவிய கட்டிடங்கள், இரண்டு நாட்கள் அங்கு தங்கிய பிறகு இந்தியா பயணமானேன்.

இலங்கைநாடும் நமது நாட்டைப் போல் குடியாட்சியாக விளங்குகிறது. இங்கு M. L. A., M. P. ஆகிய பிரதிநிதிகள் இருப்பதுபோல் இரு பிரிவுகளாக இராமல் M. P. என்ற ஒரே பிரிவுள்ள மக்கள்மன்ற உறுப்பினர் இருக்கின்றனர். M. P. என்பது (Member of Parliment) மக்கள் மன்ற உறுப்பினர் என்பது பொருள்.

இரவு 7மணிக்கு கொழும்பிலிருந்தும் இந்தியாவிற்குப் பயணமானேன். எனக்கு துணையாக போல்காவலை என்ற புகையிலையம்வரை நண்பர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் துணையாகவந்து, இரவிற்குவேண்டிய ஆகாரம் முதலியவற்றை வாங்கிக்கொடுத்து விடைபெற்றுச் சென்றூர். மறுநாட் காலை 4½மணிக்குப் புகைவண்டி தலைமன்னாரை அடைந்தது. முதலில் இலங்கை நாணயத்திற்கு இந்திய நாணயம் மாற்றிக்கொண்டு, சாமான்கள் சோதிப்பவர்களிடம் அனுப்பப்பட்டு, சோதிக்கப்பட்டேன். என்னிடம் அதிகமாகப் புதிய சாமான்கள் இல்லையாதலால் சீக்கிரம் அனுப்பி விட்டனர் நான் அதிகப் பணம் கொண்டுவந்துள்ளேனு என்று நான் அணிந்திருக்கும் உடைகளைப் பரிசோதித்தனர். எனது Pass Portஐப் பார்த்து ஆசிரியர் என்று தெரிந்ததும் அவ்வளவு அதிகமாகப் பரிசோதிக்கவில்லை. ஆசிரியர், மாணவர்கள் ஆகியவர்களை அவ்வளவாக சோதிப்பதில்லை. சுமார் காலை 6மணிக்குக் கப்பலுக்குள் சென்றேன் இலங்கை போலீஸாரால் எனது Pass Port சோதிக்கப்பட்டது. காரணம் அதில் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் திரும்பிவிட்டேனு என்பதற்குத்தான். சோதித்து முத்திரையிடுகின்றனர். சுமார் 7 மணிக்கு கப்பல் புறப்பட்டது. இரண்டுமணி நேரத்தில் இக்கரை (தனுஷ்கோடி) அடைந்தது. அடைந்ததும் முதல் இரண்டு வகுப்புகள் பரிசோதனை முடிந்ததும் மூன்றும்வகுப்பு பரிசோதனை நடைபெறுகிறது. கப்பலைவிட்டு இறங்கியதும் நேரே சோதனைசெய்யப்படும் கொட்டகைக்கு வரவேண்டும். தப்பித்துக்கொண்டு போகாமல் இருக்க சுற்றி போலீஸார் நிற்கின்றனர். எனது சாமான்கள் பரிசோதிக்கப்பட்டன. புதிய சாமான்கள் இருப்பின் சுங்கம் வரி விதிக்கின்றனர். சோதனை முடிந்து வெளியேவர 2மணிநேரம் ஆயிற்று புகைவண்டி தயாராக இருந்தது. பகல் 1மணிக்குப் புகைவண்டி புறப்பட்டு, இரவு 8 மணிக்கு திருச்சியை அடைந்தேன்.

இலங்கையில் எனது அண்ணரும், நண்பர்களும் இருந்ததால் உணவுச் செலவு ஏற்படவில்லை. போக்குவரவு செலவுமட்டும் சுமார் ரூ. 75—0—0 ஆயிற்று. மாணவர்களாகிய நீங்களும் இலங்கை சென்று, அந்நாட்டு வளம் ஆட்சி, இயற்கைக்காட்சி முதலியவற்றைக்கண்டு வாருங்கள். எனக்கு உதவியளித்த இலங்கை நண்பர்களனைவருக்கும் எனது நன்றி.

கும்மிப் பாட்டு.

வித்வான் S. சோமசுந்தரம் M. A. L. T.,
தலைமை ஆசிரியர்.

(1) வாருங்கள் வாருங்கள் தோழிப்பெண்காள் நாம்
வளைந்து கும்மி அடிப்போமே
தேருங்கள் தேருங்கள் சொல்லுவதை இப்போ
தெளிந்து கும்மி அடிப்போமே
புத்தனும்பட்டி என்ற ஊரில் நன்கு
மெத்தப் படித்தவர் அங்குண்டு
வித்தகர் வாழும் இடமதுவாம் வெளி
விட்டுச் சொல்லுகிறேன் இப்பொழுதே

(2) நல் வளம் பெற்ற நாட்டு ஊராம் அங்கே
நாகரீகம் மிகக் காணுபாயடி
சொல்லற்கரிய நல்தோப்பு உண்டே அதில்
வெல்லற்கரிய பல் தெய்வம் உண்டு
ஆறுகள் சுற்றிய ஊரேயது நல்
பேறுகள் பெற்ற கிராமமடி
சேறுகள் கொண்ட வயல்களடி எங்கும்
செழித்துக் காண்பதைப் பாருங்கடி

(3) வேளாளர் வாழ்ந்திடும் அவ்வூரில் நல்ல
தாளாற்றித் தந்த பொருளுடனே
வாழ்கின்றார் எல்லோரும் போற்றிடவே இப்போ
கேளுங்கள் சொல்கிறேன் அவர்சரிதை

அறங்கள் அனைத்தையும் செய்து பார்த்தார்
அன்ன தானமும் நன்குசெய்து பார்த்தார்
விரதம் அனைத்தும் இருந்துபார்த்தார் அவை
வேடங்கள் என்றே முடிவு செய்தார்

(4) மூக்கப் பிள்ளையெனப் பெயர் உடையாரவர்
முத்தியப் பிள்ளை மகனுமாவார்
ஊக்கம் நிரம்பிய அவரன்னை நல்ல
உத்தம குணமுள்ள சின்னத்தம்மாள்
வறிய குடும்பம தாகையினால் அந்த
வளமுள்ள தங்கள் மகனுக்குமே
போதிய கல்விதனை போற்றியே ஆங்கு
போதிக்க மாட்டாது இருந்துவிட்டார்

(5) ஈழநாட்டிற்கவர் ஏகினார் சில காலம்
இருந்து வந்தாரங்கு வேலைசெய்து
மீளமலேயாவைப் போய்ச் சேர்ந்தார் மேலும்
கூலியாய் அங்கே உழைத்து வந்தார்
வெள்ளை மலர்மகள் விரும்பாது அவரையே
நல்ல பொருள்மகளும் மணந்து விட்டாள்
பள்ளிக்குச் சென்று பயிலாது விட்டாலும்
பாங்கான குணம் பெற்ற அறிஞனடி

(6) தோட்டங்கள் வாங்கினார் துரவுகள் தோண்டினார்
தூயசெல்வம் பெற்று வாழ்ந்து வந்தார்
தேட்டமுடனே அவர் வீடு திரும்பியே
தெரிந்திட்ட தங்கள் இனத்திலுள்ளே
வாழ்ந்திட்ட பெண்ணுண்டு அதன்பெயர் தன்னையே
வகையுடன் கேளுங்கள் தோழிகளே
காழ்ப்பு இல்லாத பெண்ணுமாகும் நற்பெயர்
கண்ணிய மானதோர் மாரியாயி

(7) மக்களுண் டம்மைக்கு மாய்ந்திட்டார் சிலபேர்
தங்க ஒருவரே தங்கினாராம்
பக்க பலமுண்டு பாரினில் அவர்பெயர்
பண்புள்ள காந்தி மகனுமாவார்

பக்கவர் யாருமே பார்த்திட்டார் மகனை
பணிவுள்ள ஆளாக ஆவானென்றே
திக்கனைத்தும் கேட்க சொல்லிவிட்டார் அவர்
திகழ்கின்றார் மூத்த மகனாக

(8) அம்மை இறக்கவே அதன் பின்னாரவரும்
அடுத்தொரு மங்கையை மணந்து கொண்டார்
செம்மையான அந்தபெண்ணின் பெயர்தன்னை
செல்லம்மாள் என்றே நான் செப்புகின்றேன்
தோளுக்குத் தோளாக அம்மையார் நின்றிப்போ
தொலையாத நல்லறஞ் செய்துவர
நாளுக்குநாள் இதைக் கண்ணாரக் கண்டு
நல்ல காட்சியென்றே களிப்புறுவேன்

(9) மற்ற செல்வங்களைப் போலவே அம்மையார்
மாண்புறு மக்கள் பேறும் படைத்தார்
உற்ற அவர் பெயர்களைச் சொல்கிறேன்
உண்மையுடன் நீங்கள் கேளுங்கடி
உண்மை தேசத்தொண்டர் நம்அண்ண லாமவ
தண்மை நிறைந்த குணாளனடி
வெண்மை நிறைந்த உள்ளத்தவர் வெளி
வேடங்கள் என்றும் அறியாரடி

(10) தேசியப் பெயர்களே பெருமை என்றவர்
பேசியே பேர்வைத்தார் மக்களுக்கு
காசினியில் அவர் எண்ணம் வளர்ந்தது
கண்டவர் மருளவே எங்குமடி
மூத்தமகள்பெயர் கல்ல சுயராஜியம்
மொழிந்து வாரேன் இப்போ கேளுங்கடி
ஒத்தஆண் மக்கள் மூவரடி இன்றும்
இளைய பெண்ணின் பெயர் சுதந்திரமாம்

(11) எல்லாச் செல்வமும் வாய்க்கப் பெற்றவர்
நல்லறங்கொண்ட நம் மூக்கப்பிள்ளை
தொல்லறங்கள் பல செய்துவிட்டார் அவை
நல்லதல்ல வென்றே விட்டுவிட்டார்

சொல்லரிய சோற்றறம் பலவும் மற்ற
வேற்று அறங்களும் செய்து பார்த்தார்
வெல்லற்கரிய சுயநலத்தை இங்ஙன்
வென்று விட்டார் இவர் தோழிகளே

(12) செய்த அறங்கள் அனைத்தையுமே சுத்த
பொய்யென்றே அவர் உணர்ந்து விட்டார்
எய்திட்ட அவை அத்தனையும் என்றுமே
நிற்பவை அல்லவென் றுணர்ந்து கொண்டார்
நிலைத்த அறம் நல்ல கல்வி என்றே நன்கு
நினைத்து விட்டது அவர் நெஞ்சம்
கலைக்க முடியாது அவர் நெஞ்சை யாரும்
காணமுடியாது தோழிப் பெண்காள்

(13) சொந்தப் பள்ளியொன்றை தோற்றுவித்தார் அது
தோன்றிய கதையைச் சொல்லி வாரேன்
எந்த ஊராரும் கேட்டிடவே அது
எழிலுடை நாற்பத்து ஏழாண்டில்
வந்த ஜூன் இருபத்து ஏழாம் நாள்
வளங் கொண்ட பள்ளியை ஆக்குவித்தார்
சொந்த ஊராரும் வியந்திடவே இளஞ்
சூரியன் போல துலங்குதடி

(14) தோற்றுவித்தாரவர் நடுநிலைப் பள்ளியை
சொல்லி வாரேன் இப்போ கேட்பாயடி
வேற்று நாட்டார் போற்றும் வீரனும் நேருவின்
வீரிய நாமத்தைச் சூட்டினாரே
போற்றிப் புகழெய்த விரும்பாரடி என்றும்
நாற்றிசை இசையையும் நாடாரடி
மாற்றுயர் பொன்னவர் மாசற்ற தங்கமே
மார்தட்டிச் சொல்கிறேன் கேளும்பொண்ணே

(15) திட்டங்கள் தீட்டினர் நற்சட்டங்கள் நாட்டினர்
திடமுடனே அது திகழவேதான்
கட்டடங்கள் கட்டி நற்கால்களைத் தூக்கினர்
கண்டவர் மருளவே தோழிப்பெண்ணே

நாவலர் வந்தனர் பாவலர் வந்தனர்
நலமுடன் பள்ளியைப் போற்றிடவே
காவலர் வந்தனர் கண்ணியமுடன் அதை
காத்து வளர்த்து இருந்திடவே

(16) இத்தனை நன்றாய்ப் பார்த்திட்டார் மெத்தவே
அழித்திட முயன்றார்கள் சிலபேர்
தத்தி வளரும் இக்கல்வியாம் கோயிலை
சாடி அழித்து ஒழித்திடவே
புல்லுருவி போன்று அவரெல்லாம் வஞ்சக
வார்த்தையைச் சொல்லியே பார்த்தாரடி
எல்லா சூழ்ச்சியும் எல்லின் முன் இருட்டெனவே
வெல்லாது வீழ்ந்து மடிந்திடவே

(17) கூட்டி விட்டாரவர் கூட்டங்களை அங்கு
நாட்டிவிட்டார் நாட்டுச் சட்டங்களை
போட்டிகளுமெங்கு செய்து விட்டார் தீய
பொய்யான வார்த்தைகள் பேசிவிட்டார்
பொறாமை எனும் குளம் ஒன்று உண்டு
பொல்லாத குணமடி தோழிப்பெண்ணே
வெறுளாக ஆக்கிடும் வெற்றுரை அதுஇல்லையடி
வேண்டியே கேட்டிடு தோழிப் பெண்ணே

(18) காந்திமகான் சொன்ன வார்த்தைகளை என்றும்
ஏந்தி வளர்ப்பவர் பிள்ளையடி
சாந்த குணத்தன் ஆசையால் அவைகளைச்
சத்தியம் கொண்டு எதிர்த்தாரடி
மெய்யிற்கு முன்னே பொய்யான உரையெல்லாம்
புகைந்து மறையுமே எப்பொழுதும்
பையிற்கு முன்னே படமெனவே அவை
பதைத்து ஒழிந்தன நாளடைவில்

(19) தீண்டாமை என்னும் கொடிய பேயையென்றும்
வேண்டாது ஓட்டிய வள்ளலவர்
தீண்டாத மக்களைத் தெருவில் அலைக்கவே
வேண்டா மனத்தர் அவருமடி

எண்ணில்லாத மக்கள் இந்த நற்பள்ளியில்
கண்ணான கல்வியைப் பெற்று வாரார்
திண்ணமாய் அங்கேநல் வண்ண சமாசம்
திகழ்ந்து விளங்கவே காண்பாயடி

(20) அம்மக்கள் தங்கி அமைவுடன் கற்கவே
ஆக்கித் தந்துள்ளாரொரு உணவு விடுதி
செம்மையாக இளைஞர் செல்வக் கல்வியை
இம்மையின் நல்ல திறவுகோலை
கற்று வருகின்றார்கள் கண்ணிய முடனே
பெற்று வருகின்றார் பெரிய கல்வியை
எற்றுக்கும் உதவார் எற்ற நற்கல்வியை
பெற்று வருவது பெருவியப்பே

(21) ஆசிரியர் விடுதியும் அங்கே உண்டுநல்ல
அமைவுடன் அவர்கள் இருந்து வாரார்
பேசிய அவர்களின் பெருந்தொண்டை மகிழ்வோடு
பிறப்புரிமையாகச் செய்து வாரார்
இன்னுமே வேண்டிய எழில்களெல்லாம் அங்கே
இட்டமுடன் செய்ய எண்ணி வாரார்
நன்னயமாகவே நாமுமே சென்று அங்கே
பொன்னான பள்ளியைப் பார்த்துவருவமே

(2) உயர்நிலைப் பள்ளியாய் உயர்ந்தமே காண்பதை
உற்று நோக்கிடுவாய் தோழிப்பெண்ணே
நயமாக மரங்கள் நாட்டி இருப்பதை
நல்ல கண்ணோடு பார் தோழிப்பெண்ணே
சோதரர் அங்கு சொன்னத் திடலிலே
ஆதரவாக விளையாடுவதைப் பார்
சோதரியும் அங்கே ஏதமின்றி வேறு
பேதமின்றி விளையாடுவதைப் பார்

(23) "ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்
கிரவினின் இளிவந்த தில்லை" யென்று
ஆவியன்ன மொழிப்படியே யவர் எவர்
கண்ணும் சென்று இரப்பதில்லை என்று

நற்குணம் பொற்குணம் தன்னிடம் பொலிவுற
வாழ்பவர் அவரென் றடிப்பாயடி
பெற்ற குணங்களில் எல்லாம் பெரியதோர்
குணமி தென்று அடிப்பாயடி

(24) தொண்டு செய்வதில் விண்டு போகாரவர்
விளம்பரமே வேண்டா விருத்தனடி
எண்டிசைப் புகழினை எப்போதும் வேண்டாது
போனாலும் தான்வந்து புகுமேயடி
பேசிய நற்குணம் பெருமையாம் குணமுடை
ஏசுநாதர் சொன்ன வேதனடி
பூசிய நறுமணம் பொலிவுற வீசிடும்
புத்தனும் பட்டி காந்தியடி

(25) கல்வியாம் கோயிலை வளர்த்துமே அதையொன்றும்
காப்பாற்ற மற்றவர் வந்துவிட்டால்
விலையாக எண்ணாது வேற்று மனமின்றி
விருப்பமுடனே கொடுத்து விட்டால்
நலமாக எண்ணியே நன்மையுடன் ஏற்று
பலமாகப் பள்ளியை ஆக்கிடுவார்
சிலவான பெரியார்கள் செறிந்த மனதுடன்
செழிப்பாகக் கொடுத்தார்கள் நன்கொடையே

(26) வாழ்க மூக்கப்பிள்ளை என்றே வளைந்து
வளைந்து கும்மி அடியுங்கடி
சூழ்க இன்பம் அவருக்கே என்று
சொன்னபடி கும்மி அடியுங்கடி
வீழ்க எதிர்ப்பெல்லாம் என்று விரைந்து
விரைந்து கும்மி அடியுங்கடி
போழ்க அறியாமை அங்கேயென்று பாடி
புகழ்ந்து கும்மி அடியுங்கடி

(27) நேரு உயர்நிலைப் பள்ளி. எந்நாளுமே
நிலைத்து நிற்கவென் றடியுங்கடி
வீறு கொண்டேயது விளங்கித் திரையுடை
வேலையைப் போலத் திரண்டு வரும்;

நல்லபேறு பெற்றே வாழுமென்று நீங்கள்
நயமாகச் சொல்லி அடியுங்கடி
செல்லல் ஒழிந்திட வேண்டுமென்றே அங்கு
செப்பி அடிப்பாயே தோழிப் பெண்ணே

(28) சத்தியம் வாழும் என்றடியுங்கடி அது
நித்தியப் பொருளென்று அடியுங்கடி
எத்திசையும் மணக்க என்றுமே நிலைத்து
நிற்குமென்று நீங்கள் அடியுங்கடி
கல்வியே என்றும் கரையிலாச் செல்வமென்னும்
நற்கருத்தைச் சொல்லி அடியுங்கடி
வெல்லும் வேறுயுதம் வேறொன்றும் வேண்டுவ
தில்லையென்றே நீங்கள் அடியுங்கடி

கல்வியும் கைத்தொழிலும்

V. ஜெயவீரன்
ஓவிய ஆசிரியர்

புத்தகப் பூச்சியாகிப் புழுவினைப்
[போலுமாகி
வித்தக விவேகமெல்லாம் வேருடன்
[கற்றுணர்ந்து
மத்தக மீதமர்ந்த மன்னருக்
[கொப்பவுன்னி
எத்தக தொழிலுமின்றி
எங்கிட்டோர் எனையோரே!

இது என்னால் இயற்றப்பட்டது. என் வழக்கில் நான் உங்களுக்கு கீழ் கண்ட விஷயத்தைச் சொல்கிறேன். குற்றங் களைந்து குணத்தைக் கொள்வீர்களென்று நம்புகிறேன்.

முற்காலக் கல்வியை யான் சிறிது இங்கு எடுத்து நினைவூட்ட விரும்புகிறேன். நமக்குத்தான் பண்டைய கல்விமுறை, பழக்கவழக்கங்கள் ஆடை அணிகலன்கள் ஆகிய யாவற்றிலும் இதுசமயம் பற்றற்று விடுத்து புது நாகரீக மோஸ்தர்களை உடனுக்குடன் கவனித்து அதன் படி நடந்துகொள்ள முற்பட்டு வருகிறோம். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற வாக்குப் பலத்தைத் ஒருமுறைக்குப் பன்முறை பிறரிடம் சொல்லிச் சொல்லி நாகரீகக் கோட்டையைப் போட்டா போட்டி கொண்டு முற்றுகையிட்டு வரும் இந்நாளில் நான் பழங்கதையை

எடுத்துச் சொல்லுவது உங்கட்கு ஒருவிதமாகத் தோன்றினாலும் "பசித்தவன் பழைய கணக்குகளைப் பார்ப்பான்" என்றபடி என்போல் ஏக்கங்கொண்டவர்கள் ஒரு சிலராவது இதனை வரவேற்பர் என்று நம்புகிறேன். பசித்தவனுக்குப் புசிக்க பழைய சோறும், பறிகொடுத்தவனுக்குப் பார்க்க பழைய கணக்கும் கிடைத்தால் எவ்வளவு மகிழ்ச்சி கிடைக்குமோ அதுபோல எனக்கு இப்பத்திரிகை வாயிலாகவாவது என் உள்ளக் கிடக்கையைக் காட்ட வழிகோலிய இப்பள்ளி நிர்வாகிகளுக்கு என் மனமொப்பிய வணக்கம் உரித்தாக வேண்டுகிறேன்.

பண்டைய காலக் கல்வி முறை "குருகுல வாசம்" எனும்படியான முறையில் நடைபெற்று வந்தது. பெற்றோர்கள தங்கள் மக்களை தக்க குரு, அல்லது ஆசிரியரிடம விடுத்து சிந்தை, சொல், செயல் ஆகிய திரிகரணங்களும் சுத்தி செய்யப் பயிற்சியளிக்க வேண்டினர். அதனபடியே ஆசிரியர்களும் தங்களிடம் பயிற்சிக்கு வந்துள்ள மக்களை (மாணவ, மாணவிகள்) தம்முடனேயே வைத்து முன் சொன்ன எல்லாவித வழிகளையும் செம்மைபடுத்திச் சீர்செய்து மக்களை மனிதர்களாக்கிஅவ்வப் பருவ காலத்தில் பெற்றோரிடம் விடுவித்தனர். அதன் பயனைத்தான் நம் சுதந்திர நாட்டுச் சிற்பி மகாத்மா காந்தியடிகளும், ஒப்புயர்வற்ற நேருவும், அஞ்சா நெஞ்சம் படைத்த பட்டேலும், மற்றுமுள்ள நம்நாட்டுத் தலைவர்களும் ஆக்கப்பட்டு செயற்கரிய பணியாற்றித் திகழுகின்றனர் அன்றோ! நாள் முழுமையும் ஓய்வு ஒழிவின்றி தங்கள் நலன்களையும் கருதாது உடலுக்கும் உள்ளத்திற்கும் வேலை கொடுத்து செவ்வையாகவும் திறம்படவும் உழைத்து வரும் உத்தமர்கள் நம் நாட்டுத் தலைவர்களைக் கூர்ந்து கவனித்தும், அவர்களது செயல்களையும், அவர்களது சொற்களையும் ஆராய்ந்து பார்த்தோமானால் இளமை பருவ முதலே அன்னோர்கள் எவ்வாறு கல்வி கற்று பக்குவமடைந்து வந்தனர் என்பதை நன்கு அறியலாம். ஆசானுடன் மாணவன் எக்காலமும உறைந்து உண்டு உழைத்து உறங்கியும் இருந்ததினால் ஆசானுடைய குண விசேஷங்கள், கொள்கைகள் யாவும் பின்பற்றி அதனால் நல்ல பண்புள்ளவர்களாகப் பினனர் செழுமையுறுகின்றனர். மற்றும் காலப் போக்கில் அவ்வப்போது உணடாகும் நன்மை தீமைகள் யாவும் மாணவன் பரிசோதனை வாயிலாக நேரிடையாகவே ஆசானிடம அறிந்துகொள்வதினால் மாணவர்கள பிற்காலத்தில் நல்லவை பற்றி அல்லவை தள்ளி உடலுறுதிகொண்டு உழைக்கவும் வகைபெற்றுள்ளனர். ஆசிரியரிடம் மாணவன் ஆயகலைகள் அறுபத்து நான்கும் கற்றுணர்ந்தாலும் ஏய உணர்விக்கும் என்னம்மையாகிய தெய்வத்தினிடமும் "தவமது செய்தே பெற்றெடுத்தவன் முதற் பிதா, தனை வளர்த்தவனொரு பிதா, தயையாக வித்தையைச் சாற்றினவ

ஒரு பிதா - சார்ந்த சற்குருவொரு பிதா" என்பதும், " ஆதுலர்க்கன்னங் கொடுத்தவர்களே தெய்வம் அன்பான மாணுக்கருக்கரிய குருவே தெய்வம்" என்பதும போன்று குரு, பெற்றோர் ஆகியோரிடமும் பக்திகொண்டு புத்தியை விளக்கும் நூல்களை நன்கு கசடறக் கற்று-கற்றபின் அதற்குத்தக் நின்று அமைதியாக பேரும் புகழும் பெற்றுள்ளனர். அறிவு விளக்கப்பயிற்சியுடன் தொழில் சம்மந்தமான பயிற்சிகளையும் உடனடியாகவே பயின்று வந்ததினல் உரிய பருவ காலத்தில்—தொழிலுக்கென ஏங்காது தன் கைப்பொருளையும் தன் னுயுதத்தையும்கொண்டு பாடுபட்டு உழைத்துப் பொருளீட்டி வாழ்ந்து வந்துள்ளனர். நெசவு-பாய்முடைதல் நூல் நூற்றல் - ஓவியம இட்டுதல்-சிற்ப மெய்தல் போன்ற கைத்தொழில்களிலும் தக்க பயிற்சி பெற்று பிற்காலத்தில் வல்லமையுள்ள வீரர்களாகவும் விளங்கியுள்ளனர். இதுபோன்ற மன அறிவு கிடைப்பதோடுகூட தொழிலறிவும் கிடைப்பதினுல் அவர்களின் வாழ்க்கையில் "வேலை தேடும் படலம்" இல்லாததுடன் "No Vaccancy" என்ற அறிவிப்பும் அவர்களை மயக்கமுறச் செய்ய ஏதுவில்லை. சொல்லறிவினல் பயனடைதலைவிட செயலறிவினல் பயனடைதல் மிக்க நலமாகும் - சுலபமுமாகும். இத்தகைய வழக்கப்படி நம் முன்னேர்கள் பொய் புறங் கூறுது கள்ளங் கபடமில்லாது சீரும் சிறப்புமுற்று பல்காலும் நல் வாழ்வு வாழ்ந்தும், மாத மும்மாரி பெய்து இயற்கை வளம் பெற்றும் கட்டிளம் காளைபோன்ற உடலுறுதி பெற்றுஓயாதுஉழைத்தும் வாழ்ந்து வந்துள்ளனர் என்றும் நூல்வாயிலாகவும் கண்கூடாகவும் கண்டு அறிகின்றோம் அல்லவா?

தற்காலக்கல்வி சென்றசில ஆண்டுகளாக தொழிற்கல்வி சம்பந்தப்படாமல் வெறும் "எட்டுச் சுரக்கா" யாக நடந்து வருகின்றதையும் நாம் அறிகின்றோம். டிப்டாப்பாக காலை 9அல்லது 10மணிக்குப்பள்ளிக்குச்சென்று மாலை 4மணி அல்லது 4½மணி அளவுக்கு வீட்டுக்குத் திரும்புவதும், இதனிடையில் பகல் வேளையில் ஒரு மணி அவகாசம் பகலுணவுக்காக ஓய்வு விடுத்தும் கல்வி கற்பிக்கப்படுகிறது. இங்ஙனம் ஐந்து அல்லது 5½மணி அளவுக்குப் பள்ளி நடந்தேறினும் அதில் கற்பிக்கப்படும் பாடமும் பலவகையாக இருத்தலின் தொழிற் கல்வி சம்பந்தப்பட்ட பாடங்கள் நடத்தப்படுவது மிகமிகக் குறைந்த கால அளவேயாகும். அங்ஙனம் மிகக் குறைந்தகால அளவில் நடத்தப்படும் தொழிற்கல்வியிலோ, ஆசிரியர்கள் தக்க போதிய பயிற்சி மேற்குறித்த தொழிற்பாடத்தில் இல்லாமையினலும், அரசாங்கம் மேற்குறித்த பாடத் திட்டத்தை செவ்வையாக நடைபெறப் போதிய அவகாசமும், உபகரணங்களும், கண்டிப்பும் அளிக்கப்படாததினலும், மாணவர்கள் மேற்கூறியபாடத்தில் தக்க கவனம் செலுத்தாது 'ஏதோ வந்தோம் போனேம்' என்ற அசிரத்தையாக

இருந்து வருகின்றனர். இதன்பயனுக மாணவர்கள் தங்கள் சக்திக்கேற்ற வரை பள்ளியில் படித்துவிட்டுப்பின் யாதொரு தொழிலுமின்றி செய்வகை யறியாது துன்புறுகின்றனர். இப் படிப்பட்ட வேலையில்லாத் திண்டாட் டத்தில் இளைஞர்கள் முழுச்சோம் பேறிகளாகியும், தங்களின் அறிவை வெவ்வேறு தீய செயல்களில் உப யோகித்தும், தங்கள் வாழ்க்கையை நீடூழிகாலம் துன்பத்திற்குள்ளாக்கிய தோடன்றியும் தங்கள் பெற்றோர், உறவினர்களின் நற்புகழுக்கும் பங்கம் அடையச் செய்கின்றனர். இஃதன்றியும் சில இளைஞர்கள் தங் கள் குடும்ப நிர்வாக காரியங்களைக் கவனியாது தங்களுக்குத்தேவையற்ற ஆடம்பரச் செலவுகளுக்குப் பெற் றோர்களிடமிருந்து பல வழிகளிலும பணம் பெற்று விரயம் செய்யவும் செய்கின்றனர். பெற்றோர்கள் சில ரும் தங்கள் அருமை மக்களின் பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய ஆதாவுதேடாமல் தங்களிடமிருக்கும் சொற்ப பொருளையும் மக்களின பொருட்டு திருமணம் செய்வித்தல், தனித்த குடும்பம் நடத்த ஏற்பாடு செய்தல், வேலைதேடும் வகையில் செலவு செய்தல் போன்ற இன்னும் பிறவுமுள்ள பலவழிகளில் செலவு செய்துவிட்டு இறுதியில் "வாய்த் தவிடும்போய் அடுப்பிலுள்ள நெருப் பையும் இழந்த" சோகக் கட்டத்தை யே எட்டிப் பிடிக்கின்றனர். நம் நாட்டின்கண் இதுசமயம்மேற்கூறிய அவதியுற்ற நிலைமை அநேகமாக எல்லா நடுத்தரக் குடும்பங்களுக்கும் இருக்குமென்று எண்ணவேண்டியுள் ளது. முன்னர் சுதந்தரமடையாத நம் நாட்டில் வெள்ளையர் ஆட்சியின் போது அவர்கள் இதுபோன்ற கல்வித்திட்டத்தை அமைத்து நம்மை ஏங்கவைத்தார் என்று சுதந்திரமடைந் துள்ள இந்நாளில் நாம்பேசிப்போவ தோடன்றி இதுகாறும் செயல்முறை யில் சீர்திருத்தக் கல்வித்திட்டத்தில் தொழிற்கல்விக்குறிய கண்டிப்பு ஒன் றும் காணுது இருப்பது முன்னையை விட இப்போது அதிகம் வருந்த வேண்டியுளது அன்றோ!

இருப்பினும் சென்ற சில மாதங்க ளாக நம்நாட்டில், நம் மாகாணத்தில் தொழிற்கல்வி திட்டத்தின் வாடைக் காற்று ஆரம்பமாகியுள்ளது குறித்து மகிழ்ச்சியடையவேண்டியதே - ஆயி னும் அடி காற்று தென்றலாக மாறி குறுக்கு நின்று தடுக்கும் பலமலைகளை யும் தாண்டி புயல்போன்று வீசுங் காலமே நம்முடைய வறுமை, பிணி, தொழிலின்மை முதலானவற்றை களைந்தெறியும் நற்காலமாகும். அதற் குரிய சக்தியைத் திரட்ட ஆரம்பித்து அஸ்திவாரக்கல் நாட்டிய கர்த்தா நம் தலைவர் ராஜாஜி அவர்களை நாம் என்றும் மறக்க முடியாது அன்றோ! ஒருவேளைப் பள்ளிக் கல்வியும் மறு வேளைத் தொழிற் கல்வியும் பயிற்சி பெற ஏற்படுத்தப்பட்டிருக்கும் இத் திட்டம் மிக நன்மை பயக்குமென்று அம் அடி திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளுக்கும்அமுலுக்குக்கொண்டு

வந்து தக்க ஆசிரியர்கள் மூலம் பள்ளியிலேயே தொழிற் பயிற்சி யளிக்க ஆதரவு செய்துவிட்டார்களானல் அதனல் ஏற்படும் பயன் மிக மிக அதிகமே என்பது உறுதியாகும்.

அரசாங்கம் நமக்கு ஆதரவு செய்வது ஒருபுறமிருக்க மாணவர்கள் பள்ளியில் பயிலுங் காலத்திலேயே ஓய்வு நேரங்களில் பாய் முடைதல், விசிறி செய்தல், கம்பள நெசவு, பொம்மை செய்தல், நூல்நூற்றல், புத்தகம் தைத்தல், மரவேலை செய்தல், தோட்டவேலை செய்தல் போன்ற சாதாரண உபதொழில்களைக் கற்று வருவார்களானல் அதனல் பிற்காலத்தில் கூடிய தொழில்களில் ஒன்றிலாவது நல்ல பயிற்சியை எளிதில் பெற்று பொருளீட்ட முடியும். மற்றும் பள்ளியில் பயிலுங்காலத்தில் செய்யும் இக்த உபதொழில் ஒரு சிறிதளவுபொருளும் வருமானமாக்க முடியும். அதுகொண்டு தங்களது அன்றாட தேவைகளில் ஓரளவு ஈடு செய்துகொள்ளலாமல்லவா? மற்றும் தொழில் கல்வியின் துணையால் நமது உடல் வலிமைபெற்று உரமெய்தவும், பலருடன் இதன் பயனைப் பேசி மக்களின் கருததுக்களை அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

புஜங்கள் இரண்டும் பருத்தறியாப்
  புண்ணியவான்கள் ஒருகோடி
பூர்விய கதைகள் பேசியே
  பொழுதைப்போக்குவோர் ஒருகோடி
வித்தகம் புலமையில்லாது
  *விண்டுகிடப்பவர் ஒரு கோடி
அத்தனையும் இவ்வுலகின்கண்
  அறிந்து நடந்தவர் ஒருசிலரே
புத்தகப் புழுவாய் இருந்திட்டோர்
  புரட்சியில் பேறு வீரர்களே!

மற்றும் நாம் உள்ளூர் கைத்தொழிலாளர்களை ஆதரித்தல மிக இன்றியமையாதனவாகும். நவநாகரீகத்தை எண்ணி அதன் வெள்ளத்தில் மூழ்கி பட்டணக்கரைக்குச் சென்று படிப்படியாக இறங்கிவிட முயற்சிக்கலாகாது. நெசவு-தோல் தைத்தல் — துணி தைத்தல்-துணி சலவை செய்தல் மரவேலை செய்தல்போன்ற தொழில்களைச் செய்யும் தொழிலாளர்கள் நம் கிராமங்களில் இருக்க அவர்களை விடுத்து நாகரீக மனப்பான்மையின் பேரில் நகரங்களுக்குச் சென்று தேவையுள்ள பொருள்களை வாங்குதல் சிறந்ததல்ல. கிராமத் தொழிலாளர்களுக்கு தற்கால பாணியில் தொழில் செய்யத் தெரியாவிடினும் அவர்களுக்கு நாம் அதன் வகையை விளங்கச் சொல்லி அதன்படி செய்தல் மிக நன்மையும், கிராம முன்னேற்றமடையவும் ஏதுவாகும்.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
  யந்திரங்கள் வகுத்திடுவீரே!
கரும்பைச்சாறு பிழிந்திடுவீரே!
  கடலில் மூழ்கி நன் முத்தெடுப்பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
  ஆயிரந் தொழில் செய்திடுவீரே!
பெரும்புகழ் நுமக் கேயிசைக்கின்றேன்
  பிரமதேவன் கலையிங்குநீரே!

என்றும் இன்னும் பிற தொழில்களைப் பற்றியும் நம் பாரதியார் பாடியுள்ள கூற்று இன்பத்தைப் பயக்கின்றன வன்றோ!

பணத்தின் மகிமை

—(வை. ஜெயவீரன்)—

எதிர்பார்க்கிறோம் பணத்தை எதிர்பார்க்கிறோம்
ஏழை முதல் பணக் காரர்வரை எதிர்பார்க்கிறோம்—நாம் எதிர்பார்க்கிறோம்
—எங்கும் எதிர்பார்க்கிறோம்

(1) கோழை என்று எண்ணிடாது இந்தப் பணமே!
கோமாளி என்று எண்ணிடாது இந்தப் பணமே
காளை என்று எண்ணிடாது இந்தப் பணமே
கட்டழகன் என்று எண்ணிடாது இந்தப் பணமே. (எதிர்)

(2) திரைகடலும் ஓடவைப்ப திந்தப் பணமே
தேடித் தேடி அலைப்புவது இந்தப் பணமே
மறைமலைகள் பாடுவது இந்தப் பணமே
மன்னனைப் போல் ஆக்குவது இந்தப் பணமே (எதிர்)

(3) கோடை வெய்யில் குளிர் மழைகள் என்றும் பாராது
குதித்து குதித்து ஓடச் செய்வ திந்தப் பணமே
வாடைக் காற்று வாங்கச் செய்வ திந்தப் பணமே
வாகனங்க ளேறச் செய்வ திந்தப் பணமே (எதிர்)

(4) ஆண்டி முதல் அரசன் வரை இந்தப் பணமே
ஆச்சர்யத்தை அளிக்க வல்ல திந்தப் பணமே
தோண்டி முதல் தொட்டி வாங்குவ திந்தப் பணமே
தோடு முதல் தொங்கட்டான் வாங்க இந்தப் பணமே (எதிர்)

(5) ஓயாமல் உழைக்கச் செய்வ திந்தப் பணமே
ஓடியாடி பாடச் செய்வ திந்தப் பணமே
மாயாத ஆசை கொள்ள திந்தப் பணமே
மண்டி யிட்டுத் தவங் கிடைப்ப திந்தப் பணமே (எதிர்)

(6) நால்வரையும் ஐவரையும் இந்தப் பணமே
நடுவில் நின்று கூத் தாடச் செய்வ திந்தப் பணமே
பாலினோடு பச்சத்தண்ணீர் கலந்து விற்றாலும்
பாடிப் பாடி கொடுத்திடுவ திந்தப் பணமே (எதிர்)

(7) சைக்கிள் மோட்டார் ஏரோப்பிளேன் யாவற்றிலேயும்
சையோத்தியாய்ப் போய்வருவ திந்தப் பணமே
பையப் பையப் புகழெடுப்ப திந்தப் பணமே
பைத்தியக் காரனாக்குவதும் இந்தப் பணமே (எதிர்)

(8) பஞ்சணைகள் தேடுவதும் இந்தப் பணமே
பாவியெனப் பெயரெடுப்ப திந்தப் பணமே
கொஞ்சமேனும் ஈவிரக்க மில்லா திருப்பினும்
கொடையாளி யெனப் பெயரெடுப்ப திந்தப் பணமே (எதிர்)

(9) மஞ்சள் பவுடர் சுண்ணுவுடன் சோப்பு சீப்புமே
மகிழ்ச்சியுடன் வாங்கச் செய்வ திந்தப் பணமே
செஞ்சடையன் பார்வதியை வேண்டுவ தெல்லாம்
இந்தச் செப்பு காசு சேர்ப்பதற்கே உலகிலே யெல்லாம் (எதிர்

தொழிலாளி

★ (வை. ஜெயவீரன்)

நாட்டுக்கொரு தொழிலாளி நல்லதே செய்வான்! அவன்
வீட்டிலேயும் காட்டிலேயும் விரும்பியே செய்வான்
தோட்டம் துறவு பூங்கா வெல்லாம் அவனாலானதே;
மாட்டுக் கொட்டில் மாடி வீடும் அவனாலானதே.
சேட்டு வீட்டு சட்டையெல்லாம் அவனாலானதே;
சிவப்புத் தொப்பி டிரௌஸரெல்லாம் அவனாலானதே.
கோர்ட்டிலுள்ள மேஜை பெஞ்சு அவனாலானதே;
கொட்டகையின் சோடிப்பெல்லாம் அவனாலானதே.
சட்டிப் பானை சட்டுவமும் அவனாலானதே;
சக்கரமும் சார்ட்டு வண்டியும் அவனாலானதே.
கம்பியில்லாத் தந்தி பேசும் கைத் தொழிலும்மேதான்;
கைப்பிடித்து ஓடும் மோட்டார் வண்டியும்மேதான்,
குப்குப்பென ஓடும் புகை வண்டியுமேதான்
குர் குர் ரென ஓடும் டிராம் வண்டியுமேதான்;
சுவிட்சு போட்டால் விளக்கெரியும் வேலையும்மேதான்;
சுழன்று சுழன்று தைக்கும் தையல் மெஷினுங்கூடத்தான்
கைத்தொழிலில் ஊக்கங் கொண்ட கலைஞர்களேதான்
கண்டு பிடித்து நடத்துகின்றார் உலகில் எங்குந்தான்.

"விடுதலைக்குப் பின்...."

(அ. தியாகராசன், முன்னாள் எழுத்தாளர்.)

விடுதலைக்குப்பின் என்ற இக் கட்டுரையை எழுதுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதுபற்றி மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். விடுதலை என்ருல் என்ன? என்பதுபற்றியும் நாம் சண்டு நோக்குவோம்.

பிறருடைய அடிமைத்தனையிலிருந்து விடுபடுவதே விடுதலையாகும். விடுதலை ஒவ்வொரு நாட்டுக்கும் அவசியமாகும். நமது இந்தியா முற்காலத்தில் பல அரசர்களினுல் ஆளப்பட்டு வந்தது. பின்பு ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் குடியேறினர். அவர்கள் நம்மை அடக்கியாள முற்பட்டனர். சுமார் 150 ஆண்டுகள் நம்மை ஆண்டனர். அவர்கள் காலத்தில் தான் நாம் அடிமைகளானேம். நமது சுதந்திரத்தை இழந்தோம்; நம் உரிமைகள் எல்லாவற்றையும் இழந்தோம்

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் தான் ஆங்கிலம் கல்வித்திட்டத்தில் புகுத்தப்பட்டது. அப்போது ஆங்கிலம் கற்ருருக்கே அரசாங்க உத்யோகம் அளிக்கப்பட்டது. இதனுல் பல ஏழைகள் கல்வி கற்க முடியவில்லை. போதிய பொருள் வசதியில்லை. ஆதலால் நூற்றுக்கு பதினைந்துபேர்தான் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர் ஆங்கிலேயர்கள் இந்தியர்களிடையே கல்வியைப் பரப்ப போதிய அளவு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. ஆதலால் நம்மில் அதிகபேர் கல்வியறிவற்றவர்களாகவே இருக்கின்ருேம். நமதுநாடு அடிமையாயிருந்த அக்காலத்தில் நாம் இன்னும் பல உண்மைகளையும் இழந்திருந்தோம்.

நமதுநாட்டை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கவும், நமது உரிமைகளைப் பெறவும், சுதந்திரமாக வாழவும் பல ஆண்டுகளுக்குமுன் காந்தி, திலகர், வ. உ. சி, நேரு, படேல் போன்ற பெரியார்கள் விடுதலைப்போராட்டத்தை ஆரம்பித்தனர். பல ஆண்டுகள் விடுதலைக்காகப் போராடினர் அப்பொழுது பல தலைவர்கள் சிறையாக்கப்பட்டனர். விடுதலைக்காக அத்தலைவர்கள் அரும்பாடுபட்டனர். அவர்கள் தமது உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக இருந்தனர். தமது இரத்தத்தைச் சிந்தியாகிலும் நாட்டைக் காக்கவேண்டும் என்ற உறுதி பூண்டனர். பல ஆண்டுகள் தொடர்ந்து விடுதலைப் போராட்டம் நடத்தியதன் பயனுக நமதுநாடு சென்ற 1947-ஆம் ஆண்டு விடுதலை அடைந்தது. தற்போது நமது இந்தியா ஒரு சுதந்தர நாடு; விடுதலையடைந்துள்ள நாடு.

நம்நாட்டின் விடுதலைக்குப்பாடுபட்ட காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். இன்

னும் ஆபிரஹாம் லிங்கன், போன்ற பிற தலைவர்களும் விடுதலைக்காகப் போரிட்டு இறந்தனர். ஆனால் விடுதலை வாங்கிக்கொடுத்துவிட்டார்கள். இவர்களின் அரும்பெரும் தொண்டினால் தான் நாம் இன்று சுதந்திரவீரர்களாகத் திகழ்கின்றோம். மேலேகண்ட பெரியார்கள் இவ்வாறு தங்கள் உயிரைத் தியாகம் செய்து விடுதலைப் போராட்டம் நடத்தாவிட்டால் நாம் என்றென்றும் அடிமைத்தளையிலிருந்து விடுபட இயலாது.

நாடு விடுதலையடைந்தபின் அரசாங்கம் கவனிக்கவேண்டியவைகளில் கல்வி ஒன்றாகும். நம்நாட்டைப் பொறுத்த மட்டில் அரசாங்கம் இதில் அதிக கவனம்செலுத்தவேண்டும் ஏனெனில் கல்வியறிவு நம் மக்களிடையே மிகவும் குறைவு என்பது யாவரும் அறிந்ததே. அரசாங்கம் தற்போது இதில் சிறிது கவனம் காட்டித்தான் வருகிறது. இருந்தபோதிலும் இன்னும் அதிகம் கவனம் செலுத்தவேண்டும் நமது சென்னை மாகாணத்தில் புதிய கல்வி முறைத் திட்டம் ஒன்றை அமுலுக்குக்கொண்டு வந்துள்ளனர். இத் திட்டம் ஆரம்பப்பாடசாலைகளில் அமுலுக்குக்கொண்டு வந்துள்ளனர். இத் திட்டம் சிலவிதத்தில் நன்மையையும், பலவிதத்தில் தீமையையும் உண்டாக்குகிறது. மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த திட்டம்தான். ஆனால் ஐந்தாவது வகுப்புவரை படிக்கும் மாணவர்கள் வீட்டில் பெற்றோர்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்? இத் திட்டம் உயர்தரப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இருந்தால் மாணவர்கள் கல்வியறிவு பெறுவதுடன் தொழிலறிவும் பெறமுடியும் பிற்காலத்தில வாழ்க்கையைச் செவ்வனே நடத்த இது மிகவும் பயன்படும். ஆதலால் அரசாங்கம் கல்வியின்மீது அதிககவனம் செலுத்தி மக்களிடையே கல்வியறிவைப் பரப்ப வேண்டும்.

அரசாங்கம் கவனிக்கவேண்டிய மற்றோர் முக்யமான பிரச்னை, உணவுப் பிரச்னை இன்று நம்நாட்டில் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதை நாட்டைவிட்டு ஒழிக்கவேண்டும். நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் பயிர்த்தொழில் அதிகம் செய்யவேண்டும். வீணாக உள்ள நிலங்களைப் பயிரிடவேண்டும். அரசாங்கம் ஏழை விவசாயிகளுக்குப் பணம் கடன் கொடுத்துப் பலதவணைகளில் சிறு சிறு தொகையாக திருப்பி வாங்கிக்கொள்ள வசதி செய்ய வேண்டும். அரசாங்கம் உதவிசெய்தால்தான் ஏழை விவசாயிகள் பயிர்த்தொழிலை மேற்கொள்ள முடியும். மக்கள் நன்கு ஒத்துழைத்தால்தான்பஞ்சத்தைப்போக்க முடியும் மக்கள் ஒத்துழைப்பதோடு, அரசாங்கமும் உதவிசெய்யவேண்டும் தற்போது அரசாங்கம் உணவுப் பஞ்சத்தை போக்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்துகொண்டுதான் இருக்கிறது. இன்னும் அதிக உதவி செய்து பயிர்த்தொழிலை வளர்க்கவேண்டும். உணவுப் பஞ்சத்தை ஒழித்துவிட்டால் அரசாங்கம் தற்போது ஊழியர்களுக்குக் கொடுத்துவரும் பஞ்சப்படியையும் நிறுத்திவிடலாம். அதனால் கோடிக்கணக்கான பணம் அரசாங்கத்துக்கு மீதமாகும். பொருளாதார நெருக்கடியும் இருக்காது. ஆதலால் விவசாயத்

தைப் பெருக்கி பஞ்சத்தைப்போக்கும் ஆக்கவேலையில் அரசாங்கம் தீவிரமாக வேலை செய்யவேண்டும்

அரசாங்கம் உடை விஷயத்திலும் சிறிது கவனம் செலுத்தவேண்டும். முன்பு நம்நாட்டில் மக்களிடையே கைத்தறி துணிகளுக்கு நல்ல மதிப்பு இருந்தது. ஏனெனில் மில்துணிகள் அதிகமாக வெளியாகின்றன அதுவும் தவிர விலை மிக மலிவாகவும் இருக்கிறது ஆதலால் மக்கள் கைத்தறித் துணிகளை வாங்காமல் மில் துணிகளையே அதிகம் வாங்குகின்றனர். கைத்தறி நெசவாளர்கள் தற்போது உண்ண உணவில்லாமல் தவிக்கின்றனர். தற்போது வீதியிலே திரியும் பிச்சைக்காரர்களையும், உண்ண உணவில்லாமல் தவிக்கும் நெசவாளர்களையும்காக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கமே ஒரு திட்டம் போட்டு இவர்களை வைத்துக் கொண்டு கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்தால் கைத்தறிக்கு ஆதரவும், மேற்கண்ட அநாதைகளுக்குப் பிழைப்பும் கிடைக்கும் மில் துணிகளை மக்கள் வாங்கக்கூடாது என்று அரசாங்கம் கட்டுப்பாடு செய்ய வேண்டும். கைத்தறித் துணியை குறைந்த விலைக்குக் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்வதால் நாட்டில் அநாதைகள் அலையமாட்டார்கள். ஆதலால் அரசாங்கம் மேற்கண்ட முறையை கைக்கொள்வதின் மூலம், அநாதைகளுக்கு ஆதரவும் கைத்தறிக்கு நல்ல மதிப்பும் ஏற்படும்.

அங்கியரின் ஆட்சியில் நம்மிடமிருந்து பேச்சுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. முற்காலத்தில் நிலச்சுவான்தார்களுக்குமட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது. தற்போது நம்நாடு விடுதலையடைந்தபின் பேச்சுரிமையும், வாக்குரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் பேச்சுரிமை பூர்ணமாக அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத்துக்குப் பிடிக்காத கொள்கைகளைப் பிரசாரம் செய்தாலோ அல்லது புத்தக வாயிலாக வெளியிட்டாலோ தண்டனை கிடைக்கிறது என்பது நாம் யாவரும் அறிந்ததே. இதனால் நாம் இன்னும் பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவைகளைப் பூர்ணமாக பெறவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. ஆதலால் நாம் பேச்சுரிமையையும் பெற பாடுபடவேண்டும் பேச்சுரிமையை அரசாங்கத்திடம் கேட்க நமக்கு உரிமை உள்ளதேபோல் பேச்சுரிமையை அளிப்பது அரசாங்கத்தின் கடமையுமாகும். பேச்சுரிமை தற்போது பூர்ணமாக இல்லாததால்தான் சில தென்னாட்டுத் தலைவர்களை அரசாங்கம் கைது செய்கிறது. புத்தகங்களுக்கும் தடை விதிக்கிறது. ஆகலால் இவ்வுரிமையைப் பெற்றால்தான் நமது கொள்கைகளை மக்களிடையே பரப்பமுடியும். வாக்குரிமை தற்போது பரிபூர்ணமாக அளிக்கப்பட்டிருக்கிறது ஆகலாம் நாம் இவ்விரண்டு உண்மைகளையும் நல்ல வழியில் பயன்படுத்தி நாட்டை முன்னுக்குக் கொண்டு வருவது நமது கடமையாகும்.

இன்று நம் அரசாங்கததில் லஞ்சப் பேய் தலைவிரித்தாடுகிறது ஆங்கிலேய

ஆதிக்கத்தில் இருந்ததைவிட தற்போதுதான் அதிகம். எந்தக் காரியாலயங்களுக்குச் சென்றாலும் லஞ்சம் கொடுத்தால்தான் காரியம் சுலபமாக முடிகிறது. உதாரணமாக, இரண்டாண்டுகளுக்கு முன்பு இலங்கை செல்ல நேர்ந்தது. அதுசமயம் சில இடங்களில் லஞ்சம் கொடுத்ததினால் சுலபமாகப் பாஸ்போர்ட் வாங்க முடிந்தது. ஆதலால் அரசாங்கம் லஞ்சப்பேயை ஒழிக்க தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த லஞ்சம் ஒழிந்தால்தான் நாடு உருப்படமுடியும்.

நம்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் அதிகம். படித்தவர்கள் எல்லோரும் வேலையை நாடியே வருவதால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக்கொண்டே வருகிறது. ஆதலால் அரசாங்கம் ஏதாவது திட்டம் தீட்டி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முயற்சி செய்யவேண்டும்.

அரசாங்கம் உணவு, உடை, கல்வி ஆகியவற்றில் கவனம் செலுத்தி, பேச்சுரிமையைக் கொடுத்து, லஞ்சப் பேயையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்தால்தான் நம்நாடு விடுதலையடைந்ததின் பயனைப்பெற முடியும். நாம் விடுதலைக்குப் பின் எல்லா சுதந்திரங்களையும் பெற்றுவிட்டதாகவோ, பூர்ண விடுதலை அடைந்து விட்டதாகவோ நினைக்கக் கூடாது. மேற்கண்டபிரச்னைகள் தீர்ந்தால்தான் விடுதலையடைந்துள்ள நாடு என்று சொல்லிக்கொள்ள இயலும்.

நான் கண்ட உலகம்!

(M. அரவாண்டி, ஆறாம் படிவம்.)

ஓர் நாள். மாலை நேரம். மணி சுமார் நான்கு இருக்கும். பசியாலும், களைப்பாலும் சோர்ந்து நடந்து சென்ற நான், ஒரு மா நிழலில் அமர்ந்தேன். என் கையிலிருந்த உலகத்தைப் படிக்கத் தொடங்கினேன். மனம் பல சிந்தனைகட்கு உள்ளாகிறது...!

கொலம்பஸ், உலகிலே முதன்மைத் தானத்தை வகிக்கும் அமெரிக்காக் களைக் கண்டுபிடித்தார். வாஸ்கோடிகாமா, அன்று யாரும் பெயரைக் கூட கேள்விப்பட்டிராத, நாம் பாரதத் தாய் என மதிக்கும் இந்தியாவைக் கண்டு பிடித்தார். காப்டனுக்குக், கண்டு பிடித்தக் கண்டமாகிய ஆஸ்திரேலியாவை யாவரும் அறிந்ததே. ஆப்பிரிக்காவைக் கண்டு பிடித்த மாங்கோ பார்க் எல்லோராலும் போற்றப்படவில்லையா ?

மேலே கூறிய வீரர்கள் அனைவரும் புதுப்புது உலகங்களைத் தம் தம் முயற்சியினாலும், ஊக்கத்தினாலும் சலியா உழைப்பினாலும் கண்டு பிடித்

தன். இவர்கள் எத்தனை முறை படையெடுத்தனர்! ஆனால் எல்லோரும் முழு வெற்றி பெற்றனரா? இல்லை! இல்லவே இல்லை!! பசிப் பிணியால் வருந்தினர்கள்; தாம் காண வந்த இடங்களை அடையாது வருத்தத்தோடு திரும்பினர் பலர். மேலும் இறந்தவர்களின் எண்ணிக்கை சொல்லொணாது! இவைகளையெல்லாம் சகித்து, மீறி வெற்றி பெற்றுத் திகழ்ந்தோர் சிலரே யாவர்.

என் சிந்தனைகள் அளவு கடந்து விட்டன!! இவ்வுலகையும் நாம் இவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாகித்தானே கண்டுபிடித்தோம் பல நாட்கள்-நாட்களல்ல, மாதங்கள்-அவையுமல்ல, வருடங்கள்! "இதைக் கண்டேன்; களிப்பெய்தினேன்!"

இவ்வளவு சிந்தனைகள் எழுந்த பின் மறுபடியும் என் உலகத்தை எடுத்துப் பார்க்கத் தொடங்கினேன். அச்சமயம் எங்கிருந்தோ ஒரு குரல் தோன்றியது. திரும்பிப்பார்த்தேன்; சுற்றும் முற்றும் பார்த்தேன். ஒன்றையும் காணோம்! மீண்டும் குரல்மட்டும் கேட்டது. மறுபடியும் பார்த்தேன். நாம் இவ்வுலகில் தான் இருக்கின்றோமா என்றும் எண்ணினேன். கடைசியில் என் உலகம் தான் இவ்விதம் குரல் கொடுத்தது;" ஏ, உளுத்துப்போன சமுதாயத்தில் வாழும் மனித ஜாதியே! பார்த்தீர்களா உங்களைப் போன்ற உயிர்களை? எவ்வாறு இருக்கின்றன அவைகள்? சிறிது காலமேனும் ஒற்றுமையுடன் வாழ்கிறீர்களா? இல்லை. ஆறறிவு மனிதர்களாகிய உங்கட்கு அமைதி, ஒற்றுமை, ஒருமித்த அன்பான எண்ணம் சிறிதுமில்லை. பார்த்தீர்களா குறைந்தறிவு படைத்த காகங்களை? அவைகள் எவ்வாறு வாழுகின்றன? உங்களைப் போன்றா? மனித ஜன்மமே! நீ பகுத்தறிவு பெற்ற உயிர். அவை பகுத்தறிவு அற்ற உயிர். இருந்தும் அவைகள் இருக்கும் நிலைமையைப் பாருங்கள்." இப்படி அந்தக் குரல் ஒலித்து நின்றது. அப்பொழுது என் மனம் முன்னினும் பல சிந்தனைகட்கு உள்ளாயிற்று. அவ்வுலகத்தைப் புரட்டிக்கொண்டேயிருந்தேன்.

முதன் முதல் என் இரு கண்களுக்கும் எங்கும் நிறைந்த பரம்பொருள் தான். சிலர் கூறுகின்றனர், கடவுள் இல்லை என்று. ஆனால் அவ்வுலகு தெள்ளத் தெளிய விளக்கிற்று, கடவுள் இருக்கிறார் என்று. அவ்வுலகு பேசியது: 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு.' இக் குறளை நோக்குவோமாயின் பரம்பொருள் இல்லை என்று எதிர்ப்பொருள் உணர்த்துவார் யார்?

மனிதன் மனிதனாக வாழ — மனிதன் தன் சுயமரியாதையோடு வாழ —மனிதன் வீரம் பெற்றுத் திகழ இவ்வுலகம் வாய்ப்புக் கொடுக்கின்றது. நான் தான் இவ்வுலகைக் கண்டுபிடித்தேனா என்றும் எண்ணினேன். ஆம்; நான்தான். வேறொருவரும் இல்லை அவ்வாறு வேறொருவர் கண்டுபிடித்திருப்பாரேயாயின் இவ்வளவு காலமாக வாயை மூடிக் கொண்டு ஞானியாக இருப்பதன் காரணம் யாது?

பிறகு அவ்வுலகின் உள்ளே சிறிது சென்றேன். அங்கு நோக்கின் இப்பொழுது காவிரியிலுள்ள நீர்ப்பெருக்கைப் போல் ஒரே நீர்மயம்! பல நாட்கள், அல்ல தண்ணீர் தாகத்தால் வறறிக் கிடந்த என் நா 'அவண் செல்' என்று தூண்டிற்று. சென்றேன். மனமாறப் பருகினேன், களைப்பை இழந்தேன்; களிப்பை எய்தினேன். நன்றிலே கொண்டேன். பின் சிறிது சிறிதாக காலடி எடுத்து வைத்தேன். சிந்தனைகள் பல வந்தன.

மறுபடியும் உலகத்தைப் புரட்டினேன். அதென்ன சாதாரண உலகமா! சீக்கிரம் அழிவுற? என்றும் அழியாத உலகம் அது. அவ்வுலகம் ஆறறிவு படைத்த மனித சாதிக்கு உணர்த்தும் நல்லுரைகள் பல நான் இவ்வுலகைப் படித்து அலுத்துப் போனேன். பிறகு சிறிது கண்ணயர்ந்தேன். 'சர சர'வென்ற ஒரு ஓசை என்னை எழுப்பியது; எழுந்தேன்; கண்ணைத் துடைத்தேன்; விழித்துப் பார்த்தேன். என் உலகம் தான் பேசியது: 'ஏ மானிட ஜாதியே! இம மாலைப் போதில் தூங்கும் நீயா மனிதன்? என்னைப்பற்றி நீ எவ்வளவோ உணர்ந்தும், இவ்வளவு ஒழுங்கீனமாய் நடக்கிறாய் எனின், என்னைப் பற்றியே அறியாத மூடர்கள் எவ்வளவு சோம்பியிருப்பார்கள். உன்னைப்போன்றத் தூங்குமூஞ்சிகள் இருப்பதால்தான் இச் சமுதாயம் இப்படி பாழடைகின்றது" என்று கூறி நின்றது. நான் திடீரென்று, "உன்னைப்பற்றிக்கூட அறியாத கயவர்கள் இருக்கின்றார்களா இன்னும்? இருக்கவேமாட்டார்கள்!" என்றேன் 'ஏ, மானிடனே! இருக்கவேமாட்டார்கள்! உனக்குத் தெரியவில்லை என்று சொல்; என்னை அறியாதவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றனர்; என்னை அறிந்திருந்தால் உன் சமுதாயம் ஏன் அவ்வளவு இழிவுற்ற நிலைமையில் இருக்கின்றது. நீ எந்த வகையில் முன்னேறி இருக்கின்றாய்? கணக்கிட்டுச் சொல், பார்ப்போம்! ஒன்றும் முடியாத நீ, எத்தகு இழிசெயலைப் புரிகின்றாய்! புரிந்துகொண்டே இருக்கின்றாய்" என்று முகத்தில் அறைவதுபோல் உரைத்து நின்றது.

அப்பொழுது எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அவ்வுலகத்தை எறிந்தேன்; எழுந்தேன்; நடக்கலானேன். சிறிது சென்றேன். அவ்வுலகம் எழுப்பிய குரல்கள் எல்லாம் உண்மையே என்று எனக்குத் தோன்றியது. அதை விட்டெறிந்த இடத்திற்கு மறுபடியும் சென்றேன். அவ்வுலகத்தை எடுத்து மடித்திரைத்து "நான் இவ்வளவு நாளாய் இந்த சமுதாயத்தில் செய்தவையாவும் குற்றமே என்று உணர்ந்து அதனிடம் இக் குறைகளை நீக்குவதற்கு வழி கூறுமாறு மொழி பகர்ந்தேன்.

அது கூறிற்று: "என்னை ஆதியோடந்தமாய்ப் படி; என்னிடமுள்ள உண்மைகளை அறிந்துகொள்; அதைப் பின்பற்று; பிறர்க்கும் உணர்த்து; வழி காட்டு! நீயே பின் உணர்வாய்"

நீண்ட நேரமாகப் பேசி அலுத்துப் போன அவ்வுலகம் சிறிது உட்கார்ந்தது. அப்பொழுது நான் நினைத்தேன் "இந் நெடு நேரம் வரைப் படித்த, அறிவுரைக் கேட்ட தர்க்கம் ஆடிய உலகின் பெயர்தான் யாது? அவ்வுலகின் பெயர்தான் யாது? அவ்வுலகை நெருங்கினேன்; அதன் நாமத்தைக் கேட்க ஆவல் கொண்டேன்; கையில் எடுத்துக்கொண்டு விட்டேன்; பின் கேட்டேன்: "என் ஆருயிர்த் தந்தையே! தங்கள் பெயர் யாதோ?"

அது உரைத்தது: -உனக்குக் கூடவா என் பெயர் தெரியவில்லை; நான்தானப்பா வள்ளுவனின் வாய்மொழி; நான்தானப்பா வள்ளுவன் கொடுத்த வரப்பிரசாதம், வேதம்; நான்தானப்பா உலகின் தந்தை திருக்குறள்" என்று அழுத்தம் திருத்தமாக உணர்த்தியது.

என் மனம் என்போன்ற சகாக்களுக்கு அறிவுறுத்தத் தொடங்கிற்று: "பார்த்தீர்களா, நான் கண்ட உலகை! பார்க்கமாட்டீர்கள்! எழுந்திருங்கள்; உறக்கத்தினின்றும் விழியுங்கள்; இவ்வுலகை ஒரு முறையாவது திரும்பிப் பாருங்கள். நம் தமிழ்க் கடவுள் அருளிய உலகமப்பா இது! மத ஓடத்திலேறி மதம் பிடித்து மயங்கித் திரியும் வண்டுகளே! மதப்போர் செய்யாதீர்கள்! இக்கடவுளின் வழிகளைப் பின்பற்றுங்கள். நன்மை அடையுங்கள் வீரப் புதல்வர்களாக விளங்குங்கள்; சிறந்த மகனாகத் தோன்றுங்கள். அப்பொழுதுதான் உங்கட்கும் உங்கள் நாட்டிற்கும், உலகிற்கும் வெற்றி கிட்டும்.

இவ்வளவு சிந்தனைகளையும் நினைத்த என் மனம் அலுத்துப்போயிற்று என்று சொல்லத் தேவையில்லை ஆதவன் தன் செங்கிரணங்களை வெளியிடத் தொடங்கினான். நானும் அவ்விடத்தைவிட்டு எழுந்தேன். கருமேகக் கூட்டங்கள் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்தன. மேகங்கள் சிரித்தன. மணி ஆறு இருக்கும். மழை சொரிந்தன. நான் கண்ட உலகை கையில் ஏந்திக்கொண்டு, இல்லை, இல்லை உயிர் துடிக்கும் மார்பறையில் அணைத்துக் கொண்டு மழையில் நனைந்தவாறே வீடு நோக்கி நடந்தேன்.

மழையினாலும், குளிரினாலும் களைத்துப்போன நான்—என மனம்—என் சிந்தனை—என் எண்ணங்கள் எல்லாம் சிதைவுறத் தொடங்கின.

அப்பொழுது ஒரு பெரிய குரல் எழும்பியது: "வாழ்க! நான் கண்ட உலகம்."

"வறுமை"

(M. அரவாண்டி, ஆறம் படிவம்.)

"அண்ணா அண்ணா எந்தன் வயிற்றைப் பாரண்ணா
ஐந்து நாள் பட்டினி நான் எண்ணிப் பாரண்ணா
உண்ணாது பசியோடு ஓடி விளையாடி,
உயிரோடு சூதாடும் என்னைப் பாரண்ணா.
அண்ணா என் உணவுக்கு அரை அணா அண்ணா
ஐயையோ நடந்துவர முடியவில்லை அண்ணா
அண்ணா நான் தம்பியல்ல திரும்பிப் பாரண்ணா
அரையணா தா அண்ணா உயிரைத் தா அண்ணா
கடைவீதி வழியாக நடந்து கொண்டிருந்தேன்
காசென்று பசி நீக்கும் பொருள் என்பதறிந்த
உடையொன்று உயிருக்கும் மேலான மானம்
உடையாமல் உருவாக்கும் பொருள் என்பதறியா
சடையான தலைமுதலாய் பாதம் வரைப் பசியை
சாகாத இலக்கியமாய்க் காட்டி ஒரு சிறுவன்
படையாகக் கெஞ்சு மொழிப் பழகியதைச் சொல்லி
பறந்து வந்தான் உணர்விழந்து என்கையைப் பிடித்தான்
"காசில்லை"என்றேன் நான், மெய்யதுதான் சொன்னேன்.
"காலணா" என்றவனும் கெஞ்சி எனைக் கேட்டான்.
"நீ சனியன், போய்விடடா நடந்து சாகாதே
நிற்பவரைக் கேள்" என்றேன். ஏமாந்த சிறுவன்
"வேசி மகனே காசா இல்லை!" எனக் கூறி
வீதியிலே வந்தவழி திரும்பியூர்ந் தானே
கூசாது ஏசிவிட்டான். திடுக்கிட்டேன் நின்றேன்.
கொஞ்சம் என்பஞ்சத்தைச் சிந்தித்துப் பார்த்தேன்.
திட்டியது சரிதான். ஒருமுறை போதாது
தேய்ந்தழிந்த தமிழனுக்கு வேண்டும் ஒருகோடி
கொட்டியது அளக்காமல் கொடுத்தானும் தமிழன்.
கொடுக்கவில்லையாம். எடுத்துப்போ வென்றழைத்தான்.
அட்டியின்றித் தந்தானும் வெட்டிப் பேச்சிவைகள்
அண்ணா என்றழைத்தவனுக்கு அரையணா கொடுக்க
முட்டில்லாத் தமிழினத்தான் முன்னேற முடிவான
செயலுக்கு வரமாட்டான் சாகட்டும் நன்றே!

கல்லணைக் காட்சிகள்

[மு. காத்தான், ஆறும் படிவம்]

அன்று சனிக்கிழமை. காலை மணி ஆறு இருக்கும். வீட்டைவிட்டுப் புறப்படும்பொழுது ஓயாது காய்ந்து கொண்டிருந்த கதிரவனுக்கு உடல் அலுத்துவிட்டதா? அல்லது எனது உல்லாசப்பிரயாணத்தை ஒளிந்து கொண்டு உற்று நோக்கினனோ? இல்லை! இல்லை!! 'இளைஞனின் இன்பத்திற்கு இடையூறு இழைக்காதே; உல்லாசப்பிரயாணச் சல்லாபக் காட்சிகட்குத் தொல்லையளிக்காதே' எனப் பரிதியை நோக்கி நவின்ற கார்முகிற் கூட்டங்கள் பகலவனின் பட்டொளியைத் தம் தலைமேல் தாங்கி நின்றன.

இயற்கையின் ஒத்துழைப்பு இணைப்பிலே இடைவிடாது நடந்தேன் இன்பத்தோடு. பதினாறுகல் தொலைவு பறந்து சென்றேன் பட்சியைப்போல. குறுகிய காலத்தில் கூத்தூர் அடைந்து மருவிய நண்பர் குழுவின நடுவே மதிநிறை ஆசான் முகத்தினைக் கண்டேன். உள்ளத்தில் உவப்பு ஊஞ்சலாட, முகத்தில் புனனகை தவழ உரையாடினேன் அவர்களுடன் ஒரு சிறிது நேரம். குறித்த நேரத்தில் புகை வண்டி வரவே குதித்தோடி ஏறினேம் குதூகலத்துடனே.

குப்...குப்...குப்...குப்பென்ற சப்தத்தை எழுப்பி பூகம்பம் தோன்றுவது போன்ற புகையைக் கக்கிக்கொண்டு வண்டி நகர ஆரம்பித்தது. வேகம் அதிகரிக்க என் உடம்பிலுள்ள வியர்வைச் சுரப்பிகள் காவிரிப் பெருக்கன்ன நீரைக் கக்கின. கட்டிலும் மலையும் காற்றென்பறப்பதுபோல் தோற்றமளித்தன என் கண்களுக்கு. வானமும் பூமியும் மட மடவென்று சுற்றி மனத்தைக் குழப்பின. என் நிலையைக் கண்ட ஆசிரியர்களும் மாணவநண்பர்களும ஒருபுறம் பரிகாசமும மறுபுறமபச்சாதாபமும கொண்டனர். 'பட்டிக்காட்டு முண்டமே' என்றான் ஒரு நண்பன. 'ஐயோ பாவம, ரயிலே ஏறியது கிடையாது போலிருக்கிறது' எனக் கூறினான் மற்றொரு நண்பன். இவ்வொலிகள் என் காதுகளில் அரை நினைவாக விழுந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம என ஆசிரியர் என்னைத் தட்டி எழுப்பும குரல்கள் என காதில் விழ திடுக்கென எழுந்து ஒன்றுமறியாத ஊமையென நின்றேன. சற்றுநேரத்திற்கெல்லாம் அது 'லால்குடி புகை வண்டி நிலையம்' என உணர்ந்தேன்,

மாலை மணி ஒன்றிருக்கும். லால்குடிவிட்டுநடந்தோம்தெற்குநோக்கி. கொள்ளிடம் எங்கள் குறுக்கே நின்றது. அகன்ற மணற்பரப்பைக் கண்டதும் அங்கம குழைந்தேன். உடனே "கடலைத்தாண்டிய அனுமான் நாட்டில் மணலைக் கடக்க விழிக்கின்றாயே" என என் மனம் என்னை ஏளனம செய்ய ஆரம்பித்தது. உடனே கள்ளைக்குடித்தவன உள்ளத்தைப்போல, காப்பிக் குடித்

தவன் கால்களைப்போலத் துள்ளி எழுந்தேன். துரிதமாய்ச்சென்றேன். நடுக் கொள்ளிடத்தில் நன்னீர் கண்டேன். மூழ்கினேன் நீரில் மூச்சு விடாமல். கலைந்தது சோகம்; பறந்தது அயர்வு; மறைந்தது தூக்கம்!

விரைந்து சென்றோம் மறுகரை நோக்கி கல்லணை அடைந்தோம். பரந்த நீர்த்தேக்கம் என் மனதில் பயத்தை அளித்தது. கிட்டத்தட்ட 'ப' வடிவில் அவ்வணைக்கட்டப்பட்டு நீர் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வடிந்து கொண்டிருந்தது.

தண்ணீர் வடிந்ததின் தோற்றம் தமிழக மன்னர்களின தன்னிகரில்லாப் படைகளின் வலிமையைத்தான் வலியுறுத்திற்று. வடபுறம் சாய்ந்தநீர் ஆரியப்படைகளை அழித்து அவர்களின் தலையில், கல்லேற்றிக் கொணர்ந்து, கண்ணகிக்குக்கற்றளி எடுக்கும் நோக்கம்கொண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனது புழுதி எழுப்பும் புரவிக்கூட்டம போல பொலிவு செய்தது. கீழ்புறம் சாய்ந்தநீர் தமிழகமன்னர்கள் தங்களுக்குள் தாக்கிக்கொண்ட சமயத்து உபயோகித்த க்ரி, பரி காலாட்படைகளின் காரொணுணு விரைவை வெளிப்படுத்திற்று. தென்புறம் சாய்ந்தநீர் தென்றலை வரவொண்ணாது தடுக்கத் தீரச்செயல் செய்யப்போவதாகக் கூறியது எனினும் தென்றலே முடிவில் வென்றது. பலமான பாலங்கள் பக்குவமாகக் கட்டப்படாவிட்டால் பண்புத்தமிழ் நாட்டைப் பாழாக்கிக் கூழாக்கி விடும். கூற்றுவனை மாறினாலும் மாறலாம் என எண்ணும் வண்ணம் கனைத்துக் கொண்டிருந்தது தேக்கம் கொண்டிருந்த நீர்!

காட்சிகளெல்லாம் ஒருவிதமாகக் கழிந்தன லால்குடிஅடைந்து இரவு உணவை இனபமுடன் ஏற்றோம். உயர்நிலைப்பள்ளியில் உறைவிடம் பெற்று உறங்கினோம். முற் பகற் காட்சிகள மீண்டும் என் கனவில் தோன்றி உள்ளத்தை நெகிழ்வித்தன அந்த நல்லுறக்கத்தில்!

காலை உணவு முடிந்ததும் புகை வண்டியில் ஏறினோம. வீடு திரும்பும் எங்களுக்கு வெற்றிமுரசுகள் ஒலிப்பனபோல் கேட்டன வண்டியின் நகரும் ஓசை. இனிதாய் அவரவர் இல்லங்கள் அடைந்து முழங்கால் வலியை முடுக்கினோம விரைவாய்! காட்சிகளைக் கண்டுகளித்தது நாங்கள் ஒரு சிலர் என்பதை எண்ணும் போது மனம் பரவசமடைகிறேன. இக்கட்டுரையைப் படித்துக் களி கொள்ளும் அனைவருக்கும் எனது அன்பு செறிந்த வணக்கம்!

★

ஒளி கொடுத்தோன்

[மூ. காத்தான், ஆறும் படிவம்]

1 ஒளியைக் கொடுத்து நல் விழியைத்திறந்திட்ட
உயர் குண உத்தமன் யார்?—நல்
சலியா உழைப்புத் தங்கச் சிகரம்
தமிழ் மகன் மூக்கப்பிள்ளை

2 பாமர மக்களின் பகுத்தறிவோங்கிட
பாடுபடுபவர் யார்?—நல்
அன்பின் உருவாம் அறிவுக் கடலாம்
ஆண் மகன் மூக்கப்பிள்ளை

3 கல்வியே சிறந்தநல் களஞ்சிய உணவென
கருதி உழைப்பவர் யார்?—நல்
கற்பக மரமாம் காந்தியின் சீடனும்
கலை தெரி மூக்கப்பிள்ளை

4 முதுமையில் குழந்தை உள்ளம் படைத்த
முன்னணி வீரன் யார்?—நல்
இனிமைத் தமிழின் கொழுவிய மகனும்
இன்மொழி மூக்கப்பிள்ளை

5 சமூகத் தொல்லைகள் தகர்த்தெறியப்பட
தாளா துழைப்பவர் யார்?—நல்
வள்ளுவன் பிறந்த நம் வளஞ்செறிதமிழக
வள்ளலார் மூக்கப்பிள்ளை

சிந்தனை

[மு. பொன்னம்பலம், பெரியோர் இல்லம்]

கோடைக் காலம். நகரத்தின் ஓய்வு பெறாத இரைச்சலினின்றும் படித்துப் படித்து அலுத்துப்போன புத்தகங்களிலிருந்தும், எழுதி எழுதி சலித்துப்போன எழுதுகோலிலிருந்தும் விடுபட்டு இயற்கையின் எழிலைப் பருகும் நோக்கத்துடன் கிராமத்திற்கு வந்திருந்தேன்.

ஒரு நாள்.... மாலை நேரம்.... மணி நான்கிருக்கும். கிராமத்திலிருந்து கிழக்கு நோக்கி நடந்துகொண்டிருந்தேன். பாட்டையின் இரு பாங்கணும் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற வயல்களும், சலசலவென சப்தமிட்டு ஜலதரங்கம் பாடும் மண்டுகங்கள் நிறைந்த நீர்நிலைகளும், செடி, கொடி, மரங்கள் அடர்ந்த முட்புதர்களும், கற்குவியல்களும் நிரம்பிய நீண்ட அடர்ந்த காடுகளும் காணப்பட்டன. அவற்றையெல்லாம் கடந்து மனித சஞ்சாரமற்ற காட்டின் அமைதியான ஓரிடத்தில் தனிமையாக நின்ற ஓர் குன்றினைக் கண்டேன்.

குன்றின் ஒரு பாங்கண் குறிஞ்சிகளும்; மறு பாங்கண் பாம்பென வளைந்தோடும் அருவியும், ஏனைய பக்கங்களில் அடர்ந்த காடுகளும், வயல்களும், இயற்கை அழகை எழிற்படுத்தின. அக்குன்றின் உச்சியை அடைந்து இயற்கை அழகைப் பருக விழைந்தேன். அதன் உச்சி நோக்கி ஏறினேன் - ஏறிக்கொண்டே இருந்தேன். எண்ணிறந்த ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மனிதன் தன் வாழ்க்கையமைப்பில் முன்னேறி முன்னேறி முன்னேற்றத்தின் முகட்டை முட்டிவிட்டேன் என தற்பெருமைகொள்வதைப்போல நானும் அக் குன்றின் உச்சியை அடைந்து பெருமூச்சுவிட்டேன். சிந்தனைகள் சுழன்றன. கடந்துபோன வாழ்க்கையின் சம்பவங்களும், மானிடவர்க்கத்தின் சிறுமைபெருமைகளும் ஒன்றன்பின் ஒன்றாக திரைப்பட நிகழ்ச்சி போல் தோன்றத் தொடங்கின.

ஓர்நாள்...மாலைநேரம்... சென்னை கடற்கரையில் அமர்ந்து கடலைநோக்கினேன். கடல்என்னையும் ஏனையோரையும் பார்த்து கர்ஜித்தது - கர்ஜித்துக் கொண்டிருக்கிறது. மனிதவர்க்கத்தையே பூண்டோடு ஒழிக்கக் காத்துக் கொண்டிருக்கிறேன் என கூறுவதைப்போன்று அதன் கர்ஜிப்புத் திகழ்ந்தது. அச்சமயம் ஓர் சீமான் தன் செல்லக் குழந்தையாகிய நாயுடன் தன் மோட்டாரிலிருந்து இறங்கிவந்து நான் அமர்ந்திருந்த இடத்திற்குச் சிறிது தூரத்தில் அமர்ந்தார். சிறிதுநேரம் சென்றது. நான் அவர் செய்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அச் சீமான் தான் கொண்டுவந்த பையிலிருந்து

ரொட்டித் துண்டுகளை எடுத்து ஒவ்வொன்ருகத்தனது செல்லக்குழந்தை-நாயிற்குக் கொடுத்துக்கொண்டிருந்தார். அஞ்ஞான்று பசியால் வாடி, கவலையால் மெலிந்த ஓர் இளஞ் சிறுவன் அச் சீமானருகில் வந்து தனக்கு ஒரு ரொட்டித்துண்டு கொடுக்குமாறு கெஞ்சினன். ஆனல் அச் சீமான் தன் நடைகுச்சி (Walking Stick)யைக் காட்டி பயமுறுத்தி ஓடச் செய்தார் நினைவிற்கு வந்த இச்சம்பவம் என் நெஞ்சை உருக்கிற்று நாயினும் தாழ்ந்தோனுகிவிட்டான், மனிதன், என எண்ணி, உளுத்துப்போன அச்சமுதாயத்தைக் கண்டு இறங்கலானேன்.

* எண்ணிறந்த ஆண்டுகளுக்குமுன் தோன்றிய மனித சமுதாயத்தில் எத்தனையோ ஊழல்கள். மனிதருக்குள் மனிதரைக் கேவலம் நாயினும் கீழாக நடத்துகின்றனர். சிறந்த அறிவெழுச்சியினுல் தீயோனுகிவிட்டான் மனிதன்! இதோ...சான்றுகள்: நெருப்பை உபயோகிக்கக் கற்றுக்கொண்டு மனிதன் நெருப்பைக் கொண்டு பிறரை அழிக்கவும் கற்றுக்கொண்டான்! நறுக்குவதற்கு உபயோகித்த கத்தியைக் கொண்டு பிறரைக் குத்திக் கொலை செய்யவும் கற்றுக் கொண்டான்! தாவரங்களின் உதவியால் மனிதனை உயிர்ப்பிக்கும் மூலிகைகளைத் தயாரித்த அவன் அதே தாவரங்களிலிருந்து நஞ்சைத் தயாரிக்கவும் கற்றுக்கொண்டான் அம்மட்டுமா! அணுவின் சக்தியைக் கொண்டு இயந்திரங்களைக் கண்டுபிடித்த அவன் அதன் உதவியைக் கொண்டே அணுகுண்டையும் தயாரிக்கக் கற்றுக் கொண்டான்! அந்தோ முன்னேற்றத்தின் முகட்டை முட்டிவிட்டேன் என்று தற்பெருமைக் கொள்கிறுன் மனிதன்;.......!

ஆனல்... உலகத்தை அழிக்கக் கண்டுபிடித்த அதே அணுகுண்டு தன்னையும், தன் நாட்டையும் சேர்த்து அழிக்கும் என்பதை அதைச் செய்த மனிதனே இன்னும் அறிந்திலன்! பேசக் கற்றுக்கொண்டானே அன்றி நாவை அடக்கக் கற்றுக்கொள்ளவில்லை. உடற்கூறு சாஸ்திரத்தை அறிந்தானே அன்றி தன் உடலைப் போன்று பிறன் உடலைப் பேணும் பழக்கத்தை கைக்கொள்ளவில்லை. ஆகாய விமானத்தில் பறக்கக் கற்றுக் கொண்டானே அன்றி மண்ணிலே மனிதனுக வாழக் கற்றுக்கொள்ளவில்லை. முன்னேற்றம் முன்னேற்றம் முன்னேற்றம் என்று கூறிக்கொண்டே மனிதன் பின்னேற்றத்தையே அடைகிறுன். அதனுல்தான் சமுதாயம் உளுத்துப் போய்விட்டது என எண்ணி இரங்கலானேன்.

என எண்ணி அலுத்துப்போகவே இயற்கையைக் கண்டேனும் எழிலுறலாம் என்று குன்றினைச் சுற்றி வர விழைந்து சிறிது தொலை சென்றேன். அங்கு ஓர் புதரிலிருந்து வெளி வந்த ஒரு பாம்பு என்னைக் கண்டு பயந்து ஓடலாயிற்று. நானும் மனித வர்க்கத்தைச் சார்ந்தவனுகையால் மனித ஜாதியின் அறியாமை என்னையும் பற்றிக்கொண்டது. இதனுல் போலும்

அப் பாம்பைக் கல்லால் அடிக்க விழைந்து கீழே கிடந்த கல்லை எடுக்கக் குனிந்தேன்.

"ஹஹ்ஹ... ஹஹ்ஹ... ஹஹ்ஹ" என்று ஒரு சிரிப்பு ஒலி கேட்டது. திகைத்தேன்; திடுக்கிட்டேன். சிரிப்பொலி எங்கிருந்து வருகின்றது என்றறிய சுற்றும் முற்றும் பார்த்தேன். கடைசியாக நான் எடுக்கத் துணிந்த கல் பேசுவதைக் கண்டேன். வியப்புற்றேன்.

"மனிதனே! இதோ....நான்தான் சிரிக்கிறேன்" என்றது கல்.

"நீ என்னைப் பார்த்துச் சிரிக்கக் காரணம் என்ன?" என்று நான் கேட்டேன்.

"மட மனிதனே! நான் உன்னை மட்டும் பார்த்துச் சிரிக்கவில்லை. உளுத்துப்போன உங்கள் சமுதாயம் முழுவதையும் பார்த்துச்சிரிக்கிறேன்- சிரித்துக்கொண்டே இருக்கிறேன். ஏன்? பாம்புபோன்ற மிருகங்கள் உங்களைக்கண்டு பயந்தோட நீங்கள் அதை அடித்துக்கொல்ல விழைவது நியாயமா?" என்று கேட்டது கல்.

"அவைகள் மட்டும் மனிதனைக் கடித்து நஞ்சூட்டிக் கொல்லலாமா?" என்று நான் கேட்டேன்.

"மூட மனிதனே! கடவுள் உங்கள் மானிட சமுதாயத்தைமட்டும்தான் படைத்தாரா? கோடானகோடி மிருகங்களும், எண்ணிறந்த பறவைகளும், கணக்கற்றப்புழுக்களும், விதவிதமான தாவரங்களும் கடவுளால் படைக்கப்பட்டவைகளே. ஆகையால் உனக்கும் இவ்வுலகில் வாழ உரிமை உண்டு; அதேசமயத்தில் நீ எதை அடித்துக் கொல்ல விழைந்தாயோ அப் பாம்பிற்கும் வாழும் உரிமைஉண்டு என்பதை உணரவேண்டும். அம்மட்டோடு நில்லாதே! ஏன்? நீ ஆறறிவு படைத்தவன்; உனக்கு பகுத்தறியும் திறன் உண்டு. ஆனல் பிற உயிரினங்களுக்கு பகுத்தறிவில்லை. அதிலும் கேவலம் பாம்பினங்களாகிய அவைகள் மூன்றறிவுடையவைகள். பகுத்தறிவுள்ள நீதான் அதைத் துன்புறுத்தாமல் இருக்கவேண்டும்" என்று நீண்டதொரு சொற்பொழிவாற்றி நிறுத்திக்கொண்டது, கல்.

"உண்மை! உண்மை! முற்றிலும் உண்மை!-மறக்க முடியாத உண்மை" என்று கூறிக்கொண்டே நகர்ந்தேன்.

கல் கற்பித்த பாடத்தினைச் சிந்தித்தவாறே செடி, கொடிகளும், மரங்களும் அடர்ந்த காடுகளின்னூடே அமைந்த பாட்டையின் வழியே கடந்தேன் - நடந்துகொண்டே இருந்தேன். தரையிலே கிடந்த ஓர் கல்லை எடுத்து வானத்தில் வீசி எறிந்து என் கைத்திறனை சோதிக்க விழைந்த நான் அவ்வாறே செய்தேன். அது தற்செயலாக பறவைக்கூட்டம் நிறைந்த மரத்தில் சென்று விழுந்தது.

"கிரீச்....கிரீச் ... கிரீச் .... என்ற சப்தம்" ஏ மனிதனே! இங்கே வா," என்றழைப்பதுபோன்று கேட்டது. பறவைகள்தான் கூவி அழைக்கின்றன என அறிந்த நான் மரத்தடியை அடைந்தேன்.

"ஏன்....நீங்களும் எங்கள் மனித வர்க்கத்திற்குப் புகழுரைக் கொடுக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டேன் நான்.

"ஆம்! மனிதனே, ஆம்! உங்களது உளுத்துப்போன சமுதாயம்தான் போட்டி, பொறாமை, வஞ்சகம், சண்டை சச்சரவு, உயர்ந்தவன், தாழ்ந்தவன் இன்னவை அன்னமலைப் பான்மைகளுடன்வாழ்கிறது என்றால் எங்கள் சமுதாயத்தையேனும் அவைகளுக்கு உள்ளாக்காது வாழ விடக்கூடாதா? ஏனய்யா! நாங்கள் ஒற்றுமையாயும், சுயேச்சையாகவும், சோம்பலில்லாமலும் வாழ்வது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டன பறவைகள்.

"நாங்கள் ஒன்றும் உங்கள் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கவில்லையே" என்றேன் நான்.

"ஏனய்யா! மனிதரே! சற்றுமுன் நீரே ஒரு கல்லை எறிந்து எங்கள் கூட்டத்தைக் கலைத்தீரே! உங்கள் சமுதாயத்தில் வாழும் மனிதர்கள் எங்களைத் துன்புறுத்தும் வகைகள் அளவிடற்பாலதன்று. அவர்கள் இன்பமடைய எங்கள் சமுதாயத்தைக் கொடுமைபடுத்துகின்றனர். சிந்தனை செய்யுங்கள்ஐயா! ஆனால் கோபிக்கவேண்டாம்! ஒரே ஒரு வேண்டுகோள். இனியேனும் நீங்களும் உங்கள் மனிதவர்க்கமும் ஒற்றுமையாயிருக்கப் பழகிக்கொள்ளுங்கள். இன்றேல் ஒற்றுமையாய் வாழ்பவர்களைவேற்றுமைபடுத்தாமலாவது இருங்கள். அதுவே நீங்கள் செய்யும் தரும காரியங்களாகும்" என்று தங்களது சிறகுகளை அடித்து அடித்துத் துடித்துப் பறவைகள் கூறின.

பறவைகளின் அமைதியான—ஒற்றுமையான வாழ்க்கையை மனிதனின் அமைதியற்ற வாழ்க்கையுடனும், அலைகளின் சோம்பலில்லா ஆனால் தன் கையே தனக்கு உதவி என்று வாழும் - வாழ்க்கையை, மனிதனின் உழைப்பற்ற வாழ்க்கையுடனும்ஒப்பிட்டு மனிதசமுதாயத்தை விட பறவை இனங்கள் எவ்வளவோ சிறந்தவை என எண்ணியவாறு நடந்துகொண்டே இருந்தேன். அப்போது அதள பாதாளத்திலிருந்து "ஐயோ! ஐயகோ!" என்றொரு குரல் கேட்டது. திடுக்கிட்டு நின்று கீழ் நோக்கினேன். குன்றின் பள்ளத்தாக்கிலே பாம்பென வளைந்தோடிய நதியிலிருந்த தவளைகளும், மீன்களும் அவ்வாறு ஓலமிட்டன.

மறுபடியும் குரல் பேசத் தொடங்கியது.

"ஐயையோ! அவ்வளவு உயரத்தில் நிற்காதீர்கள். கீழே இறங்கி வந்து விடுங்கள்" என்றன அவை.

"என் சமுதாயமே முன்னேற்றம் என்னும் முகட்டிலிருக்கும்போது நான்மட்டும் இறங்கிவிட முடியுமா?" அவ்வாறு இறங்கிவிட்டாலும் உலகம் என்னைத் தாழ்ந்தவனாகத்தானே கருதும்" என்றேன் நான்.

'ஐயா! வேண்டாம். உயரத்திலிருப்பது என்றும் ஆபத்து. தாழ்ந்து

இருப்பதுதான் நல்லது. வானளவு நிற்கும் சிகரமும் ஒருகாலத்தில் பூகம்ப நிகழ்ச்சிகளால் பள்ளத்தாக்காகமாறக்கூடும். அதனால் சிகரத்தின் உயரத்தில் நின்று கொண்டிருக்கும் உங்கள் மனிதவர்க்கமே மாய்ந்து மடியக்கூடும்" என அலைகள் கூறித் தங்கள் தங்கள் வேலையைக் கவனிக்கலாயின.

என் மனத்தில் கேள்விகள் எழுந்தன. மனித வர்க்கம் ஒருகாலத்தில் அழியத்தான்வேண்டும் என்று கூறக் காரணம் என்னே? தலையாய காரணம் என்னே?....இதோ! கர்வத்தின் நினைவுச் சின்னங்கள்தானே இக்குன்றும், அப்பள்ளத்தாக்கும்! இதேநிலைதான் மனிதனுக்கும் ஏற்படும் என எண்ணி வருந்தி மென்மேலும் சிந்தனையைச் சுழற்றலானேன்.

காலம் கடந்தது. கதிரவன் மேற்றிசையில் மறைந்தான். "சூரியனின் உதவியைக்கொண்டே நான் ஒளி பெற்றுத் திகழ்கின்றேன். ஒருவன் உழைக்க மற்றவன் அனுபவிக்கிறான்- என்பதைப்போல சூரியனின் உதவியால் நான் பேரும் புகழும் பெறுகின்றேன். ஆனால் நான் என்றென்றும் எனது தலைவனாகிய சூரியனுக்குக் கீழ்ப்படிந்து எனது நிலையிலிருந்து வழுவாது வாழ்கின்றேன். மானிட ஜாதியே! நீயும் உன்னைப் படைத்த ஒருவன இருக்கிறான் என நம்பி அவனுக்கும், உன் வர்க்கத்தில் தோன்றிய சில தீர்க்கதரிசிகளுக்கும் கீழ்ப்படிந்து நட" என்னும் அறிவுரைகளை அறிவுறுத்துவதற்காக மேற்றிசையில்பிறைச்சந்திரன் சந்தித்துக்கொண்டிருந்தான். கற்றது கைமண்ணளவுதான்; கல்லாதது உலகளவு உள்ளது. முன்னேற்றத்தின் முகட்டை முட்டிவிட்டேன் எனக் கூறி தற்பெருமை கொள்ளும் மனிதருக்குக் கர்வம் கொள்ளக்கூடாதென்ற உண்மையை வலியுறுத்தும்பொருட்டு சூரியனைவிட பன்மடங்கு உயரத்திலிருந்தபோதிலும் செருக்குக்கொள்ளாத கூட்டம் கூட்டமான நட்சத்திரங்கள் வான் வீதியில் உலாவிக்கொண்டிருந்தன.

சிறிது நேரத்திற்குள் எங்கிருந்தோ வந்த கருமேகங்கள் படங்கு விரித்தாற்போன்று சந்திரனையும், நட்சத்திரங்களையும் மறைத்துக்கொண்டன. மனிதன்கண்டுபிடித்த அணுகுண்டை விட நான் பலசாலி என்று கூறுவது போன்று எங்கோ ஓரிடத்தில் திடீர் திடீர் என்று இடி இடித்துக் கொண்டிருந்தது மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட மின்சாரவிளக்கைவிட நான் பன்மடங்கு பிரகாசம் பொருந்தியவன் என மின்னி மின்னி சவால் விட்டன மின்னல்கள். மழையும் பொழியத்தொடங்கியது. இத்தகைய பயங்கரமான நிலையிலிருந்து தப்பித்து வீடெய்திவிடவேண்டும் என்று எண்ணி கீழ்நோக்கி விரைவாக இறங்கினேன்.

"நில் மனிதனே... ஏன் பயப்படுகிறாய்?" என்ற கேள்விகள் திடீரென்று கேட்கப்பட்டன.

திகைத்தேன் ...அண்ணாந்து பார்த்தேன். வேறொன்றும் இல்லை. கருமேகங்களிலிருந்து பொழிந்த மழைதான் அவ்வாறு கேட்டன. அலைகள் மீண்டும் பேசத் தொடங்கின.

"மனிதனே....! கேள். மனிதவர்க்கத்தில் நடக்கும் கொடுஞ் செயல்களையும் ஆராய்ந்து அவற்றை நீக்கும் பொருட்டு பாடுபட்டு வெற்றிகண்டோர் பலர். அத்தகையோர் பிறர் சுகத்தையே தன் இன்பமென மதித்தனர். அத்தகையோர்களில் நானும் ஒருவன் என நானே கூறிக்கொள்ள என் நா அஞ்சுகிறது. ஏன்? நீ கற்றுக்கொண்டது கைம்மணளவுதான்; ஆனால் கல்லாதது, அறியாதது உலகளவு உள்ளது. அவற்றுள் இதுவும் ஒன்றே"

"மனிதனே! இன்னும் கேள். உங்கள் சமுதாயத்தைக்கண்டு கண்ணீர் உகுப்பதே அல்லது நான் வேறொன்றும் செய்வதறியேன். கடவுள் என்னை, மனிதவர்க்கத்தின் தீச்செயல்களைக் கண்டு கண்ணீர் உகுப்பதற்காகவே பிறப்பித்துள்ளார். நான் உங்களுக்காக அழுகிறேன். ஆனால் நீங்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கிறீர்கள்! அறியாமை! அறியாமை! மடமனிதனே! நன்மை செய்யும் ஒருவனுக்கு உன் சமுதாயத்தார் காட்டும் அன்பு இதுதானா?

இன்னவை அன்ன ஊழல்கள் உன் சமுதாயத்தில் உழன்று வருகின்றன. ஆனால் முன்னேற்றத்தின் முகட்டை முட்டிவிட்டேன் என்று மட்டும் மார் தட்டிக் கூறுகிறீர்கள். இன்னும்போய் உன் சமுதாயத்தைப் பார். அன்று கடற்கரையிலே உன் இனத்தாரை உன் இனத்தாரே மிருகத்தைவிடக் கேவலமாக நடத்தினதைக் கண்ணுற்றாயே! அம்மட்டுமா!... இன்னும் எத்தனையோ கொடுமைகள்! கொடுமைக்கு உள்ளாகி வாழ்க்கைப் படகுக்கவிழ்ந்து நடுக்கடலில் விழுந்து தத்தளிக்கும் உன் இனத்தார் எத்தனைபேரோ? அதேசமயத்தில் துன்பத்தின் சமாதியிலே இன்பம் அடையும் அட்டைகள்-மின்மினிகள்எத்தனையோ! அம்மம்ம! நினைத்தாலே நெஞ்சம் சுடுகிறது. இக்கொடுமைகளைத் தவிர்த்து உங்கள் சமுதாயத்தை நல்ல நிலையில் சீர்திருத்தி அமைக்க முயன்ற பெரியோர்கள் எத்தனைபேரோ! சிந்தித்துப் பார்—ஏடுகளைப் புறட்டிப் பார்! தெரியும். பிறர் நலனே தன் நலமாகக் கருதிய கிருஸ்து என்ன! போரைத் தவிர்க்க முயன்ற அசோகர் என்ன! ஒற்றுமைக்குழைத்த முகம்மதுநபி என்ன! அன்பை நிலைநாட்ட நின்ற புத்தர் என்ன! அடிமைகளை ஒழிக்க அரும்பாடுபட்ட ஆப்ரஹாம் லிங்கன் என்ன! சுதந்திரப்போராடிய லெனின் என்ன! நிறவேற்றுமையைத் தவிர்க்க உழைத்த மகாத்மா காந்தி என்ன! இன்னும் இன்னோரன்ன அறிஞர்கள் எத்தனைப்பேரோ? இவர்களை எல்லாம் உன் சமுதாயம் உயிரோடிருக்கும் போதே போற்றிப் புகழ்ந்ததா? பின் என்ன செய்தது? சிலுவைக்கும், கல்லடிக்கும், துப்பாக்கிகளுக்கும் இரையாக்கிற்று. உங்கள் சமுதாயத்தை நல்வழியில் திருத்திக்கொள்ளுங்கள். விலங்குநிலைக்குத் தாழ்ந்துவிடாதேயுங்கள். உங்கள் அண்டை அயலானை மனிதனுகப் பாருங்கள். நாட்டிலே தோன்றியுள்ள அட்டைகளையும், மின்மினிகளையும் அழித்து மானிட ஜாதிக்கே புதுவாழ்வுப் பாதையை அமையுங்கள். வெற்றி உங்களதே!'

கேட்டுக்கொண்டே வந்த குரல் நின்றது. திடீரென்று திடுக்கிட்டுப் பார்த்தேன்....வேறொன்றும் இல்லை; அதுவரைப் பொழிந்துகொண்டிருந்த மழை திடீரென்று நின்றதுதான் காரணம். அத்தோடு என் சிந்தனைகளும் சிதைந்துபோயின.

"ஈனம்"

—[P. தங்கராஜ், 6-ம் படிவம்]—

(1) எந்நாளும் பொன்னாளென்று கழிக்கும் ஏந்திழையாள்தான்
இருள் நீக்கி விழித்துக் கொண்டு தாதி நோக்கி
தன்னகத்தில் நடந்திருக்கும் புதுமை கண்டு
தான் என்ன செய்வேனென்று தயங்கலுற்றாள்

(2) முன்னொரு நாள் தன் கணவன் எங்கோ சென்று
முயங்கி யிரு மானைத்தான் கொன்றானென்று
தனக்கு ஒரு மகவும் இனி கிட்டா தென்று
தாதியிடம் கூறிக்கொண்டு தயங்கலுற்றான்.

(3) அப்பொழுது அவள் கணவன் அருகே வந்து
அழுதிருந்த காரணத்தைச் செப்பவென்று
சொப்பனத்தை உணர்த்தலுற்ற தாதியவள்
சொன்னபடி சொல்லுகின்றாள் கேட்கலுற்றான்.

(4) மற்றபடி ஒன்றும் இனி இல்லையென்று
மறுகணமே செல்லலுற்றான் கோட்டம் நோக்கி
செய்த வொரு தவறினைத்தான் பொறுக்காயென்று
செப்பிவிட்டு மூவுலகமும் வந்து நின்றான்.

(5) அங்குள்ளான் பூசாரி என்போன் அவன்
அம்மனும்மை ஆடிரண்டு கேட்குதென்பான்
சொன்னபடி தருகிறேன் என்று விட்டு
சுறுசுறுப்பாய் செல்லலுற்றான் வீடு நோக்கி.

(6) அங்கிருந்து மனைவியிடம் காரணத்தை
அவிழ்க்காமல் வைத்துவிடு என்று விட்டு
சேதி ஒன்று மறியாத ஆடிருக்கும் பட்டி சென்று
சொல்லப்பா விலை சீக்கிரத்தின் என்றான்.

(7) சொன்னபடி விலையைத்தான் கொடுத்துவிட்டு
சுருட்டை யிரு ஆடுகளைப் பிடித்துக்கொண்டு
வெட்டி யிரு ஆடுகளை வீழ்த்திப் பின்னர்
விளங்குகின்றான் காளியம்மன் கோவில் முன்னே

(8) தீர்ந்ததினி நம் கவலை தீர்ந்ததென்று
திரும்பி அவன் சென்றுவிட்டான் புல்லோனுகி
தன்னுயிர்போல் மன்னுயிரைப் பேணுனுகி
தனி ஆடு இரண்டினையும் கொன்றுவிட்டான்

(9) இப்படியும் தமிழ் மரபில் இருந்தானென்றல்
இவ்வளவும் தமிழ் மரபுக் கீனமாகும்
தமிழுக்கீனம் தன்னுயிர்க்கும் தமிழ்த்
தாய்க்கும் ஈனமாமே!

சரித்திரமும் - சாஸ்திரமும்

—[P. தங்கராஜ், 6ம் படிவம்]—

சம்பாஷனை

முருகன்: முத்து உனக்கு எந்தப பாடத்தில் விருப்பம அதிகம்?

முத்து: எனக்கு விஞ்ஞானம் படிப்பதில்தான் விருப்பம் அதிகம். உனக்கு எந்தப் பாடத்தில் விருப்பம் அதிகம்?

முருகன்: எனக்கு சரித்திரம் படிப்பதில்தான் விருப்பம் அதிகம். ஒரு நாட்டின் வரலாற்றைப் படிப்பதால்தான் நமக்கு முந்தினவர்களுடைய ஆற்றச் செயல்களையும், அறிவு நுட்பத் திண்மையையும் காண இயலும். அவர்கள் வாழ்ந்த விதம், ஆட்சி செய்த விதம், ஆட்சியின் சிறப்பு இவற்றை அறியமுடிகிறது. உதாரணமாக கி. மு. 320-ல் ஆட்சி செய்த அசோகர் சரித்திரத்தின் வாயிலாக தற்போதும் மகா அசோகர் என்னும பெயர் மங்கி மறைந்தொழியாமல் நிலவுகிறது. அதன் அறிகுறியாகத்தான் தேசியக் கொடியில் அசோகச் சக்கரம் அச்சிடப்படுகிறது. இதன் காரணங்கள் யாவும் சரித்திரத்தைப் படிப்பதாலேயே தெளிவுறத் தெரிகிறது.

முத்து: பழங் கதைகளைப் படிப்பதால் நமக்கு ஏதாவது பயன் உண்டா? முற்காலத்தில் என் பாட்டன் நூறு வேலி நிலங்களை வைத்துக்கொண்டு ஜமீனுகவாழ்ந்தான். என் தகப்பன் தற்போது கர்ணம் வேலைக்குக் கரணம் போடுகிறன் என்று பழம் பெருமை பேசுவதால் பயன் உண்டா?

ஆனல் தற்கால உலகின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் யாவும் விஞ்ஞானம் உதவியால் கண்டு பிடித்த எந்திரங்களைக் கொண்டுதான் நடைபெறுகின்றன என்பது வெள்ளிடைமலை.

சோறு சமைக்க எந்திரம், நீர் இறைக்க எந்திரம், விளக்கு எரிக்க எந்திரம், உழவுக்கு எந்திரம் என்ன! ஒன்றிரண்டு தவிர மற்றவை யெல்லாம் எந்திரங்களைக் கொண்டே இயங்குகின்றன. எந்திரங்கள்தான் உலகத்தில் தூரம் என்பது இல்லாமல் செய்துவிட்டது. பல்லாயிரக் கணக்கான மைலுக்கப்பால் உள்ள ஒருவரோடு நேர்முகமாகப் பேசுவது போல் பேசமுடிகிறது. இங்கிருந்து விமானங்களின் உதவியால் பல்லாயிரக் கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள ஒரு இடத்தை சில மணி நேரத்தில் அடையமுடிகிறது. மலையின் அடிபாகத்தில் பூமியில் தங்கம் இருக்கிறது என்று கண்டு பிடிக்க முடிகிறது. ஒருவரின் உடலின் அவயவங்களில் ஏதேனும் உள்ள குறைபாட்டை "எக்ஸ்ரே" எக்ஸ்ரேமூலம் கண்டு பிடிக்கிறான். இஃதெல்லாம் விஞ்ஞானத்தின் விளைவுதானே!

சரி,

முருகன்: இதே விஞ்ஞானத்தைக் கண்டு பிடித்த மனிதன் அணுகுண்டைக் கண்டு பிடித்து ஆயிரக்கணக்கான மக்களை அரை நொடியில் அழிக்கின்றான். வாயுங்களைத் தயாரித்து ஆகாய விமானக் விட்டுத் தெரிந்த மனிதன் அந்த வாயுக்களைக்கொண்டே உலகத்தை நாசமாக்குகிறான். இவ்வாறுகத்தான் நடந்த முதல் மகா யுத்தத்தில் லக்ஷக்கணக்கான மக்கள் இறந்தனர். இதுவும் விஞ்ஞானத்தின் விளைவுதானே?

முத்து: பால் வார்க்கும் போது குழந்தை புரை ஏறி உயிரிழந்தால் இனி பாலே வேண்டாம் என்று கூறுவதா? அடுப்புப் பற்றுவதற்காக உள்ள நெருப்பு வீட்டுக் கூரையில் பிடித்துக்கொண்டால் இனி நெருப்பே வேண்டாமென்று கூறுவதா?

முருகன்: ஆகவே ஒன்றில் நன்மைகளும் தீமைகளும் கலந்து ரோஜா செடியைப் போன்று இருக்கும். எனவே ஒனறு கெட்டது ஒன்று நல்லது என்று கூறல் கூடாது. இனி நானும விஞ்ஞானம் படிப்பேன். விஞ்ஞானமும் அவசியம் தான்.

முத்து: இனி நானும் சரித்திரம் படிப்பேன்.

[இருவரும்] எனவே ஒரு நாட்டிற்கு சரித்திரமும் விஞ்ஞானமும் பசுவும் கன்றும் போலவும், நீரும் பாசியும் போன்றும், தாயும் சேயும் போன்றும் இன்றியமையாதது. இதில் ஒன்றை நிந்திப்பவர்கள் தங்களை நிந்திப்பதற்கு ஒப்பாகும்,

"நிரபராதி"

உ. ஷெர்புதீன், ஆறம் படிவம்

துறையூர் என்னும் கிராமத்திலே துரைசாமி என்பவர் மிகவும் பணக்காரர். அவர்தான் அவ்வூரின் பெரிய தனக்காரர். அவர் மிகுந்த செல்வம் பெற்றிருந்தபோதிலும்கூட தனது சொத்தை ஆள்வதற்கு ஒரு மகன் இல்லையே என்று மிகவும் வருத்தப் பட்டு பல கோயில்களுக்குச் சென்று அநேக தருமங்கள் செய்து கடைசியில் ஓர் புத்திரனை பெற்றெடுத்தார்.

புத்திரனை பெற்றெடுத்த சந்தோஷத்தால் பல தருமங்கள் செய்தார். ஊருக்கே ஓர் விருந்து செய்து தனது மகனுக்கு தம்பி துரை எனப் பெயரிட்டார். மகனுக்கு லாரிகளிலும் வண்டிகளிலும் விளையாட்டு சாமான்களை வாங்கிக் குவித்தார். மகனை பாதுகாத்து வருவதற்கு அநேக கூலியாட்களைப் போட்டு உயர்ந்த சம்பளங்களை கொடுத்தார். மகனுக்கு இருபது ஆண்டுகள் ஆனதும் விவாகம் வெகு விமரிசையாய் செய்யப்பட்டது. மகனுக்கு கலியாணம் நடந்த ஒரு வருஷத்தில் தகப்பனும், அடுத்த ஆறு மாதத்தில் தாயும் இறந்துவிட்டார்கள். பிறகு தம்பிதுரைதான் இவ்வளவு சுகமாக இருந்தபோதிலும் தனக்குத் தாய் தந்தை இல்லாமல் இறந்துவிட்டார்களே என்று மனம் வருந்தினன்.

இப்படியிருக்கையில் ....

கந்தன் என்பவன் மிகவும் ஏழை. இவனுக்கு முத்து என்ற மகன் ஒருவன் இருந்தான். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பதைப் போல' தான் கூலிவேலை செய்வதில் கிடைக்கும் ஊதியத்தில் கால் பங்கு தனது குழந்தைக்கு என்று ஒதுக்கி வைத்து விட்டு மீதியைத்தான் செலவு செய்வான். முத்து வயது பத்து. இந்த சமயத்தில் தாயும், தகப்பனும் காலராவில் இறந்து விட்டனர்.

தாயையும் தகப்பனையும் இழந்து அனாதையாய் ஆதரவில்லாமல் கஷ்டப் படுகிறேனே என்று நினைந்து கோவென்று அழுதான். பிறகு மனதை திடப்படுத்திக்கொண்டு நானும் தகப்பனைப் போல் கூலிவேலை செய்ய வேண்டியதுதான் என்று எண்ணி கூலி வேலைக்காக ஊர் ஊராக பலநாள் உணவில்லாமல், கால்கள் நடக்க முடியாமல் தள்ளாடி, தள்ளாடி, வெகுதூரம் நடந்து மிகவும் களைப்புடன், ஒட்டிய வயிறுடன், குழி விழுந்த கண்களுடன் துரையூர் போய்ச் சேர்ந்தான்.

அங்குள்ள மக்கள் முத்துவைப் பார்த்து நீ கூலிவேலை செய்ய வேண்டுமானால் தம்பிதுரையைப் போய்ப் பார் என்றார்கள். தம்பி துரையை அடைந்து தான் வந்த விஷயத்தை விவரமாக தம்பி துரைக்கு முத்து

எடுத்துக் கூறினன். தம்பி துரையும் அதற்கு இசைந்து வேலைக்கு வைத்துக் கொண்டார்.

ஓர் நாள் தம்பிதுரையும், மனைவியும் சினிமா பார்ப்பதற்காக முத்துவை பங்களாவைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு காரில் புறப்பட்டார்கள் அன்றிரவு முத்துவும், காவலாளிகளும் தூங்கி விட்டார்கள். தம்பிதுரை பங்களாவில் இல்லையென்பதை அறிந்த திருடர்கள் நடு இரவில் பங்களாவின் உள்ளே சென்று பெட்டியை திறந்து 40 பவுன் மதிப்புள்ள செயினும் ரூபாய் பத்தாயிரமும் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டனர். காலையில் முத்து எழுந்து காலைக் கடன்களை முடித்து வரவெளியே சென்றான். அது சமயம் தம்பிதுரையும், மனைவியும் சினிமா பார்த்து விட்டு காலை பங்களாவின் முன்னே காரிலிருந்து இறங்கினார்கள். அன்று மாதத்தின் கடைசி நாள். ஆகையால் வேலை ஆட்களுக்கு சம்பள பணம் கொடுப்பதற்காக தன் அறையில் சென்று பெட்டியை திறந்தார். அதுசமயம் ரூபாய் பத்தாயிரம் ரூபாயும், செயினும் காணவில்லை. முத்து வெளியே போய் காலை கடன்களை முடித்துக்கொண்டு பங்களாவின் உள்ளே நுழைந்தான். நுழைந்ததும் முத்துவைப் பார்த்து எங்கே சென்றாய் என தம்பிதுரை கேட்டார். அதற்குக் காலைக்கடன்களை முடித்து வர வெளியில் சென்றிருந்தேன் எனக் கூறினன். தம்பிதுரை முத்துவைப் பார்த்து பெட்டியிலிருந்த பணமும் செயினும் எங்கே என்று கோபத்துடன் கேட்டார். முத்து: ஐயா! இதென்ன அதிசியமாக இருக்கிறதே என்று கேட்டான். எல்லாம் உனக்கு அதிசயமாகத்தா னிருக்கும் என்று சொல்லிக்கொண்டே, முத்துவின் கையில் விலங்கை மாட்டி போலீஸ் ஸ்டேஷனுக்கு புறப்பட்டார் தம்பிதுரை.

நிரபராதியான முத்து நீதிபதியின் முன் கூண்டில் நிறுத்தப்பட்டான்.

நீதிபதி: உனது பெயர் என்ன?

முத்து: முத்துங்க

நீதிபதி: எத்தனை வருட காலமாய் தம்பிதுரை வீட்டில் வேலை பார்த்து வருகிறாய்?

முத்து: ஐந்து வருடமாக.

நீதிபதி: இவர் வீட்டில் திருடியது நீதானா?

முத்து: இல்லீங்க நான் "நிரபராதி"

நீதிபதி: பிறகு யார்தான் திருடியது?

முத்து: ஐயா தெரியாதுங்க நான் "நிரபராதி" இனிமேல் எனக்கு ஒன்றும் தெரியாது.

நீதிபதி: நீ நிரபராதி என்பதற்கு யாதொரு சாட்சியமுமில்லை. மேலும் உன்னைத்தவிர திருடுவதற்கு வேறு யாருமில்லை. ஆகவே உன்னை குற்றவாளி எனத் தீர்மானித்து 10 வருட கடுங்காவல் விதிக்கிறேன் என்றார். அடுத்தபடி போலீஸ்காரர்கள் முத்துவை சிறையில் தள்ளினர்.

ஆறு மாதத்திற்கு பிறகு......

ஓர் நாள் தம்பிதுரை சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு பேப்பர் பார்த்துக்கொண்டிருக்கும் சமயம்

த்பால்காரன் தந்தியென் கையில் நீட்டினன். பிரித்துப் பார்த்தார். தம்பிதுரைக்கு,

உனது நகைகள் திருடுபோனது கிடைத்துவிட்டது. உடனே திருச்சிக்கு வரவும்.

அன்பன்
சுந்தரம்

தம்பிதுரை வீட்டில் திருடிய நகைகளை சுந்தரத்திடம் விற்கும் பொழுது சுந்தரம் சந்தேகப்பட்டு போலீஸுக்கு ஆள் அனுப்பி திருடனை கைது செய்தார். சுந்திரத்துக்கு தம்பிதுரை நண்பன் ஆனதால் தந்தி அனுபபினர். தம்பிதுரை திருச்சி வந்ததும் தம்பிதுரை, சுந்தரம் இருவரும் சேர்ந்து போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நகைகள் தங்களது என்று நிரூபித்து பெற்றுக்கொண்டு முத்து "நிரபராதி" என்று தம்பிதுரையே நீதிபதியிடம் சொல்லி திருடனை சிறையில் அடைத்தார்கள்.

சிறையிலிருந்து வெளிவந்த முத்துவை கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதார் தம்பிதுரை. முத்து உத்தமன் என்பதை தெரிந்து தனது சொத்தையெல்லாம் முத்துவுக்கு கொடுத்துவிட்டு சில மாதம் சுகமுடன் வாழ்ந்துவிட்டு இறந்தார் தம்பிதுரை. பிறகு நிரபராதியான முத்து கவனத்துடன் வாழ்ந்து வந்தான.

இயற்கையின் இன்பம்

—[V. முத்தையா, 6ம் படிவம்]—

கதிரவன்:—இளங் காலையில் கீழ் திக்கில் எழும் பகலவன் மேல் திக்கில் மறையு மிறுதி வரையில் மண்ணுலகிற்கு எண்ண முடியா வெள்ளி போன்ற ஒளியை அள்ளி அன்போடு அளிக்கின்றான் அவ்வொளியை ஒருயிர் முதல் ஆருயிர்கள் ஈறாக அனுதினமும் அடைகின்றோம். கதிரவன் துலக்க ஒளியின்றேல் விளக்கமில்லை என்பது வெட்டவெளி. காரிருளை நீக்கி பாரினை சீரினில் உலகிற்குக் காட்டுவதும் பகலவன். உலகு உய்ய நீரை வாரிக் கொடுத்ததற்கும் இவ்வாதித்தனின் ஒளியே காரணமாகும். உயிர்களின் உடலினுள்ள எலும்பை ஊக்கம் பெறச் செய்வதில் இவன் ஒளியும் உதவுவது கண்டோம். நலம் கண்டோம் பல நானிலத்தில் நற்பகலவனின் அருளால். கதிர் ஒளியை மக்களுக்கு விழி எனக் கூறலாம்.

மாரி:— மாரியின்றேல் பாரில்லை, ஆறில்லை, ஊரில்லை, ஏரில்லை, வாரில்லை, சீரில்லையாம். பாரினில் அழகு அளிப்பது நீரேயாகும். பாருக்கு பசும் படலம் போர்த்துவதும் நீரே. உடலில் ஓடும் உப்பு கரைந்த நீரே உயிர்களை

திலக்கச் செய்கிறது. ஓடையில் ஓடும் மழையின் நீரே உழவனைக் கழனியில் பணி செய்து பல பயிர்களை காணச் செய்யத் தூண்டுகிறது. பண்டு தண்டமிழ் நாடுப் புகழ் கொண்டதற்கும் நீரே காரணம், பஞ்சமா பாதகராய வஞ்ச நெஞ்சம் கொண்டவரை பராமரித்ததும் இந் நீரின் சிறப்பேயாகும். பசி பசி என வந்தோர்க்கு புசி, புசி எனவும் வசி, வசி என வரவேற்றாக கொண்டு இருந்ததற்கும் இம் மாரியின் நீரே தான் காரணமாகும். மாரியே மாநிலத்தை மாண்புறச் செய்யும் மகோன்னதம் வாய்ந்த சாதகம்.

வளி:—வளியின்றேல் பலியாகும் பார் உயிர் எல்லாம் மன்னடைக்கும், கொண்டைக்கும் தலைமயிர் அழகாவது போன்றும், பயிர்கள் பாருக்கு பலனாதல் போன்றும், உயிர் உடலுக்கு உறுதுணையாதல் போன்றும் ஈரபலிபிலாவது இருந்தற்கு வளியேக் காரணமாகும். வளியில் நல் வளி, தீவளி என இருவகை என்பன. அதை கழனியில் உழவனும் இயற்கையிலும், இயற்கையில் உண்டாகும் பயிரும், உடலில் இறைவனால் ஈயப்பட்ட உயிரும் ஒன்றாக்கொன்று உண்ணுகிறது. வளியே உயிரை வையத்தில் உய்ய வைக்கும். பெற்றி வாய்ந்த சாதகமாகும்.

நெருப்பு:— நெருப்பின்றேல் காலத்தின்போக்கில் பொருளில் விருப்பு ஏற்படாது, ஆனால் அருவறுப்புத்தான் உண்டாகும் நெருப்பே பருப்பையும், மற்ற பொருள் வகைகளையும் பக்குவம் செய்வதும், பருப்பை (ஈரபலி)ப் பக்குவம் செய்வதும் ஆகும். இல்லத்திற்கு சிறப்பியம்படியான திருவிளக்கை நாம் ஏற்றுகிப்பதும் இந் நெருப்பின் காரணமாகும். உலகிற்கு நெருப்பும் ஓர் பொருப்பாகும்

மண்:—பொன்போன்ற செந்நெல்லை புணரச் செய்வதும் மண். மட்காதப் பொருளை கட்காது உட்கொண்டு மட்கச் செய்வதும், பயிர்களை விளையச் செய்வதும் மண்ணேயாகும். கதிர் ஒளியை ஏற்று அதன் விளைவால் நீரைப் பருகி, பயிர்களை திலக்கச் செய்வதும் மண்ணே. மண் பயிர்பச்சைகளுக்கு ஊன்றுகோலாதற்போல் மக்களுக்கு உறைவிடமும் ஆயது. மண்ணே மன்னிய உயிரைப் பன்னும் தன்னிடமாக தன்மையாகக்கொண்டது.

விண்:—விண் என்பது மண்ணுலகிற்கு கொடைத் தொழிலைச் செய்கிறது. விண்ணிலுள்ள மேகம் இன்றேல் பாரிலுள்ள நீரை மோகிப்பார் யாரும் இல்லை விண்ணைவிழியாக் கொண்டு கண்ணை உண்டு என எடுத்துக்காட்டும் செங்கதிரவன் வானில் செலவிடுகின்றான். இது பண்டைநாளிலிருந்து தொன்று தொட்டு நிகழும் நிகழ்ச்சியாகும்.

கல்வி

—[தி. அய்யாக்கண்ணு, 6ம் படிவம்]—

மனிதர்களாலே தேடற்பாலன வாகிய பொருள்கள் கல்விப்பொருள் செல்வப்பொருள் என இரண்டாம். கல்வியாவது கற்றற்குறிய நூல்களைக் கற்றல். கல்வியெனினும், வித்தை யெனினும், தொழிலெனினும் பொருந்தும்.

செல்வப்பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர் முதலியவர்களாலே கொள்ளப்படும் கல்விப் பொருளோ ஒருவராலும்கொள்ளப்படமாட்டாது செல்வப்பொருள் மழையினால் ஏற் படக்கூடிய அதிக வெள்ளத்தாலா யினும், அக்கினியாலாயினும் அழியும் தன்மையுடையன.கல்விப்பொருளோ ஒன்றாலும் அழியமாட்டாது. செல் வப்பொருள் பிறருக்குக் கொடுக்குந் தோறும் குறைந்துகொண்டே வரும். கல்விப்பொருளோ பிறருக்குக் கொடுக்குந்தோறும் பெருகிக் கொண்டே வளரும். செல்வப் பொருள் சம்பாதித்தல், காப்பாற்றல் இழத்தல் என்னும் இவைகளாலே தனக்குத் துன்பம்செய்து, பலரையும் பகையாக்கும். ஆதலினாலே, செல்வப் பொருளினும், கல்விப்பொருளே சிறப்புடையது.

உயரியகுலமும், அழகும் செல்வ மும் உடையவராயினும் கல்வியில்லா தவர் மாக்களாகவே இவ்வுலகில் மதிக்கப்படுவர். அரசர்களுக்குத் தன் தேயத்தில் மட்டிலுமே சிறப்புண் டாம். கற்றவருக்கு அவர் சென்ற இடங்களிலெல்லாம் சிறப்புண்டா கும். ஒரு தோட்டத்திலே பயிர் செய்வோமாயின் காலம் தவறாது தண்ணீர் பாய்ச்சிக், களையெடுத்துக் காப்பாற்றினால்தான் அப்பயிர் ஓங்கி வளர்ந்து பலன் தரும். அதுபோல் நாமும் நமது அறிவை வளர்த்து கல்வியில் வல்லவராக வேண்டு மாயின் நம் மூளையென்னும் நிலத் திற்கு கல்வியென்னும் தண்ணீரைப் பாய்ச்சி, அறியாமையாகியகளையைப் பிடுங்கி எறிதல் வேண்டும். கற்றவர் களுக்குத்தான் உலகில் நடைபெறு கின்ற செய்திகளெல்லாம் தெரியும். கல்லாதவர் உலக நிகழ்ச்சிகளை அவ் வப்பொழுது அறிய முடியாமல் கிணற்றுத் தவளைபோல வாழ்வர். ஆகவேதான் திருவள்ளுவர்கூட கற்றவர்கள்தான கண்களையுடையவர் களென்றும், கல்லாதவர்கள் கண்களை யுடையவராயிருப்பினும் கண்ணில்லா தவர்களென்றும் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார். ஆகவே ஒவ்வொரு வரும் கல்வியை அவசியம் கற்றல் வேண்டும். அதனாற்றான் குடியரசு இந்தியாவில் முதியோர் கல்விகூட ஏற்படுத்தி எங்கும் சிறப்புடன் நடத்தி வருகின்றனர். மேலும் ஆசிரி யர்களுக்கும் பல இடங்களில் கல்லூரி கள் அமைத்து பயிற்சியளித்து வரு கின்றனர். கல்வியில் அரசாங்கத்தினர்

பெருமுயற்சி உடையவராய் இருக்கின்றனர் என்பது யாவருக்கும் வெள்ளிடைமலை என விளங்குகின்றது.

அழுக்குப்படிந்த சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கமாட்டாது. அழுக்குப்படியாத சீலையிலே சாயம் நன்றாகப்பிடிக்கும் என்பதுபழமொழி அதுபோல சிறுபிராயத்திலே கற்கும் கல்வி பசுமரத்தில் ஆணி அடிப்பதைப் போன்று மனதிலே நன்கு பதியும். நாம் வாழ்க்கையில் ஈடுபட்டு அவற்றால் ஏற்படக்கூடிய இன்னலை நீக்கும் பொருட்டு முதிர்ந்த வயதிலே கற்கும் கல்வி மனதில் நன்றாகப் பதியமாட்டாது. ஆதலினாலன்றோ தமிழ் நாட்டின் திலகமெனத் திகழ்ந்த பெண்பாற் புலவராகிய ஔவையார் “இளமையிற் கல்” என்று தம் நூலில் கூறியுள்ளார்.

கல்வியைத் தக்க ஆசிரியரிடத்தே சந்தேகம் அறக் கற்றல் வேண்டும். சந்தேகம் கேட்பதைப்பற்றி வெட்கம் கொள்ளுதல்கூடாது. சந்தேகமாவது இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றல். இவ்விதம் கல்வியைக்கற்க முதலில் இளமையும், உண்மையும், பின் பொருளும் வேண்டும். இவையெல்லாவற்றையும்விட மாதா, பிதா, குரு தெய்வம் என்பது போல் ஆசிரியரைத் தெய்வமாக நினைத்து ஒழுகுதல் இன்றியமையாதது. கல்வியைகற்றற்கு சிறந்த கருவி ஆசிரியருடைய உள்ளத்திலே அருள் உண்டாகுமாறு நடத்தல். ஆதலினாலே கல்வி கற்கும் மாணாக்கர் ஆசிரியரை விதிப்படி சிரத்தையோடு வழிபட்டே கற்றல் வேண்டும். வழிபாடாவது இன்சொற்கூறல் வணங்குதல் என்பனவற்றை ஆசிரியர்கள் வாயிலாக அறிகின்றோம்.

கல்வியில் தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். கல்வி கற்பதில் சோம்பல் உடையவராய் இல்லாமல் ஊக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும். மணற்கேணியைத்தோண்டுந்தோறும் ஊற்றுநீர்சுரந்து பெருகிக்கொண்டே வருதல்போல் கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்துகொண்டே வரும். ஆகவே கல்வியை மேன்மேலும் கற்றல் வேண்டும். இவ்வாறு கல்வியைக் கற்றவர் தாங்கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும், தம் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தலும், எல்லோருக்கும் உறுதியைப் போதித்தலுமாகிய இம்மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும். எல்லாத் தானங்களிலும் வித்தியாதானமே சிறந்தது என்பதை மும்மையும் அறிந்த மூதறிஞர் கூறுகின்றார்கள். ஆகவே வித்யாதானத்திற்குச் சிறந்த தருமம் யாதொன்றுமில்லை. தாங்கள் கற்ற கல்வியை பிறருக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலேயுள்ள நச்சு மரத்திற்கும், கற்பிப்பவர்கள் இனிய கனிகளைக் கொடுக்கும் மரத்திற்கும் சமமாவர்.

"பாவையின் கண்ணீர்"

ப. கண்ணன், ஆறாம் படிவம்

ஏழையின் வயிற்றினிலே பிறந்த மங்கை
ஏங்கி தவழ்ந்து சென்றாள் பாதையினில்
பட்டம் படித்துப் பெற்ற அப்பாவை
பதறியே வழி நடந்தாள் கண்ணீருடன்.

செல்வக் குணக் கடலில் மூழ்கி இரவு மங்கை
சிவந்தத் தண்ணீரில் உலாவுகின்ற
கலக்கமற்ற கண்களில் நீர்பாய — அக்
கருவிழுந்த செவ்விழிகள் சிவக்கக் கண்டும்.

அப்பொழுது வாட்டமுள்ள ஒரு செல்வ மகன்
அவ்வழியினிலே செல்ல வந்தான் ஆண்மையொடு
பாவையின் கண்களில் நீர்பெருகி வழிந்தோட
பதை பதைத்து நின்றிட்டான் அப்பையன்.

இருவரும் மறைந்து உயிர் வாழ ஒரு நாள் முழுதும்
இமையுற்ற செல்வ மகன் இவளுக்காக
இரக்கமுற்று சிந்தித்தான் இத்தனைத்தும்
இதயமெலாம் நேர்சென்று குத்தியது உடம்பினிலே.

தாழ்வுற்ற மங்கையின் சேய்மை நிலையைக் கண்டு
தன்னந்தனி விடாமல் அழைத்துச் சென்றான் அப்பையன்
இருவரும் வீட்டை நோக்கிச் செல்லும்போது
இவளுடைய வாயினிலே சிறுவார்த்தை வர!

ஏவலுடன் கேட்டிட்டான் என்னவென்று
ஏக்கமுற்று சொல்ல வந்த பாவை அவள்
செல்வ மகனுடனே நான் வந்தால் — ஊரில்
சிந்தித்துப் பார்ப்பார்கள் உன் பெற்றோர்.

கள்ளர் பயமான காட்டை விட்டுச் சென்று
கதிரவன் மறைந்துவிட்ட அன்றிரவில்
கண்ணுறங்க மாடி படி வீடு அழைத்துச் சென்றான்
கலக்கமொடு "கண்ணீருடன்" புலம்பிச் சென்றாள்.

இருவரும் உறக்கமின்றி உயிர்கள் ஆட
இருட்டடைந்த வீட்டினிலே உல்லாசமாய்
ஏன் இந்த விதியும், வியப்பும் என்றாள் அப்பாவை
ஏங்கிய முத்ததுடனே "கண்ணீர்" விட்டாள்.

செங்கதிரோன் உதித்துவிட்ட மறுநாள் காலை
செல்லரித்த பூச்சிகள் போல் பெற்றோர் சீற
அன்னம், தண்ணீர் இல்லாது அழைத்து வந்தான்
அப்பாவி, என்னை அலைமோத விட்டுவிட்டு சென்றிட்டான்.

செல்வச் செருக்கினிலே மூழ்கியிருந்த பெற்றோர்கள்
சீறிட்டுப் பாய்ந்தார்கள் என்னை வந்து
அடஅடா! நான் என்ன செய்வேன் அம்மா ?
அருமை உன் மைந்தனால் இங்கு வந்தேன்.

ஆண்மையோ பேச வந்த அற்பனாயே!
அடி போடி வீட்டைவிட்டு வெளியே என்றார்
வந்தவழி செல்ல வந்தாள் "அப் பாவை"
வாழ்க்கையின் நெறியெல்லாம் விட்டொழித்தாள்,

காவலர்கள் இல்லாத கடும்புனல் காட்டில் வந்து
கண்ணீரும், களைப்பும் என்நெஞ்சில் தோன்றுதே
கதியற்ற பெண்களுக்கு கற்பனைகள் தோன்றுமா ?
கானல் வெயிலினிலே கலக்கமுற்ற என் கண்களில்

இறைவன் அருளிச்செய்தான் இருக்கிறேன் வையகத்தில்
இறுமாப்புக்கொண்டு நான் படும்துயரம் தீர்க்க
"கண்ணீர்" கண்ணீர் என்று கருதாத என்நாவில்
காளையைப் போல் கதறுகின்றேன் "கண்ணீருடன்"

அல்லல்படும் துன்பத்தை ஆதரிப்பார் யாருமில்லை
ஆண்டவன் இட்டதெல்லாம் நான்படும் துயரந்தானே!
அனியாய உலகத்தில் அவதரித்தப்பாவை ஒருத்தியடா!
அரைவயிற்றுக் கஞ்சிகூட அருந்தவும் இல்லையடா !

தவகுலத்தில் தோன்றிவிட்ட தாழ்மையுள்ள மங்கையவள்
தற்கொலைக்கு நின்றிட்டாள் தனியாக இப்போது
வாழ்ந்தார்கள் பெரியோர்கள் வளமுள்ள இந்நாட்டில்
வாழ்வில் எதைக் கண்டாள் வளமான நாட்டினிலே.

என் சிந்தனைச் சிற்பியெலாம் சீரழிந்துக்கிடக்கின்றன
எண்ணி எண்ணி ஏங்கிவிட்டேன் எழிலான மனதினிலே
பட்சி போன்று தவிக்கின்ற பாமரமக்களையாம்
பரதவிக்க யாம் கண்டோம் "பாவையின் கண்ணீர்"

"அன்பின் உருவங்கள்"

(க. சுப்பிரமணியன், ஆறாம் படிவம்)

தனபாக்யம் நல்ல பெயர்தான். ஆனால் தாயிழந்தவள். கூண்டிலே அடைப்பட்ட கிளியைப்போன்று தன் மாற்றாந்தாயின் துன்புறுத்தலுக்கு ஆளாயினாள். அவள் பெயர் காளியம்மை. காளியம்மை என்னும் அங்காளம்மன் தன கணவனையும் அடக்கும் தன்மையை உடையவள். அதுவுமல்லாமல் அண்ணன் கிருஷ்ண பரமாத்மாவைக்கூட அடக்கும் தன்மையை உடையவள். அவள போல் இந்த காளியம்மை எப்போதும் தன கணவனைத் தன் இஷ்டம்போல் நடக்கும்படி செய்வித்தாள். அன்னையின் ஆதரவு அற்றவளாய் இருந்தாலும், அவளது தந்தையின அனுதாபத்திலேயே அவளையும், அவளது படிப்பையும் வளர்தது வந்தது. தனபாக்கியம பாந்த நோக்கமுடையவள் தனது கிராம உயர்நிலைப் பளளியில் ஆறாம படிவம் வாசித்துக்கொண்டு இருந்தாள். இவளுக்கு ராஜன் என்ற ஒரு தோழன் இருந்தான்.

ராஜன் செல்வந்தர் குடும்பத்திலே பிறந்தவன். ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்ற மொழிக்கிணங்க ராஜன் பெற்றோர்கள் அவனை வளர்த்து வந்தார்கள் சிறு வயது முதல் தனபாக்கியத்துடன் காலம் கழித்து வந்தான். உயர்நிலைப் பள்ளி படிப்பு முடியும் வரையிலும் தனபாக்கியந்துடன் பழகி வந்ததால் இருவருக்கும் அன்பு வளர்ந்தோங்கியது.

தனபாக்கியம் தக்க பருவம் அடைந்ததும் நம் நாட்டு முறைப்படி வீட்டைவிட்டு வெளியே வர முடியாமல் அடுப்பின் அருகிலேயே உட்கார நேர்ந்தது. "சிறு வயதில் நான் மனைவி, நீ கணவன் என்று

சொல்லிக்கொண்டிருப்போம். ஆனால் இப்போது விளையாட முடிய வில்லையே" என்று நாள்தோறும் நினைத்து வருத்தமடைந்துகொண் டிருந்தாள்.

ஒரு நாள் ராஜன் தெரு வழியே போய்க்கொண்டிருக்கும்போது தன பாக்கியத்தை சிற்றன்னை அடித்து அதனால் அவள் அழுதுகொண் டிருந்ததை தன் செவியால் கேட் டான். அடுத்த நிமிடம் அச்சப்தம் அவ்வீட்டிலிருந்து வெளி வரவில்லை. ஏன்? பாம்பாட்டியின் பெட்டியிலே அடங்கிய நல்லப் பாம்பும் மறுமுறை சீறுமோ? சீறாது. அதுபோல் தன பாக்கியம் சப்தம் போடாமல் வீட் டில் ஒரு மூலையிலேயே உட்கார்ந் தாள்.

ராஜன் மிகவும் வருத்தமடைந்து கொண்டு, பரந்த ஜனங்களின் நட மாட்டமற்ற இடத்தில் தன்னந்தனி யே தன் மனதிற்குள் எண்ணி அழுதுகொண்டிருந்தான். அழுகை மேலிட தன் கற்பனையால் எதிரில் தனபாக்யம் இருப்பதாகவே எண்ணி பேச ஆரம்பித்தான்.

"நானோ உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவன். நீயோ தாழ்ந்த குடியில் பிறந்தவள். நம்மிருவரையும் மண மக்களாக மதிக்க என் தந்தை சம் மதிக்கமாட்டார். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. சாதி இரண்டொழிய வேறில்லை என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க, ஏன்! சாதியைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டும். நீயும் நானும் ஒருமனப் பட்டால் யார்தான் நம்மை எதிர்க்க முடியும். இந்நாட்டிற்கு இவ்வான் றோர் மொழியைப் புகட்டவேண்டும். நீயும் நானும் சிறுவயதுமுதல் இதுகாறும் இன்பமாகக் காலம் கழித்தோம். ஆனால் இப்பொழுதோ நீ அடுப்பின் அருகில் சிலைபோல் இருந்து காலம் கழிக்கின்றாய் மேல் நாட்டிலே உள்ள பெண்களின் தன்மைகள் இம்மாதிரியா? இல்லை! இல்லை!! இல்லை!!! என் போன்ற இளைஞர்கள் இந்த நாட்டிலே இருக் கும்வரையில் இப் பழக்கத்தைக் கூடிய விரைவில் ஒழித்துக்கட்டு வேன். இது திண்ணம். தோழர் களையும் எனக்குத் துணையாக உதவிக்குத் தேடிக்கொள்வேன்" பிறகு......

"தனபாக்யம் நான் உன்னை நினைக் காத நேரமே கிடையாது. நீ உன் மாற்றாந்தாயிடம் சிக்கிக்கொண்டது பாயிடம் அகப்பட்ட தவளையைப் போன்று உன் நிலை இருக்கிறது. ஆனால் நானோ உன்னை நினைத்து உன் நிலைமை எண்ணி, உன்னை எப்படி மணம் புரிந்துகொள்ளமுடியும் என்று போவலாய் இருக்கின்றேன். நீ யார்! நான் யார்! நம்மிருவரையும் சேர்ப்பது அன்பின் சிகரமே! அன்பு நம் நிலைகளை உணர்ந்ததோ? உணரா தது. நான் எப்படியும் உன்னைத் திருமணம் புரிந்துகொள்கிறேன். கவலைப்படாதே" என்று தனக்குள் எண்ணினான்.

ஆனால் வீட்டிலோ தனபாக்யம் பக்குவமடைந்தப்பெண் ஆகவே அவள் தந்தை தனபாக்யத்திற்குக் கல்யாணம் செய்து வைக்கவேண்டும் என்றுஎண்ணிக் கொண்டு இருக்கும் போது காளியம்மை தன் தம்பி

அனுமந்தனுக்கு மணம் செய்து வைத்து விடலாம் என்று தன் கணவன் முத்துராமனிடம் சொன்னாள் எரியும் நெருப்பிலே எண்ணெய் வார்த்தாற்போல் இதை அறிந்த தனபாக்யம் மிகவும் வருத்தமடைந்தாள். அன்று இரவே இவ் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று தீர்மானித்தாள். அன்று நள்ளிரவில் யாருக்கும் தெரியாமல் தன் வீட்டை விட்டு வெளி யேறினாள்.

எதிர்பாராவிதத்தில் அன்றிரவ ராஜன், தான் தனபாக்யத்தை வெளியிலே சந்தித்து, வா நாம் வேறொரு ஊருக்குப் போகலாம் என்று கூறிய மாத்திரத்தில் அவள் தன்னுடன் வருவதாகவே கனவு கண்டுகொண்டிருந்தான். போகும்போது தனபாக்யம், பழைய நண்பனும் புதிய காதலனுமாகிய ராஜனை பார்த்து, அழைத்துச் செல்லலாம் என்று எண்ணி, ராஜன் வீட்டின் அருகில் சென்றாள். கதவைத்தட்டினாள். யாரது? என்றான் ராஜன். தனபாக்யம், நான்தான் என்றாள் தனபாக்யமா! ஏன் இந்த நள்ளிரவில் என்று கூறிக்கொண்டு போருக்குச் சென்று வெற்றிபெற்று திரும்பிவரும் வீரர்களை வீட்டிலுள்ளவர்கள் எவ்வாறு வரவேற்பார்களோ அதைவிடப் பன்மடங்கு அதிகமாக உபசரித்தான். நடந்ததை விபரமாகச் சொன்னாள்

புத்தர் தனது சொத்து மனைவி மக்களை எல்லாம் விட்டுவிட்டுச் சென்றாரோ தன் அரண்மனையிலிருந்து, அதே நேரத்தில்தான் ராஜனும் தனபாக்யமும் தன் வீட்டைவிட்டு அநேக பொருள்களை எடுத்துக்கொண்டு சென்றார்கள்.

இருபத்தைந்து மைல்களுக்கு அப்பாலுள்ள "இன்பபுரம்" என்ற கிராமத்தை அடைந்ததும், அங்கு இன்பமாக வாழ்க்கை நடத்தி வந்தார்கள். சில ஆண்டு கழிக்க இவர்களுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அக் குழந்தையைத் தக்க வயது வந்ததும் பள்ளிக்கு அனுப்பினார்கள். அவனிடம் அன்புபாராட்டி வளர்த்து வந்தார்கள். அவன் பெயர் மணிராஜ். மணிராஜ் அப்பள்ளியில் நல்ல மதிப்பெண்கள் பெற்று, நல்ல மதிப்பு அப்பள்ளியில் அவனுக்கு இருந்தது. ராஜனும் தனபாக்யமும் மணிராஜ் இடம தங்கள் தங்கள் பெற்றோர்களின் நிலையையும், தாங்கள் இங்கு வந்த நிலையையும் சொல்லிச் சொல்லி கொஞ்சினார்கள். ராஜன் தன் முயற்சியால் தன் தந்தையைப் போன்று படம் வரைந்து தன் வீட்டில் வைத்திருந்தான். மணிராஜும் இவ் உருவத்தை நன்றாகப்பார்த்து இருந்தான். காலச்சக்கரம் சுழன்று வருகிறது.

அன்று ஒருநாள் ராஜன் தகப்பனார் தன் மகனை இழந்ததால் பைத்தியக்காரனாகமாறி அந்த இன்பபுரத்தை அடைந்து பசியால் வாடிக்கொண்டு இருந்தார் அதைக் கண்ணுற்ற மணிராஜ் தன் தந்தையிடம் ஓடி இந்நிலையை விவரித்துக் கூறினான். ராஜன் ஓடோடி வந்து தன் தந்தைதானா என்று பார்த்தான். தந்தை என்று அறிந்ததும் அவரைத்தன் வீட்டிற்கு

அழைத்துச்சென்று தக்க வசதி செய்து, அவரது பைத்தியத்தையும் நீங்கும்படிச் செய்தான். தங்கை வேண்டுகோளுக்கு இணங்க தன் சொந்த ஊருக்குச் செல்ல நேர்ந்தது. வழியில் ஒரு வனாந்தரகாட்டைக் கடக்க நேர்ந்தது.

காளியம்மையும், முத்துராமனும் தம் உறவினர் வீட்டிற்குச் செல்ல, அந்தக் காட்டின் வழியே சென்றார்கள். திருடர்களுக்கே இருப்பிடமான அந்தக் காட்டில் அவர் நடக்கும் போது திருடர்கள் இத்தம்பதிகளைத் துன்புறுத்தினர்கள். அவ்வழியேவந்த ராஜனும், தன் தகப்பனரும் அத் திருடர்களை அடித்து விரட்டிவிட்டு அவர்களைக் காப்பாற்றினர்கள். காளியம்மை தனபாக்யத்தை அன்போடு கட்டித் தழுவி விம்மி அழுதாள். பிறகு எல்லோருமாக ராஜனது வீட்டை அடைந்தார்கள்.

அவ்வூர் பெரியோர்கள் அனைவரும் அவ்விரு "அன்பின் செல்வங்களை" ஆசீர்வதித்தார்கள்.

கனவு.

வை. சண்முகம், ஆறம் படிவம்

ஆதித்தன் அரபிக்கடலின் ஆழத்தை அளக்க ஆரம்பித்தான் மலையின் பின்னே மறைந்திருந்து. எங்கும் அமைதி! எவ்விடத்தும் அமைதி!

தமிழரசனும் இளங்கோவும் தன்னலம் கருதாது பிறர்பொருட்டே முயலும் வெற்றியைப்பெற்ற ஒரு மித்த நண்பர்கள். நாட்டிலே 'கள்ளச் சாராயம் அருந்தக்கூடாது. கள்ளச் சாராயம் காய்ச்சக்கூடாது". என்ற சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டிருந்தும் திருட்டுத்தனமாக சாராயம் காய்ச்சுகின்றனர் சிலர். இப்பெரும் கொடுமையை நீக்கி மக்களை நல்வழிப் படுத்த உன்னியவர்கள் தமிழரசனும் இளங்கோவும்.

ஒருநாள், இருநாள், பலநாள் மக்களிடையே பேசிச் சாராயம் காய்ச்சும் கெடுதலை நிவர்த்தித்துக் கொண்டு வந்தார்கள். ஆனல் ஒரே ஒரு நான்கு பேர் அடங்கிய கூட்டம் மட்டும் எது கூறியும் செவியேற்காதவர்களாயிருந்தனர். சாராயம்காய்ச்சுவதும், விற்பதும், பணத்தைத் திரட்டுவதும் அவர்களின்தொழில். பன்னுள் கூறியும் பயனற்றதை உணர்ந்த தமிழரசனும், இளங்கோவும் இவர்களை அரசாங்கத்தாரிடம் பிடித்துக்கொடுக்கத் தீர்மானித்தனர். போலீஸிடம் புகார் கூறினர். புலன் விசாரிக்கத்தலைப்பட்டனர் போலிப் போலீஸ்கள். சாராயக் கேணி

பிடிக்கச்சென்றபோலீஸ்கள் சாராயம் குடிக்கவே ஆரம்பித்துவிட்டார்கள். சாராயம் காய்ச்சியதாக தகவல் கிட்டவில்லை என்று கூறிவிட்டு நடந்துவிட்டனர் போலீஸ் புலிகள். உண்மையை உணர்த்தவல்ல நிலையற்றுத் தவித்த தமிழரசனும், இளங்கோவும் யாது செய்வர்? அந்த சமயத்தில் உண்மைக்காக உழைக்கும் சப்-இன்ஸ்பெக்டர் இருப்பதை அறிந்த தமிழரசன் சப்-இன்ஸ்பெக்டரிடம் சாராயம் காய்ச்சும் தீயர்களை கூறினான். அவர் சாராயம் காய்ச்சும் தீயர்களை மூன்று மாதம் சிறையில் தவம் செய்யத் தீர்ப்பளித்தார்.

மூன்று மாதங்கள் முடிவடைந்தன. சிறையைவிட்டு வெளியே வந்தனர் தீயர்கள். எப்படியாவது தமிழரசனை ஒழிக்க முடிவு கட்டினர். சாராயத்தை மீண்டும் காய்ச்சினர். தமிழரசன்மீது தகாத பழி சாட்டி வஞ்சம் தீர்க்க எண்ணினர். எண்ணிய விளைவு யாது?

தமிழரசன் அடிக்கடி ஊர்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்து வருவது வழக்கம் அவ்வாறு ஒரு ஊருக்குச் சென்றிருக்கையில் நான்கு பாட்டல் சாராயத்தை தமிழரசனின் கொல்லைப் புறத்தில்போட்டுவிட்டு ஓடிவிட்டனர்

மறுநாட்காலையில் போலீஸ்கள் தமிழரசனின் வீட்டைச் சுற்றிலும் காவல் போட்டனர். பிரசாரம் செய்துவிட்டு திரும்பினான் தமிழரசன் போலீஸ் ஒருவன் தமிழரசனை நோக்கி "ஏய்! பொய்பிரசாரம் செய்யும் புல்லனே! உன் பிரசாரத்தின் பிம்பங்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுவதுதானா? சாராயம் குடிக்காதே என்று சாரம் நிரம்பிய வார்த்தைகளை வீரம் பொருந்த பேசுகிறாயே! போலி வேடம் போடும் புல்லனே! இவனை இழுத்துச் செல்லுங்கள் ஸ்டேஷனுக்கு" என்று கர்ஜித்தான்.

தமிழரசன் தவித்தான். ஒன்றும் விளங்காது ஊமை என நின்றான். போலீஸார் அவனைக் கைது செய்து ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றனர். தான் நிரபராதி என்பதை வெளிப்படுத்த ஒண்ணாத நிலையிலிருந்தான் தமிழரசன். முடிவில் மூன்றுவருடக் கடுங்காவல் விதிக்கப்பட்டது தமிழரசனுக்கு.

"கடவுள் என்னைக் காப்பாற்றுவார். உண்மையே முடிவில் உயர்வடையும்; நிரபராதிக்கு இந்நிலத்தில் இடமில்லை. சக்தியே! உன் தனயனைக் காப்பாய்" எனக் கூறிக் கொண்டே சிறைக்குள் சென்றான் தமிழரசன்.

சுமார் ஒரு மணிநேரம் ஒண்ணா நிலையிலிருந்தான் உள்ளே தமிழரசன். இடைவேளையில் செய்தித்தாளில் கீழ்கண்டவாறு எழுதியிருந்தது. "நாளை சுதந்திர தினம்; நாளைதான் நம்நாடு உரிமைபெறும்நாள். ஆகவே சிறைக் கைதிகளை இன்றே விடுதலை செய்யுங்கள்" என விருந்ததைப் பார்த்த சிறை அதிகாரிகள்கைதிகளை வெளியாக்கினர். தமிழரசன் தாராளமாக வெளி வந்தான். கைதி என்னும் பட்டத்தோடு கடந்தான் வெளியே.

நண்பன் சிறை சென்றதை உணர்ந்த இளங்கோ தாங்கொணாத் துயரைத் தலைமேல் ஏற்றான். நண்பனை விடுதலை செய்யவேண்டுமென்று எண்ணினான். தன்னையே ஒருவரிடம் விற்றுக்கொண்டான். ரூபாய்ஐந்நூறு பெற்றுக்கொண்டு சிறையை நோக்கி ஓடினான். எதிரில் தமிழரசன் வருவதை அறிந்த இளங்கோ சிறகொடிந்த பறவை மீண்டும் இறகைப் பெற்றதென்ன மகிழ்ச்சியெய்தினான்.

தமிழரசன் இளங்கோவை நோக்கி "தம்பீ, நேர்மைக்கு இவண் இடமில்லை. லஞ்சம் என்னும் ஊஞ்சலில் உட்கார்ந்து, ஒய்யாரமாக ஆடிக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்தினிடம் நாம் செய்வது யாது? என்னை அரசாங்கமா விடுதலை செய்தது! இல்லை! இல்லை! சமன் செய்து சீர்தூக்கும் கோல் ஒன்று நம்மையறியாமல் இவ்வுலகில் எல்லா இடங்களிலும் விரிந்து இருக்கின்றானே அவன்தான் என்னை விடுவித்தான். இனி நாம் நம் வேலையில் நாட்டம் செலுத்தவேண்டியதுதான். தொண்டு செய்யத் துணிந்துகொண்ட இன்னல் போதும்" என்று கூறினான். இருவரும் தங்களூர் சென்றனர் மங்களமாக! அதன் பின் அவர்கள் இருந்த இடமே தெரியவில்லை; ஆனால் வாழ்ந்தார்கள். எங்கு? இதைமட்டும் என்னை வினவாமல் இருங்கள் தயைபுரிந்து.

இதுபோலத்தான் தற்கால அரசாங்கமும், நாடும் நடந்துவருகின்றன. நல்லவர்கட்கு இங்கு இடமில்லை. நல்லவர்கட்கு இங்கு இடமில்லைதான் நயவஞ்சகர்கட்கு பரந்த நிலப்பரப்பு கிடைக்கின்றது. முயற்சியுள்ள பெரியோர்கள் மூலையிலே முடங்கிக் கிடக்கின்றனர். வருங்கால இந்தியாவில் லஞ்சம் ஒழிந்து ஒவ்வொருவரது நெஞ்சமும் மலரும் என்பதுதான் நான் காணும் கனவு. கனவு நனவாக கடவுள் உதவுவாராக!

வணக்கம் பல!

"பாரதி"

ப. சுப்ரமண்யன், ஆறாம் படிவம்.

பாடடா பண் பாடடா — பாரதியின் புகழ்
பாடலைப் பாடடா
தேன் தமிழ் சொட்டிடும் செந்தமிழ் — பாட்டை
பாடடா நீ பாடடா.

அறிவுத்தேன் சொட்டிடும் — நம்
அண்ணலின் பாவை நீ பாடடா.
பகுத்தறிவூட்டி நற்பண்பைக் கொடுக்கு — நம் பாரதியின்
பாவினை நீ பாடடா.

பொதுவுடமை கொள்கையைப் பற்றி — பா
பொழிந்திடும் பொன் பாவை—போற்றி நீ
பாடடா நீ பாடடா.

பாரத நாட்டின் பண்பினை — பாடி
பலநாட்டவர்க்கு மளித்த
பாரதியின் பாவை — நீ
பாடி மகிழடா ... . (பாடடா)

விகடகவிகள்

—[ம. சுப்பிரமணியன், ஆறும் படிவம்]—

உண்மை

நாடியப் பொருள் கைக்கூடும், நாமுமே பாடுபட்டால்,
வீடது வெளியாய்ப்போகும் மேற்கூரை பிரிந்துவிட்டால்
ஆடிக்கு முந்தி ஆனி, அப்பனைப் பெற்றவள் பாட்டி
காடிதான் புளித்திருக்கும் கரும்புதான் இனித்திருக்கும்

அண்ணன் என்பவன் தம்பிக்கு மூத்தவன்
கண்ணன் என்பவன் கண்ணிரண் டுள்ளவன்
திண்ணை என்பது தெருவில் உயர்ந்தது
வெண்ணெய் என்பது பாலில் பிறந்ததே

நெய் பிறந்தது கடைந்த வெண்ணெயில்
தை பிறந்தது மார்கழி சென்றபின்
நம் பள்ளி பிறந்தது மூக்கப் பிள்ளையாலே
காகம் கருத்திருக்கும், கடல் தண்ணீர் உப்புறைக்கும்

நரைத்ததலை வெளுத்திருக்கும் நாய்வால் வளைந்திருக்கும்
மூக்கில் இரு துளை இருக்கும் முகத்தில் இருகண்ணிருக்கும்
மூக்கப் பிள்ளை அமைத்த முதன்மையான பள்ளியில்
முத்தமிழும் சிறப்பாய்க் கற்பிக்கப் படுகிறது.

கிறள்

(1) தின்றதனல் ஆய பயனென் கொல் ஏப்பந்தான்
நன்று வாரா தெனின்

(2) கூழையும் உப்பக்கம் காணலாம் உரைப்பாய்
ஊறுகாய் துவயல் பெறின்

(3) படித்தார்க்கு ஒருவருடத்தில் பலன், சுமமா
இருப்பார்க்கு என்றும் இல

(4) புதையல் பெறுவபன் மனம் போல, வினவிற்கு
விடை அறிவதாம் படிப்பு

தலைவலி மருந்து

தலைவலி தனக்கு தம்பியே மருந்தைக் கேளாய்
மலையின்மீது இருக்கும் பெரிய பாராங்கல்லைக் கொண்டுவந்து
தாங்கித் தூக்கி தலையில் போட்டால்
தலைவலி தானே போகும் தம்பியே நீ நம்பாதே!

திருவாரூர் தேர்முட்டி, மன்னார்குடி மண்வெட்டி
புத்தகம்பட்டி போருமுட்டி, வேகாத குயவன் சட்டி,
சாம்பிராணியில் மட்டி இவையெல்லாம் கூட்டி
இடித்துப் பிழிந்து இருபடி சாறெடுத்து
ஒருபடியாகக் காய்ச்சி ஒன்பது வேளைக் குடித்தால்
தம்பியே வலிபோகாது நம்புவாய் இதையும் நீயே.

கண்டுபிடி

அந்தமுள்ள புவியிலொரு மரத்தின் பேரும்
அலைகடலில் வாழுமொரு ஜீவன் பேரும்
விந்தை பெரு பட்டிணப் பேர்
பெற்றோர் இல்லாதவன் பேர்
விளங்குமொரு பிள்ளைப் பேர், மெல்லியாள் பேர்
இந்த வகை ஆறும் இன்பமுடன் தான் கூட்டி
அவற்றின் நடுவெழுத்தை அன்புடன் படித்துப் பார்த்தால்
வைகுந்தம் தன்னில் வாழும் ரங்கநாதன் என்று சொல்லாமே

விடை:-(1) அரசு (2) சங்கு (3) நகர் (4) அனாதை (5) சுதன் (6) கன்னி

நமது கடமை

—[K. S. ராகவ அய்யங்கார், *ஆசிரியர்.*]—

அரசைத் துறந்து சித்தார்த்தர் புத்தராக மாறினார். ஏகாதிபத்திய முடியைத் துறந்து தன் கருத்துக்கு இசைந்தபெண்மணியை மணந்தார் எட்வர்ட் மன்னரும். ஸ்ரீராமனும் தனக்குரிய அரசுரிமையைத் தம்பி பரதனுக்கு 14ஆண்டுக்கு விட்டுக் கொடுத்தனர். மேற்சொன்னவர்கள் யாவரும் அரசைத் தேடியவர்கள் அல்லர். வழிமுறையாகவந்த அரசுரிமையைத்தான் மேற்சொன்னவர்கள் துறந்தனர். அவர்கள் அடைந்த புகழ் வான் அளாவுகின்றன.

தான் தேடாமல், உரிமையால் வந்தடையும் நலனை உதறி தள்ளிய பெருமை இத்தனை புகழுக்கு இடம் தருமேயானால் தான் தேடிய செல்வத்தை தன் நலம் கருதாது பிறர் நலத்துக்காக அர்ப்பணம் செய்த ஒப்பற்ற உள்ளத்தினரை புகழ்ந்து எழுத இவ்வெள்ளை காகிதமும், கருமையும் போதா. பொன்னோலையில் வச்சிர எழுத்தாணியால் அன்றோ எழுதப்படவேண்டும். அவ்விதம் எழுதபடக்கூடியவர்கள் எங்கோ உலகத்தில் அருமையாக காணப்படுவர். அவர்களைத்தான் தமிழர் "வள்ளலார்" என அழைப்பர். நந்தமிழகத்தில் புகழ்ச்சிக்குரிய நிகழ்கால வள்ளலார்களுள் தலை சிறந்தவர் உயர்திரு. எம். மூக்கப் பிள்ளை. இவர் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். திரைக்கடல் ஓடியும் திரவியம்தேடியவர் கண்களுக்கு பார்வை சக்தி குறையும் காலத்தில் கண்ணாடியைச் சுமந்து அக் கண்களுக்கு பார்க்கும் சக்தியை அதிகரிக்க உதவுகிறது மூக்கு அல்லவா?

மூக்கு ஊனக் கண்களுக்கு ஒளி பெருக்க கண்ணாடியை சுமப்பது போல் எண்ணும் எழுத்துமாகிய கண்கள் போற்றப்படகலைக்கோயில் நிறுவிக் காத்து வருகிறார் எம் திரு, M. மூக்கப் பிள்ளை அவர்கள்

அக் கலைகோயிலில் மாணவர்களாகிய நீங்கள் கலைபயிலும் வாய்ப்பைபெற்றவர்கள். தன்னலம் கருதாது பிறர் நலம் பேணுதலை கடைப்பிடித்து உங்கள் வாழ்க்கையில் மிளிரச் செய்து தமிழகப் பண்பை உலகத்துக்கு எடுத்துக் காட்டுங்கள்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற ஒரு குறளை மனத்துள் இருத்தி ஆட்சிபீடத்தில் அமர்ந்து பள்ளிக்கும், நாட்டுக்கும் புகழ்ச்சியுற பணி புரிவது நமது கடமை.

ஆட்சி பீடத்தில் அமருபவர் யார்?

—[K. S. ராகவ அய்யங்கார், ஆசிரியர்.]—

உலகம சிறந்ததா? உலோகம் சிறந்ததா என்ற ஓர் வினு என் உள்ளத்தில் ஒரு நள்ளிரவில் எழுந்தது. என்சிந்தை ஆராய்ந்து விடை பகர்ந்தது—உலோகம் உலகத்துள் அடங்கியதுதானே! பொன் வெள்ளி ஈயம் தாமிரம் போன்றவைகள் பூமிக்குள்ளிருந்துதானே தோண்டி எடுக்கப்படுகின்றன—ஆதலால் "உலகம்தான் சிறந்தது" என்று என் சிந்தை சிந்தித்துக் கூறியதில் தவறு இல்லையென உணர்ந்தேன.

அங்ஙனமிருக்க சிற்சில சமயங்களில் வாழ்க்கையில் வெறுப்புத் காணும்பொழுது "பூ" இவ்வளவுதானு உலகம! என்ன உலகம் எனக் கூறுகிறுர்களே என்று சொல்லும் பொழுது அண்மையில் உறங்கிக் கொண்டிருந்தவணபா உறககத்தில் நான வாய் உளறியதாகக் கூறினுர். "இல்லை விழித்துக்கொண்டுதான பேசினேன்'' என்றேன். "என்ன பேசினீர்'' என்று என்னை அவர் கேட்க நான் 'என்ன உலகம'? எனு றல்லவா சொனனேன் என அவர் பதில் பகரட்டுமா' எனருர். 'பகரும' எனறேன்.

'இஃது மாணவர் உலகம்' என்ருர் அவர். நான் 'எவ்வாறு' எனவே அவர் கூறியது:—சின்னுள் முன் பாரதத்தாயின் அடிமைத்தளையை அகற்றி நாம் உரிமையுடன் வாழ்வதற்கு வகை செய்தார் நம் மகாத்மா காந்தியார். விடுதலை அடைந்த இந்தியா 'குடியரசு' என்று தன் ஆட்சிமுறையை நிர்ணயித்துக் கொண்டது நாம் யார்க்கும் குடியல்லோம—நாமே மன்னர், நாமே குடிகள்—என்ற தத்துவத்தை அநுசரித்துப் பெருவாரியான மக்கள் வாக்குரிமை பெற்றிருக்கின்றனர். இனி அரசை ஏற்கப்போகிறவர்கள் மாணவர்கள ஏனெனில் கற்றவர்கள்தானே ஆட்சிபுரிய முடியும்; மற்றவர்கள் யாவரும் குடிகளாகத்தான் இருக்கவேண்டும், ஆகையால் "இஃது மாணவர் உலகம்" என மொழிந்தார்.

தற்கால மாணவர்கள் வருங்கால மன்னராகத் திகழப் போகின்றனர். ஆகையால் மாணவர்களே!

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக**

என்ற திருக்குறளின் பொருள் தெரிந்து கற்க.

வருங்கால மன்னர்களாக எமது மாணவர்கள் அனைவரும் திகழ இறைவனை இறைஞ்சுவாம்.

அன்பின் வெற்றி

ஆக்கியோன்:—
உதவி ஆசிரியர்
M. K. இராமய்யா

கையினி லடுக்காய்க் காகித சுமைதூக்கிக்
கலைவாணி வாயிலிலே கால்வைத்த தோஷத்தால்
கண்ணில் மைதீட்டிக் காரிருள் தான்சுருட்டி
பின்னல் சடைகட்டி அன்ன நடைபோட்டு
ஜம்பரும் ஜாக்கெட்டும் ஜாலக்காய் தானணிந்து
ஜாதியால் ஓராடைப் பாதிவரைத் தொங்கவிட்டு
மின்னு மினுக்கிகளாய் மின்வெட்டுப் பூச்சிகளாய்
பகல்வேஷம் தானோ பகர்ந்திடவே உன்கோலம்

பருவத்திற் கேற்றவாறு பல்கலைப் பயிலும்நாளில்
உருவத்தில் உயர்ந்துகாணும் ஓவியம் தனைப்போன்று
சிறிய மதிப்புப்பெற்ற சிற்பியின் கற்பனையால்
கலையது நீங்கப்பெற்றுக் கார்முகம் காணப்பெற்ற
பயிரது காட்சியேபோல் பாவைதான் வரவுநோக்கி
கூப்பிய கரத்தினோடும் குனிந்தகார் சிரத்தினோடும்
கதிரவன் வருகைதன்னைக் காத்திடும் கமலம்போல
மாதவன் வருகைக்காக மலர்முகம் நோக்கினளே

காலமெல்லாம் கல்வியிலே கழித்த ஜீவன்
கணப்பொழுதும் கடுகாது கடுகி வந்தான்
நேரமெல்லாம் கூறுவதில் நினைப்பே யாகி
நேர்மையுடன் கருத்துக்கள் நவின்று வந்தான்
நாடதனின் வாழ்வினிலே செழித்து ஓங்கி
நாட்கள்பலக் கல்வியினைக் கற்கும் மங்கை
மாண்புடனே மன்னனது வரவு காண
மணமாகும் கோலமது தானு மானாள்

உற்ருர் உறவை உணராத அப்
பெற்ருேர் கண்டார் பெருமிட மெல்லாம்
பணத்தின் பாசம் பற்றது கொண்டு
குணமது அறியாது கொடுக்கத் துணிந்தார்
காவிரி நீர்போல் கண்ணீர் பெருக்கித்
தண்ணீர்ப் பண்பைத் தானவ ளுணர்ந்து
அன்பில் வெற்றியால் அடையும் என்றே
அடைந்த இதழில் அனுப்பினர் செய்தி

காதலும் தானின்றேல் சாதலே மேலென்ற
கருத்தினைக் கொள்கின்ற காதலிதன் உள்ளமதில்
நிறைகாதல் உற்றதினுல் நிலைமை நலிவாகி
சிறைவாசம் போல சிதையுண்டு வாழ்கின்றேன்
உன்றன் நெடும்புயத்தை உவப்புட னேற்கின்ற
என்தன் உள்ளத்தை ஏற்றுக்கொள் என்ற
கடிதத்தைக் கண்டவுடன் களிப்புற்று மலர்விழியாள்
குறுநகையில் பிணிபோக்கும் நாளெதுவோ என்ருன்

தென்றல் இசைக்கின்ற தீஞ்சுவையைத் தானருந்தி
மன்றல் புரிகின்ற மாட்சியினைத் தானேற்க
பெற்ருே ரறியாது போகத்தைத் தான்விட்டு
சிற்ருேடு ஏந்திடினும் சிறப்பென்றே தானுணர்ந்து
மன்னவ னிருக்கின்ற மனையினைத் தானடைந்து
கண்களைப் பொத்திட்டாள் மென்மலர் செங்கையாள்
செவ்வையுற இன்பத் திருவிழாவைத் தொடங்கி
இன்பமுடன் வாழென்று ஏற்றிட்டேன் நானவனை

கனவு கழிந்தது.

—[M. K. இராமய்யா, உதவி ஆசிரியர்]—

புதுமணம் வீசுகின்ற பொங்கலின் திங்கள்தன்னில்
புத்துயிர் பெற்றுவாழும் புனிதநல் வாழ்வுதன்னில்
கருத்துகள் நிறையப்பெற்றக் கற்பனைக் கோட்டையொன்று
காலைதான் வேளைதன்னில் கனவுபோல் கலைந்ததம்மா

மறைகின்ற காலமுன்னர் மகன்மகன் வருகவென்று
ராமனின் நாமம்தன்னை நாவினால் கூறிக்கொண்டு
நானுமே செல்லுகின்றேன் நலமுடன் வாழ்வாயென்று
வாழ்த்துகள் கூறிவிட்டு வழியதில் சென்றதம்மா

சிரிய முறையிலங்கு சென்றிட்ட ஆவிதானும்
ஆறும் திருநாளில் அவனடியைச் சேர்வதற்கு
உடலும் துடிதுடிக்க ஓர்வார்த்தைக் கூறாது
பாலன் வருவதற்குள் பாருலகை மறந்ததம்மா

கண்ணனின் மணத்தைக்கான கனவுகள் கண்டிருந்த
கணக்கிலா தந்தைதாயர் காத்திடும் காலந்தனில்
கனவிலே காட்சிபெற்ற கமலக் கண்ணனது
நினைவது கூடுமுன்னே கனவது கலைந்ததம்மா

எங்கள் பள்ளி

[வீ. சின்னையன், 6-ம் படிவம்]

"தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்னும் குறளுக்கொப்பவும், சூரியன் இருளை நீக்க கீழ்த்திசையில் தோன்றுவதைப் போலவும், அறியாமை என்னும் இருளை அகற்ற திருவாளர் மூக்கப்பிள்ளையாகிய சூரியன் புத்தனம்பட்டி என்னும் சிற்றூரில் தோன்றினர். புகழுடன் தோன்றிய திருவாளர் மூக்கப் பிள்ளை அவர்கள் அண்ணல் காந்திஜியின் அரிய தொண்டராகவும், தன்னலங் கருதா தரும வீரராகவும், எளிய வாழ்க்கை நடத்துபவராகவும், ஏழை மக்களுடன் கூடி வாழ்பவராகவும் இருக்கின்றார். இவர் அனுபவத்தால் அறிவு அதிகம் பெற்றாரேயன்றி, பள்ளிக்குச் சென்று பல கலைகளையும் பயின்றாரில்லை. இவ்வாறு குணத்திலும், பண்பாட்டிலும் அறிவிலும், ஆண்மையிலும், அருளிலும், அன்பிலும், அறத்திலும், மறத்திலும் கல்வி பயிலாது சிறப்புப்பெற்ற திருவாளர் மூக்கப் பிள்ளை அவர்கள் காந்திஜியின் சேவைகளில ஒன்றாகிய கிராம முன்னேற்றத்தைக் கருதி, தன்னுடைய சிற்றூராகிய புத்தனம்பட்டியில் அறிவுக் கோயிலாகிய ஒரு உயர்நிலைப் பள்ளியை நிறுவியுள்ளார். தான் ஏற்படுத்திய பள்ளிக்கு 'நேரு' வின் பெயரையே வைத்தமையாலும் காந்திஜியின் தொண்டுகளிலேயே சிறந்த "கிராம முன்னேற்றத்தைக் கருதி" வேலைகள் செய்து கொண்டு வருகின்றமையாலும், தம் புதல்வருக்கு 'காந்தி' என்னும் பெயரை இட்டமையாலும் திருவாளர் மூக்கப்பிள்ளையை காந்திஜியின் சிறந்த தொண்டர் என்பதில் சிறிதேனும் ஐயமுண்டோ?

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தம்முடைமை
வைத்திழக்கும் வன் கணவர்."

என்ற குறளுக்கொப்ப, அவர் ஏற்படுத்திய அறிவுக்கோயிலாகிய பள்ளிக்கு, சிறந்த பூசாரிகளாகிய ஆசிரியர்களை அமர்த்தி, ஆசிரியர்கள் மாணவர்களுடன் உரையாடி அவர்கள் மகிழ்வதை தாமும் பார்த்து இன்பமடைகின்றார். இவ்வாறு இப் பெரிய வள்ளலாகிய பெரியார் "பெரியார் பிறருக்கு உழைப்பதே பேரின்பம்" என்று கருதினரேயன்றி, வேறு எந்த விதமான எண்ணங்களையும் மனதில் கருதினாரில்லை

திருவாளர் மூக்கப் பிள்ளை அவர்களின் சிறந்த தொண்டிலே சிறப்புக் கவனம் செலுத்தி அரும்பாடுபட்டு உழைத்து வருகின்றார் திருவாளர் மூக்கப் பிள்ளை அவர்களின சிறந்த தொண்டில் தாமும் உழைப்போம் என்ற நல்லெண்ணத்தாலும் எங்கள் தலைமை ஆசிரியர் எங்கள் பள்ளியிலேயே இருந்து இள மாணவர்களை நல்ல வழியில் திருத்துவதற்காகவும்,

கிராமத்தை முன்னேற்றவும் அரும்பாடுபட்டு வருகின்றார். இவர் "வித்வான்" பட்டம், எம். ஏ., எல். டி. பட்டம் போன்ற பெரிய பட்டங்களைப் பெற்றுள்ளார். ஆயினும் எளிய உடை அணிந்து சாதாரண வாழ்க்கை நடத்தக் கூடியவர். மாணவர்கள் தகுதிக்கேற்ப எல்லோரும் புரிந்துகொள்ளுமாறு பாடம் நடத்தும் இயல்பினர். ஒவ்வொரு மாணவரைப்பற்றி நன்கு அறிந்து, மனநிலையையும், உள்ளத்தையும் அறியும் பண்பினர். மாணவர்களுக்குத் தாமே முதலில் நடைமுறையில் நடந்து காட்டி பாடமூட்டுவார். உதாரணமாக "காபி குடிக்காதே; அது கெடுதலை விளைவிக்கிறது" என்று சொல்லுவதுடன் நில்லாமல், தமது வாழ்க்கையிலேயே தாம் முதலில் காபி குடிக்கும் தீய பழக்கத்தை விட்டொழித்து, அப்பையனுக்கு நேரே நடந்து காட்டும் இயல்பினர். இவ்வாறு ஒவ்வொரு விஷயத்திலும் தாம் முதலில் செயலில் நடத்தி பிறரும் அதை அறியும்படி செய்யும் இயல்பினர்.

உலகில் புத்தர், ஏசு, முகமது நபி, திருவள்ளுவர், காந்தி முதலான பெரியோர்கள் அனைவரும் கடவுளால் அனுப்பப்பட்ட தீர்க்க தரிசிகள் எனப் படுவார்கள். ஆகையால் இப்பொழுது கடவுளின் தொண்டர் காந்தியாகவும், காந்தியின் தொண்டர் மூக்கப்பிள்ளையாகவும், மூக்கப்பிள்ளையின் தொண்டர்கள் மாணவர்களாகவும் மிகவும் சிறப்பாக எளிதில் கூறிவிடலாம்.

எங்கள் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் எல்லாரும் சிறந்த, மூக்கப்பிள்ளை அவர்களின், தொண்டர்களாக உள்ளார்கள். ஒரு வகுப்பில் கணித நூலை மாணவர்கள் கற்கின்றார்கள்; மற்றொரு பக்கம் வரிசை வரிசையாக மாணவர்கள் உடற்பயிற்சிக்காகச் செல்கின்றனர். ஒரு வகுப்பில் ஓவியக்கலை கற்பிக்கப்படுகிறது. மற்றொரு வகுப்பில் காவியக்கலை கற்பிக்கப்படுகிறது. மற்றொரு பக்கம் தனித் தமிழில் சுவையை அறிகின்றனர். மற்றொரு மருங்கே தேசியக் கொடியை ஏற்றி மாணவர்கள் வணக்கம் செலுத்துகின்றனர். இன்னொரு வகுப்பிலே விஞ்ஞான ஆராய்ச்சி செய்கின்றனர். இவைத் தவிர ஓய்வு நேரங்களில் பாண்லிமெண்ட் கூட்டப்படுகிறது. பள்ளி வாசகசாலையிலே வரிசையாக உட்கார்ந்து மாணவர்கள் உலக அறிவைப் பெருக்கிக் கொள்கின்றார்கள். மற்றொருபுறத்தே விவசாயக்கலை கற்பிக்கப்படுகிறது. வேற்றுமொழிகளாகிய ஆங்கிலமும், ஹிந்தியும் கற்பிக்கப்படுகின்றது. இவ்வாறு பள்ளிக்கூடம், சோழர்கால கோயில் கலையில் நிலையமாகவும், ஆட்சி மன்றமாகவும், மருத்துவ நிலையமாகவும், நாடகக்கலை, போன்ற கலையில் நிலையமாகவும் அக்காலத்தில் விளங்கியதைப்போல, இக்காலத்தில் சிறப்புடன் விளங்குகிறது

எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்று அறியேன் பராபரமே

என்றார் தாயுமானவ அடிகள். இத்தகைய தாயுமானவ அடிகளைப் போல வேதான் எல்லா ஆசிரியர்களும் நினைக்கின்றனர். ஆசிரியர்களனைவரும் மாணர்களெல்லோரும் நன்றாகப்

படித்து தேர்வில் வெற்றி பெற்று சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று நினைப்பதைத் தவிற வேறு எந்தவித கெட்ட எண்ணங்களையும் அறியாதவர்கள். ஆகவே, இவ்வாறு ஆசிரியர்களனைவரும் தங்களால் இயன்றவரையிலும் சலியாது உழைத்து மாணவர்களாகிய நாம் வெற்றி பெற்று இன்பமடைவதைப் பார்த்து தாங்களும் இன்பமடையக்கூடிய இயல்பினர்.

ஆகையால் வெற்றியும் தோல்வியும் மாணவர்களாகிய நம் கையில் உள்ளது. ஆகவே,

மகன் தந்தைக்(கு) ஆற்றும் நன்றி
இவன் தந்தை
என்னோற்றான் கொல்என்னும் சொல்

என்னும் குறளுக்கு ஒப்ப நாம் அனைவரும் விடாமுயற்சியோடு படித்து தேர்வில் எல்லோரும் வெற்றி கண்டு இந்த நேரு உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியர்கள் எப்படித்தான் கற்பித்தார்களோ! என்று பிறர் கூறுகின்ற புகழ்ச் சொல்லை வாங்கித்தருவதே மாணவர்களாகிய நமது தலையாய கடமையாகும். இவ்வாறு திறமையுடன் படித்து தேர்வில் வெற்றி பெற்று நமது பள்ளி ஆசிரியர்களையும் மூக்கப்பிள்ளையின் பெயரையும் வெளிப்படுத்தி, கிராம முன்னேற்றத்தில் நாமும் ஈடுபட்டு நாட்டின் நலனுக்காக உழைப்போமாக !

பண்டைத் தமிழர் பண்பாடு

(A. M. துரைசாமி, ஆரும் படிவம்)

நமது உரிமைத்தாய்நாடு தமிழ்நாடு. நமது தாய்மொழி தேனினும் இனிய தீந்தமிழ். தமிழ்நாட்டின் பெயரைக் கேட்ட மாத்திரத்தே, பண்டைத் தமிழர் பண்பாட்டை நோக்கியவிடத்தே, பண்பட்டத் தமிழின் இனிமையைக் கேட்டவிடத்தே தமிழ் நாட்டின் செல்வங்களாகிய நாம் ஒருவித புத்துணர்வு அடையாமல் இருக்க முடிவதில்லை.

தமிழ்நாடு வளமும், நலமும் சிறந்தோங்கி வளர்ந்தநாடு தமிழ் மக்கள் அனைவரும் சிறந்த பண்பும், உயரிய மாண்பும், உண்மை அன்பும் உடையவர்கள். வளங்கள் பல வளர்ந்தோங்கியது நம் தமிழ்நாடு. பழந்தமிழ்நாட்டில் பல்வகை கலைகளும் சிறந்து விளங்கின. அதன் காரணமாகத் தமிழ் மாந்தர் அறவோர்க்கும், துறவோர்க்கும் ஆதாரவாக விளங்கினர். தமிழ்மொழியினைக் காத்தற்பொருட்டுத் தமிழ்மக்கள் புலவர்களைப்போற்றி அவர்களின் நலனே தமிழ்மொழியின் நலன் என எண்ணி வந்தனர். தமிழ் நாட்டின் வளம் 'பொன்னி' என்னும் பொய்யா

நதியாலும், 'தாமிரபரணி, என்னும் தலைசிறந்த உயர் நதியாலும் இன்னும் பல வளமிக்க நதிகளாலும் சிறப் படைந்து விளங்கியது; விளங்குகின் றது.

தமிழ் மக்கள் கொள்ளுவதில் நிறை கொளாது,கொடுத்தலிற்குறைவிலாது வாழ்ந்தவர்கள். தமிழ் மக்கள்வாணி பத்துறையில் மிகவும் சிறப்புற்றிருந்த னர். என்னும் உண்மை பட்டினப் பாலை, சிலப்பதிகாரம் முதலிய சிரிய நூல்களில் வெகுவாகச் சித்தரிக்கப் பட்டுள்ளன.

தமிழ் மக்கள் 'தன்கையே தனக்கு உதவி, என்னும் சிறந்த குறிக்கோளைக் கொண்டவர்கள். இவர்கள் வேளாண்மை என்னும் விழுமிய தொழில் ஒன்றையே பெரும்பாலும் மேற்கொண்டு வாழ்ந்தனர். தமிழ் மக்கள் திறமை மிக்கவர்கள். 'தொழு தூண் சுவையின் உழுதூண் இனிது' என்பது தமிழ் மக்களின் உயரிய நோக்கம். தொழுதுண்டு வாழ்தலைப் புறக்கணித்து வாழ்ந்தவர்கள் தமிழ் மக்கள்.

'ஈதலும் இசைபட வாழ்தலும்' தமிழ்மக்களின் லட்சியங்களாக அமைந்திருந்தன. அறிவிற்குறைந்த உயிர்களிடத்தும் அருள்நெறிகாட்டிய மக்கள் தமிழ்மக்கள். செழித்தோங்கி வளர்ந்து பற்றிப் படர்வதற்கோர் பற்றுக்கோடின்றி தத்தளித்த முல்லைச்செடியின் நிலைகண்டு அதற் குப் பற்றுக்கோடாய்த்தன் தேரை நந்தான் தமிழ் மன்னன் பாரி 'கொடுக்கிலாதானைப் பாரியே எனி னும் கொடுப்பாரில்லை' என்று புலவ ரால் பெரிதும் புகழப்படும் பாரி தமிழ் நாட்டின் செல்வம் அல்லனோ? ஈத லின்றேல் சாதல் நன்றென எண்ணி உடைவாளை உருவி புலவர் கையில் ஈந்து தன் தலையினைக்கொண்டு செல்லக் கூறிய குமணன் தமிழ் நாட்டின் தனிப்பெரும் செல்வம் ஆவான். இன்னும் இவர்களையொத்த எண்ணிறந்த வள்ளல்கள் வாழ்ந்த நாடு.

வன்மையிலும், ஈதலிலும் இணை யின்றி வாழ்ந்த நம் தமிழ் மாந்தர் வீரத்திலும் அவ்வாறே விளங்கினர். 'விழுப்புண் படாத நாளெல்லாம் வெறுநாள்' என்று எண்ணியவன் தமிழன் மைந்தர்களேயன்றி மங்கை யரும் வீரத்திற் சிறந்து விளங்கினர். ஒரு தாய் போர்க்கோலம் புனைந்து நின்ற தன் ஒரே அருமருந்தன்ன மகனை நோக்கி 'என்னருஞ் செல் வனே! நீ இன்று போர்க்குச்சென்று வெற்றி முரசுடன் வீடு திரும்பினால் கோடற்ற மகிழ்வுறுவேன்; தோல்வி யுற நேரில் அஞ்சா நெஞ்சுடன் அமர்க்களத்தில் நின்று பகைவலது அம்புகள் நின் மார்பிற் பாய்ந்து உயிர் நீப்பாயின் பெற்றபோதினும் பெரிதுவப்பேன்' என ஆசி கூறி அனுப்பிய காட்சி ஈராயிரம் ஆண்டு கட்குமுன் தமிழகம் கண்ட காட்சி தமிழ்நாட்டின் பெருமையை இந்திய நாடு முழுதும் பரப்பக் கருதி, தமிழ் சேனைகொண்டு சென்று வடநாட்ட வர்களை வென்று இமயப்பொருப்பில்

புலிக்கொடி பொரித்த மன்னன் கரிகால் பெருவளத்தான் அல்லனே! இவர்களின் வரலாறுகள் தமிழ் மக்களின் வீரத்தை வெள்ளிடைமலையென விளக்கவில்லையா? ஆனால் இன்றையத் தமிழ்நாட்டின் ஈகை, வீரம் எவ்வாறுளது? உன்ன உன்ன உள்ளமன்றோ குமைகின்றது. உறந்த நிலையிலுள்ளதை அழுத்தமாகக் கூறத்தேவையில்லை. தமிழ் மக்களின் இத்தகைய நிலைமைக்குக் காரணம் தமிழ் மொழியில் அவர்கள் பற்றுத் தாழ்ந்திருப்பதுதான். தமிழ் இலக்கியங்களின் நறுமணத்தை நுகர்ந்து பாராததுதான். தமிழ் மக்கள் தாய்மொழியைப் பேணுதல் இல்லை. அதனை ஒப்புவதில்லை அதன் மேல் பற்றுள்ளம் கொள்ளுவதில்லை. இக்காரணங்களினுற்றான் தமிழனைத் தமிழ்மக்களின் நிலையை ஓம்பக்கூடிய உயர்த்தக்கூடிய, உய்விக்கக்கூடிய வழியிழந்து காண்கின்றான். இந்நிலை மாறவேண்டும். தமிழ்மொழியிலில்லாத இலக்கியங்களை பிறமொழிகளிலிருந்து பெயர்த்தல்வேண்டும். தமிழ் நாட்டில் தமிழுக்கு இடந்தரல் வேண்டுவதவசியமன்றோ?

தமிழ்நாட்டுச் செல்வங்களுள் ஒன்ருகிய மறைகள் இவண் மலிந்து கிடக்கின்றன. அறம், பொருள், இன்பம் இவற்றை முப்பாலாகப் பிரித்து, விரித்துஉருவாக்கி உலகினுக்கீந்தான் தெய்வப்புலவன் திருவள்ளுவன். சிந்தையும் மொழியும் செல்லா நிலைமையிலுள்ள வீட்டைப்பற்றிக் கூற அவன் விரும்பினதாகக்காணேம் அறம், பொருள், இன்பம் என்னும் இம்மூன்றே வீட்டைச் சென்றடைவதற்குறியவாயில்கள் என்று அவன் எண்ணினன்போலும். நயம் தெரி புலவர்க்கு நல்விருந்தாய் கவிநயமும், கற்பனைநயமும், இசைநயமும் கனிந்தொழுகும் தெள்ளமுதாகிய இராமாயணத்தை ஈந்தகம்பன் தமிழ்நாட்டின் இரத்தினம்போன்றவன். தமிழ்நாட்டின் பெருமையையும் வளத்தையும், உளத்தையும் உள்ளவாறு அள்ளித் தெளிக்கும்சிலப்பதிகாரத்தைச்செய்த சேரச்சிகாமணி இளங்கோ தமிழகத்தின் பிரதிபிம்பம் அன்றோ?

இந்த நாட்டில் பல மதங்கள் இருந்தன. ஏன் இருக்கின்றன? ஆனல் நீதி என்னும் நேர்க்கோட்டில் சிறிதளவேனும் வளைவு ஏற்பட்டதாகக் காணேம். எல்லோர்க்கும் நீதி ஒரே மாதிரியாக வழங்கப்பட்டது. உயிரினும் உயர்வாக உன்னினர் நீதியை. தக்க சான்று நாமொன்று கூறுவோம். ஆவின் கன்றை அறியாது கொன்றத் தன் அருமருந்தன்னக் குழந்தையைத் தேர்க்காலிலிட்டு அரைத்தான் மனுநீதிச் சோழன்! இதோ மற்ருெருவிடத்தில்! பொற்கொல்லன் பொய்யுரையை நம்பி கோவலனை கொல்ல ஆணையிட்டான் பாண்டியன். கோவலன் கொல்லப்பட்டான். கற்புக்கரசி கண்ணகி காவலனிடம் சென்ருள்; கட்டுரைத்தான். குற்றத்தை உணர்ந்தான் கொற்றவன். பாண்டியன் மாபுதன்னல் பழியேற்கப்போவதை உன்னினன். அரியாசனத்தினின்றும் விழுந்து உயிர் துறந்தான். வழுவிய

நீதிக்காக விழுமிய உயிரையும் உகறித் தள்ளினன் என்றால் இச் செயல் நமக்கு உன்னும்தோறும் உவப்பை ஊட்டவில்லையா? பண்டைத் தமிழன் பகர்ந்த நீதி இது. ஆனால் தற்காலத் தமிழகத்தில் அவ்வாறு நீதி வழங்கப் படுகின்றதா என்பது விடை கிடைக்காத வினா.

இதோ தமிழகப் பெண்டிரின் தன்மையைத் தாணிக்கெடுத்து ஓதுகிறான் வள்ளுவன் கீழ்க்கண்டவாறு.

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை”

புண்பட்டத் தமிழ்நாட்டைப் பண்பட்டதாக்க என்றும் உழைத்து பொன்றுந்துணையும் புகழ் பெறுவோமாக!

என்னருந் தமிழ் நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்று
பன்னெடும் கலைஞானத்தால்
பராக்கிர மத்தால் அன்பால்
உன்னத இமயமலை போல்
ஓங்குறு கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

— ‘பாரதிதாசன்’

எதை எழுதுவது?

[தொ. முத்துசாமி, 6ம் படிவம்]

மாலை மணி மூன்றிருக்கும். நான் என்னுடைய அறையில் தனிமையில் உட்கார்ந்திருந்தேன். என் மனம் எதை எதையோ நினைத்துப் போராடிக்கொண்டிருந்தது. மனத்தில் அமைதி என்பதற்கு இடமே இல்லை. பின் ஒருவாறு என்னை சமாளித்துக்கொண்டு, மேசை மீதிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். புத்தகம் அழகாகத்தான் இருந்தது. பலவண்ணங்களுடன் அட்டைப்படம் கண்ணைக் கவர்ந்தது. என்றாலும் புத்தகத்தினுள் புகுந்துப்பார்க்க எனக்கு விருப்பமில்லை. என் தலை கிறுகிறுத்தது. உலகமே சுற்றுவதைப் போலிருந்தது.

பின் எழுந்து பலகணியின் வழியாக வான்வெளியை நோக்கினேன். மேற்றிசையில் கதிரவன் தன் பொன்னொளியை இயற்கையின்மீது வாரி வீசிக் கொண்டிருந்தான். வானத்தில் பறக்கும் புள்ளினங்கள் பொன்னொளியால் பொலிவு பெற்றன. என் அறையின அருகேயுள்ள குளத்தில் தாமரைப்பூக்கள் தென்றலால் ஆடி அசைந்துகொண்டிருக்

தன். வண்டினங்கள் வாய்விட்டு ரீங்காரம் செய்தன. சுற்றிலுமுள்ள மரம், செடி, கொடிகள் தளிர் முகம் காட்டி ஆடின. மரத் தோகையில் உட்கார்ந்திருந்த பறவைக்கூட்டம் இனியப் பண்களை எழுப்பிக்கொண்டிருந்தது. சென்ஞாயிற்று பொன்னொளியால் குளத்தில் தழும்பும் தண்ணீரில் பொற்காசுக்களைக் குவித்துவைத்தாற்போல் காணப் பட்டது.

இக்காட்சிகளைக்கண்ணுற்ற என் உள்ளத்தில் சிறிது அமைதி இடம் பெற்றது. வானவீதியில் சஞ்சரிக்கும் மேகக்கூட்டம் இக்காட்சியைக் கண்டு கதிரவனின்மேல் பொறாமைக்கொண்டது. சிறிது நேரத்தில் இத்தகைய காட்சி கொடுத்த கதிரவனை மேகக் கூட்டங்கள் விழுங்கி விட்டன. அந்த பன்னிற தோற்றங்கள்மாறின மீண்டும என் மனத்தில் புயல் புரண்டெழுந்தது, வெறுப்போடு மறுபக்கம திரும்பினேன். சுவற்றிலேமாட்டப்பட்டிருந்த உலக வழிகாட்டிகளின் உருவப்படங்கள் என் கண்களில்பட்டன. என் மனதிலெழுந்த புயல் அடங்கியது. அந்த உத்தமர்களின வாழ்க்கையை நினைந்து நினைந்து சிந்தனையில் ஆழ்ந்தேன என உள்ளத்தில் பல எண்ணங்கள் ஊற்றெடுத்து ஓடிற்று.

எழுந்த எண்ணங்களை எட்டிலே எழுதவேண்டும் என்று எண்ணினேன். ஏடும்,எழுதுகோலுடனும மேஜையின் முன் அமர்ந்தேன். ஆனல்! என்ன ஆனல்? எழுதுவதற்கு ஒன்றும் வரவில்லை! எனக்கு எதை எழுதுவது எனறே புரியவில்லை!

வெள்ளையன் ஆட்சியை ஒழிப்பதற்கு, வெள்ளையர்களின் வேரை அறுப்பதற்கு, வீர வேட்கையுடன் வெகுண்டெழுந்து, சிங்கம்போல் சீறி,கூற்றம்போல் குதித்த, பாட்டாளி மக்களின் பங்காளனை, தொழிலாளி மக்களின் தோழனை, அடிமை படுகுழியில் ஆழ்ந்திருந்த மக்களுக்கு அஞ்சேல் என்று அபயம் அளித்து, சுதந்திர வேட்கை உண்டாக்கி, வெள்ளையனை எதிர்த்து கப்பல் ஓட்டி, அடக்குமுறையை மீறி 'அன்னியன் ஆட்சியை அழிப்போம்' என்று ஆர்ப்பரித்து, அதனல் சிறைவாசம் செய்து; கண்ணனூர் சிறையில் செக்கிழுத்த செந்தமிழ் செம்மல் வ. உ. சிதம்பரம் பிள்ளையைப்பற்றி எழுதுவதா?

பாளையக்காரர்கள் பணிய, நவாப்புகள் நமஸ்காரம் செய்ய, "சொந்த நாட்டான் வேறெந்த நாட்டானுக்கும் வரி செலுத்தி வாழ மாட்டோம்!" அங்கியனுக்கு அடிபணிந்து வாழ்தல் தமிழ் நாட்டிற்கும், தமிழ் மரபுக்கும் மாற்ற முடியாத மாபெரும் மாசு என்று கூறி வெள்ளையன் பீரங்கியால் மதிலை இடித்தபோது மனங் கலங்காது மார் தட்டி மறப்போர்ச் செய்த, தமிழனின் சுதந்திரப்போரை 17,2ல் மூட்டுவித்து, வஞ்சகத்தால் கைது செய்யப்பட்டு மரக்கிளையிலே தொங்கித் தமிழ்நாட்டிற்கு முதல் காணிக்கையாக உயிர் துறந்த வீரபாண்டிய கட்டபொம்மனை நினைத்து எழுதுவதா?

அல்லது அங்கியனுக்கு அடிபணிந்து, கட்டபொம்மனுக்கு

உயிர்தோழனுக்கடித்து, உத்தமனை ஊதாரிக் கூட்டத்திற்கு காட்டிக் கொடுத்த கயவன், எட்டயதேவனைப்பற்றி எழுதுவதா?

அந்நியன் ஆட்சியில் அடிமையாக வாழ்ந்த நம்மை நம் பாரத நாட்டை 'வெள்ளையனே வெளியேறு'! என்று பெருமுழக்கம் செய்து பாட்டாளி மக்களைப் பராமரித்து, ஏழைகளை ஆதரித்து, தீண்டாமையை ஒழிக்க தீவிரமாகப் பாடுபட்டு, ஹரிஜனங்களுக்கு ஆதரவு காட்டி, கத்தியின்றி ரத்தமின்றி ஆயுதப்பலம் வாய்ந்த அன்னியனை அன்பால் வென்று சுதந்திரமக்களாக ஆக்குவித்து, மனிதனாக வாழ்ந்து, மனித சமுதாயத்திற்குத் தொண்டுசெய்து மனிதனுகவே உயிர் துறந்த உத்தமன் மகாத்மா காந்தியைப்பற்றி எழுதுவதா?

அல்லது மனத்தில் வஞ்சகம் கொண்டு, மதவெறிப் பிடித்து, மயங்கி, உலக தந்தையை, உத்தமர் காந்தியை, கருணைக் கடலை, அண்ணல் அஹிம்சாமூர்த்தியை இந்த நாட்டு மக்கள் கண்ணீர்விட்டு கதற, மனம் பதற, நெஞ்சம் குமுற, துப்பாக்கியால் சுட்டு வீழ்த்திய கொடியன் கோட்சேயைப்பற்றி எழுதுவதா?

அரசைத்துறந்து, அன்பு மனைவி யசோதரையைப் பிரிந்து, மகவை மறந்து, உலகமே துன்பமயம் என்றெண்ணி முற்றும் துறந்த ஞானியாக, காட்டில் சென்று கடும் தவம் செய்து, எல்லோரும் ஓர் குலம், உலக உயிர்கள் அனைத்தும் கடவுளின் குழந்தைகள் என்றும் "மன்னுயிரும் தன்னுயிரே" என்று ஜீவகாருண்யம் நிறைந்த வித்தை, மக்கள் உள்ளத்தில் தூன்றச் செய்து, பெரும்புகழ் எய்திய அந்த புனிதனைப்பற்றி எழுதுவதா?

உலகத்தின் நாகரீகத்திற்கு உறைவிடமாக கல்விக் களஞ்சியமாக பாண்டிநாட்டிற்குப் பழமையாக, வீரத்தின் வெற்றிச்சின்னமாக ஏனைய நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக பண்டொருநாள் விளங்கிய பாரத கண்டத்தைப்பற்றி எழுதுவதா?

முத்தமிழ் வளர்த்து, அறநெறி பிறழாது செங்கோல் செலுத்தி, வறுமையால் வாடிய மக்களுக்கு வாழ்வளித்து, இமயம்வரை சென்று வெற்றிக்கொடிநாட்டி, கனகவிஜயன் தலையில் கல்லேற்றி கற்புக்கடம் பூண்டகண்ணகிக்குகோயிலெடுத்து பெரும் புகழெய்திய தமிழ் மன்னனின் மறத்தை மனதில் எண்ணி எழுதுவதா?

வந்தவர்களை விருந்தினர் என்று உபசரித்து புலவர்களுக்கு பெரும் பொருளை வாரி வாரி இறைத்து வாழ்ந்து வந்தவர் வாழ, வாழ்ந்தவர் தாழ வறியருய் வாழும் நிலையை நினைந்து நினைந்து எழுதுவதா?

பாட்டாளிமக்களின் ரத்தத்தைப் பருகி, ஏழைகளின் எலும்பை ஒடித்து, அவர்களின் கண்ணீரைக் கண்டுப் புன்னகை புரிந்து, உண்டு கொழுத்து உயர்ந்த மாடியில், பஞ்சணையில் படுத்துறங்குவதை விட "வேறொன்றும் அறியோம்

பராபரமே" என்று ஏழைகளின் உழைப்பிலே இன்புற்று வாழும் பணமூட்டைகளைப்பற்றி எழுதுவதா?

பகல் முழுதும் உழைத்துக்குடிக்க கூழின்றி, குடியிருக்கக் குடிசையின்றி, உடுத்த உடையின்றி, மரத்தடியிலும், தெருக்கோடியிலும் நடைப்பிணமாக வாழ்ந்து, கல்லை உடைத்து, மண்ணை வெட்டி, சாலையமைத்து சலிப்புற்று வீடு திரும்பும் போது "இன்று ஒன்றுமில்லை' என்று வாயிலில் நின்று கையை விரித்து சைகைக் காட்டும் மனைவியைக்கண்டு 'உஸ்' என்ற ஒலியை உறக்கச்செய்து மனைவியை உற்று நோக்கும் கணவனின் அந்தக் காட்சியைக்கண்டுகண்ணீர்வலித்து கண்ணீரைக் கருமையாகக்கொண்டு எழுதுவதா?

வற்றாத ஜீவநதிகள் வளைந்தோடும் நாட்டில் பற்றாக்குறையால் பட்டினியால், பஞ்சத்தால், வள்ளல்களாக வாழ்ந்த மக்கள் இன்று பிச்சைக்காரர்களாக, எச்சிலைச் சோற்றுக்கு நாயுடன் சண்டை செய்து, உடல் நலிந்து, மனம் பதைக்க, ஓவென்று ஓலமிட்டு உயிர் துறக்கும் மக்களின் நிலையை எழுதுவதா?

உதட்டில் புன்னகை தவழப்பேசி, உள்ளத்தில் டு கள்ளங்கொண் எழுதி, ஏழைகளை ஏமாற்றி பாமர மக்களிடம் பாசாங்குக் காட்டி உயர்ந்த பதவித் தேடும் உலுத்தர்களை காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் கயவர்களைப்பற்றி எழுதுவதா?

அல்லது, இத்தனையும் நினைந்து நினைந்து, எதைத்தான் எழுதுவது என்று புரியாமல் தலைமீண்டும் சுத்துகின்ற உள்ளம் கடல், புயல் போலவும், காட்டுத் தீயைப்போலவும் புரட்சி செய்து கொண்டிருக்கும் என் நிலையைப்பற்றி எழுதுவதா?

இன்னும் எதையெதைப்பற்றி எழுதுவது? நீங்களே கூறுங்கள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை,

★ கடிதம். ★

M. கந்தசாமி, 6-ம் படிவம்.

அன்புள்ள தம்பிகளுக்கு,

எனது வணக்கங்கள் பல.

நீங்கள் இந்த ஆண்டு பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் தேறியது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இனிமேல்தான் உங்களுடைய அறிவும், ஆற்றலும், பொறுப்பும், கவலையுமே அதிகம் ஏற்படுகின்றன. உங்களுடைய பள்ளியில் பாடங்கள் எல்லாம் இப்பொழுதிலிருந்தே படிக்க ஆரம்பித்து விடுங்கள். நாளை, நாளை என்று நாளைத் தள்ளி வந்தால், அது கடைசியில் தேர்வுக்கு ஒரு மாதத்திற்கு முன்தான், நமக்கு இன்னும் தேர்வுக்கு ஒரு மாதம்தானே இருக்கிறது என்று நினைவு ஏற்படும். அப்பொழுது தான் ஆகா, இது உயர்நிலைப்பள்ளியின் கடைசித் தேர்வு. நாம் 'முதல் வகுப்பில் தேறவேண்டுமே! பின் கல்லூரியில் முதல் வகுப்பில் படிக்க வேண்டுமே!' என்று நினைத்து, அதற்குப் பிறகு உடலை அதிகமாக வருத்தி நோயை வருவிப்பதே தவிர, பின் ஒன்றும் செய்வதற்கு இயலாது. ஆகையால் இப்பொழுதிலிருந்தே எல்லாப்பாடங்களையும் இரத்தினமும், செல்லத்துரையும் ஒற்றுமையாகப் படிக்கவேண்டும்.

நீங்கள் இருவரும் பள்ளிக்குக் குறித்த காலத்திற்குச் சென்று, பள்ளியில் பாடம் நடக்கும்பொழுது பிறரிடம் பேசி, விளையாடாமல் உபாத்தியாயர் போதிப்பதை உற்றுக் கேட்கவேண்டும். அந்தச் சமயத்தில் உங்கள் கவனத்தைப் பள்ளியில் செலுத்தாமல், ஊர் விஷயங்களை அரட்டை அடித்துவிட்டு வீட்டுக்கு வந்தபிறகு என்னதான் மோதிக் கொண்டு படித்தாலும் ஒன்றும் விளங்காது, புரியாது. ஆகையால் பள்ளி வகுப்பறைக்குள் சென்றுவிட்டால், உங்கள் கவனத்தையெல்லாம் ஆசிரியர் சொல்வதைக் கேட்பதிலேயே செலுத்தவேண்டும்.

நீங்கள் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் முதலில் ஒரு தாளில் குறித்துவைத்துக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும். நீங்கள் தினந்தோறும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டுப் படிக்க ஆரம்பிக்கவேண்டும். முதலில் ஆங்கிலப் புத்தகத்தைப் படிக்கவேண்டும். ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து மிகத் தெளிவான உச்சரிப்போடு உரக்கப் படியுங்கள். படிக்கும்பொழுது அதன் அர்த்தத்தை வாங்கிக்கொண்டு படியுங்கள். அர்த்தம் தெரியாது கத்திப்படிப்பதில் ஒரு பிரயோசனமுமில்லை. அதற்குப்பின் விஞ்ஞான புத்தகத்தை அரைமணி நேரம் ஆழ்ந்து மெதுவாகப் படியுங்கள். அது முடிந்தப் பின், கணக்குகள் செய்யவேண்டியிருந்தால் செய்யுங்கள். படிப்பதில் இருவரும் போட்டி

போட்டுக்கொண்டும், இருப்பதில் இருவரும் ஒற்றுமையாகவும், ஒருவருக்கொருவர் தெரியாததைக் கேட்டுத் தெரிந்துகொண்டும் படிக்க வேண்டும்.

மாலைநேரத்தில் பள்ளிவிட்டவுடன் சிறிதுநேரம் நன்றாக ஓடி விளையாடுங்கள். ஆறு மணிக்குப்பிறகு முகத்தை அலம்பிக்கொண்டு, பள்ளியில் கொடுத்த வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். பிறகு ஒவ்வொரு பாட சம்பந்தமான புத்தகங்களையும் சிற்சில நேரங்களில் படிக்க முயலவேண்டும். தமிழ்ப் பாட்டுக்களை உணர்ச்சியோடும், இசையோடும் பாடவேண்டும்.

மற்றும் பள்ளியிலுள்ள நூல்நிலையத்திலிருந்து (ஸர். வால்டர்), (ஆர். எஸ். ஸ்டீவன்ஸன்), (சார்லஸ் டிக்கன்ஸ்) முதலிய அறிஞர்கள் எழுதிய ஆங்கில புத்தகத்தை வாங்கி வாசியுங்கள். மேலும் உங்கள் பள்ளியில் நடைபெறும் N. C. C. சாரணப் படை (Scout), (Red Cross Society) செஞ்சிலுவைச் சங்கம் இன்னும் பல வித போட்டிகளில் கலந்துகொள்ள முயற்சி பெறுங்கள். போட்டியில் நாம்தான் முதல் பரிசு வாங்கவேண்டுமென்று மனதில் வைத்துக்கொண்டு கலந்துகொள்ள வேண்டும். தாங்கள் இருவரும் எந்தச் சமயத்திலும் ஏதாவது ஒரு துறையில் மூளையைச் செலுத்திக்கொண்டேயிருங்கள். அதனால்தான் திருவள்ளுவர்கூட,

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்று வெகுஅழகாகக் கூறியுள்ளார்.

கடைசியாகச் சில முக்கியமான விஷயங்களைக் கூறிவிட்டு இக் கடிதத்தை முடித்துக்கொள்கிறேன். நீங்கள் இப்பொழுது எந்தவிதமான அரசியல் துறையிலும் ஈடுபடுதல் கூடாது. அது உங்கள் படிப்பிற்கு வெகு இடைஞ்சலாய் வந்து முடியும். ஆனால் தினசரி செய்தித்தாளைப் படித்து நன்றாக அரசியல் உலகத்தை அறிந்துகொள்ளுங்கள். மற்றும் சினிமா, நாடகம் முதலிய காட்சிகளுக்கு நீங்கள் அறவே செல்லுதல் கூடாது. நீங்கள் காபி, டீ போன்ற பானங்களை அருந்துவதனால் நரம்புத் தளர்ச்சிதான் ஏற்படும். ஆதலால். அவைகளை வெறுத்து விடுங்கள், குளிர்ந்த பானங்களை அருந்துங்கள்.

தம்பிகளே!

உங்களால்தான் நம் ஏழைக் குடும்பம் முன்னுக்கு வரவேண்டும். அதைத் தாங்கள் மனதில் வைத்துக் கொண்டு படிக்கவேண்டும். நான் ஒருவன் சம்பளம் வாங்கி நம் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாத காரியம். அதையும் மனதில் வைத்துக் கொண்டு படியுங்கள். பல பட்டங்கள் பெறுவதற்கு முயற்சி செய்து படியுங்கள். அதற்குத் தகுந்த பல உயர் பதவிகள் கிடைக்கும். ஆகையால் நீங்கள் "தெரிந்துகொண்டது "எள்" அளவுதான். தெரியாதது உலகளவு இருக்கிறது" நீங்கள் இரண்டுபேரும்தேர்ச்சிபெறுவீர்கள். சிறந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள். S. S. L. C. எழுதும் மாணவர்களும் அதிகமாகத் தேர்ச்சி அடைகிறார்கள்

என்ற நம்பிக்கையில்தான் உங்கள் இருவரையும் அந்த ஊரிலுள்ள "நேரு உயர்நிலைப் பள்ளியில்" சேர்த்தேன். என் நம்பிக்கைக்குத் துரோகம் செய்யமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் கடமையைச் செய்யத் தவறுதீர்கள். உங்களால் பள்ளிக்கு சிறிய இழிவும் உண்டா காதவகையில் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் பாஸ் பண்ணிவிட்டால் அதுவே உங்கள் கடமை, எங்களுக்கும் செய்த கடமை. ஏன்? இந்த நாட்டிற்கே செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்றாகும்.

தம்பிகளே!

மேளம் அடிப்பது போன்ற சத்தத்தை எவ்வாறு திரும்பப்பெற முடியாமல் போகிறதோ, அதுபோல் தான் காலமும் கடக்கிறது. வீணாக்கும் காலத்தைத் திரும்பப் பெற முடியாது. ஆதலால் காலத்தை வீணாக்காதீர்கள். இப்பொழுதே எழுங்கள். இறுதித் தேர்வில், "வெற்றிப் பெறுவோம்" என்று உறுதிக் கொள்ளுங்கள். நன்றாகப் படியுங்கள். வெற்றி உங்களுடையதுதான்.

இத்துடன் முடிக்கிறேன்.

இங்ஙனம்,
உங்கள் மூத்த சகோதரன்,
சுந்தரம்.

"அலண்டவனுக்கு - - இருண்டதெல்லாம் பயம்"

[அ. பெரியசாமி, 5-ம் படிவம்.]

அன்று வெள்ளிக்கிழமை. நான் பள்ளிக்கூடம் விட்டபின் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னையறியாமலே என் எண்ணம் கால்பந்தின்மேல் செலுத்திக்கொண்டு மிக உற்சாகத்தோடு ஓடி விளையாடிக் கொண்டிருந்தேன். நான் ஊருக்குப் போகவேண்டும் என்ற எண்ணத்தை மறந்து என் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டே இருந்துவிட்டேன். மணி ஐந்தரை இருக்கும். சூரியன் மேற்கு திசையில் மறையப்போகும் சமயம் அவன் தன் பொன்னொளியை பூமியின்மேல் சொரிந்து எங்கு நோக்கினும் தங்க மயமாகத் திகழ்ந்தான்.

அச்சமயம் என் நண்பன் என்னை ஊருக்குப் போகவில்லையா என்றான். அப்பொழுதுதான் எனக்கு ஊருக்கு போக நினைப்பு வந்தது. வேகமாக ஓடி என் வகுப்பில் நுழைந்து என் புத்தகங்களை எடுத்துக்கொண்டு ஊரை நோக்கி ஓடோடியும் நடந்தேன். நான் வந்த தூரம் ஒரு மைலுக்குள் கதிரவன் மறைந்தான். கதிரவன் கதிரொளியைக் கொண்டே

வீடு போய்விடலாம் என்று எண்ணிக்கொண்டு வேகமாக நடந்து கொண்டிருந்தேன். காலோ மிகவும் வலி எடுத்துக்கொண்டது. இன்னும் என் ஊர் மூன்று மைல் போக வேண்டும். அதற்குள் நன்றாக இருண்டுவிட்டது. எங்கும் இருட்டு. அன்று அமாவாசை வர இரண்டாவது நாளாக இருந்தது. கள்வனுக்கு உகந்த இருட்டு அன்று. என் மனம் 'படக், படக்' என்று அடித்துக் கொண்டிருந்தது. ஏனெனில் கள்வர்கள் ஆடம்பரம் அதிகமாக இருக்கிறது என்று நான் அதற்கு முன்பதாக அறிந்திருந்தேன். நான் செல்லும் வழியில் அடர்ந்த காடுகள் இருந்தன. பகலில் போகும் போதுகூட அவ்விடம் வந்தவுடன் ஓட்டமாக அக் காடு தாண்ட மட்டும் ஓடுவேன். இரவில் சொல்லவும் வேண்டுமோ!

இஃது இவ்வாறு இருக்க, என்னைக் காணமல் என் அண்ணனும் என் தந்தையும் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு வந்தார்கள் அப்பொழுது நான் அந்த அடர்ந்த காட்டிற்கும் அருகில் மிகவும் வேகமாக வந்து கொண்டிருக்கிறேன். அந்த அடர்ந்த காட்டை நினைத்தாலே திரும்பி பள்ளிக் கூடத்திற்குப் போய்விடலாமா என்ற எண்ணம் என் கோழை மனதில் குதிகொண்டது.

நல்ல இருட்டு ஆனதால் கீழே பாதையைப் பார்த்துக்கொண்டு வந்த நான் நிமிர்ந்து பார்த்தேன். அடே அப்பா! என்ன இது! திருடனு? அல்லது கொள்ளி பிசாசா? என்று என் மனம் என்னையே கேட்டது. என் அறிவு, அவை கொள்ளிபிசாசுமில்லை, கள்ளனுமில்லை போ பயப்படாமல் என்று சொன்னது. ஆனல் என் மனம் அவை கொள்ளி பிசாசு தான் என்று தைரியம் ஊட்டியது பாருங்கள்!

அந்த ஒளியானது புதர்களில் மறைந்து, மறைந்து வந்ததால் கொள்ளி பிசாசுதான் என்று திண்ணமாக நினைக்கச்செய்தது. அதுவுமின்றி அந்த ஒளி என்னை எதிர்நோக்கி வந்தது. அவ்வளவுதான் என் மனம் அதிகமாக திகில் அடைந்தது யாரையும் கூப்பிடவும் என் நா எழவில்லை. மரக்கட்டையைப்போல் அவ்விடத்திலே என் புத்தகங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு நின்றுகொண்டிருந்தேன், வரும் ஒளியைப் பார்த்துக் கொண்டே.

அவ்வொளி என்னைக் கிட்ட அணுகியது. நான் ஓடிப்போய் ஒரு புதரில் மறைந்துகொண்டே கவனித்தேன். அந்த ஒளியானது என்னைப்பற்றி பேசிக்கொண்டு வந்தது. நான் அதைக் கூர்ந்து கவனித்தேன். அடே அப்பா! இப்பொழுதுதான் என் மனம் சாந்தி அடைந்தது! அவர்கள் என் அண்ணனும் என் தந்தையும் தான் உடனே அப்பா என்று கூப்பிட்டேன். என் அண்ணன் பயந்து கையிலிருந்த விளக்கை கீழே போட்டுவிட்டு திரும்பி பார்த்தார். விளக்கு கீழே விழவே அவை அணைந்துவிட்டது. இருட்டில் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. என் அண்

ணனை என் தந்தை தீப்பெட்டி இருக்கிறதாடா சோம்பு என்று கேட்டார். ஆம் இருக்கிறதென்று சொல்லிக் கொண்டே விளக்கைப் பொருத்தினார். உடனே நான் முழுசாகக் கண்டுகொண்டேன் அவர்களை. அவர்களும் என்னைக் கண்டுகொண்டார்கள்.

என் தந்தைக்கு என்மேல் அதிக கோபம் வந்துவிட்டது. "ஏண்டா கண்ணு இவ்வளவு நேரம்? கொஞ்சம் நேரத்தோடே வந்தால் என்னடா?" என்று அதட்டிக் கேட்டார். நான் பித்தா, பித்தானு விழித்தேன். சரி வாடா வீட்டுக்கு என்று என்னை அழைத்துக்கொண்டு போனார்கள்.

வீட்டை அடைந்ததும் நான் எனக்கு இட்டிருந்த உணவை உண்டேன். பின்பு என் தந்தை, போய் படிடா என்றுச் சொல்லி விளக்கைக் கொடுத்தார். நான் விளக்கை என் அறைக்கு எடுத்துச் சென்று படிக்க உட்கார்ந்தேன். மாலையில் வெகு நேரம் விளையாடியக் காரணத்தாலும், பயந்த நிகழ்ச்சியாலும் தூக்கம் அதிகமாக வந்துவிட்டது. என் படுக்கையில் படுத்துக்கொண்டே படித்தேன். புத்தகம் மார்பில் இருக்கவே நான் கண் அயர்ந்துவிட்டேன். விளக்கு விளக்குப்பாட்டில்தான்! கொஞ்ச நேரத்திற்கெல்லாம் என் அறையின் பக்கமிருந்த வீட்டில் ஒரு கிழவர் இறந்துவிட்டார் என்று அழுதுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது எனக்கு அரை தூக்கம். திடுக்கென்று விழித்துக்கொண்டேன். எனக்கு பயம் அதிகமாகிவிட்டது. எழுந்து உட்கார்ந்துக்கொண்டு யோசித்தேன் பக்கத்தில் அந்த மாணிக்க கிழவர் இறந்துவிட்டார் என்று ஊகித்துக் கொண்டேன். அப்படி இருந்தாலும் என் மனம் பயத்தால் மூழ்கி இருந்தது.

பொழுது புலர்ந்தது. பூந்தோட்டத்தில் வண்டுகள் சப்தம் இனிமையாக இருந்தது. அன்று சனிக்கிழமையல்லவா? ஆகையால் அந்த வாரத்தில் சேர்ந்தார்போல் நான்குநாட்களுக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது.

மாணிக்கக்கிழவர் இறந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டது. நான் பொழுது மறைந்ததும் வீட்டைவிட்டுவெளியே போக மாட்டேன். ஏனெனில் என் நண்பன் பாலு, மாணிக்கக் கிழவர் பேயாக மாறி அழைக்கிறார் என்று கட்டுக்கதை கட்டிவிட்டான்.

ஒருநாள் இரவு என்னை பாலு பயப்படுத்த நினைத்து வந்து என்னை அதிகம் அலட்டிவிட்டான். என் பயத்தை ஒழிக்க மறுநாள் காலை கூறினான்:—நண்பா! உலகத்தில் எத்தனையோ பேர்கள் மூடநம்பிக்கையால் மூழ்கி இருக்கிறார்கள். பேய் என்றும், பிசாசு என்றும் வீணே தன் மனத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். 'எல்லாம் மனப்பயம்தான்' மற்றது ஒன்றுமில்லை. "அலண்டவனுக்கு இருண்டதெல்லாம் பயம்" என்றும் நீ உன் மனதிலுள்ள பயத்தை விடு என்றும் எனக்கு தைரியம் கூறினான்.

அதற்குப்பின் நான் நல்ல தைரிய முள்ளவனாக இருந்தேன். பேய், பிசாசு இல்லை என்று நிச்சயமாக நம்பினேன். இனி எந்த நேரத்திலும் எப்பொழுதும் எங்கும் பயப்படாமல் போக பழகிக்கொண்டேன். "ஒழிந்தது என் மனப் பயம்"

குயிலும் மயிலும்

[P. பாலசுப்ரமணியன், 5-ம் படிவம்.]

மயில் :-

புங்கமரம் பொழில் நிறைந்த புத்தனும்பட்டியெனும்
வங்கம்போல் வளப் சிறந்த வளமிக்க இம்மூதூரில்,
பல்லாயிரக் கணக்கான பணச்செலவில் நேருகூடந்தனை,
நல்ல எண்ணத்துடன் எல்லோரும் படித்துணர
உள்ளக் களிப்புடனே உண்டாக்கியோன் யாரென
மெல்லநீ சொல்வாயோ! கோலச்சிறு குயிலே!

குயில் :-

ஆற்றைச் சுற்றியிருக்கும் அழகிய சோலையதில்
ஊக்கமுடன் ஆடுகின்ற அழகிய பொன்மயிலே!
புத்தனும்பட்டியதில் புதுமையுடன் நேரு கூடம்
புதுக்கியவன் யாரென உரைப்பேன் நீகேட்பாயே!

அவர்தான்

உத்தமர் காந்தியைப்போல் உள்ளமுள்ள பெருமான்
உயர்ந்த குணங்களுள்ள உண்மைமிக வாய்ந்தமகான்
வள்ளல் கர்ணனைப்போல் வாரியிறைக்கும் மகான்!
வெள்ளை உள்ளம்படைத்த வேளாளர் மரபினராம்!
ஆதி திராவிடரை அன்புடன் ஆதரிக்கும்,
ஊதியம் கருதாத உத்தமர் மூக்கப்பிள்ளை!!

"கடல் தாமரை"

[M. தங்கராசன், 5-ம் படிவம்.]

உலகத்திற்கு நீதி வழங்கச் சட்டம் படித்திருக்கிறேன். அதன் துணை கொண்டு இருபது வருடங்களாக நீதிபதி ஆசனத்தை அலங்கரித்து வருகிறேன். ஏழாயிரம் வழக்குகளுக்குத் தீர்ப்பு அளித்திருக்கிறேன். எல்லாம் எனக்குச் சரியென்றுபட்ட அளவில் நடுநிலை தீர்ப்பாகவேதான் இருக்கும். ஆனால் இன்று வழங்கப்பட்ட தீர்ப்பு ....சட்டப்படி வழங்கப்பட்ட தீர்ப்புதான். இருப்பினும்....மனிதனோ மிருகமோ, இரண்டுமற்ற நடுநிலையிலிருந்து, மனதை கல்லாக்கிக் கொண்டுதான் தீர்ப்பு வழங்க முடிந்தது.

"பிரதிவாதி தன் கணவனுடன் கூடிவாழ தகுதியற்றநிலையில் தீராத நோய்க்கு ஆளாகி இருக்கின்றபடியால் வாதி வேறு பெண்ணை மணந்து கொள்ள அனுமதிக்கிறேன்." "மணந்து கொள்ள ...." இந்த வார்த்தையை நான் கூறவில்லை. சட்டமே கூறியது. மணந்திருந்த பெண்ணை விலக்கி விட்டு வேறு பெண்ணை மணந்து கொள்ள சட்டமே அனுமதி அளிக்கிறது. வாதிக்குத் தகுந்த சட்டம். வாதி.......! வாதியை எனக்குத் தெரியும். பெயர் 'தத்துவம் பிள்ளை' என் நண்பரின் மகன். நண்பரின் அப்பா, தாத்தா, அவர்கள் குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் புகலிடம் அந்த சிற்றூர்தான். ஒரே ஊர். ஆகவே நண்பர்கள், உறவினரும் கூட!

தத்துவம் ஒரு மேதை. ஆகவே அவன் போக்கும் அலாதியானது. கல்லூரியில் படிக்கும் வயதில் அரசியல் படித்தான் அரசியல் படிக்க வேண்டிய பருவத்தில் கல்லூரியில் படிக்க விரும்பினான். முயன்றான். தோல்விதான். அதனாலென்ன? அவன் மேதை. ஆகவே படிக்க விரும்பினான். படித்தான். நாஸ்திகம் படித்தான். வேதாந்தம் பிறந்தது. பணத்தாபம் எழுந்தது. கம்யூனிசம் பேசினான். பெயர் புகழடைய விரும்பினான். சுறுக்கு வழியில் சீர்திருத்தம் பேசினான். புகழ் கிடைத்தது. மனிதன் என இவனை உலகம் உணர்ந்தது. இதை அறிந்த அவன் முழுமனிதனை விரும்பினான். கல்யாணம் செய்தால் தான் முழுமனிதன். அதற்கும் முயற்சித்தான்.

இவன் தந்தை ஒரு செல்வந்தர். அவருக்கு வரும் மருமகளும் ஒரு சீமானின் மகளாக இருக்க ஆசைப்பட்டார். தாயார் அதி அழகி. அவள் நாட்டுப் பெண் அழகு சுந்தரியாக இருக்க ஆசைப்பட்டாள்! தங்கை ஐந்து வருட மோகினி. ஆகவே, அவள் மன்னி அலங்கார பிரியையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்

பட்டாள். தத்துவம் தனக்கு வரப் போகும் மனைவியைப் பற்றிக் கற்பனை செய்யாமல் இருக்க முடியவில்லை.

புராணமென்றால் கட்டோடு பிடிக்காது. ஆனால் சாவித்திரி, கண்ணகி, பொறுமையுள்ள கிரிசல்டா போன்ற கற்புடைய மங்கையரைப் போன்ற பெண் ஒருவளையே நினைத்தான். அதிலும் அவள் சகலகலா வல்லியாக, மகா சுகிர்தரூபசுந்தரியாக இருக்க வேண்டும்என்பதேஇவன் தீர்மானம்.

தீர்மானம் அமுலுக்கு வருமுன்பே அப்பா போய்விட்டார். அவசரமாக கல்யாணம் செய்து கொண்டான். பிறகு தான் நினைத்தான் தன் மனைவி சாதாரணமான பெண்ணே என்று! ஆனாலும் பெண்ணிற்கு அழகு இருந்தது. அடக்கம் இருந்தது. அறிவு இருந்தது அச்சம் இருந்தது. நாணம் இருந்தது. மடம் இருந்தது. பயிற்பு இருந்தது. எல்லாம் இருந்தது. அதோடு ஒரு குறையும் இருந்தது. அது "கணவன் அன்பில்லாத மனைவி" என்று சொல்லுவது தான்.

மேதை என்றால் அசையாத நம்பிக்கை உடையவரே. ஆகவே தத்துவம் நினைத்தான். தன் மனைவியைச் சீர்செய்து விடுவது என்று. இவன் சீர்திருத்தம் மனைவியிடம் புகுந்தது. டைரக்டர் ஆனான். அழும்போது சிரிக்க வேண்டும் என்பான். சிரிக்க வேண்டுமிடத்தில் அழவேண்டும் என்பான். பாடும்போது ஆடு என்பான். ஆடும்போது பாடு என்பான். அப்போதெல்லாம் இவள் பாடு சங்கடமாகும்.

கொஞ்சநாள் அவனுக்கு பணிந்தாள். பிறகு

பிறகென்ன ....? "கூட்டத்திற்கு போ என்றால் கோவிலுக்குப் போவாள்! சினிமா செல்ல வேண்டும் என்பான். சீடைசெய்ய வேண்டுமென்பாள்! நாட்டியக்கச்சேரி என்பான். நான் மாட்டேன் என்பாள். தம்பதிகள் வாழ்க்கையில் "ஒத்துழையாமை இயக்கம்" பிறந்து, வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிந்தது. அவன் மனம் உடைந்தான். படுத்து விட்டான். பின் டாக்டர் வந்தார். கையைத்தொட்டார், நாக்கைப் பார்த்தார், மார்பில் "ஸ்டெதஸ் கோப்பை"(Stethoscobs) வைத்தார். மருந்துஎழுதிக்கொடுத்தார்

முதல்நாள் சடங்கு இப்படி முடிந்தது. மறுநாள், அடுத்தநாள், தினம், தினம்..............ஆறுமாதங்கள் இந்த சம்பிரதாயங்கள் நடந்தன. இந்த ஆறுமாதங்களில் அவள் பட்ட வேதனை..............மலர் முகம் மங்கி வதனமாகியது! தங்க மேனி பித்தளையாக கறுத்துச் சுருங்கியது! சந்தன நிறம் மாறி, சாக்கடை நிற அவதாரம் பெற்றது. பொதுவில் அவள் இலையுதிர்ந்த மரமாக, சதை உதிர்ந்த எலும்புக் கூடானாள்.

அவன் பிழைத்துக் கொண்டான். ஆனால் அவள்......? ஒன்றை இழந்து தான் மற்றொன்றை பெறமுடியும் என்று எங்கேயோ படித்திருக்கிறேன். அது இப்போது நடந்து விட்டதாக நினைத்தேன். இப்போது அவள் காசநோய்க்காரியாகி விட்டாள். நோயின் பரிபூரண ஆட்சியில் வாழ்ந்து வந்

தாள். தத்துவம் தத்துவார்த்தமாகப் பேசினான், "சூரியனோடு வானம் அழிந்து விடுவதில்லை. மலரோடு செடியும் கருகிவிடாது. அவளோடு நானும் மடிந்து விடப் போவதில்லை! இதோடு அவன் நிற்கவில்லை. மனைவி என்ற பந்தத்திலிருந்தே அவளை விடுவித்து அந்தக்காலி இடத்தை நிரப்ப விவாகரத்து வரை சென்று நின்றான்.

நான் விசாரித்தேன்.

"உன் பெயர்?"

"தத்துவம் பிள்ளை"

"தகப்பனார் பெயர்"

"அற்புதம் பிள்ளை"

"விவாகரத்திற்காக நீர் கூறும் காரணம்?"

"அவள் காசநோய்க்காரி! ஆகவே கூடி வாழ முடியாத நிலை........?"

"நோய் உண்டாவது இயற்கை தானே.......!"

என்னையும் கடந்த ஒரு ஆவேசத்தில் கேட்டேன்.

அதற்கு வாதியின் வக்கில் "சட்டப் படி...." என்று தன் வாதத்திற்கு தேவையான சட்டங்களேயும், பிரிவுகளேயும்எடுத்துதிறமையாகவாதிததார்

நானும் தீர்ப்பு வழங்கி விட்டேன். ஆனால் அது நல்லதீர்ப்பல்ல. நடுநிலைத் தீர்ப்பல்ல. சட்டத்திற்கு பணிந்து தர்மத்தைப் புதைத்துவிட்ட தீர்ப்பு.

தீர்ப்பு எழுதிய என பேனவை நொறுக்கி எறிந்தேன். எழுதிய என் கையை நீரால் கழுவினேன். ஆயினும் மனம் சாந்தி அடையவில்லை.

இரவு வெகு நேரத்திற்குபின் உறங்கினேன்.

அப்போது ஒரு கனவு.

"தீபம் சுடர்விட்டு எரிகின்றது ஒரு வீட்டில். ஒரு பூச்சிக்கு தீபத்தின் மேல் ஆசைப்பிறக்கிறது. ஒரே பாய்ச்சல்! மின்வெட்டு நேரத்தில் இறகு வெந்து மூளியாகி வெளி வருகிறது. மூளி, மூளி....." இதற்கு என்ன பொருள்? யோசித்தேன் விளங்கவில்லை அப்பொழுது என் அறையில் யாரோ நுழைந்தனர். நிமிர்ந்து பார்த்தேன். தத்துவமே நின்றான். நான் "என்ன" என்று கேட்க அவன் இடமளிக்கவில்லை. அவன் பேசினான்.

பணத்தால் நான் ஒரு மேதை ஆனேன். அதனால் பல கஷ்டங்கள் பட்டேன் "பணம்" ஒரு பாழுடைந்த சமூகத்தில் பதுங்கி இருக்கும் பாதகப் பொருள். செலவழிக்கத் தெரியாத வீணரின் இருப்புப் பெட்டியில் பூட்டி இருக்கும் புனிதப்பொருள். "பணம்" பிச்சையிடத் தெரியாத பிசாசிடம் அகப்பட்ட சொத்து. "பணம்" பாசம் பந்தம் இவற்றை அறுத்தெரியும் தேன் இரும்புக்கத்தி. "பணம்" முன்பின் தெரியாதாரை உறவினராக்கும் உன்னதப்பொருள். "பணம" குணத்தைக் கெடுக்கும் ஒரு மது. "பணம்" ஏழைகளின இரத்தத்தை உறுஞ்சும் அட்டைகளின் இருப்புச் சாவி, "நாகரீகம் என்பது பொய்; வெறுப்பு என்பது பொய்; புகழ் என்பது பொய்; பந்தந்தான் இன்பம்; பாசம்தான் இன்பம்வாழ்வுதான் இனபம்;வாழுவைப்பது தான் இன்பம். என்னைப் பாருங்கள் இந்தக் கனத்தில் என்னைப் பார்க்கும் போது உங்களுக்கு ஆனந்தம் உண்டாகவில்லையா?" நான்மௌனமாகஇருந்தேன். ஆனல் நடக்காத சம்பவம் நடந்து விட்டதாக உணர்கிறேன். ஆமாம் அதோ அலை கடலிலே தாமரை மலர்ந்து விட்டது.

நான் கண்ட திருப்பராய்த்துறை
(ஒரு கடிதம்)

அ. கோவிந்தன் - *ஐந்தாம் படிவம்.*

அன்புள்ள சிவராஜுக்கு,

நான் காலாண்டு விடுமுறையில் குடிமைப் பயிற்சிக்காகத் திருப்பராய்த்துறை விவேகானந்த வித்தியாபவனத்திற்கு என்னைப் பள்ளியின் செலவில் அனுப்பச் சென்றேன். நான் செல்லும் வழியில் காவிரியாற்றின் தண்ணீர் பாய்ச்சலால, குறுவை நெற்களை மக்கள் அறுக்கவும், கட்டுக்கள் கட்டித் தூக்கவும் நெற்கதிர்களை அடிக்கவும், போர் தாள்களைப்போடவும் கண்ட காட்சிகள் அமெரிக்க நவீனகால இயந்திரங்கள் செய்வதைப் போலவே காட்சியளிகதன. மக்கள் எறும்பிலும தேனீக்களுக்கும் மேல் சுறு சுறுப்பாக வேலை செய்துக் கொண்டிருந்தார்கள். அங்கு கும்பல் கும்பலாக போர்க் காட்சிகளைப் பார்த்தால் பொற்குவியல் போல காட்சியளித்தன.

உண்மையிலேயே முக்கால கவிஞர்கள் நடந்து திரிந்து கஷ்டப்படவுந் தான் அவர்கள் அக்காலத்தில் எதையும் நினைத்தப்படி கவி, பாட்டுகளாகப் பாடியிருக்கிறார்கள். இப்பொழுது நவீன நாகரிகம் பெருக போக்குவரவு சாதனம் அதிகமாக நல்ல சுகத்துடன் போய்விட்டு வருவதால் அவர்களிடம் உள்ள கவிகள் அனைத்தும் சந்தோஷத்தில் மறந்தும் மாறியும் விடுகிறார்கள். மீண்டும் காவிரியாறு கடந்து திருச்சி கோட்டை ரயில்வே நிலையத்திற்குச் சென்றேன். அங்கு பல கிராமமக்களும், பள்ளி மாணவர்களும், மாணவிகளும், அக்டோபர் தேர்வு எழுதிவிட்டு கூட்டம் கூட்டமாகக் கூடியிருக்கும் காட்சி, அந்தி நேரத்தில் கிளிகளும், காகமும், வெள்ளைக் கொக்குகளும், ஒன்றாகச் சேர்ந்து பறந்து செல்வது போன்று அவர்கள் உடை நடைகள் காட்சி அளித்தன. அவர்கள் கூடிக் கூடி புகைவண்டியைப் பார்த்தது காகங்கள் சேர்ந்தாற்போல் சாப்பிடுவதற்கு ஒப்பாகும். இவைகளைக் கண்ட பிறகு நான் புகைவண்டிக்குப் பிரயாணச் சீட்டு வாங்கிக்கொண்டு வண்டியில் ஏறி பிரயாணம் செய்தேன். அந்திப் பொழுதில் எங்கு பார்த்தாலும் நெற்பயிர்கள் பச்சைப் பச்சையாகவும் அவைகளின் மீது தட்டாரப்பூச்சிகளும், வண்ணாத்திப்பூச்சிகளும், பறந்துக் கொண்டிருக்கும் வர்ணங்களும் என் உள்ளத்தைக் கவர்ந்தன நான் ஏழுமணிக்கு வித்தியா பவனத்தை அடைந்ததும் அங்கு ஈசலும், விட்டிலும் விளக்கை அடைவதுபோல் பல உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து அநேக தோழர்கள் வந்திருந்தார்கள். அங்குச் சென றவுடன பார்த்தால் சவுக்கைமரங்கள் காற்றின் அசைவின் ஓசை வாருங்கள், வாருங்கள் என்று அழைக்கும் சப்தமாகவும் தோழர்களின் குரல் வண்டின் இனிய கீதமாகவும், வாழையின் குலை இங்கே வந்து உட்காருங்கள் எனறு கையை நீட்டி மடக்குவதற்கு ஒப்பாக குலைகளை சாய்ததுக் கொண்டிருந்தன. குழாய்களின் மூலமாக தண்ணீர் விழுவதும் ஓடுவதும் சிறு அருவி ஓடுவதுபோலிருந்தது.

பள்ளி அறையில் பவர் லைட்டுகள் பட்டப்பகல்போல்விளங்கின. காகம் தன் குஞ்சுகளுக்கு இரையைவாயில் ஊட்டுவதுபோல், கனம் தலைமை ஆசிரியர் அவர்கள் எங்களுக்கு தங்குவதற்கு இட்வசதி கொடுத் தார்கள். பின் சாப்பாட்டிற்கு ஒரு கட்டுப்பாட்டுடன் வரிசையாக பக்கத்திலுள்ள மட்த்திற்குச் சென் ஞேம். அங்கும் அநேக தோழர்கள் தங்கி படித்து வருகிருர்கள். எல் லோரும் ஒரேசமயத்தில்உட்கார்ந்து சாப்பிட வசதி செய்யப்பட்டிருக் தது. அங்கு பரிமாறுபவர்கள் தோழர்கள். அவர்கள் சின்னம் சிறுவர்கள். இவர்கள செய்வதைப் பார்த்துநாமெல்லாம் இப்படி செய்ய வில்லையே என று வருத்தமும், பொருமையும்பட்டேன். ஒருவாறு சந்தோஷமும், மகிழ்ச்சியும் அடைந் தேன்.

அங்கு சாப்பிடும்பொழுது மாண வர்கள் சப்தம செய்யாமலிருப்பதும் கடவுளின்பேரில் பாட்டுப் பாடும் காட்சியும, சாப்பிட்டபின எல் லோரும் சேர்ந்தாறபோல் எழுந் திருப்பதும் கண்டால் வெள்ளையர் கள்கூட இவ்வளவு ஒழுங்காக இருந் திருகக மாட்டாாகள எனறு நினைத் தேன. இங்கேதான உண்மையிலே யே கடவுள தங்கியிருக்கும கோயி லென்றே சொல்லவேண்டும். கட்டி ட்த்தின் அமைப்பையும் மக்கள் அங்கு வேலைசெய்யும் உற்சாகத்தை யும, அங்கு அமைந்திருக்கும மரச் சோலைகளும, நந்தவனங்களையும் பார்த்தால் பசியினல் களைத்த வனுக்கு "சுட்டத் தண்ணீர் குடித் தால் பட்ட களைப்புமாறும்" எனறு பெரியோர்கள வாக்கின்படி அங்கு உட்னே களைபபு மாறிவிடும். சுவாமி சித்பவானந்தர் அவர்களை என்ருல் எதற்கும் ஒப்பிட்டவே முடியவில்லை. பிற்காலத்தில் விவேகானந்தர் களுக்கு மேலாக விளங்குவார்கள் என்று என் உள்ளன்புடன் கருதுகி றேன். வங்காளம் ஈன்றெடுத்த கவிஞர் தாகூர் அவர்கள் நட்டதிய சாந்தநிகேத்தையும், அஜாந்தர கலாசாலையும் அதறகு ஒப்பிட முடியாத அத்தகைய சாந்தனிகத் திற்கு விடிவெள்ளி உதயமாகுவது போலிருக்கிறது.

இக்காலத்தில் இன்னும் சிறந்து விளங்கினல் வருங்காலத்தில் சரித் திரத்திலேயே புகழ்பெற்ற வரலா ராகத் திகழுமென்று உண்மையி லேயே நான் நினைத்திருக்கிறேன். நாங்கள் மாலை நேரங்களில் உல்லாச மாக அவ்வூர்களை சுற்றிப் பாாப் பதற்காக மாலை நேரத்தில் எங் களுக்கு அனுமதி கொடுக்கப்பட் டார்கள். அங்குசென்று பார்த்தால் ஒரு சிவன் ஆலயமும பஞ்சாயத்து அலுவலகமும, அச்சக நிலையமும இருக்கின்றன. அங்கே இப்படி யெல்லாம் அமைவதற்குக் காரணம் சுவாமி சித்பவானந்தர் அவர்களே தான். அங்கு இருப்புப்பாதைவசதி யும, பஸ்ரோடு திருச்சியிலிருந்து கரூர் செல்லும் பாதை வசதியும், காவிரிக்கரையில் இவ்வூர் அமைந் திருப்பதும் அவ்வூரார்கள் செய்த பெரிய புண்ணியமென்றே சொல்ல லாம் அங்குள்ள மக்கள் நல்ல நாக ரீக முள்ளவர்களாக இருக்கிருர்கள்.

அவ்வூரின் சொந்த சிலவில் ரேடியோ ஒன்று அமைத்து அத ஞல் மக்கள் ஓய்வு நேரத்தில் அயல் நாட்டு விஷயங்களையும், உள்நாட்டு விஷயங்களையும் தெரிந்துகொண்டு ஓய்வு நேரத்தை வீணுக்காமலிருக்க

எவ்வளவு நன்மையடையும் வழிகள் என்று நினைத்துப்பாருங்கள். பின் நாங்கள் பாடி வாழ்க்கையில் நடந்து கொண்டதும் அங்கு செய்த வேலை யின் சுறுசுறுப்பும் சுவாமி அவர்கள், தலைமை ஆசிரியரவர்கள் குடிமைப் பயிற்சி துணை ஆசிரியர்கள், சொற் பொழிவுக்காக வந்த வெளியூர் தமிழாசிரியர்களின் அறிய பெரிய சொற்பொழிவின் கருத்துக்களும், எங்கள் வருங்கால வாழ்க்கையை வளமாக்க புதுபாதை அமைக்க அதிலே பகுத்தறிவை நிலைநாட்ட வும், சமூகசேவை செய்யும் பண்பும், நண்பர்களிடம் நடந்துகொள்ளும் விதமும், ஆசிரியரிடம் நடந்துகொள் ளும் முறையும், கடவுளைத் தொழும் வழியும், எங்கள் மனமென்னும் கல்வியில் சொற்கள் உளிகொண்டு என்றென்றும் அழியாமலிருக்கவும் பிறருக்கு அதை எடுத்துச்சொல்லி திருத்தவும் மனத்திலே பதிதது விட்டார்கள.

எங்களோடு வந்திருந்த தோழர் களில் ஒருவருக்கு ஜலதோஷததால் ஜுரத்துடன அதிக கஷ்டப்பட டார். அதற்கு தக்க மருந்துகளை வாங்கிக் கொடுத்து அனபாகவும், தக்க பாதுகாப்பு முறையிலும் தாயைப்போல் கவனிதது வந்தார் கள். தன் சொந்த வீட்டில்கூட இப் படிபார்க்கமாட்டார்கள. பிறகுஇரவு சாப்பாட்டிற்குமுன் வெளிநாட்டு திரைப்படக் காட்சியைக் காட்டி நல்ல அறிவு வளரத்தக்க முறையை உண்டாக்கினார்கள். நாங்கள் இரவு களில் பல மாறு வேஷங்களில் நடித்து அங்குள்ள ஆசிரியர்களையும் சுவாமி அவர்களையும, தோழர்களை யும்.மகிழ்வடையச் செய்தோம.

நாங்கள் சுமார் நான்கு நாட்கள் அங்கு தங்கினோம். இந்த நான்கு நாட்களும் எனக்கு ஒருநாள் ஒரு நாழிகையாகத்தான் இருந்தது. அங்கு கூடாரம் அடித்துக்கொண்டு தோழர்களுடன் விளையாடியது என் கனவில் ஒவ்வொருசமயமும் ஒரு திரைப்படம்போல் வந்துகொண்டே இருக்கிறது. இதை மறக்கவே முடியவில்லை. நாங்கள் எங்கள் பாடி வாழ்க்கை முடிந்தவுடன் சுவாமி சித்பவானந்தா அவர்கள்எங்களுக்கு நற்சாட்சிபத்திரமும், புத்தகங்களும் கொடுத்தார்கள். சுவாமி அவர்கள் கடைசியாக எங்களுக்கு இனிப்புப் பண்டம் வழங்கினார்கள். இது, நாங் கள் இனிப்புப்பண்டம் சாப்பிடும் பொழுது சுவாமி அவர்களின் பெயர் மறக்காமலிருக்க. நாங்கள் இரவு உணவு முடித்துவிட்டு அவரவர் ஊர்களுக்கு பயணத்தை ஆரம்பித் தபோது எங்களுக்கு அதைவிட்டு பிரிய மனமே இல்லை. இதைக் கொண்டே அங்கு நடந்தவைகளை இன்னும் புரிந்துக்கொள்ளலாம். பின் நாங்கள் பிரிவு வருத்தத்துடன் பிரிந்தும, தலைமை ஆசிரியரிடம் விடைபெற்றுகொண்டு அவரவர் ஊர்களுக்கு நல்ல சுகத்துடன் அடைந்தோம்.

இதைப்போல சிவராஜூ, நீயும் உன தோழர் அனைவரையும் இந்த குடிமைப்பாடியில் சேர்த்து நமது நாட்டை நாமே ஆளுவதற்கு நல்ல முறையையும், ஒழுங்கையும், நல்ல வழிகளையும, பகுத்தறியும தன்மை யையும கற்றுக்கொண்டு சுகமாக வாழ இறைவன் அருள்புரிவானாக!

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள,

அ. கோவிந்தன்,

நாகலாபுரம்.

நம் நாடு

எழுதியது
ரா. முத்தையா
5-ம் படிவம்

உலகம் போற்றும் உத்தமர் காந்தி
உதித்த நாடு எம் நாடு

எல்லா வளமும் இயல்பாய் அமைந்த
ஏற்புடை நாடு எம் நாடு

மலையும் கடலும் நதியும் குன்றும்
மலிந்த நாடு எம் நாடு

வடபால் இமயம் தென்பால் குமரி
வரம்புடை நாடு எம் நாடு

ரஷ்யா நீங்கிய அளவு ஐரோப்பா
பரப்புடை நாடு எம் நாடு

பண்டைய பண்பில் மாண்புற கின்ற
புண்ணிய நாடு எம் நாடு

கண்ணும் கருத்தும் கவர்ந்து கின்ற
கலையுடை நாடு எம் நாடு

பல்வகை மக்கள் மாற்றுடை மொழிகள்
இலங்கும் நாடு எம் நாடு

எவ்வகை மாறுதல் . எங்ஙனம் இருப்பினும்
ஒற்றுமை நாடு எம் நாடு

ஆண்டவன் அருளை என்றும் மறவா
அதிசய நாடு எம் நாடு

போனார் வந்தார் யாரையும் பேணி
போற்றிய நாடு எம் நாடு

திரிந்து நோக்க விருந்து நோக்கும்
என்னும் நாடு எம் நாடு

மக்கள் பலனை மக்களே தாங்கிடும்
மகிழ்வுடை நாடு எம் நாடு

அன்னியர் ஆட்சி அழிந்து ஒழிந்த
இந்திய நாடு எம் நாடு.

'பிச்சைக்காரி'

வீ. தருமசிங்காரம்
5-ம் படிவம்.

பரபரப்புற்ற வாழ்க்கைப் பாதையிலே கொந்தளிப்புமிக்க வாழ்வுக் கடலோரத்திலே தன்னந்தனியாய்த் தன் எதிர்காலத்தை நோக்கி பயப்பட வேண்டியவளாக நிறுத்தப்பட்ட அவள் இப்போது பிச்சை எடுத்துத் தான் வாழ வேண்டியதாயிற்று. நுழைந்தாள் ஊரினுள் அம்மா...... பிச்சை....என்று கேட்டாள். ஆனல் அவளுக்கு கிடைத்தது பிச்சையல்ல, பெருஞ்சொல். "ஏன் என் குரலை வாங்குரேள் வேலையற்றவளே, உனக்கு ஒரு முழக்கயிறு பஞ்சமா? உங்களால்தான் இந்நாடே உறுப்படாமல் போகிறது. பிச்சை அம்மா என்ற சொல்லும் பிடி இந்தா என்ற கரமும் இந்த நாட்டிலே இருக்கக் கூடாது" என்று படபடப்புடன் கூறினள்.

இதைக் கேட்டவுடனே அவள் அடுத்த வீடுகளுக்குச்சென்று பிச்சை எடுக்கத் துணியவும் இல்லை. ஏன்? அவள் பரம்பரைப்பிச்சைக்காரியல்ல. பஞ்சத்தினல் ஏற்பட்ட பிச்சைக்காரி. மனிதன் மனிதனை அடிமைப்படுத்தும் வறுமை, அறிவை அறிவற்றவர்களிடம் அடகு வைக்கச்செய்யும் வறுமை மனிதன் சாப்பிட்டுவிட்டுவிட்டு தூர வீசி எறியும் எச்சில் இலையை நாய்களுடன் போட்டிப் போட்டு உண்ணச் செய்யும் வறுமை, ஒரு சிறு பகுதியினர் மாட மாளிகையிலே, பஞ்சு மெத்தையிலே படுத்து உறங்க மற்றொரு பெரும் பகுதியினருக்குக் கண்ணீரைச் செல்வமாக மாற்றித் தரும் வறுமை இந்தப் பொல்லாத வறுமைதான் அவளையும் பிடித்திருந்தது.

அவளிடம் குழந்தை அழகும் திகழ்கின்ற சோபையும் காணப்படவில்லை. ஆனல் துயரம் தனிமுலாம் பூசப்பட்டிருந்தது. காய்ந்துபோன மாங்கொட்டை என உலர்ந்து கிடக்கும் முகம், குழி விழுந்த கண்களிலே ஒளியற்ற பார்வை ஆவியே வெளியேறியதோ என நினைக்கும்படியான ஆபாசமான எலும்புக்கூடு. அவளோ அச்சத்தின் உயிர்ப்பாக மிரட்சியின் சின்னமாக நின்ருள். அவள் உலகப் பாதையில் திண்டாடவிடப்பட்ட அபலை என் செய்வாள். கற்புக்கரசி கண்ணகி தோன்றியநாட்டில் பிறந்து மானம் அழிந்தபின்உயிர் வாழ்வதா என்று வாழ்வுப் பாதையை நோக்கிப் புறப்பட்டுச் சென்ருள். அவள் துயரைக் காணச் சகிக்காத பரிதியும் குடபால் ஓடி ஒளிந்தான்.

பறவைகள் தங்கள் தங்கள் இருப்பிடத்தை அடைய ஆரவாரித்துச் சென்றுகொண்டிருந்தன. இராக் காலம் நெருங்கியது. ஆனால் அன்று அவளுக்கு இருப்பிடம் அக்காடே. அவள் இருந்த இடம் சுடுகாட்டிற்குப் பக்கத்திலிருந்தது. நரிக்கூட்டங்கள் தங்கள் ஓசையை ஆரம்பிக்கவே அவளும் கண்ணயர்ந்து உறங்கினாள். அந்த இரவு முழுவதும் அங்கேயே விழுந்து கிடந்தாள். அவள் உணர்வு பெற்று கண்களை அகல விரித்துப் பார்த்தாள். ஆனால் அங்கே அவளை உபசரிக்கும் அன்புக்கரங்கள் காணப் படவில்லை. அவள் ஆதரவற்ற அனாதையாகப் படுத்துக்கிடந்தாள். இன்னும் விடியவில்லை எங்கும் இருள் கூட்டம் சூழ்ந்திருந்தன.

அவ் வறுமைபுற்ற பிச்சைக்காரி மேலும் தொடர்ந்து தன் பிரயாணத்தை துவக்கினாள். துவக்கும்போது முதல்நாள் தன்னை ஒத்த பெண்கள் கூறியது அவளை அப்படியே தூக்கி வாரிப்போட்டது. ஏன்? பிச்சைக்காரி என்றாலும் அவளும் மனித உள்ளம் தானே படைத்திருந்தாள். அவளிடமும் அன்பு, தயை, இரக்கம் முதலிய நற்குணங்கள் காணப்பட்டன. இன்னும் சில கேள்விகள் அவள் மனதில் எழுந்தன. கணவனும், பெற்றோர்களும், சுற்றத்தார்களும இல்லையெனில் அவள் பிச்சையெடுத்துத்தான் வாழ வேண்டுமென்றால் அந்தப் பொல்லாத கடவுள் அவர்களை ஏன் படைக்கவேண்டும்?

வறுமை ஒன்றே உலகில் வெறுப்புக்கும், அவமரியாதைக்கும் உரிய பொருள் ஆனால் அந்தக்கடவுள் ஏன் அவற்றை ஒழிக்கக்கூடாது? அவள் இத்தத்துவங்களை அலசி ஆராய்ந்தாள். ஆனால் முடிவில் அவ்வெண்ணங்களை ஆழத் தோண்டி புதைக்கவேண்டியதாயிற்று. முடிவில் ஓடினாள் ஓடினாள் ஆற்றின் ஓரத்திற்கே ஓடினாள். அங்கே சென்று மண்ணையும் விண்ணையும் சபித்தாள். மண்ணும், விண்ணும் தனதென உரிமை கொண்டாடும் மனிதனைவெறுத்தாள். மட்டரகமான மழுங்கிப்போன மனித அறிவை வெறுத்தாள்.

நான் சாவதற்கு அஞ்சவில்லை, சாவை மலர்ந்த முகத்துடனே மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்துடனே வரவேற்கிறேன். ஏனெனில் நான் ஒரு அனாதை.

நான் இறந்தால் துக்கப்படவோ, ஆண்டாண்டுதோறும் அழுது புலம்பவோ இப்பரந்த உலகில் யாருமில்லை. என்ன சிரிக்கிறாய் துன்பக் கடலிலே தடுப்பின்றி செல்லும் ஓட்டைப் படகைக்கண்டா? அல்லது கவிழப்போகும் இக்கந்தல் படகை கரை சேர்க்கலாமென்றா? என்ன யோசிக்கிறாய். வேண்டாம் அம்மா வேண்டாம். நானாந்தனியாக வாழ்வுக் கடலிலே நீந்தி நீந்தி எந்தன் கரங்கள் இற்றுப்போகிறது. இனிமேல் துன்ப உலகிலிருந்து வாழ முடியாது. நான் வாழ வழி இழந்தவள். வாழ விரும்பவில்லை. தாயே! பாதமாதாவே என்னை ஏற்றுக்கொள் என்று சொல்லிக் கொண்டே கைகூப்பியவண்ணம் இறங்கிவிட்டாள். நதியில் மூழ்கி இறந்துவிட்டாள். என்னே மனித வாழ்வின் பயன்.

வறுமையில் வாடிய, பிச்சைக்காரி இத்துன்ப உலகில்தான் இருந்தாள் யாது பயன் எனக் கருதி இன்பம் நிறைந்த விண்ணுலகெய்தினாள்.

'பொருளே இல்லார்க்கு தொல்லையா' என்ற மெட்டு.

ந. மு. பெரியசாமி, 5-ம் படிவம்

1. மார்க்கே இல்லார்க்கு தொல்லையா
   நல்ல மதிப்பே இல்லையா
   இறைவா நீ சொல்லையா (மார்க்கே)

2. அறிவே இல்லார்க்கு தொல்லையா
   நல்ல அறிவுரை இல்லையா
   அதற்கோர் அழிவே இல்லையா (மார்கசே)

3. பணமே இல்லார்க்கு தொல்லையா
   நல்ல பழக்கம் இல்லையா
   இறைவா நீ சொல்லையா (மார்க்கே)

4. மடமைப் பேயை
   விரட்ட நாட்டில் மருந்தே இல்லையா
   அதற்கோர் வழியே இல்லையா
   இறைவா நீ சொல்லையா (மார்க்கே)

மார்க்கே இல்லார்க்கு தொல்லையா
நல்ல மதிப்பே இல்லையா
இறைவா நீ சொல்லையா.

பழமொழி வரிசை.

ந மூக்கன் - நான்காம் படிவம்.

1. அடக்கம் ஆயிரம் பொன் பெறும்
2. ஆழம் அறியாமல் காலை விடாதே
3. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
4. ஈட்டி எட்டினமட்டும் பாயும்; பணம் பாதாள மட்டும் பாயும்
5. உண்மை சொல்லிக் கெட்டாரும், பொய் சொல்லி வாழ்ந்தாரும் இலை
6. ஊர் வாயை மூட உலைமூடி இல்லை
7. எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்
8. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்
9. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
10. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்
11. ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வேகாதா.
12. ஔவையார் மேலும் குற்றம் உண்டு; அண்ணாவியார் மேலும் பழுது உண்டு
13. கங்கையிலே முழுகினாலும் காக்கை அன்னமாகுமா?
14. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்
15. ஞானமும் கல்வியும் நாழி அரிசியிலே
16. டில்லிக்குப் பாதுஷா தல்லிக்குப் பிட்டா
17. தண்ணீரில் இறந்தவரிலும் சாராயத்தில் இறந்தவர் அதிகம்.
18. நத்தையின் வயிற்றிலே முத்துப் பிறக்கும்
19. பசியுள்ளவன் ருசி அறியான்
20. மடியில் கனமிருந்தால் வழியில் பயம்
21. யாராலே கெட்டாய்? சோராலே கெட்டேன்.
22. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
23. வாய் நல்லதானால் ஊர் நல்லதாகும்
24. விளையும் பயிர் முளையிலே தெரியும்
25. விருந்தும் மருந்தும் மூன்று வேளை

பள்ளித்தலைவர்

M. தங்கராசன்
5-ம் படிவம்.

அன்பினால் உலகினை அடிமை கொள்ள எண்ணியே
இன்பமான வாழ்வினை ஈடு செய்த தலைவர் நம்
பண்பினால் அவர் பள்ளியை பாரில் உயரச் செய்குவோம்.
மூக்கப் பிள்ளையை முயன்று எங்கும் பரப்புவோம்
ஏக்கமில்லை என்பதை எல்லோரும் அறியச் செய்குவோம்
துன்பம் கண்டு அஞ்சிடார் துயரம் எதையும் பார்த்திடார்
தாரணிக்கு நன்மையை தந்து என்றும் வாழ்பவர்
கருணை வீரர் வாழ்க்கையை கடமையாக கொண்டு நாம்
மடமை நீங்கி மக்களாய் வாழ அவர் வாழ்கவே.

ரிஷி உலகம்!

R. நல்லையா
4-ம் படிவம்.

உலகம் ஒரு உருண்டையான மண் கட்டி, இது இதுவரையில் ஒரு ஆரஞ்சுப் பழம்போல் இருந்து வந்தது. ஆனால் தற்பொழுது அப்படி அல்லவே........... ஒரு "ரிஷி"யின் தலையாக மாறியிருக்கிறது!

புவியில் காணப்படும் மலைகள் எல்லாம் ரிஷியின் தலையில் "பொடுவுகள்" என்னும் புண்களாக இருக்கின்றன. உலகிலே காணப்படும் மற்ற புல், பூண்டு, செடி, மரம் கொடிகளெல்லாம் ரிஷியின் தலையில் அடர்ந்த மயிர்களாக அமைந்துள்ளன. உலகிலே காணப்படும் எல்லா விதமான பிராணிகளும், புழு, பூச்சிகளும், பறவைகள் அனைத்தும் ரிஷியின் தலையில் இளம் 'ஈர்'களாகவும், நடுத்தரமாகவும், முதிர்ந்தும், வெடிக்கும் தருணத்தில் உள்ளது போலவும் மயிர்களில் அமைந்துள்ளன. ...இத்தனைத் துன்பங்களையும் ஒருக்கால் ரிஷி பொருத்துக் கொள்ளும். "ஆனால்"! இவைகளைவிட அதிகத் துன்பத்தையும், வேதனையையும், கோபத்தையும் மூட்டுகின்ற "பேன்"களாக மனித ஜென்மமாகிய நாம் அமைந்துள்ளோம்.

ஆகவே நாம் செய்கின்ற கெட்ட செயல்களையும், கொடுஞ் செயல்களையும் பொறுக்க முடியாமல் ரிஷிக்குக் கோபம் வந்தது. பேனைத் தொலைக்கும் மருந்தைத் தலையில் தேய்த்து குளித்துவிட்டால் எதுவுமில்லை, 'மனு பூண்டு அற்றுவிடும்.''

அதனால் உயிருடன் இருக்கும் வரை நாம் பிறர் மனம் கோசாமல் அறிவுடன் இருந்துவிட்டு இறப்போமென்பதெனதவா!.......

துணுக்குகள்

—[S. முத்துகிருஷ்ணன், 5-ம் படிவம்]—

திருடன்:—டேய் உன்னிடமிருக்கும் பணத்தை மரியாதையாகக் கொடு. இல்லாவிட்டால் பல்லைப் பிடுங்கிவிடுவேன்.

வழிப்போக்கன்:—நல்லது. என் பல்லைப் பிடுங்கிவிடு. பல்லைப் பிடுக்கத்தான் டாக்டரிடம் போகிறேன். நீயே பல்லைப் பிடுங்கிவிட்டால் எனக்கும் காசு மிச்சம்.

ஃ ஃ ஃ

பிச்சைக்காரன்:—சாமி, கண்ணில்லாத குருடனுங்க, காலணா கொடுங்க.
பிரயாணி:—இந்தா காலணா
பிச்சை:—என்னங்க, செல்லாத காசை கொடுக்கிறீங்க
பிரயா:— !!

ஃ ஃ ஃ

முதல் செவிடு:—அண்ணே! உன் பெயர் என்ன?
2வது செவிடு:—என் ஊரா? காரைக்குடி
முதல் செவிடு:—உன் பெயர் கந்தப்பனா?
2வது செவிடு:—சந்தை ஒன்றும் கிடையாதே

ஃ ஃ ஃ

ஆசிரியர்:—சந்திர குப்தர் சிம்மாசனம் ஏறியதும் என்ன செய்தார்?
மாணவன்:—உட்கார்ந்தார் சார்

ஃ ஃ ஃ

தகப்பனார்:—(தன் மகனைப் பார்த்து) டேய் நீ பரீட்சையில் எத்தனை மார்க்கு வாங்கினாய்?
பையன்:—2000 மார்க்கு வாங்கினேனப்பா
தகப்பன்:—குழந்தாய்! இவ்வளவு மார்க்கு எப்படி வாங்கினாய்?
பையன்:—தமிழில் இரண்டு மார்க்கு, கணக்கு, சரித்திரம், பூகோளம் ஆகிய மூன்றிலும் சைபர் மார்க்கு அப்பா.

ஃ ஃ ஃ

கணவன்:—நேற்று "கிருஷ்ணன் தூது" நாடகம் பார்த்துவிட்டு வந்தாயே எப்படி இருந்தது?

மனைவி:—அதுவா, நான் சிறு குழந்தையாயிருந்தபொழுது ஒரு தரம் பார்த்திருக்கிறேன். அந்த கட்டையிலே போற துரியோதனன் அப்படியே தான் இருக்கான். இவ்வளவு நாளாகியும் கொஞ்சங்கூட புத்தி வந்தபாடில்லை.

ஃ ஃ ஃ

ஆசிரியர்;—(பையனைப் பார்த்து) அடே, கணபதி அரைஸ்யக் காலால் பெருக்கினால் என்ன ஆகும்?

கணபதி:—(சிறிது நேரம் கழித்து) அரையைக் காலால் பெருக்கினால் தேய்ந்து இரத்தம் வரும் ஸார்.

ஃ ஃ ஃ

முதலாளி:—(வேலைக்காரனைப் பார்த்து கோபத்துடன்) ஏண்டா இவ்வளவு நேரம்? கெடிகாரத்தைப் பாருடா!

வேலைக்காரன்:—(ஆச்சரியத்துடன்) எஞ்சாமி! ரொம்ப அழகாயிருக்கே! இந்தக் கடிகாரத்தை எப்போ வாங்கினீங்க சாமி.

ஃ ஃ ஃ

ராமு:—ஐயையோ! முதல் கணக்கு விடை அறுபதா? பூஜ்யம் போட மறந்து போய் ஆறு என்று எழுதிவிட்டேன். என்னடா செய்யறது?

சோமு:—பரவாயில்லேடா, நீ போட மறந்ததை உனக்குக் கணக்கு ஆசிரியர் கொடுத்து விடுவார்

ஃ ஃ ஃ

ஆசிரியர்:—டேய், கோபு கடலையைப் போட்டு ஆட்டினால் கடலை எண்ணெய் கிடைக்கும். வேறு உதாரணம் சொல்.

கோபு:—மண்ணைப் போட்டு ஆட்டினால் மண்ணெண்ணெய் கிடைக்கும் சார்.

ஃ ஃ ஃ

சொக்கன்:—அண்ணே! பல்வலிக்கிறது என்று ஆஸ்பத்திரிக்குப் போனாயே என்ன மருந்து போட்டார்கள்.

கந்தன்:—பல்லை வெடுக்கெனப் பிடுங்கிவிட்டார்கள்.

சொக்கன்:—ஐயோ! தலைவலிக்கு நான் போகலாம் என்று அல்லவா இருந்தேன். தலையை எடுத்துவிட்டால் என்ன செய்கிறது.

வான்முகில் கண்டு கான மயி லாட,
வாட்டமா யோடும் வாரியின் நீர் போல
பால் சுவை ஆட்டத்தி னாட்டமு மோட
பசுந்தளிர்க் கைகளைக் காட்டிடும், நாட்டிய
மாதரனைவரும் நோக்கி மயங்குவர் கீழே!
மற்றும, மான்விழியாமோ மங்கையர் கண்கள்?
கான மிசைக்கின்ற இன்பக் கருங்குயில்
மௌனத்தை யெட்டவும் ஏலுமோப் பாவையால்?

மேலுளவும், இன்ப இயற்கையின் செய்களும்
'மேலானதல்ல, மாந்தர்க்குத் தாழ்வானதே' எனும்
வேல் பாச்சும் சொல்லை வீசாதே எக் களித்தே!
வியன் பே ருலகில் விந்தைப் பொருள் யாவும்
மேலானதுண்மையே; மனிதர்க் கிழிவான தல்லவே!
மிருகமும் உயர்ந்ததப்பா; மாந்தரும் சமந்தானப்பா;
வேலப்பா! செந்நெலப்பா, விளக்கந் தான்
வேண்டுமப்பா; மனிதன் எப்படி உயர்ந்தானப்பா?'

மேடைமொழிப் போன்று பொழிந்து உரைத்திட்டு
மேல்நோக்கு நோக்கினேன். விருப்பமிகு வேலப்பன்
கோடைமழைப் போன்று கொட்டிச் சொரிந்திட்டு
குடைகவிழும் தோற்றமதாய் குனிதலை நிமிராமல்
சாடையாய் மறைந்திட்டான் ஓர் நொடிக்குள். பின
ஒருறியாய் நின்றேன். என் மண்டிய குன்றனைப்
பிடைக் கருத் துக்கள் பின் னடைய, அவன்
பீடுடை எண்ணங்கள் இன்னு மொலிப்பன:

" கி. மு. வில் உள்ள நீ கி. பி. க்கு வந்துவிட்டாய்
'வி. பி. பி.' மூலம் உன்மூளையினைத் தேடப்பா!
சாமியப்பா! கேளப்பா: உடலால் உயர்ந்ததப்பா
செப்பியநீ செழுங்குதிரை மற்ற தெல்லாம்.
சாமுறும் அவற்றிடை கருத்துசேர் விருந்தினை
காணுதல் இல்லையபபா; கண்கூடு. மாற்ற
முமுண்டோ? இந்திரிய இடர்க்காட்டை எகிறி
மிதித்தேறி நல்லவழி நாடுமோ? நவிலப்பா!

கற்பனை யுலகமேவி மேய்ப்பவன் மனிதனே தான்.
குறை சிறுமை விரவிசாரும் வியன்பா ரதுதானே!
மற்றும் கள்ளம் துளியுமிலா உள்ளம் நல்லறிவு
மூண்டெழும் இந்திரியம் இடர்நெறி மேவாது,
குற்றமற மூன்றினையும் சக்தி வி சாரணையால்
கொட்டிக் கடைந்தெடுக்கும் மட்டற்ற மா மருந்து
ஏற்றமுடைச் சிந்தனையாம். பொற்புடை அப்பொருளை
ஏதிலா திடங்கொண்ட மனிதன் உயர்ந்தவன்தான்."

அகண்ட விண் தாண்டி ஆதவன் தோன்ற,
மிக நீர் உண்ட மேதினி யிதனில்
பாதகம் முளைத்தது பனித்துளி தனக்கே!
சாதகம் துய்த்தனர் சகம் வாழ் மக்கள்.

அதுபோல்,

கருமுகில் கிழித்து கடிதினி லேகும்
விரிவான் பெற்ற வியன்மதி நிலவில்
ஆருயிர்த் தோழன் அறைந்த நல் அறிவொளிப்
பாதையைப் பார்த்தேன்; பகர்ந்தேன:
'சிந்தனை உயர்வால் சிறந்தவன் மனிதன்.'

வகுப்பு வருகை பதிவு விபரம்.

[S ஆறுமுகம், உதவி ஆசிரியர்.]

'கேடில் விழுச்செல்வங் கல்வி
ஒருவற்கு
மாட்டல்ல மற்றை யவை'

என்றார் நமது தெய்வப்புலவர் வள்ளுவனார். என்ன! ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது எது? பொன்னல்ல - பெண்ணல்ல - பொருளல்ல-ஊணல்ல - மண்ணல்ல- மாடல்ல - மற்றவைதாமல்ல-பின்னர் எது?- தாயத்தார் - கள்வர் - வலியர்- அரசரென்றிவரால் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையும் உள்ளது - அதுதான் கல்விச் செல்வம்!

அழியாக் கல்விச் செல்வத்தை விழிகொண்டு பார்த்தார் தன்னலமற்ற தகை சான்ற வள்ளல் ஸ்ரீ M. மூக்கப் பிள்ளை அவர்கள். கல்விப் பணியில் இறங்கினர்; தனக்குச் சொந்தமான இலக்ஷக்கணக்கான தொகையைக்கொண்டு பள்ளிமை நிறுவினர். நிறுவிய நேரு உயர்நிலைப்

பள்ளி கணக்கிலா மக்களுக்கு உற்ற துணையாக இருக்கிறதென்றால் அவ் வள்ளலாரின் தொண்டு என்னே!

அடுத்து ஒழுக்கமே வாழ்வின் லட்சியமாகக்கொண்ட அவர் பள்ளி யில்பயிலும் மாணவர்களின் சிறப்பை என்னென்று கூறுவது! தலைமையாசி ரியர் எனக்கு விடுத்த பணியின் ஒன்றினை மட்டும் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

ஒப்பற்ற கல்விச் செல்வத்தைப் பயிலவரும் மாணவர்களுக்கு முதன்மையாக எந்த நல்லொழுக்கத் தைப் பயிலுவிப்பது? 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்றஇலக்கணத் திற்கு ஒப்ப மாணவர்கள் ஒவ்வொரு வரும் ஒழுங்காக தினந்தோறும் தவ றாமல் பள்ளிக்கு வந்து பயில வேண் டும். ["பொழுதொடு சென்று" என்றார் நன்னூலாசிரியர்.] என்ற நல்லொழுக்கத்தையே வகுத்துள் ளோம்.

அவ்வொழுக்கத்தை மாணவர்கள் கடைபிடித்து ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் தினந்தோறும் தவ றாது பள்ளிக்கு வந்து, பயின்று, மாதா மாத முடிவில் எவ்வகுப்பு மாணவர்கள் அதிக வருகைத்தேர்ச்சி யில் (Percentage of Attendance) கிரந்தரம் பெற்றுள்ளார்களோ அவ் வகுப்புக்கு சின்னம் வழங்குவதாக அறிக்கை விடுத்துள்ளோம். அதற்கு மாணவர்களின் அதிக வருகைத் தேர்ச்சியைக்கணக்கிட்டு, ஒவ்வொரு மாதம் முடிந்ததும் அடுத்த மாதம் முதல் வாரத்தில் அதன் முடிவை விசேஷமாக வெள்ளிக்கிழமையன்று பிரார்த்தனை நடக்கும் விளையாட்டு மைதானத்தில் வாசித்து சின்னத்தை வழங்கி வருகிறோம்.

இதற்காக மாணவர்கள் ஒவ்வொரு வரும் தங்கள்வகுப்பு அச்சின்னத்தை அடையவேண்டும் என்ற நோக்கத் துடன தவறாது 'தினந்தோறும் வரு தல்' என்ற பழக்கத்தைக் கடைபிடிக் கிறார்கள். அவ்வாறு அவர்கள் கடை பிடித்தொழுகிவரும் பலாபலனை இங்கு புள்ளி விபரங்களில் குறிப்பிடு கிறேன்:

மாதம்	வகுப்பு	சதவிகிதம்
ஜுலை	III B	95
ஆகஸ்டு	III B	96·13
செப்டம்பர்	II A	96 9
அக்டோபர்	III A	97
நவம்பர்	VI	94·2
டிசம்பர்	V	98
ஜனவரி	I B	95·1
பிப்ரவரி	V	93

முறையே அதிக வருகைத் தேர்ச்சி யில் முதன்மையாக நின்று சின்னத் தைப் பெற்றுள்ளார்கள்.

இனி அடுத்தடுத்த மாதங்களிலும் முடிவுகள் அறிந்து சின்னம் தொடர்ந்து வழங்கப்படும். இவ் வொழுக்கப் பண்பினைக் கற்றுக் கொள்ளும் மாணவர்கள் அன்றே பள்ளிக்கும், பள்ளி ஆசிரியர்கட்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள் ளார்கள்,

மாணவர் இலக்கிய கழகம்

7-வது ஆண்டு விழா

இவ்விழா 28—2—54 மாலை 3-30 மணிக்கு ஆரம்பமானது. உயர்திரு. M. கயிலை அநந்தர் அவர்கள் B. A., B. L., தலைமைவகித்தார் பின்னர் இறைவணக்கமும் வரவேற்புரையும் நிகழ்ந்தன. தலைவர் தம் முன்னுரையில் மாணவர்க்குச் சில பொன்னுரை வழங்கினார். இன்றைய மாணவர்நாட்டின் அணிகலன்; இளமையாவர்க்கும் நிலைத்தவொன்று அல்ல; ஆனால் இளமையின் குளிர்ச்சியை என்றென்றும் நுகரவேண்டும். அதற்கு மாணவர் மனம் - இதயபூமி குளிர்ந்திருக்கவேண்டும். இதயபூமியில் வித்திடப்படுவதுதான் கனியாகக் கிடைக்கும். ஆகவே அப் பூமியில் நல்ல வித்துக்களை-நல்ல எண்ணங்களை ஊன்றவேண்டும்—என்று குறிப்பிட்டார்.

பள்ளி மாணவிகளால் கும்மி விருந்து படைக்கப்பட்டபின்னர் கேடி கழக ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. பள்ளி வில்லுப்பாட்டு, தமிழ் செய்யுள் மெய்ப்பாட்டுடன் ஒப்பித்தல் (Tamil Recitation) ஆங்கிலச்செய்யுள் மெய்ப்பாட்டுடன் ஒப்பித்தல் (English Recitation) இவை அவையோர் புலனின்பம் நுகரும்படி ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்தன. இவை மாணவர்களாலேயே நிகழ்த்தப்பட்டன.

பின்னர் பேரறிஞர் டாக்டர் உயர்திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் M.A., M.O.L., L. T., P H.D., "மாணவரும் தமிழ் வளர்ச்சியும்" என்னும் பெரும் பொருள்பற்றி சுமார் 45 நிமிடங்கள் ஆராய்ச்சி வித்துக்களையும், அனுபவ முத்துக்களையும் வெளியிட்டார். அவரது சொற்பொழிவின் கருத்தே நடையைச் சிறிதுகாணுவோம். குழந்தைஉள்ளம் ஆண்டவனுக்கேற்ற உள்ளம். ஆதலின் மாணவரின் உளக்கோயில் தூய்மையாக விளக்கமடைதல் வேண்டும் - என்றார்.

அந்தகாலத்தில் கல்வித்தொண்டைவிட சமயத்தொண்டு போற்றப்பட்டு அதற்கு ஏற்றவைகள் விரைவில் ஆக்கப்பட்டன. ஆனால் இன்று கல்விக்கோயில் சமயக்கோயிலைக் காட்டிலும் மிக வேகமாக உருவாக்கப்பட்டுவருகிறது-விரும்பி வளர்க்கப்பட்டு வருகிறது. இதனின்றும் காலத்திற்கேற்றாற்போல் மக்களிடை கருத்துக்கள் மாற்றமடையும் என உணர வருகிறோம் - என்று குறிப்பிட்டார்.

பின்னர் தமிழைக் குறித்து உரையாற்றுகையில், 2000 ஆண்டுகட்கு முன் தோன்றிய தமிழின் பண்டை நூல் தொல்காப்பியம். அது 1200 சூத்திரங்கள்கொண்டது. இலக்கணத்திற்கு ஆதாரம் இலக்கியம், பல நூற்றாண்டாகப் பண்பட்டதுதான் இலக்கியம். ஆகவே தமிழில் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் எழுதுவதற்குக் காரணமான இலக்கியம், அவ்விலக்கணநூல்

எழுந்த பன்னூறு ஆண்டுகட்கு முன்பே மக்களிடை தோன்றியிருக்க வேண்டும். இதனின்றும் நாம் அறியக்கிடப்பது, தமிழ் பழையமொழி, உலகின்முதன்மொழி, நாகரீகமொழி என்பதாகும். எகிப்தில் வேழ் என்ற தமிழ்சொல் களிமண் என்று விளங்குகிறது. இதிலிருந்து தமிழ் தொன்மை வாய்ந்தது என்பதாகும் - என்று ஆராய்ச்சியின்பாற்பட்ட கருத்துக்களை வெளியிட்டார்.

மேலும்அவர் இன்றைய தமிழரின் நிலைகுறித்துப் பேசுகையில், தமிழகம், சமுதாயம்-பொருளாதார-அரசியல் ஆகிய மூன்று துறைகளிலும் பின்னடைந்துகிடப்பதற்குக் காரணம் தமிழரிடை மொழிப்பற்றில்லை. சொல்லில் மாறுபட்டதால் சமுதாயம் சரிந்துபட்டது. கட்சி என்ற மேலாடையை அணிந்து ஆட்சிமன்றத்திலமர்ந்து தமிழ் வளர்ச்சிக்கு ஊறு தேடுகிறார்கள் ஒருசிலர், இந்த இழிநிலை மாறவேண்டும் - என்று ஆவேசமாகப் பேசினர்.

பின்னர் தொடர்ந்து குறிப்பிட்டுப் பேசுகையில், மாணவர்கைக்கொள்ள வேண்டிய வழிகளைப்பற்றி விவரித்தார். (1) பிழையின்றிப் பேச, எழுத படிக்கவேண்டும். (2) ஓசையை உணர்ந்து தெளிவாக உச்சரிக்க வேண்டும். (3) வீட்டிலிருக்கும் குழந்தைகளிடம் அதே பழக்கம் குடிகொள்ளுமாறு அவர்களைப் பழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டும். (4) தம் தங்கை, தம்பி முதலானோருக்கு நல்ல தமிழ்ப்பெயர் வைத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதால் தமிழைப்பற்றி எண்ணுவதாகவும், புலவர் பெருமக்களின் பெயர்களைச் சூட்டுவதால் அவர்களின் நினைவு கூர்வதாகவும் பொருளாகுமல்லவா? (5) பொருள் தெரியாத பெயர்களை வைத்தல் கூடாது. (6) அயலூருக்குச் செல்லும்பொழுது அங்குவாழ் மக்களிடை வழக்கில் வழங்குகின்ற சொற்களை குறித்துவைத்து ஆராய்தல்வேண்டும். (7) இலக்கிய அறிவு பெறுதல்வேண்டும் — இவ்வாறு அறிவுறுத்தி மேற்கோள்களுடன் பேசி முடித்தார்.

பின்னர் மாற்றுடைப்போட்டி, பரிசு வழங்கல் நிகழ்ந்தன. தலைவர் தம் பின்னுரையில் மாணவர்க்கு உடலில் பழுது இருத்தல் கூடாது. அறிவைப்பெறவே உடல் அளிக்கப்பட்டிருக்கிறது. நல்ல உடலோடு, நல்ல ஒழுக்கங்களும் சேர்ந்தே மனிதனை பகுத்தறிவு உள்ளவனாக ஆக்குகிறது. மாணவர் நாவைக் காக்க வேண்டும். அறிவுக்கு ஐம்புலனும் அஞ்சும்படி ஆட்டிப்படைக்கவேண்டும். இத்தகையநிலைக்கு மாணவர்கள் தங்களை தயாராக்கிக்கொள்ளவேண்டும் என்று தம ஆழ்ந்த அறிவுரை புகன்று தம் உரையை முடித்துக்கொண்டார். பின்னர் தலைமை ஆசிரியர் நன்றிகூற நாட்டு வாழ்த்துடன் கூட்டம் 6-45மணிக்கு இனிது முடிந்தது. இரவு 8மணிக்கு "மீண்ட வாழ்வு" என்னும் நாடகம் பள்ளி மாணவர்களாலேயே நடித்துக் காண்பிக்கப்பட்டது.

மதுவிலக்கால் ஏற்படும் நன்மைகள்

G. ஆறுமுகம், நான்காம் படிவம்

பஞ்சமா பாதகங்களுள் மது உண்ணலும் ஒன்று. அநேக நூற்றாண்டுகளாக மக்கள் மதுவைக் குடித்து வந்துள்ளனர். தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூடத் தம் திருக்குறளில் கள்ளுண்ணாமை என்ற அதிகாரத்தில் மதுவின் தீமைகளை எடுத்து நன்கு விளக்கியுள்ளார். அதாவது கள்ளை மறைந்திருந்து குடித்து மயங்குவர். உள்ளூரில் வாழ்கின்றவரால் உள்ளான செய்திகள் ஆராயப்பட்டு எந்நாளும் சிரிக்கப்படுவர் என்றும், கள்ளுண்பவன் "யான் ஒருபோதும் கள்ளுண்டறியேன்" என்று சொல்வதை விட வேண்டும் என்றும், நெஞ்சில் ஒளித்திருந்த குற்றமும் கள்ளுண்டபோதே வெளிப்படும் என்றும் நன்கு விளக்கியுள்ளார்.

மதுவிலக்குத் தோன்றக் காரணங்களும் சில உண்டு. நம் நாட்டில் வாழுபவர்கள் எல்லோரும் ஏழை மக்களே. அவர்கள் பெரும்பாலும் விவசாயம், நெசவு, பல்வகைக் கைத்தொழில் புரிந்து வருகின்றனர். இவர்கள் நாள் ஒன்றுக்குப் பெறும் ஊதியமோ மிகக் குறைவு. அவ்வூதியத்தில் மூன்றில் இரண்டு பாகத்தை மதுவுக்காகச் செலவிடுகின்றனர். இதனால் பெண்மணிகள், குழந்தைகள், சிறுவர்கள் முதலானோர் வறுமை நிலையை அடைந்துவிடுகின்றனர். இதைப் போக்கவே காங்கிரஸ் முதன் முதலாக மந்திரி சபை ஏற்றபோது முதல் மந்திரியாய் இருந்த கனம் இராஜகோபால் ஆச்சாரி அவர்கள் சென்னை மாகாணத்திலுள்ள சேலம் முதலிய ஜில்லாக்களில் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்தார். பின்னர் நம் நாடு சுதந்திரம் அடைந்ததும் 1948-ம் ஆண்டு நம் சென்னை மாகாணத்தில் பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளனர். நாட்டில் பூரண மதுவிலக்கு ஏற்பட்டதும் ஏழை மக்கள் பல நன்மைகள் அடைந்து வருகின்றனர். கள்ளுக் கடைகள் இருந்தபோது பொது மக்களுக்கு ஏற்பட்ட பல பொது அசௌகரியங்கள் இப்போது இல்லை கள்ளுக் கடைகள் இருந்த இடங்களெல்லாம் இப்பொழுது நல்ல தேனீர்ச் சாலைகள் இருக்கின்றன. கள்ளைக் குடித்துவிட்டு கல்லிலும், முள்ளிலும் வீழ்ந்து இரத்தக் காயங்களை அடைந்து வீதியில் புரண்டு கிடப்பதை இனி யார்தாம் காணப்போகின்றோம். இப்பொழுது ஏழை மக்கள் தாங்கள் பெறும் ஊதியத்தை தம் மனைவி மக்களுக்கு நல்ல உணவு, சிறந்த ஆடை முதலியன வாங்கிக் கொடுத்து மகிழ்கின்றனர். நாட்டில் வீண் குழப்பம், கொலை, களவு தேய்பிறைபோல் மறைய லாயின.

மதுவை நீண்ட நாள் குடித்துப் பழகியவர்கள்கூட மதுவை வெறுத்து தம் அறிவின்திறத்தை உணர்த்தி உணர்த்தி மோர், இளநீர், தேனீர் முதலியன அருந்தி நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்கின்றனர். இப்பொழுது நாட்டில் அகால மரணப் பயம் என்பதே இல்லை. வீணாக பணத்தையும் அறிவையும் அழித்து வந்த மது அரக்கன் நம் நாட்டைவிட்டு நீங்கிவிட்டான் என்றால் யாருக்கு மகிழ்ச்சி ஏற்படாது. மதுவிலக்கால் அரசாங்கத்தாருக்குப் பல கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்படும் ஏழை மக்களின் நன்மையைக் கருதி பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளனர்.

உல்லாசப் பிரயாணம்:- 53-54.

[A. சந்திரசேகரன், உதவி ஆசிரியர்]

கடந்த சில ஆண்டுகளாக, மாணவர்கள் கற்கும் கல்வி பள்ளியளவோடு நின்றுவிடுதல் கூடாது என்று தீர்மானித்து, உல்லாசப் பிரயாணத்தின் மூலம் ஓரளவு கல்வி புகட்ட முடியும் என அரசாங்கத்தார் எண்ணி பள்ளிபாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, நம் பள்ளிபோன்று, பல பள்ளிகளிலும் உல்லாசப் பிரயாணங்கள் நடைபெறுவதை மாணவர்கள் அறிந்ததே. இப்பிரயாணம் ஓர் உல்லாசமான, பிரயாணமாக மட்டும் அமையாமல் கல்விப்பிரயாணமாக அமைத்துக் கொடுப்பது ஆசிரியர்கள் கடமையாக மட்டும் நின்று விடாமல், மாணவர்களும் அதை உணர்ந்து, கல்விப் பிரயாணமாக அமைத்துக்கொள்வது அவர்கள் கடமையாகும். “பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது” என்ற பழமொழி யாவரும் அறிந்ததே. ஆகவே ஒருவன் புத்தகத்தை மட்டும் படித்து பெறும் அறிவு, இன்றைய உலகிற்கு ஒவ்வாது. ஒருவன் வெளியுலகில் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் பல உள. அவற்றை அவன் பள்ளி வாழ்க்கை முடிந்ததும் தெரிந்து கொள்ளலாமென்றாலோ, அது மிகவும் கடினமாகும். பள்ளி வாழ்க்கைமுடிந்ததும், அவன் தன்னை காப்பாற்றிக்கொள்ள ஓர் தொழிலில் இறங்க வேண்டியவனாகின்றான். ஆகவே ஓர் மாணவனை, பள்ளி வாழ்க்கையிலேயே வெளியுலகில் பழகுவதற்கு வேண்டிய ஓர் வழியைக் காட்டுவது, பள்ளிச்சாலையாகும். இவ்வழி புத்தகப் படிப்போடு நின்றுவிட்டால், கிடைக்கக் கூடியதல்ல அதை உல்லாசப்பிரயாணம்போன்றவற்றால்தான் புகட்ட முடியும். இவ்விதம் நன்மை பயக்கும்

உல்லாசப்பிரயாணத்திற்காக, மாண வர்களிடமிருந்து ஒரு சிறு தொகை ஆண்டின் இரு பருவங்களிலும் (Two Terms) வசூலிக்கப்படுகிறது. அதிலிருந்து, மாணவர்கட்கு, உல்லாசப்பிரயாணத்தின்போது ஏற்படும் சாப்பாட்டு செலவில் ஒரு பகுதியும், புகைப்படச்செலவும் செலவழிக்கப் படுகிறது.

நகரங்களில் உள்ள பள்ளிகளில் நடத்தப்படும் உல்லாசப்பிரயாணங் களில் கலந்துகொள்ளும் மாணவர் களின் எண்ணிக்கை அதிகம். நம் பள்ளியில் நடத்தப்படும் பிரயாணங் களில் மிகக் குறைந்த அளவே மாண வர்கள் கலந்துகொள்கின்றனர். இதற்கு இருகாரணங்கள் கூறலாம். கிராமாந்தரங்களில் வசிக்கும் பெற் ரோர்கள் ஏழைகளாக இருப்பதாலும் பிரயாணத்தின் நன்மைகளை அறியாது இருப்பதாலுமேயாம்.

சென்ற ஆண்ட நீண்ட பருவத்தில் பொது உல்லாசப் பிரயாணமும், குறுகிய பருவத்தில் (Short Term) வகுப்பு உல்லாசப் பிரயாணங்களும் நடைபெற்றன. ஆனல் இவ்வாண் டின் ஆரம்பத்திலேயே வகுப்பு உல் லாசப் பிரயாணங்களும், இரண்டு பொதுவான நீண்ட தொலை உல்லா சப் பிரயாணங்களும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதன் விபரங்கள் பின்வருமாறு:—

நடைபெற்றவை :-

25—7—53ல் முதல்படிவ மாண வர்களில் 68பேர் திரு அரு சந்திர சேகரன், திரு. து. கந்தசாமி ஆகிய இருவர்கள் தலைமையில் திருவெள்ள ரைக்கு உல்லாசப் பிரயாணமாகச் சென்றனர். ஆங்கு கோவிலில் உள்ள சிற்ப வேலைகள், ஊரின் சமீபத்தில் உள்ள ஸ்வஸ்திக் வடிவத்தில் உள்ள குளம், குசலவன் குளம் ஆகியவற் றைக் கண்டுகளித்தனர்.

8—8—53ல் 5ம் படிவ மாணவர் களில் சுமார் 26பேர், திரு U. R. கிருஷ்ணய்யர், B.A-L T அவர்கள் திரு. M. K. ராமையா அவர்கள் ஆகிய இருவர்கள் தலைமையில் கொல்லிமலைக்குச் சென்று, அறப் பளீஸ்வரர்மலை, புளியஞ்சோலை, வைரிசெட்டிபாளைய சந்தை ஆகிய வற்றைக்கண்டுகளித்து 10—8—53ல் மீண்டனர்.

அதே தேதியில் 6-ம்படிவ மாண வர்களில் 20பேர், திரு S. துரைராசு B. A., B. T., அவர்கள் தலைமையில், கல்லணைக்குச் சென்று, கல்லணை, வால்குடி முதலியவற்றைக் கண்டு களித்து 9—8—53ல் மீண்டனர்.

29—8—53ல் இரண்டாம் படிவத் தில் 10 மாணவர்கள் திரு. M. கோ விந்தன் அவர்கள் தலைமையில் மேல் அணைக்கட்டு சென்றனர். அதுசமயம் திருச்சிக்குசென்று, மலைக்கோட்டை, விமானநிலையம், திருச்சி சந்திப்பு (Junction) முதலியவற்றைக்கண்டு களித்து 31—8—53ல், மீண்டனர்.

அதே தேதியில் மூன்றும் படிவ மாணவர்களில் 16பேர் திரு. S. ருத்ர ஸ்வாமி அவர்கள் தலைமையில் மேல்

அணை, திருச்சி மலைக்கோட்டை, கண் ஆஸ்பத்திரி, அர்ச் சூசையப்பர் கல்லூரி, விமானநிலையம் முதலியவற்றைக் கண்டுகளித்து 31—8—53ல் மீண்டனர்.

9—10—53-ல் சுமார் 10 மணவர்கள் திரு. அரு. சந்திரசேகரன் அவர்கள் தலைமையில் மேட்டூர் அணை சென்றனர் அதுசமயம், மேட்டூர் தண்ணீர் தேக்கம், பூங்கா, மின்பொறி நிலையம் (Power House), வைஸ்ராய் பங்களா, சேலம், ஏற்காடுமலை, மலையில் காப்பிச்செடி பயிர், பூங்கா, ஆங்கிலேயச் சிறுமிகள் படிக்கும் பள்ளி ஆகியவற்றை கண்டு களித்தோம். ஏற்காடுமலை, கடல் மட்டத்திலிருந்து சுமார் 4500 அடி உயரமுள்ளது. மிகக் குளிர்ந்த பிரதேசம். ஆங்கு காப்பி, ஆரஞ்சு, கொய்யா இவைகள் தான் பயிர் செய்யப்படுகின்றன. சில ஆங்கிலேயர்கள் தோட்டத்தின் சொந்தக்காரர்களாக இருப்பதால் அங்கே பங்களா கட்டிக்கொண்டு வாசம் செய்கின்றனர்.

12—10—53ல் வரும் போதனூரோடு சென்றோம். புகை வண்டி சந்திப்பு (Railway Junction) பார்க்கத்தக்க இடம். அக்குலண்டன்மிஷன் பயிற்சிப் பள்ளிக்குச் சென்று, சுய நோக்குமுறையில் (Project Method) 1 முதல் 5 வகுப்புகள் வரை கற்பிக்கப்படுவதை அவ்வவ் வகுப்பு ஆசிரியர்கள் விளக்கிச் சொல்ல நாங்கள் அறிந்தோம். 13—10—53ல் எங்கள் பிரயாணம் முடிவுற்றது.

நடக்கவிருப்பவை:—

குறுகிய பருவத்தில் கன்னியாகுமரி முனை செல்வதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. சில வகுப்பு உல்லாசப் பிரயாணங்களும் நடத்தப்பட இருக்கின்றன.

★ வகுப்புக் கண்காட்சி ★

K. S. இராகவன், ஆசிரியர்

உலகத்தில் பலவகை அதிசயங்கள் உள. அவைகளை ஆராய்ந்து நோக்கின் செயற்கை ஒரு வகை. மற்றொன்று இயற்கை.

இச் செயற்கை, இயற்கை அதிசயப் பொருள்களை அவைகள் இருப்பிடம் சென்று காணவேண்டும் என்ற அவா ஒவ்வொரு மனிதனிடத்திலும் உண்டு. அதன் நிமித்தம் நமது குழந்தைகள் கூட தான் கண்ட அதிசயப் பொருளான கண்ணாடி, லாடம், ஆணி, ரப்பர்த்துண்டு, பல நிறமுள்ள நூல் சில விதைகள் இவைகளைச் சேகரித்து ஒரு நெருப்புப் பெட்டி, பை, இவைகளுள் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றன. சிறு குழந்தைகளுடைய பெட்டி அல்லது பைகளை ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும். இவ்வித சாதாரணப் பொருள்கள்தான் அதி

சயப் பொருளாக நினைத்து குழந்தைகள் சேகரிக்கின்றன.

குழந்தைகளுக்கு வயது ஏற ஏற சேகரிக்கப்படும் பொருள்களும் மாறுபட்டுக்கொண்டே வரும். பின்னர் முதிர்ந்த வயதுடைய பெரியோர் ஆகிறார்கள். பெரியோர்களும் பல அதிசயப் பொருள்கள் சேகரித்து ஒவ்வொரு குடும்பத்திலும் வைத்திருக்கிறார்கள், அவ்விதச் சேமிப்பை எல்லோரும் பார்க்க நம் நாட்டில் ஆண்டுதோறும் விழா கொண்டாடப் படுகிறது. அஃதுதான் "நவராத்திரி கொலு" என்பது.

இயற்கையும் செயற்கையுமான அதிசயப் பொருள்கள் யாவும் சேகரிக்கப் பட்டு ஒழுங்காய் உயர் பீடத்தில் (gallery) அடுக்கி பார்ப்போர் மனது பரவசமாகும்படி ஒவ்வொரு குடும்பத்திலும் ஷை "கொலு" வைக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே.

ஐம்புலப் பயிற்சியாலும், தொழிற் கல்வியாலும்தான் எட்டுக் கல்வியின் முழுப் பயனை மாணவர்கள் அடைவார்கள் என்பது பால போதனுமுறை சித்தாந்தங்களில் முதன்மை. அதற்கு இவ்வாண்டில் முதன்மை கொடுக்கப் பட்ட மாணவர்களால் அரிய பொருள்கள் சேகரிக்கப்பட்டு சேமிக்கப்படும் விதம் கீழ்க்கண்டவாறு :

நடப்பு ஆண்டுக்கு, ஸ்ரீ S துரைராஜ் B. A., B. T., ஆசிரியர் ஸ்ரீ K. S. இராகவ அய்யங்கார் இவர்கள் இருவரையும் பொறுப்பேற்று, கண்காட்சி சாலை நடவடிக்கைகள் கவனிக்கப்படுகின்றன.

(2) எல்லா படிவங்களிலும் மாணவர்களால் சேகரித்துக்கொண்டுவரும் பொருள்கள் சேமிக்கப்பட தனிப்பட்ட இடம் உயர் வகுப்புகளில் கட்டிடமாகவே உள. மற்ற வகுப்புகளில் அலமாரிகள் உள.

(3) வகுப்பு மாணவத் தலைவர் தன் வகுப்புக் கண்காட்சி சாலைக்கு பொறுப்பாளி—காட்சிசாலைக்கு மாணவர்களால் கொண்டு வரப்படும் பொருளை வகைப்படுத்தி சிறு குறிப்புடன் வகுப்புப் பட்டியலில் பதிந்து வைத்திருப்பார்.

(4) வகுப்புக் கண்காட்சிச் சாலைகளை எல்லாம் தணிக்கை செய்யப் பட்டு அதிகம் உழைத்த வகுப்புக்கு "கண்காட்சிக் கொடி" அளிக்கப் பெற்று வருகிறது.

(5) இதுவரை சேகரித்த பொருள்கள் யாவும் எல்லா வகுப்புகளிலும் பல வகையிலும் சேர்ந்து 300-க்கு மேலாகும்.

இவ்விதம் நடைபெற எங்களுக்கு ஊக்கமளித்த தலைமை ஆசிரியர் அவர்கட்கும், கண்காட்சி சாலைப் பொருள்களை சேமித்து வைக்க அலமாரி பூட்டுகள் சப்ளை செய்த மானேஜ்மெண்டாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

"குடிமைப் பயிற்சியில் மாணவர்கள்"

[M. கோவிந்தன், ஆசிரியர்.]

அடிமை அரசின் "முடிஅரசு" அழிந்து ஆண்டுகள் ஆறுடன் அரும் பெரும் அல்லலைக்கடந்து ஆண்மையுடன் அஹிம்சைமூர்த்தி, அண்ணல் காந்திஜி அவர்களின் கட்டளைப்படி சுயஉரிமைக்கொண்ட 'குடியாட்சி'யில் வாழ்கின்றோம். ஆண்டுகள் ஆறுஆகியும், நம்மிடத்தில் குடிகொண்டிருக்கும் அடிமைப்புத்தியில், அடிமைக்கு ஆளாக்கும் கயமைத்தனத்தில் மாற்றம் கண்டோமில்லை. காரணம்நம்நாட்டு மக்கள் குடியாட்சியின் தன்மையை இன்னமும் உணர்ந்துகொள்ளாததே. இன்று நாம் நாட்டுப்புறங்களுக்குச் சென்று நம்நாட்டின் ஆட்சி எது? என்றால் தெரியாமல் விழிப்போர் எத்தனைபேர்? இதற்கெல்லாம் காரணம் படிப்பில்லாத குறையென்றாலும் முக்கியமானகுறை மக்களிடத்தில் அசட்டுத்தனம் அதிகமாக காணப்படுவதே.

இங்கிலேங்கி நாட்டில் யாவரும் கற்றுணர்ந்த பொறுப்புடன் நடக்க, நாட்டாட்சியின் நன்மையறிந்து நல்லதொரு 'குடிமகனாக' வாழச் செய்தல்வேண்டும். இப்பயிற்சி ஆங்கிலேயர் ஆட்சியில் இல்லாத காரணத்தினால் அறிஞர்கள் என்று போற்றக்கூடிய அநேகர் இடத்தில் நல்லதொருகுடிப்பண்பில் நாட்டமில்லை ஆகவே, வருங்காலத்திலாவது மக்கள் நல்ல குடிமகனாக வாழ வழி செய்து குடியாட்சியின் முறையறிந்து, முழு உணர்ச்சியுடன் வாழவும், நாட்டுப் பற்றுடன் நல்லாட்சி நடாத்த, தன்னலம் கருதா தாய்மைபுணர்ச்சியுடன் வாழவும், நாட்டுமக்களை நல்வழி செலுத்தத் தகுந்த தகுதியுடைய தலைவனாக வாழவும் ஆக்கித்தருவது இன்றைய ஆட்சியின் குறிக்கோளாகும். இப் பெரு நோக்குடன்தான் பள்ளியில் படிக்கும் வருங்கால சமுதாய மாணவர்களுக்கு நல்லகுடிமகன் (Good citizen) ஆகவாழ 'குடிமைப் பயிற்சி' (Citizenship Training) சொல்லித் தரப்படுகிறது. இப்பயிற்சியின்மூலம் மாணவர்களுக்கு தேசியப் பற்று, உலகப்பற்று, குடியாட்சியின் முறைகள், பிறர் நலன் பேணுதல், குழுக்குறிகள், இயற்கையறிதல், முதலுதவி பெறல், தகுந்த தலைவனாக கற்றுக்கொள்ளுதல், கலையில் ஆர்வம் காட்டல், உடற்பயிற்சி பெறுதல் இவைகள்போன்ற பல நல்லதொரு பயிற்சிகள்பெற வாய்ப்பளிக்கப்படுகிறது. இதன்மூலம் மாணவர்களிடத்தில ஒற்றுமை, ஒழுக்கம், அன்பு, அடக்கம், பொறுப்புணர்ச்சி, நடிப்புத் திறன், தொண்டு செய்தல், சகோதர உணர்ச்சி ஆகிய நல்லதொரு பழக்கங்கள் மிளிர்கின்றன ஆகவே வருங்காலத்தில் மக்கள் சமுதாயம் நல்ல முறையில் இயங்கும் என்பது வெள்ளிடைமலை.

மேல்கண்ட முறையில் பயிற்சிகள் பெற மாணவர்களுக்கு எங்கள் பள்ளியில் கீழ்கண்ட திட்டங்கள்படி நடாத்தி வருகிறோம்.

1. பள்ளி மாணவத்தலைவன் தேர்தல்

இத் தேர்தல்மூலம் தகுதியும், திறமையும், பொறுப்பும் உணர்ந்த தோழர்களை தேர்ந்தெடுக்க பயிற்சி பெறுதல்.

2. வகுப்புத் தலைவன் தேர்தல்

இதன்மூலம் தங்கள் வகுப்பு சம்பந்தமான முன்னேற்றத்திற்கு பாடுபட்டு அதன்மூலம் பள்ளியின் கௌரவத்தை உயர்த்துவதற்கு தகுதியுள்ளவர்களை தேர்ந்தெடுத்தல்.

3 குழுத் தலைவர்கள் தேர்தல்

இதனால் தங்கள் குழுவிற்கு நல்லதொரு பெயர் வாங்கித்தந்து அதன் மூலம் வகுப்பின் கௌரவத்தை நிலைநாட்ட தகுந்த மாணவர்களை தேர்ந்தெடுத்தல்.

4 பள்ளி பாரளி மன்றத்தின் சபாநாயகர் தேர்தல்: இத் தேர்தல் பள்ளி மாணவர்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லாத் தலைவர்களாலும் (S P. L. Class Leaders & Squad Leader) இரகசிய முறையில் ஆசிரியர்களில் இருவரை சபாநாயகராகவும், உதவி சபாநாயகராகவும் தேர்ந்தெடுத்தல்.

5. பாரளிமன்ற அமைப்பு:

இதன் மூலம மாணவர்களிடம் ஒழுங்குநிலவவும், பொதுவானவிழாக்கள் கொண்டாட திட்டங்கள் தீட்டவும், உல்லாசப்பிரயாணங்கள் செல்ல திட்டங்கள் தீட்டவும், இதுபோன்ற தங்களுக்கு தேவையான பொது விஷயங்களைப்பற்றி விவாதித்தல். இதன் அங்கத்தினர்கள். பள்ளி மாணவத் தலைவரே முதல் அமைச்சராகவும், அவரால் தனக்கு சாதகமாக பொறுக்கிக்கொள்ளும் மந்திரிகளுடனும், மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களே மன்றத்தின் அங்கத்தினர்களாகவும் இயங்குதல்.

6. பாரளிமன்றத் திறப்புவிழா:

இவ்விழா பள்ளித்தலைமை ஆசிரியரால் திறக்கப்பட்டு பாரளி மன்றத்தின் அவசியம், அதன் அலுவல்கள் இவைகளை விளக்கி கூறினர். பின்னர் கீழ்கண்டபடி 'உறுதிமொழி' எல்லோராலும் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. 'சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற அமைப்பையும், அதைப்பற்றிய சட்டத்தையும் பாதுகாக்கவும், அந்தரங்க சுத்தியுடனும், விசுவாசத்துடனும் நடந்துகொள்வோமென்றும், நாங்கள் ஏற்கவிருக்கும் பதவிக்குரிய கடமையையும், பள்ளி தோழர்களுக்குப் பணி செய்யவும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காக எங்களாலானவரை நிறைவேற்றி அதன்மூலம் பள்ளியின் கௌரவத்தை நிலைநாட்டுவோமென்றும் நாங்கள் உறுதியாய் பள்ளியின்மீது ஆணையாய் வாக்களிக்கிறோம்'

7. மாணவர் இலக்கியக் கழகத்தின், உதவித் தலைவர்கள் : காரியதரிசிகள் தேர்தல். இக்கழகம் முதுமாணவர்க்காகவும், இளம் மாணவர்க்காகவும் தனித்தனியே நடந்துவருகிறது. இக்

கழகங்கள் மூலம் மாணவர்கள் தங்கள் பேச்சுத்திறனை காட்டி கூச்சம், கோழைத்தனம் இவைகளை விரட்டி தங்களை நல்லதொரு பேச்சாளராக ஆக்கிக்கொள்கிறார்கள்.

8. கமிட்டிகள் அமைப்பு:

இக் கமிட்டிகள் ஒவ்வொன்றும், மந்திரிகள் பொறுப்பில், ஆசிரியர்கள் வழிகாட்டியாக அமைந்து ஒவ்வொரு வகுப்பிலும் அமைக்கப்பட்டு அதன் அலுவல்களை ஒவ்வொரு குழுவும் பள்ளியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொது அலுவல்களை குறிக்கும் 'கடிகார அமைப்பு' பிரகாரம் செய்து வரவேண்டும். அதன்படி பள்ளி முழுவதையும் ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டு கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. நேரு குழு - வள்ளுவர் குழு - புத்தர் குழு - சர். சி.வி. ராமன் குழு - இளங்கோ குழு - பத்திரிகை, பாதுகாப்பு - உல்லாசப் பிரயாணம் - சுகாதாரம், விழா அலங்காரம் - கலை நாடகம் - கண்காட்சி.

உல்லாசப்பிரயாண சம்பந்தமாக அதன் பொறுப்பிலுள்ள மந்திரியும், ஆசிரியரும் ஆவன செய்து மாணவர்களை உல்லாசப்பிரயாணம் அழைத்துச்செல்லுதல். வகுப்புச் சம்மந்தமாக வகுப்பு ஆசிரியர் மாணவர்கள் சூழ்நிலையை ஒட்டி அழைத்து செல்லல் வேண்டும்.

கலை, நாடக சம்மந்தமாக அதன் பொறுப்புள்ள மந்திரியும், ஆசிரியரும் விழாக் காலங்களில் ஊர்வலத்தில் மாணவர்களைக் கொண்டு பாடுதலும், மாதமொரு முறை "நண்பர் குழாம்" ஏற்படுத்தி அதன் மூலம், நடிப்பு பாடல் போன்ற திறமையான பயிற்சிகளுக்கு ஊக்குவித்தல், ஆண்டு விழாவின் போது சிறந்ததான முறையில் நாடகம் நடிக்கப்படுதல்.

சுகாதாரம், விழா இலாகா பொறுப்பாளர்கள், மாணவர்கள் தங்களையும், தங்கள் வகுப்பையும் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்கிறார்கள் என்பதை வாரத்தின் ஓர்நாள் திடீர் பார்வையிட்டு குறிகள் கொடுத்து அதில் அதிகமான குறிகள் பெற்ற வகுப்பிற்கு சுகாதாரச் சின்னம் வழங்குதல். விழா சம்மந்தமாக விழாக் காலங்களில் தோரணம், பூ, அட்டைப் படங்கள் இவைகளைக் கொண்டு அலங்கரித்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

கண்காட்சி இலாகா மூலமாக மாணவர்களுக்கு அபூர்வ பொருள்களை சேகரித்து அப்பொருள்களை முறைப்படி ஒழுங்காக அமைத்து ஆர்வம் கொள்ள ஒவ்வொரு வகுப்பிற்கும் கண்காட்சி அலமாரி ஒன்று அமைத்து சேகரித்த பொருள்களை மாதாமாதம் தணிக்கை செய்து குறிகள் இட்டு நல்ல முறையில் முன்னேற்றம் கொண்ட வகுப்பிற்கு "கண் காட்சிச் சின்னம்" வழங்கப் படுகிறது.

பத்திரிகை, பாதுகாப்பு இலாக்காக்கள் சம்மந்தமான மந்திரியும் ஆசிரியரும், பள்ளியிலுள்ள மாணவர்கள் தினசரி பத்திரிக்கைகளை படித்து அறிவை பெருக்கிக்கொள்ள வாசகச்

சாலை ஒன்று ஒருவாரத்திற்கு ஒரு வகுப்பின் பத்திரிக்கை குழுத்தலைவன் பொறுப்பில் கண்காணிக்கப் பட்டு மாணவர்கள் அமைதியான முறையில் படித்துவர வசதி செய்யப் பட்டிருத்தல். பாதுகாப்பு சம்பந்தமாக அந்தந்த வகுப்பு குழுத் தலைவர்கள் தங்கள் வகுப்பை பள்ளி முடிந்ததும் ஆராய்ந்து அகப்படும் பொருள்களை பாதுகாப்பு மந்திரி மூலமாக கொடுத்து தோற்கடித்தவர் விண்ணப்பத்தின் மூலம் விசாரணைகள் நடத்தப்பட்டு பொருள்களை கொடுக்க ஏற்பாடு செய்தல்

9. தேசீயப் பற்று ஏற்பட்டு அதன் மூலம் நல்லதொரு பண்பு ஏற்பட வாரத்தின் வெள்ளிக்கிழமை தோறும் தேசீயக் கொடியேற்று விழாவும் தேசீயப் பாடலும் பாடுதல்.

10. **கடவுள் வழிபாடு** ஒழுங்கான பொதுவான முறையில் வழிபட, "எம்மதமும் சம்மதம்" என்ற நிலை உண்டாக தினசரி கூட்டத்தில் பொதுவான வழிபாடலும், பள்ளிக் கூட கொடியும் ஏற்றப்படுகிறது.

11. **அதிக வருகை தேர்ச்சிச் சின்னம்** இதன் மூலமாக மாணவர்கள் பள்ளிக்கு ஒழுங்காய் தினசரி காலம் தவறாமல் வந்து தங்கள் வகுப்பின் கௌரவத்தை நிலைநாட்டவும், அதன் மூலம் படிக்கும் பருவத்தில் பள்ளி தான் பிரதானம் என்ற மனப்பான்மையை உண்டாக்க மாதமொரு முறை மாணவர்களின் வருகை பதிவின் மூலம் சராசரி வந்த வகுப்பிற்கு அதிக வருகை தேர்ச்சி சின்னம் வழங்கப்படுகிறது.

12. **தற்காப்பு பயிற்சி.** இப் பயிற்சிகள் குடிமைப் பயிற்சி வகுப்புகளில் மாணவர்கள் தங்களைத் தாங்களே தகுதியுடையவர்களாக்கிக் கொள்ள முடிகள் பயிற்சியளிக்கப் பட்டு அதன் மூலம் டெண்ட் செய்ய பயிற்சியளித்தல், குச்சிகளை இணைப்பதற்கு வேண்டிய Lashing கற்றுக் கொள்ளுதல் — சிற்றுண்டி தயார் செய்தல், முதல் உதவி பயிற்சிகள் கொடுத்தல் மூலம் தன் முயற்சி உண்டாக்கப்படுகிறது.

13. **தேர்ச்சி சின்னங்கள் :** இச் சின்னங்கள் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டிருக்கும் திட்டப் பிரகாரம் Junior grade (form I & II) படிவமாணவர்களுக்கு நீந்துதல், நீளத் தாண்டல், உயரத் தாண்டல், கல் எறிதல போன்ற பயிற்சி போட்டிகளில் குறிப்பிட்ட அளவு வெற்றிகரமாக தேர்ச்சி பெற்றவர்களுக்கு சர்க்காரால் வழங்கப்படும் தேர்ச்சிச் சின்னங்கள் வழங்கப்படும்.

Senior grade III & IV படிவ மாணவர்களுக்கு நீந்துதல் (60 கஜம்) Diving (5 Feet) crouch start, Regular bodily exercises, 100 கஜ ஓட்டம் (18 விமிடம்) கல் எறிதல் (130 அடி) நீளத் தாண்டல் 12' உயரத்தாண்டல் 3' 6". Folk songs and Dancing in eight different types, cyclist should be able to ride a cycle and keep its in good running order mount and

dismount by pedal, mend a puncture remove and replace breaks and wheels.

Advance Grade V & VI Form:— Swiming 50 yards with clothes. 100 yards without cloths. Dive form a height of 10 feet. Atheltics:—Proper method of sitting, standing, walking, running, and starting in a race, Proper bodily execiser, Long jump (14 feet) High jump (3' 9") 100 metres (15 Secs) Shot put (18 feet)

Rescula —to throw a life line to within one yard of a floating object 10 yards away.

Cyclist should be able to ride cycle, and keep it in good running order mount and dismount by either pedal, keep cycle, coorectly equipped with lamp, bell rear, know the traffic signs.

Ambulance know the position of main actuies, and how to improvise a stretcher and carry on injured person.

மேல் கண்ட முறைகள் வெற்றியடைந்த எல்லா மாணவர்களுக்கும் சர்க்காரால் அளிக்கப்படும் தேர்ச்சிச் சின்னங்கள் வழங்க ஏற்பாடாகிறது. இத்துடன் இவ்வாண்டு சமூக கிராம நல திட்டத்தின்படி பசுந்தாள் உரம் சேகரிக்கும் 16' x 6" ஆழமுள்ள குழி தோண்டி பசுந்தாள் உரம் தயாரிக்கப்பட்டு திருச்சி ஜில்லா உதவி கலெக்டர் அவர்களால் 25—11—53ல் பார்வையிடப்பட்டது. பள்ளியிலிருந்து ஆரம்பித்து ஊரின் ரோடில் இணைக்கும் சாலை ஒன்றும் மாணவர்களால் நிர்மாணிக்கப்பட்டு உள்ளது. இப்பயிற்சிகளால் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருங்காலத்தில் சிறந்த குடிமக்களாக வாழ வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது இக் குடிமைப் பயிற்சி திட்டத்தால். இத் திட்டத்தினால் மாணவர்கள் சிறந்த பயனை அடைவார்கள் என்பது திண்ணம்.

இலக்கியக் கழக நடவடிக்கைகள்

நம் நாடு நலம் நல்கி, மேம்பாடுற அரசியல் துறையில் பொது மக்கள் ஈடுபட்டுத் தமது எண்ணங்களையும், மத வைராக்கியங்களையும் பொது மேடையில் வெளியிட்டு வருதல் கண்கூடு. அரசியலாரும் அத்தகையினரே! வருங் கால மக்கள் வாழ்வை அரசியல் மன்றத்திலமர்ந்து நிர்ணயிப்பது, இன்றைய பள்ளி மாணவர்கள் என்பது யாவரும் உணர்ந்த ஒன்று. ஆகவே, மாண வர்கள் பேச்சு வன்மையும், அரசியல் வாதமும் கொண்டு நொடியின்றி நாட்டை அழைத்துச் செல்லக் கருதி, ஒவ்வொரு பள்ளியிலும் இலக்கியக் கழகம் துவக்கி, மாணவர்களை நாவலர்களாக்க நடைபோடத் தூண்டு கிறார்கள். ஒழுக்கங்கள் உருவாக்குகின்றன மனிதனை! அவ்வொழுக்கம் கற்பிக்கப்படுவது பள்ளியிலே! ஆகவேதான் மேடைப் பேச்சை பள்ளியிலே பெறுமாறு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதையொட்டி நம் பள்ளியிலும் ஏற்படுத்தப்பட்ட இக் கழகம் நன்கு செயலாற்றி வருகிறது.

நான்கு, ஐந்து, ஆறும் படிவ மாணவர்கள் கொண்ட கழகத்தை முது மாணவர் கழகம் என்றும், ஒன்று, இரண்டு, மூன்றும் படிவ மாணவர்கள் கொண்டதற்கு இள மாணவர் கழகம் என்றும் பெயரிட்டு அழைக்கப் படுகின்றன.

இவ்விலக்கியக் கழகங்களின் நிரந்தரத் தலைவர் பள்ளித்தலைமையாசிரியர் உதவி ஆசிரியர்களுக்குள் ஒருவரை உபதலைவராகவும், மாணவர்களுக்குள் ஒருவரை செயலாளராகவும், மற்றும் உபசெயலாளராகவும் தேர்தல்மூலம் நியமிக்கலாம். இக்கழகங்களின் நிர்வாக அங்கத்தினர்களாக ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், அங்கத்தினர்கள் இவர்களின் பதவிக்காலம் ஓராண்டே!

1953—'54ஆம் வருடத்திய செயற்குழு:

உயர்திரு, வித்துவான் S. சோமசுந்தரம் அவர்கள் M. A., L. T., — தலைவர்

உயர்திரு, S. துரைராஜு அவர்கள் B. A., B. T.,
— உபதலைவர் (முதுமாணவர் கழகம்)

உயர்திரு, M. K. ராமையா அவர்கள் — உபதலைவர் (இளமாணவர்கழகம்)

திரு, M. பொன்னம்பலம் ஆறும் படிவம் - செயலாளர் (முதுமாணவர்கழகம்)

திரு, S. இராசமாணிக்கம் மூன்றும் படிவம்
— செயலாளர் (இளமாணவர் கழகம்)

திரு, M. மாரிமுத்து ஐந்தாம் படிவம் — உபசெயலாளர்
(முதுமாணவர் கழகம்)

திரு, S. சவரிமுத்து மூன்றும்படிவம் - உபசெயலாளர் (இளமாணவர்கழகம்)

அங்கத்தினர்கள்:

திரு, M. அரவாண்டி ஆறும் படிவம்
திரு, V. கோவிந்தராஜ் ஐந்தாம் படிவம்
திரு, R. கல்லையா நான்காம் படிவம்
} முதுமாணவர் கழகம்

திரு. S. சோமசுந்தரம் மூன்றும் படிவம்
திரு, M. ஜீவமணி இரண்டாம் படிவம்
திரு, M. ரெங்கசாமி முதல் படிவம்
} இளமாணவர் கழகம்

இக்கழகங்களின், வாராந்திரக் கூட்டங்களோடு சிறப்புக்கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வருட இலக்கியக் கழகங்களின் துவக்கவிழா உயர்திரு, கபூர் அவர்கள் M. A., தலைமையில் நடைபெற்றது. தலைவர் அவர்களே சொற்பொழிவாளராகவும்விளங்கி "வண்டமிழ் காட்டும் வாழ்க்கை நெறி" என்னும் பொருள்பற்றி உரையாற்றினர். இதைத்தவிர இன்னும் பல சிறப்புக்கூட்டங்களும் நடைபெற இருக்கின்றன.

வாராந்திரக்கூட்டம்:

இக்கழகங்கள் வாரந்தோறும் ஒரு கூட்டம் நடத்தும். இதில் ஆசிரியரோ அல்லது ஊர்ப் பிரமுகர்களோ தலைமைவகிக்க ஏதேனும் ஒரு பொருள்பற்றிய உரையோ, தர்க்கமோ மாணவர்களால் நிகழ்த்தப்படும்,

இவ்வாறு நடந்த வாராந்திரக் கூட்டங்களில் முதுமாணவர் இலக்கியக் கழகத்தில் 12 கூட்டங்கள் நடைபெற்றன அவற்றின் விவரம்:-

எண்.	தலைவர்.	சொற்பொழிவாளர்	தலைப்பு	தேதி
1	கனம் தலைமை ஆசிரியரவர்கள்	A M. துரைசாமி, ஆறும் படிவம்	குறள் கொடுக்கும் குரல்.	6— 8—53
2	திரு S துரைராஜு அவர்கள் B A ,B.T.	A. கோவிந்தன், ஐந்தாம் படிவம்	நாடும் நாடகமும்.	13— 8—53
3	திரு. U. R. கிருஷ்ணமய்யர் அவர்கள் B. A , L. T.	K. S. இராஜையா முத்துகிருஷ்ணன்	அன்பாட்சி அதிகார ஆட்சி	20— 8—53
4	புலவர் திரு. து. கந்தசாமி அவர்கள்	M மாரிமுத்து, ஐந்தாம் படிவம்	கவிஞன் காணும் இன்பம்	27— 8—53
5	திரு. S உருத்திரசாமி அவர்கள்	M. அரவாண்டி	புலவரும், புரவலரும்	24— 9—53
6	திரு. M. கோவிந்தன் அவர்கள்	M. பொன்னம்பலம்	ஐ. நா. வும், உலகசமாதானமும்	22—10—53
7	திரு. N. கைலாசம் அவர்கள் B.A.,L T.	M. காத்தான் T முத்துசாமி	காவியம் ஓவியம்	29—10—53
8	வித்துவான் S. சோமசுந்தரம் அவர்கள் M. A., L. T.	வித்துவான் திரு. S. சோமசுந்தரம் அவர்கள் M. A., L. T.	'மனிதப் பிறப்புரிமை நாள்'	10—12—53
9	Vidwan S. Somasundaram M. A , L. T.	M. Aravandi, VIth Form	'Good Manners'	[illegible]—12—53
10	வித்துவான் திரு. வீ. சோமசுந்தரம் அவர்கள், தலைமைதமிழாசிரியர், முசிறி	வித்துவான் திரு. வீ. சோமசுந்தரம் அவர்கள்	'கம்பர் கவி நலம்'	19—1[illegible]—53
11	திரு K. S இராகவ ஐயங்கார் அவர்கள்	M. கோவிந்தசாமி, நான்காம் படிவம்	'மாணவரும், சமூகமும்'	28—12—53
12	வித்துவான் திரு. S. சோமசுந்தரம் அவர்கள் M A., L. T.	T. முத்துசாமி, ஆறும் படிவம்	'உலக சமாதானத்தை இந்தியாவில் நிலைநிறுத்த முடியும்'	27— 1—54
		S. முத்துகிருஷ்ணன், ஐந்தாம் படிவம்	'உலக சமாதானத்தை இந்தியாவில் நிலைநிறுத்த முடியாது'	
	கழக ஆண்டு விழா திரு. கைலை அநந்தர் அவர்கள் B. A , B. L.	டாக்டர் மு. இராசமாணிக்கம் பிள்ளை M A; M. O. L; L. T; P. H. D.	'மாணவரும், தமிழ் வளர்ச்சியும்'	28— 2—54

இளமாணவர் இலக்கியக் கழகத்தில் 11 கூட்டங்கள் நடைபெற்றன.
அவற்றின் விவரம்:-

எண்.	தலைவர்	சொற்பொழிவாளர்	தலைப்பு	தேதி
1	உயர்திரு தலைமையாசிரியரவர்கள்	தலைமை ஆசிரியரவர்கள்	இறை வழிபாடு	26— 8—53
2	உயர்திரு. S. ஆறுமுகம் அவர்கள்	M முத்துசாமி (III அ)	முயற்சி திருவினையாக்கும்	2— 9—53
3	திரு. K. S. இராகவ ஐயங்காரவர்கள்	M. பழனியாண்டி (III அ)	உழவுத் தொழிலின் உயர்வு	9— 9—53
4	திரு A. சந்திரசேகரன் அவர்கள்	M. பழனியாண்டி (II அ)	ஒழுக்கம் உயிரினும் மேல்	16— 9—53
5	திரு. M. கோவிந்தன் அவர்கள்	M ராஜு (III ஆ) N. நல்லான (III அ)	விஞ்ஞானத்தின் நன்மை தீமை	23— 9—53
6	புலவர் திரு. து. கந்தசாமி அவர்கள்	K. சுந்தரராஜன் (III ஆ)	முத்தமிழ்	2[illegible]— 9—53
7	திரு R பாலசுப்ரமணியன் அவர்கள்	S. சொக்கலிங்கம் (III ஆ) N. நல்லான் (III அ)	படக் காட்சியின் நன்மை தீமை	11—11—53
8	திரு S. உருத்திரசாமி அவர்கள்	S சோமசுந்தரம் (III ஆ)	கவிஞன் உள்ளம்	18—11—53
9	திரு R. தியாகராசன் அவர்கள்	M. மகாலிங்கம் II F. B.	'விளையாட்டும் அதன் பயனும்'	2—12—53
10	திரு V. ஜெயவீரன் அவர்கள்	K. சரோஜா, முதற்படிவம்—அ.	'நூல் நிலையம்'	9—12—53
11	திரு M. K. ராமையா அவர்கள்	M. கருப்பையா, மூன்றாம்படிவம்-ஆ	'நம் நாட்டுப் பெண்களின் நிலை'	25— 1—54

இன்னும் இதுபோன்ற கூட்டங்கள் மிகுதியாக நடத்தப் பெறவுள்ளன.

இலக்கியக் கழகங்கள் மாணவர்களுக்கு அறிவு விளக்கத் தையும், கோழையின்மையையும் அளிப்பதோடுகூட பேச்சுத் திற மையையும், ஆண்மையையும் அளிக்கிறது என்பதில் ஐயமில்லை.

'உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண் டாகும்' என்பதை மாசற உணர்ந்து தமது மனத்தைத் தூய்மைப் படுத்தி நாவன்மை கொண்டு அதை, அதே நெறியில் செயலில் காட்ட விழைதல் வேண்டும்.

M. பொன்னம்பலம்,
S. இராசமாணிக்கம்
செயலாளர்கள்.



1953-54 ஆம் ஆண்டில் கொண்டாடிய விழாக்களின் பட்டியல்.
நேரு உயர்நிலைப்பள்ளி, புத்தனம்பட்டி.

வரிசை எண்.	விழாக்கள்.	கொண்டாடிய நாட்கள்.	தலைவர்	குறிப்புகள்	பிற செய்திகள்
1	சுதந்திரதின விழா	ஆகஸ்டு 15	திரு. இராசகோபால் முத்துராஜா M. L. A. அவர்கள்	ஊர்வலம், கொடியேற்றம், தின்பண்டங்கள் வழங்கல் முதலியவை.	சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
2	பாரதியார் நினைவு நாள்	செப்டம்பர் 11	புலவர் திரு. து. கந்தசாமி தமிழாசிரியர் அவர்கள்	திரு. M. K. ராமய்யா சொற்பொழிவாற்றினர்.	,,
3	மறைமலையடிகள் நினைவு நாள்	செப்டம்பர் 17	தலைமை ஆசிரியர்	சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.	,,
4	காந்தி பிறந்த நாள்	அக்டோபர் 2	தலைமை ஆசிரியர்	கொடியேற்றுவிக்கப்பட்டது.	,,
5	வ. உ. சிதம்பரனுர் நினைவுநாள்	அக்டோபர் 23	திரு. S. துரைராஜ் B. A., B. T.,	சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.	,,
6	நேரு பிறந்த நாள்	நவம்பர் 14	திரு. U. R கிருஷ்ணய்யர் B A., L. T.	சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.	,,
7	இளங்கோவடிகள் நினைவுநாள்	டிசம்பர் 12	தலைமை ஆசிரியர்	சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது	,,
8	கம்பர் விழா	டிசம்பர் 17	வித்வான் S. சோமசுந்தரம் தமிழாசிரியர், முசிறி உயர்நிலைப்பள்ளி.	சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.	,,
9	குடியரசு நாள்	ஜனவரி 26	தலைமை ஆசிரியர்	ஊர்வலம், கொடியேற்றம், நடத்தப்பட்டது; பலர் சொற்பொழிவாற்றினர்கள்.	,,
10	பள்ளியின் ஆண்டுவிழா	பிப்ரவரி 28	திரு. கைலைஅனந்தர் B. A., B. L., வக்கீல்	டாக்டர் திரு. ராஜமாணிக்கம் பிள்ளை M.A; M.O.L; L.T; Phd.,	,,

1953-54ல் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் பட்டியல்.

1 *வித்வான் திரு.* S. சோமசுந்தரம் M. A., L. T.,
— தலைமை ஆசிரியர்

2 *திரு,* S. துரைராஜ் B. A., B. T.,

3 „ N. கைலாசம் ஐயர் B. A., L. T.,

4 „ U. R. கிருஷ்ண ஐயர் B. A., B. L., L. T.,

5 „ M. கோவிந்தன் *(Sec, Asst)*

6 „ S. ஆறுமுகம் „

7 „ K. S. ராகவ ஐயங்கார் „

8 „ A. சந்திரசேகரன் „

9 „ M. K. ராமய்யா „

10 *புலவர், திரு.* D. கந்தசாமி
— தமிழாசிரியர்

11 „ V. ஜெயவீரய்யர்
— ஓவிய ஆசிரியர்

12 „ R. பாலசுப்ரமண்யம்
— ஹிந்தி ஆசிரியர்

13 „ R. தியாகராசன்
— உடற்பயிற்சி ஆசிரியர்

14 „ A. தியாகராசன்
— பள்ளி எழுத்தாளர்

Printed at Sri Nataraja Press, Turaiyur & Published by Vidwan S. Somasundaram M.A., L.T., Head Master, Nehru High School, Puthanampatti, Tiruchi Dt.